சமையல் குறிப்புகள்!



முன்னுரை

அன்பார்ந்த வாசகர்களே,

உங்களை என்னுடைய பன்னிரெண்டாவது கதையில் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்களின் தொடர் ஆதரவிற்கு என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'வாதத்திற்கு மருந்து உண்டு பிடிவாதத்திற்கு மருந்து இல்லை' என்று சொல்வார்கள். இக்கதையின் கதாபாத் திரங்களில் ஒருவர் வறட்டுப் பிடிவாதம் பிடிப்பதால் என்ன நடக்கிறது என்பதைக் கதையைப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

இக்கதையைப் பற்றி ஓரிரு வரிகளை premaarumugam@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தால் நான் மிகவும் சந்தோஷப் படுவேன்.

என்னுடைய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் திரு. அருணன் ஐயா அவர்களுக்கு என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

பிரேமா

சமயம்

பொன்மேடு சனி!

1



''ஒரு சந்தோஷமான விஷயம் சொல்லப் போறேன். என்னன்னு சொல்லு பார்ப்போம்'' என்று உற்சாகமாய் கூறிய ராஜதுரையை பார்த்து அவர் மனைவி சரோஜினி,

''நீங்க இவ்வளவு உற்சாகமாய் இருக்கிறதைப் பார்த்தா விஷயம் ரொம்ப சந்தோஷமானதுன்னு தெரியுது. ஆனா என்னன்னு தான் தெரியலை'' என்றதும், ராஜதுரை மனைவியை முறைத்தார்.

ராஜதுரை முரட்டு மீசையுடன் அய்யனார் கோவில் சிலை போல் தோற்றம் அளிப்பார். சற்றே பிடிவாத குணம் அதிகம் நிறைந்தவர். அவர் மனைவி சரோஜினி அவருக்கு அப்படியே நேர் எதிர் குணம் கொண்டவர்.

''ரொம்ப புத்திசாலி ஆகிட்டியே! எப்படி சரோ?'' என்று ராஜதுரை நக்கலாகக் கேட்டார்.

''இந்தச் சித்திரை மாசத்திலே சென்னையிலே அடிக்கிற வெயிலெல்லாம் என் மண்டையில தான் இறங்குது. அதனால என் புத்திசாலித்தனமும் அதிக மாயிடுச்சுங்க'' என்று இடக்காகப் பதில் சொன்ன சரோஜினி மேலும்,

''பொண்ணுக்கு செமஸ்டர் எக்ஸாம் நடக்கிறதால அவளுக்குத் துணைக்கு வீட்டிலே இருன்னு சொல் லிட்டு சொந்தக்காரங்க கல்யாணத்துக்கு செங்கல் பட்டுக்கு போயிட்டு வந்த நீங்க இப்படி ஒரு கேள் வியை கேட்டா நான் என்ன பதில் சொல்ல? அங்கே ஏகப்பட்ட சொந்தக்காரங்க வந்திருப்பாங்க. யார் என்ன சந்தோஷ செய்தி சொன்னாங்களோ?'' என்று கூற,

''இது மத்தவங்க வீட்டு விஷயம் இல்ல. நம்ம வீட்டு விஷயம்'' என்று ராஜதுரை புதிர் போட்டார்.

''நம்ம வீட்டு விஷயமா? நம்ம பொண்ணுக்கு மாப்பிள்ளை பார்த்துட்டு வந்துட்டீங்களா?'' என்று சரோஜினி கிண்டலாக வினவ,

''நீ புத்திசாலின்னு எனக்கு தெரியும் சரோ'' என்று அவர் பெருமையாக உரைக்க,

''என்ன நிஜமாத் தான் சொல்லுறீங்களா? நம்ம நித்திலாவுக்கு மாப்பிள்ளை பார்த்துட்டீங்களா? எங்கே? எப்படி? மாப்பிள்ளை என்ன செய்யுறார்?'' என்று சரோஜினி வரிசையாகக் கேள்விகளை அடுக்கி னார்.

''பொறுமை சரோ. பொறுமை. என் ஃபிரண்டு ராமனுக்கு ரொம்ப வருஷமா தெரிஞ்ச குடும்பம். அவங்களும் இந்தக் கல்யாணத்துக்கு வந்திருந் தாங்க. ரெண்டு பேரும் உட்கார்ந்து பேசினோம். அவங்க பையனும் இஞ்சினியர் தான். ஜெர்மனியிலே இருக்காராம். எம்.எஸ். படிக்க அங்க போனாராம். அங்கேயே வேலை கிடைச்சு செட்டிலாகிட்டாராம். பையன் ஜாதகத்தை கொடுத்திருக்காங்க. பொருத்தம் பாருங்க. பிடிச்சிருந்தா மேற்கொண்டு பேசுவோம்னு சொன்னாங்க.''

''அந்தப் பையன் பேரு என்ன?''

''பையன் பேரு ராகவ்.''

''போட்டோ ஏதாச்சும் காட்டினாங்களா?''

''ஜாதகம் மட்டும் தான் சரோ தந்தாங்க. நாம முதல்ல பையன் குடும்பத்தைப் பத்தி விசாரிப்போம். அப்புறம் ஜாதகம் பார்ப்போம். இது ரெண்டும் சரியா இருந்தால் போட்டோ கேட்போம்.''

''நீங்க சொல்லுற மாதிரியே செய்யலாங்க. உங்க ஃபிரண்டு ராமன் சொன்னதை மட்டுமே வச்சு

முடிவெடுக்க முடியாதேங்க. வேற யார்கிட்டவாச்சும் விசாரிக்கணுமே!''

''கண்டிப்பா சரோ. ராமன் ஒரு விஷயம் சொன்னான். காஞ்சிபுரத்திலே இருக்கிற என் பங்காளி சேகர் அண்ணனோட சம்பந்தி தான் ராகவோட அப்பாவாம். அதான் கொஞ்சம் யோசனையா இருக்கு.''

''இதிலே யோசிக்கிறதுக்கு என்னங்க இருக்கு?''

''என் கூடப் பிறந்த அண்ணன் வஜ்ரவேலுவுக்கும் எங்க சேகர் அண்ணனுக்கும் அவ்வளவா ஒத்து வராதுன்னு உனக்குத் தெரியாதா சரோ?''

''ம்ம்ம்... அவங்க பங்காளி மாதிரி இல்லாம பகையாளி மாதிரி தான் முறைச்சுக்குவாங்க. இப்போ அதுக்கு என்ன?''

''இந்தச் சம்பந்தத்தை முடிவு பண்ணினா, அண்ணன் ஏதாவது சொல்லுவாரோன்னு யோசிக்கிறேன்.''

''உங்க அண்ணனே தன் பெண்ணுக்கு இந்த சம்பந்தத்தை பார்த்த விஷயம் எனக்கு தெரியுங்க. ஜாதகம் பொருந்தலைன்னு வேண்டாம்னு முடிவு பண்ணினாங்க.''

''அப்போ ஒண்ணும் சொல்ல மாட்டாருங்கிறியா?''

''நாம என்ன உங்க சேகர் அண்ணன் வீட்டிலேயா சம்பந்தம் பண்ணப் போறோம்? அவரோட சம்பந்தி வீட்டிலே தான் சம்பந்தம் பண்ணப் போறோம்.''

''ம்ம்ம்... என்று ராஜதுரை யோசனையாக இழுக்க,

''இன்னமும் என்ன குழப்பம்?'' என்று சரோஜினி கேட்டார்.

''அண்ணன் பொண்ணுக்கு முன்னாடி நம்ம பொண்ணுக்கு கல்யாணம் பேசினால் அது நல்லா இருக்குமா?''

''இத்தனை யோசனையும் அவங்க ஜாதகத்தை குடுக்கும் போது உங்களுக்கு வரலையா?''

''வந்துச்சு சரோ. முதன் முதலா நம்ம நித்திலாவுக்கு வரும் வரன், அதான் ஒண்ணும் மறுப்பு சொல்லாம வாங்கிட்டு வந்துட்டேன்.''

''உங்க அண்ணன் பொண்ணுக்கு என்ன வயசு?''

''இருபத்தி ரெண்டு.''

''நம்ம பொண்ணு நித்திலாவுக்கு?''

''அதே இருபத்தி ரெண்டு வயசாகுது.''

''உங்க அண்ணன் பொண்ணை மூணு வயசிலேயே ஸ்கூல்ல சேர்த்துட்டாங்க. அவ படிச்சது பி.எஸ்ஸி., அதனால அவ சீக்கிரமா காலேஜ் படிப்பை முடிச்சுட்டாள். கடந்த ரெண்டு வருஷமா அவளுக்கு மாப்பிள்ளை பார்க்கிறாங்க. நம்ம பொண்ணை நாலு வயசிலே தான் நாம எல்.கே.ஜி. சேர்த்தோம். அவ படிக்கிறது இஞ்சினியரிங். அதனால இப்போ தான் காலேஜ் முடிக்கப் போறாள்.''

''இப்போ எதுக்கு இந்தக் கணக்கை சொல்லுறே?''

''இல்ல, நம்ம தம்பி பொண்ணுக்கும் நம்ம பொண்ணுக்கும் ஒரே வயசு தானே, தம்பி பொண்ணுக்கு இன்னும் கல்யாணத்துக்கு பார்க்க ஆரம்பிக்கலையே, ஆனா நம்ம பொண்ணுக்கு மட்டும் அதுக்குள்ள கல்யாணத்துக்கு பார்க்க ஆரம்பிச்சிட்டோமேன்னு என்னைக்காவது உங்க அண்ணன் நினைச்சாரான்னு கேட்க வந்தேன்?'' என்று சரோஜினி கூறவும் அதில் இருந்த நியாயம் ராஜதுரையை தெளிவுபடுத்தியது.

''நீங்க ஜாதகம் வாங்கும் போது உங்க அண்ணன் பார்க்கலையா? அதைப் பத்தி ஒண்ணும் கேட்கலையா?'' என்று சரோஜினி சந்தேகம் கேட்டார்.

''இல்ல சரோ. அண்ணன் ஏதோ அவசர வேலைன்னு வந்த உடனே கிளம்பிப் போயிட்டார்.''

ராஜதுரைக்கு தன் அண்ணன் மேல் மரியாதை என்று சொல்வதை விட நன்றி உணர்ச்சி சற்றே அதிகம் என்று சொல்லலாம். தந்தையின் மறைவிற்கு பின் தன் குடும்பத்தை அவர் பொறுப்பில் எடுத்துக் கொண்டதால் ராஜதுரைக்கு தன் அண்ணன் மேல் நன்றி உணர்ச்சி அதிகம் உண்டு.

அவரது அண்ணனை 'வஜ்ரவேலு' என்று அழைப்பவர்களை விட 'வில்லங்க வஜ்ரவேலு' என்று அழைப்பவர்கள் தான் அதிகம். செல்லும் இடமெல்லாம் வில்லங்கம் செய்யும் குணமான அண்ணனின் குணம் அறிந்தும் ராஜதுரை அவரை எதிர்த்துக் கேள்வி கேட்டதில்லை.

''உங்க சேகர் அண்ணன் பையன் கல்யாணத்துக்கு நாம போனோமே. அங்க வச்சு இந்த ராகவை நாம பார்த்திருப்போம் இல்ல?'' என்று தன் நினைவு அடுக்கில் சரோஜினி ராகவின் முகத்தை தேடிப் பார்க்க முயன்றார்.

''ரொம்ப யோசிக்காதே சரோ. சேகர் அண்ணன் பையனுக்கு ராகவோட அக்காவை கல்யாணம் பண்ணிக் கொடுத்த போது ராகவ் ஸ்கூலில் படிச்சிக்கிட்டு இருந்திருப்பான்'' என்று ராஜதுரை கிண்டல் செய்ததும் சரோஜினி அசடு வழிந்தார்.

''எனக்கு மாப்பிள்ளை போட்டோவை பார்த்துட்டால் திருப்தியாய் இருக்கும்.''

''அவசரப்படாதே சரோ. முதல்ல விசாரிப்போம்'' என்றவர் அன்றே தனது ஒன்று விட்ட அண்ணன் சேகரை அழைத்து ராகவின் குடும்பத்தைப் பற்றி விசாரித்தார்.

''ராகவ் பத்தியாடா கேட்கிறே?'' என்று சேகர் ஆச்சரியமாக வினவ,

''ஆமாண்ணே. நம்ம நித்திலாவுக்கு வரன் பார்க்கலாமான்னு...'' என்று ராஜதுரை இழுத்தார்.

''கண்ணை மூடிக்கிட்டு இந்த சம்பந்தத்தை ஒத்துக்கோடா. நல்ல சம்பந்தம். அவனுக்கு கட்டிக் கொடுக்கிற வயசிலே எனக்கு மட்டும் பொண்ணு இருந்தா எப்பவோ அவனை என் மாப்பிள்ளையா ஆக்கி இருப்பேன். அவங்க குடும்பமும் ரொம்ப

மரியாதை தெரிஞ்ச குடும்பம்'' என்று நற்சான்றிதழ் வழங்க ராஜதுரை சந்தோஷமானார்.

ராஜதுரை அடுத்த கட்ட நடவடிக்கையாக ஜாதகம் பார்க்கும் வேலையைத் தொடங்கினார்.

இதற்கிடையில் ராகவின் பெற்றோர்களான சேது பதியும் பூங்கோதையும் தனது சம்பந்தி வீட்டிற்கு சென்று ராஜதுரையின் குடும்பத்தைப் பற்றி விசாரிக்க நினைத்தார்கள். அதனால் அவர்கள் செங்கல்பட்டில் இருந்து காஞ்சிபுரத்திற்கு பயணப்பட்டார்கள்.

''வாங்கம்மா. வாங்கப்பா'' என்று ராகவின் அக்கா மேகலா தனது பெற்றோர்களை உற்சாகமாய் வர வேற்றாள்.

மேகலாவின் மாமியாரும் மாமனாரும் சம்பந்தி களை வரவேற்றார்கள். வழக்கமான உபசரிப்புகள் முடிந்த பின்பு சேதுபதி நேரடியாக விஷயத்திற்கு வந்தார்.

''நம்ம ராகவிற்கு ஒரு வரன் வந்திருக்கு சம்பந்தி. விசாரிச்சுப் பார்த்ததிலே பொண்ணு வீடு உங்களுக்கு சொந்தம்னு சொன்னாங்க.''

''ஆமா சம்பந்தி அந்தப் பொண்ணு நித்திலா என் பங்காளி ராஜதுரையோட மகள் தான். நேத்து அவனும் எனக்கு போன் பண்ணி விசாரிச்சான்.''

''அப்படியா சம்பந்தி? அவங்க குடும்பம் பத்தி கொஞ்சம் சொல்லுங்க.''

''ராஜதுரை குடும்பத்தை பத்தி ஒரு குறையும் இல்லை. சொந்தமா தொழில் பண்ணுறான். நல்ல வசதியா இருக்கான். ஒரே பொண்ணு தான். அதனால சீர் வரிசையெல்லாம் நல்லா செய்வான்.

அவங்க அண்ணனுக்கும் எனக்கும் தான் கொஞ்சம் ஆகாது. இவன் கூட எந்தப் பிரச்சனையும் வந்த தில்லை. கொஞ்சம் வளைஞ்சு குடுக்காத மனுஷன். அது ஒண்ணு தான் அவன்கிட்ட ஒரு குறை. நித்தி லாவை பத்தி நான் சொல்லுறதை விட உங்க பொண்ணுகிட்டவே கேளுங்க'' என்று சேகர் கூறினார்.

''நித்திலா பார்க்க ரொம்ப நல்லா இருப்பாப்பா. நம்ம தம்பிக்கு ரொம்பப் பொருத்தமா இருப்பாள். அவளும் இஞ்சினியருக்கு தான் படிக்கிறாள். எல்லா விதத்திலும் சரியா வரும்'' என்று மேகலா கூறினாள்.

''நித்திலா அம்மா சரோஜா ரொம்ப நல்லவ சம்பந்தி. நல்ல சம்பந்தம் தான்'' என்று மேகலாவின் மாமியாரும் கூற பூங்கோதையும் சேதுபதியும் திருப்தி யானார்கள்.

அவர்களும் தங்கள் பங்கிற்கு ஜாதகப் பொருத்தம் பார்க்க முடிவு செய்தனர்.

''பத்துக்கு எட்டுப் பொருத்தம் இருக்குன்னு ஜோசியர் சொன்னார் சரோ'' என்று ராஜதுரை கூறியதைக் கேட்ட சரோஜினி மகிழ்ந்தார்.

''அப்ப பையன் போட்டோவை கேட்டு வாங்கு வோம். போட்டோவை நித்திலாகிட்ட காட்டி கேட்

போம். அவளுக்குப் பிடிச்சிருந்தா மேற்கொண்டு பேசுவோம்.''

''இன்னும் நாலு நாளிலே அவளோட பரீட்சை முடியுது. அதுக்கு அப்புறமா இந்தப் பேச்சை அவ முன்னாடி பேசுவோம். அதுவரைக்கும் எதுவும் சொல்லாதே சரோ'' என்று ராஜதுரை கூறவும், சரோஜினியும் அவர் கருத்தை ஏற்றுக் கொண்டார்.

ராஜதுரை தன் அண்ணன் வஜ்ரவேலுவிடம் ராகவ் ஜாதகம் வந்தது பற்றியும் ஜாதகம் பொருந்தி இருப்பது பற்றியும் கூறினார்.

''பொருந்தி இருந்தா கல்யாணத்தை பண்ணிடு தம்பி. நல்ல சம்பந்தம்'' என்று வஜ்ரவேலு கூறினார்.



2

கடைசி தேர்வை எழுதுவதற்காக நித்திலா கல்லூரிக்கு கிளம்பிக் கொண்டிருந்தாள். சரோஜினி சமையலறையில் மும்முரமாக வேலை பார்த்துக் கொண்டிருந்தார்.

நித்திலா தன் தந்தையை கண்ஜாடை காட்டி தனியே அழைத்தாள்.

''என்னடா நித்தி? அம்மாக்கு தெரியாமல் என்ன திருட்டுத்தனம் பண்ணப் போறோம்?'' என்று

ராஜதுரை தன் மகளோடு தன்னையும் இணைத்துக் கொண்டு கேட்க,

''இன்னைக்கு கடைசி எக்ஸாம். ஃப்ரண்ட்ஸ் எல்லாம் எக்ஸாம் முடிஞ்சதும் வெளியே சுத்தலாம்னு கூப்பிட்டாங்க'' என்று மெதுவான குரலில் நித்திலா கூறினாள்.

''அம்மாகிட்ட கேட்டியா? விட மாட்டேன்னு சொல்லிட்டாளா?''

''ஆமாம்பா. போன வாரமே கேட்டேன். முடியாதுன்னு சொல்லிட்டாங்க. இதுக்கு நீங்க தான் ஏதாச்சும் வழி பண்ணனும்.''

தன் தாடையைத் தடவிக் கொண்டு சிறிது நேரம் அமைதியாக யோசித்தவர், ''உன் ஃப்ரண்ட்ஸ் கூட ஊர் சுத்தப் போனா நீ எத்தனை மணிக்கு வீட்டுக்கு வருவே?'' என்று கேட்டார்.

''ஒரு ஏழரை மணிக்கு வந்துடுவேன்பா.''

''கோவிலுக்கு போகலாம்னு சொல்லி அம்மாவை மதியத்துக்கு மேல வெளியே கூட்டிட்டு போயிடுறேன் நித்தி. தூரமா எந்த கோவில் இருக்கு?'' என்று யோசித்தவர், தனக்குள் கணக்கு போட்டுக் கொண்டு,

''நான் பார்த்துக்கிறேன். நீ உன் ரூமுக்கு போய் உட்கார்ந்துக்கோ'' என்றார்.

''தாங்க்ஸ்பா'' என்றவள் தன் அறைக்குச் சென்று படிக்க ஆரம்பித்தாள்.

சமையலறைக்கு சென்ற ராஜதுரை, ''நித்திலாக்கு இன்னைக்கு கடைசி பரீட்சை. அவ நல்லபடியா கோர்ஸ் முடிக்கணும்னு வேண்டிக்க இன்னைக்கு கோவிலுக்கு போவோமா சரோ?'' என்று கேட்டார்.

''ஆமாங்க நான் கூட நினைச்சேன். சாயந்திரம் சீக்கிரம் வரீங்களா?''

ராஜதுரை மகளுக்குத் தெரியாமல் ரகசியம் பேசுபவ ராய் மிக மெதுவான குரலில், ''சரோ, நீ ஏதோ பெரு மாள் கோவில் ஒண்ணு சொல்லிக்கிட்டு இருந்தியே, அங்கேயும் போவோமா?'' என்று கேட்டார்.

''திருவிடந்தை நித்ய கல்யாணப் பெருமாள் கோவிலுக்கா?''

''அங்க தான். நாம ரெண்டு பேர் மட்டும் அங்க போய் வேண்டிக்கிட்டு வருவோம். அவகிட்ட ராகவ் விஷயம் பேசும் முன்னாடி நாம கோவிலுக்கு போயிட்டு வந்தா, இந்தக் கல்யாணத்துக்கு அவ சம்மதம் சொல்வான்னு எனக்கு தோணுது.''

''சரிங்க போயிட்டு வரலாம். அவ எக்ஸாம் முடிஞ்சு ரெண்டு மணிக்கு மேல வருவாள். அவள் வந்த உடனே கிளம்பலாம்.''

'காரியத்தை கெடுத்துடுவே போல!' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்ட ராஜதுரை, ''இல்லை சரோ. நாம ஒன்றரை மணிக்கெல்லாம் கிளம்பிடுவோம். அப்ப தான் ரெண்டு கோவிலுக்கும் போயிட்டு நைட்டுக்குள்ள திரும்ப முடியும்'' என்றதும்

கணவரின் யோசனைக்கு சரோஜினி சம்மதம் தெரிவித்தார்.

''அவ காலேஜிலே இருந்து வரும் போது நாம கிளம்பிடுவோமில்ல, அதனால இன்னொரு செட் சாவியை அவகிட்டே குடுத்துட்டு வரேன்'' என்று கூறிய சரோஜினி நித்திலாவின் அறைக்குள் சென்று,

''இந்தா நித்தி நம்ம வீட்டு சாவி. அப்பாவும் நானும் கோவிலுக்கு போறோம். நாங்க வர கொஞ்சம் லேட் ஆகும்'' என்றார்.

''சரிம்மா'' என்ற சொல்லோடு அந்த சாவியை வாங்கிக் கொண்டு நித்திலா தன் புத்தகத்தில் முகத்தை புதைத்துக் கொண்டாள்.

பின்னே நிமிர்ந்து பார்த்தால் அவளது கண்ணில் தெரியும் கள்ளத்தனத்தை சரோஜினி கண்டு கொள்வாரே!

'மகள் தேர்விற்காக முனைப்பாகப் படிக்கிறாள். இதற்கு மேல் கேள்வி கேட்டு அவளைத் தொந்தரவு பண்ண வேண்டாம்' என நினைத்த சரோஜினி அவ்விடம் விட்டு அகன்றார்.

சரோஜினி சமையலறைக்கு சென்றதும் ராஜதுரை மகளது அறைக்குள் வந்தார். தகப்பனும் மகளும் தங்கள் கட்டை விரலை உயர்த்திக் காட்டி நகைத்துக் கொண்டார்கள்.

''பத்திரமா போயிட்டு வாடா நித்தி. இந்தா பணம் வச்சுக்கோ'' என்று மகளிடம் பணத்தைக் கொடுத்து விட்டு ராஜதுரை வெளியேறினார்.

மதியம் ஒன்றரை மணிக்கு ஒரு வாடகை காரில் ராஜதுரையும் சரோஜினியும் கோவிலுக்குக் கிளம்பினர்.

அன்று தேர்வை முடித்துவிட்டு வெளியே வந்த நித்திலாவின் தோழிகள் அனைவரும் ஒரு உணவகத்திற்கு சென்றார்கள். தங்களுக்குப் பிடித்த உணவினைப் கொண்டு வருமாறு பணித்துவிட்டு அரட்டைக் கச்சேரியில் ஈடுபட்டார்கள்.

''யாருக்கெல்லாம் வீட்டிலே மாப்பிள்ளை பார்க்கிறாங்க?'' என்று தோழி ஒருத்தி கேட்க, நான்கு பேர் கைகளைத் தூக்கினார்கள்.

''அப்படின்னா உங்களுக்கான கேள்வி இது! உங்களுக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை வேணும்?''

''எனக்கு ஹிரித்திக் ரோஷன் மாதிரி மாப்பிள்ளை வேணும்'' என்று ஒருத்தி சொல்லவும் நித்திலா அவளைக் கிண்டல் செய்ய முடிவெடுத்தாள்.

''அடிப்பாவி! நாப்பது வயசு ஆளா உனக்கு மாப்பிள்ளையா வேணும்?'' என்று நித்திலா கேட்கவும் அந்தத் தோழி,

''நாப்பது வயசிலா?!'' என்று அலறினாள்.

''ஓ! அப்படி இல்லையா? அப்ப கையிலே ஆறாவது விரல் இருக்கணும்னு சொல்ல வரியா?''

''அப்படி ஆறாவது விரல் இருக்கிற மாப்பிள்ளைக்காக நான் காத்திருக்க ஆரம்பித்தால் எனக்கு அறுபதாம் கல்யாணம் கூட நடக்காது.''

''அப்புறம் எதைச் சொல்ல வரே?'' என்று வேண்டுமென்றே சில நொடிகள் இடைவெளி விட்ட நித்திலா, ''எனக்கு புரிஞ்சு போச்சு. ரெண்டு பிள்ளைங்க பிறந்த உடனே டைவர்ஸ் பண்ணுற மாப்பிள்ளை வேணும்னு சொல்ல வரே! கரெக்ட் தானே?'' என்று கேட்டாள்.

''மகளே! உனக்கு என் கையால தான்டி சாவு! நான் ஹிரித்திக் ரோஷன் போல மாப்பிள்ளை வேணும்னு சொன்னா உனக்கு டாலா ஹேண்ட்சம்மா ஒரு மாப்பிள்ளை கேட்கிறேன்னு புரியலையா?'' என்று அதட்டியவள்,

''அப்படி புரிஞ்சுக்க இங்க கொஞ்சம் சரக்கு இருக்கணுமில்ல?'' என்று மூளை பகுதியை தொட்டுக் காட்ட,

நித்திலாவோ அதை விட நக்கல் குரலில், ''உன் கூட எல்லாம் நாலு வருஷம் குப்பை கொட்டி இருக்கேனே! அதுக்கு அப்புறமும் என் மேல் மாடி காலி ஆகாமல் இருக்குமா?'' என்று கேட்டவள் மேலும்,

''நீ சொல்லுறதை தெளிவா சொல்லணும். நீ பாட்டுக்கு மொட்டையா ஹிரித்திக் ரோஷன்'னு சொன்னா நாளைக்கு உன் அப்பாவோ தரகரோ என்னை மாதிரியே தப்பா நினைச்சுக்க வாய்ப்பு இருக்கில்ல'' என்று பெரிய மனுஷி போல் கூற, அருகில் இருந்த இரு தோழிகள் நித்திலாவை மொத்தினர்.

''ஓகே. அடுத்தது நீ? உனக்கு எப்படி மாப்பிள்ளை பார்க்கணும்?'' என்று அடுத்த தோழியிடம் வினவ,

''எனக்கு ஆறடி உயரத்திலே மாப்பிள்ளை வேணும்'' என்றாள் அவள்.

''ஆறடியா! நீயோ நாலடி! உனக்கு எதுக்கு ஆறடி உயரத்திலே மாப்பிள்ளை வேணும்னு கேட்கிறே?''

''என்னோட ஸ்பெஷாலிட்டி என்ன?'' என்று அவள் கேட்கவும் அனைத்து தோழிகளும் விழித்தனர்.

''தலையில கொட்டுறது. எனக்கு ஆறடி உயரத்திலே மாப்பிள்ளை பார்த்தால் தான் நான் அவரை கொட்டுற கொட்டிலே இஞ்ச் இஞ்சா குறைஞ்சு எங்களோட அறுபதாம் கல்யாணத்திலே என் உயரத்துக்கு வந்து நிப்பார்.''

''அதுக்கு நீ நாலரை அடி உயரத்திலே உள்ள ஒரு மாப்பிள்ளையை பார்த்து நேரா அறுபதாம் கல்யாணமே பண்ணிடலாமே! உங்க அம்மா அப்பாவுக்கு கல்யாண செலவாது மிச்சமாகும்'' என்று தோழிகள் அவளை நக்கல் பண்ணிச் சிரித்தனர்.

அரட்டைக் கச்சேரி தொடர்ந்தது. அவர்கள் சாப்பிட்டு முடித்த போது ஒன்றரை மணி நேரம் கடந்திருந்தது. ராஜதுரை மகளை அவளது கைப்பேசியில் அழைத்துப் பேசினார்.

''சொல்லுங்கப்பா.''

''என்னம்மா பத்திரமா வீட்டுக்கு வந்துட்டியா?''

''ஹா ஹா!'' என்று நித்திலா சிரிக்க,

''நைட் எல்லாம் கண் முழிச்சு படிச்சிருக்க. அதனால படுத்துத் தூங்கும்மா.''

''தூங்கிட்டாப் போச்சு.''

''நாங்க சீக்கிரமா வந்துடுறோம்.''

''லேட்டா வாங்கப்பா. தாங்க்ஸ்பா'' என்று கூறியதும் ராஜதுரை அழைப்பைத் துண்டித்தார்.

மனைவியை மகளிடம் பேச அவர் விடவில்லை. சரோஜினி நித்திலாவிடம் பேசினால் சுற்றுப்புறத்தில் ஒலிக்கின்ற ஒலிகளை வைத்து நித்திலா வெளியே சுற்றிக் கொண்டிருப்பதை சரோஜினி கண்டுபிடித்து விடுவாரே!

''சாப்பிட்டாச்சு! அடுத்து என்ன செய்யலாம்?'' என்று தோழிகள் யோசிக்க ஆரம்பித்தனர்.

''ரங்கநாதன் தெருவுக்கு ஷாப்பிங் போகலாமா?''

''இந்த வெயிலிலா? அங்க நிறைய கடையில ஏசியே இருக்காது.''

''ஏன் அம்மணி வெயில்ல வர மாட்டீங்களோ? உனக்காக சென்னையவே ஏசி பண்ணவா முடியும்?''

''ஒரு நாலு மாசம் பொறுத்துக்கோ. சென்னையை ஏசி பண்ணிடலாம்'' என்று நித்திலா கூறவும்,

''நீ ஏதாச்சும் அரசியல் கட்சி ஆரம்பிக்கப் போறியா நித்தி?'' என்று ஒருத்தி கேட்டாள்.

''ஏன் கேட்கிறே?''

''அரசியல் கட்சியினர் தானே மக்களுக்கு இல வசமா எல்லாம் தருவாங்க. ஒருவேளை நீயும் ஏசியை இலவசமா தரப் போறியோன்னு நினைச்சேன்.''

''நாலு மாசம் கழிச்சு மழை பெய்ய ஆரம்பிச் சுடுமில்ல, அதை சொல்ல வரா நித்தி. சரி தானே நித்தி?'' என்று ஒருத்தி கேட்டதும் நித்திலா தலை யாட்டினாள்.

''நித்திலா அரசியலுக்கு சரிபட்டு வரமாட்டாள்'' என்று ஒருத்தி கூற,

''ஏன் அப்படிச் சொல்லுறே?'' என்று இன் னொருத்தி கேட்டாள்.

''இன்னைக்கு காலையிலே இவளும் அங்கிளும் சேர்ந்து பொய் சொல்லி ஆன்ட்டியை ஏமாத்தி இருக் காங்க இல்ல, அதையே இன்னைக்கு நைட் வரைக் கும் அவளால மெயின்டைன் பண்ண முடியுமான்னு தெரியலை. அப்படி இருக்கிறப்போ அரசியலுக்கு இவ ஒத்து வரமாட்டாள்.''

''அவ இன்னைக்கு அந்த பொய்யை கடைசி வரைக்கும் சரியா சொல்லிடுவாள்னு நான் சொல்லு றேன்.''

''ஆன்ட்டிகிட்ட மாட்டிக்குவாள்னு நான் சொல்லு றேன்.''

''எவ்வளவு பெட்?''

''அப்படி அவ ஆன்ட்டிக்கிட்ட மாட்டிக்கிட்டா நான் உங்க எல்லோருக்கும் ட்ரீட் தரேன்'' என்று

ஒருத்தி கூறியதும் அனைவரும் சந்தோஷத்துடன் தலை அசைத்தனர்.

''அடிப்பாவிங்களா! நான் எங்க அம்மாகிட்ட மாட்டினா நீங்க சந்தோஷமா ட்ரீட் குடுத்து கொண் டாடுவீங்களா?''

''இல்லையா பின்னே? உன் துன்பம் எங்கள் இன்பம் அல்லவா?'' என்று கேட்டு அனைவரும் சிரித் தனர்.

அவர்கள் அனைவரும் ரங்கநாதன் தெருவிற்கு செல்லாமல் சினிமா ஒன்றிற்கு சென்றனர். அதன் பின் வீட்டிற்கு கிளம்பினர். ராஜதுரை தன் மகளை அழைத்து சீக்கிரம் வீட்டிற்கு திரும்பும்படி கூறினார்.

அப்படி இருந்தும் நித்திலா தன் வீடு செல்ல நேரமாகிவிட்டது. அவள் முதலில் ஒரு பேருந்தில் ஏறி ஒரு நிறுத்தத்தில் இறங்கி தன் வீடு செல்ல அடுத்த பேருந்திற்காக காத்திருந்தாள்.

'அம்மா வரதுக்குள்ள போயிடணுமே! இல்லைன்னா எங்க போனேன்னு கேட்பாங்களே! அப்படிக் கேட்டா பக்கத்திலே உள்ள கடைக்கு போனதா சொல்லிடு வோம்' என அவள் தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்ட போது,

'உன் கையிலே உள்ள காலேஜ் பேக்கும் அதிலே இருக்கிற புக்ஸும் உன் வண்டவாளத்தை தண்ட வாளம் ஏத்தும் நித்திலா!' என்று அவளது மூளை எடுத்துரைத்தது.

'அடடா! இது மொதல்லயே ஞாபகம் வந்திருந்தா நம்ம ஃப்ரண்ட்ஸ் யார்கிட்டவாச்சும் தள்ளிவிட்டு இருக்கலாமே' என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள்.

சரோஜினியும் ராஜதுரையும் காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

''என்னங்க காரை கொஞ்சம் ஓரமா நிறுத்தச் சொல்லுங்க'' என்று சரோஜினி கூறவும் ராஜதுரை யும் ஓட்டுநரிடம் கூறிக் காரை நிறுத்தினார்.

''எதுக்கு சரோ காரை நிறுத்தச் சொன்னே?''

''இல்ல. வீட்டிலே தூங்கி ரெஸ்ட் எடுத்துக்கிட்டு இருக்கிற உங்க பொண்ணோட க்ளோனிங் பஸ் ஸ்டாண்டிலே பஸ்க்காக வெயிட் பண்ணுது. பாவம்! போய் கூட்டிட்டு வாங்க. நாமளே கொண்டு போய் விட்டுவிடுவோம்'' என்று சரோஜினி படுநக்கலாகக் கூறினார்.

'என்ன சொல்கிறாள் இவள்?' என நினைத்துக் கொண்டே ராஜதுரை கீழே இறங்கித் திரும்பிப் பார்க்க, அங்கே பஸ் நிறுத்தத்தில் நித்திலா நின்று கொண்டு இருந்தாள்.

'ஆகா! மாட்டிக்கிட்டோமா?' என நினைத்துக் கொண்டே ராஜதுரை மகளின் அருகே சென்றார்.

''நித்தி!''

''நீங்க எங்கேப்பா இங்கே? நீங்க இங்க இருக்கீங் கன்னா அம்மா எங்கே?''

''காரிலே இருக்காள்'' என்று சற்றுத் தள்ளி இருந்த காரை ராஜதுரை சுட்டிக் காட்டினார்.

''அச்சச்சோ! நாம மாட்டிக்கிட்டமா?''

''ஆமா நித்தி'' என்று கூறி மகளை அழைத்துச் சென்றார்.

வீடு வந்து சேரும் வரை சரோஜினி ஒன்றும் கூறவில்லை. வீட்டிற்குள் வந்ததும் இருவரையும் நிற்க வைத்து பொரிந்தார்.

''என்னடா, ஒரு வாரத்துக்கு முன்னாடி வெளியே சுத்த அனுமதி கேட்ட பொண்ணு நாம வேணாம்னு சொன்ன உடனே அமைதியா இருந்துட்டாளே! நம்ம பொண்ணு அவ்வளவு நல்லவளான்னு நான் யோசிக்காமல் போயிட்டேன்.

காலையில வந்து கோவிலுக்கு போவோமான்னு நீங்க கேட்டப்பவாச்சும் அப்பாவும் மகளும் கூட்டு களவாணிகள் ஆச்சே! இந்த மாதிரி ஏதாச்சும் ப்ளான் போட்டு இருப்பாங்களோன்னு நான் சுதாரிச்சு இருக்கணும்'' என்று புலம்பியவர்,

''நான் வேணாம்னு சொன்னதை சரின்னு நீங்க ஆதரிச்சா அதுக்கு என்ன அர்த்தம்?'' என்று சரோஜினி தன் கணவரைப் பார்த்துக் கேட்க,

''இப்ப என்ஜாய் பண்ணாம வேற எப்போ பண் ணுவா சரோ?'' என்று தன் மனைவியிடம் கேட்டவர், மகளுக்கு ஜாடை காட்டி அவளது அறைக்கு அனுப்பி வைத்தார்.

''இப்ப எதுக்கு அவளை உள்ள அனுப்பினீங்க?''

''அவளுக்கு இந்தக் கல்யாணம் முடிவானால் அதுக்கு அப்புறம் அவளே நினைச்சா கூட இந்த மாதிரி ஃப்ரண்ட்ஸ்ங்க கூட சுத்த முடியாது. விடு சரோ!'' என்று கூறி மனைவியை சமாளித்தார்.

3



ராகவ் மற்றும் நித்திலாவின் ஜாதகம் பொருந்திப் போனதில் இரு வீட்டவர்களும் அடுத்த கட்ட நட வடிக்கையாக புகைப்படங்களைப் பரிமாறிக் கொண் டார்கள். அதனால் திருமணப் பேச்சை ஆரம்பித்த பத்தாவது தினம் சம்பந்தப்பட்டவர்களிடம் அவர் களின் எதிர்கால வாழ்க்கைத் துணையின் புகைப்படம் காண்பிக்கப்பட்டது.

''நித்தி இங்க வாம்மா'' என்று ராஜதுரை அழைக் கவும்,

''சொல்லுங்கப்பா என்ன விஷயம்?'' என்று கேட்டுக் கொண்டே நித்திலா அவர் அருகே வந்தாள்.

''அப்பா உனக்கு கல்யாணம் பண்ணலாம்னு இருக்கேன்.''

''கல்யாணமா? எனக்கா? என்னப்பா விளையாடு றீங்களா?''

''கல்யாண விஷயம் பேசிக்கிட்டு இருக்கேன். இதுல போய் விளையாடுவேனா நித்தி?''

''அப்பா நான் இந்த வாரம் தான் காலேஜே முடிச் சிருக்கேன். இன்னும் ரிசல்ட் கூட வரலை. அதுக் குள்ள கல்யாணம்னு சொன்னா எப்படிப்பா?''

''நீ படிப்பை முடிக்கிற வரைக்கும் உன்னை டிஸ் டர்ப் பண்ணக் கூடாதுன்னு தாம்மா நான் உனக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிக்காமல் இருந்தேன். இப்பக் கூட நான் மாப்பிள்ளையை தேடிப் போக லைம்மா. தானா வந்துச்சு. நல்ல சம்பந்தம். வேண்டாம்னு ஒதுக்க முடியலை.

மாப்பிள்ளை எங்க சேகர் அண்ணனோட சம்பந் தியின் மகன். விசாரிச்சுப் பார்த்ததிலே ரொம்ப நல்ல இடம்னு தெரிய வந்துச்சு. எப்படியும் உனக்கு இன் னும் ஒரு வருஷத்துக்குள்ளே கல்யாணம் பண்ணித் தானே ஆகணும்.''

''அப்பா ப்ளீஸ், ரெண்டு வருஷம் நான் வேலைக்கு போய் சம்பாதிக்கிறேன். அதுக்கு அப்புறமா கல் யாணத்தைப் பத்தி யோசிக்கலாம்.''

''இந்த மாப்பிள்ளையை உனக்குப் பிடிச்சிருந்தால் கூட கல்யாணம் உடனே கிடையாதும்மா. இன்னும் ஆறு மாசம் கழிச்சு தான் கல்யாணத்தை நடத்தறதா இருக்கேன்.''

''இல்லப்பா. நான் வேலைக்கு போய் சம்பாதிக் கணும்.''

''நீ தாராளமா வேலைக்கு போ. ஆனா சென்னையில இல்ல. ஜெர்மனியிலே!'' என்றதும் நித்திலா அவரைப் புரியாத பார்வை பார்க்க,

''ஆமாம்மா. மாப்பிள்ளை ஜெர்மனியிலே வேலை பார்க்கிறார்'' என்று ராஜதுரை பெருமையாகக் கூறினார்.

''ஜெர்மனியா? அங்கெல்லாம் நான் போக மாட்டேன். பாஷை தெரியாத ஃபாரின் கன்ட்ரி எனக்கு வேண்டாம்ப்பா. எனக்கு இந்தியாவிலே இருக்கிற ஒரு மாப்பிள்ளையைப் பாருங்க'' என்றதும் ராஜதுரை ஏமாற்றமாக உணர்ந்தார்.

அதுவரைக்கும் தகப்பனும் மகளும் பேசுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சரோஜினி நித்திலாவிடம் ஒரு கவரை நீட்டி,

''இது பையனோட போட்டோ. பையன் பேரு ராகவ். அவரும் உன்னை மாதிரி இஞ்சினியர் தான். எம்.எஸ் படிக்க ஜெர்மனி போயிருக்கார். அங்கேயே செட்டில் ஆகிட்டார். நீ போட்டோவைப் பாரு. ஒரு நாள் டைம் எடுத்துக்கோ. நல்லா யோசிச்சுப் பார்த்துட்டு எங்களுக்கு முடிவை சொல்லு. உன் கல்யாண விஷயத்திலே நானோ அப்பாவோ உன்னை கட்டாயப்படுத்த மாட்டோம்'' என்றதும்,

நித்திலா அந்தப் புகைப்படத்தை பெற்றுக் கொண்டு தனது அறைக்குள் சென்று மறைந்தாள். தனது அறைக்குள் வந்தவள் அந்தப் புகைப்படத்தை வெளியே எடுத்துப் பார்த்தாள்.

எந்தப் பெண்ணையும் திரும்பிப் பார்க்க வைக்கும் வசீகரத் தோற்றத்தில் இருந்தவனைக் கண்டவள், ''ராகவ்...: ம்ம்ம் ஆள் நல்லா அம்சமாத் தான்டா இருக்கே!'' என்று கூறினாள்.

அவனது முகத்தில் இருந்த புன்னகையை கண்டவள், ''உன் ஸ்மைலை பார்த்தாலே எதிரிலே உள்ளவங்களும் உன் கூடச் சேர்ந்து ஸ்மைல் பண்ணிடுவாங்களோ?'' என்று கேட்டுக் கொண்டாள்.

''உங்க குடும்பம் ரொம்ப நல்ல குடும்பம்னு எங்கப்பா சொன்னார். நான் எதிர்பார்த்த எஜுகேஷனல் குவாலிபிகேஷன் உன்கிட்ட இருக்கு. அப்புறம் ஆள் பார்க்க செம ஸ்மார்ட்டா இருக்க! எல்லாம் ஓகே.

ஆனா எனக்கு ஃபாரின் கன்ட்ரியில செட்டில் ஆகிறதிலே இஷ்டம் இல்லையே. இங்கேயே... எங்க அப்பா அம்மா பக்கத்திலே, நான் நினைச்சா வந்து பார்க்கிற தூரத்திலே தான் செட்டில் ஆகணும்னு ஆசைப்படுறேன். அது ஒண்ணு மட்டும் இடிக்குதேடா!'' என்று கூறிக் கொண்டாள்.

அன்று இரவிற்குள் அவனது புகைப்படத்தை ஒரு நூறு தடவையாவது பார்வையிட்டு இருப்பாள்.

அதே நாள் ஜெர்மனியில் தனது மின்னஞ்சல் முகவரிக்கு வந்திருந்த நித்திலாவின் புகைப்படத்தை பார்த்த உடனே ராகவிற்கும் அவளைப் பிடித்துப் போனது.

அழகிய பல்வரிசை தெரியச் சிரித்துக் கொண்டிருந்தவளைப் பார்த்தவன், ''உன் பல்வரிசை முத்துப்

போல அழகா இருக்கும்னு முன்கூட்டியே தெரிஞ்சு தான் உங்க அப்பா அம்மா உனக்கு நித்திலான்னு பேரு வச்சாங்களா பெண்ணே?'' என்று கேட்டுக் கொண்டான்.

அவன் தனது தந்தைக்கு அழைத்து, ''எனக்கு பொண்ணை பிடிச்சிருக்குப்பா'' என்று கூறினான்.

''ரொம்ப சந்தோஷம் ராகவ்.''

''ஆனா நான் பொண்ணு கூடப் பேசிப் பார்க்கணும். அதுக்கு அப்புறமா என் முடிவைச் சொல்லுறேன்.''

''அவங்ககிட்ட கேட்டு அதுக்கு ஏற்பாடு பண்ணுறேன்'' என்று சேதுபதி கூறினார்.

மறுநாள் ராஜதுரை மகள் என்ன பதில் சொல்வாளோ என்ற யோசனையோடு அமர்ந்திருந்தார். ராஜதுரை பிடிவாதக்காரர் தான். அவர் எத்தனையோ விஷயங்களில் பிடிவாதம் பிடித்து, தான் விரும்பியதை மகளை செய்ய வைத்திருக்கிறார் தான்.

இருப்பினும் மகளது திருமண விஷயத்தில் மகளின் விருப்பப்படி நடக்க வேண்டும் என நினைத்தே மகளைக் கட்டாயப்படுத்தாமல் மகளின் முடிவிற்காக காத்திருந்தார்.

சரோஜினி நித்திலாவின் அறையை சுத்தம் செய்வதற்காக அவளது அறைக்குள் சென்றார். நித்திலா குளித்துக் கொண்டிருந்தாள். அவளது தலையணை உறைகளை மாற்றலாம் என நினைத்த சரோஜினி

அதை உருவ உள்ளிருந்து ராகவின் புகைப்படம் வெளியே வந்து விழுந்தது.

அதைக் கண்டு பெரிதாகப் புன்னகைத்த சரோஜினி அந்த உறையை மீண்டும் மாட்டி அந்தப் புகைப்படத்தை அதனுள்ளே வைத்து விட்டு ஓசைப் படாமல் வெளியேறினார்.

''என்ன சரோ சிரிச்சுக்கிட்டு இருக்க? நானே நித்தி என்ன பதில் சொல்லுவாளோன்னு டென்ஷனா இருக்கேன்'' என்று ராஜதுரை குறைபட,

''டென்ஷனை எல்லாம் தூக்கிப் போடுங்க. ராகவ் போட்டோ இப்ப எங்க இருக்குத் தெரியுமா? உங்க பொண்ணோட தலையணை உறைக்குள்ளே! கண்டிப்பா நல்ல பதில் தான் சொல்லுவாள்'' என்றதும் ராஜதுரை நிம்மதியானார்.

குளித்து முடித்து தனது அறையில் இருந்து வெளியே வந்த மகளிடம், ''என்ன முடிவு பண்ணி இருக்க நித்தி? நான் அவங்ககிட்ட என்ன பதில் சொல்லட்டும்?'' என்று ராஜதுரை கேட்டார்.

''அப்பா நான் ஒரு தடவை அவர் கூடப் பேசிப் பார்க்கணும். அதுக்கு அப்புறமா என் முடிவை சொல்லுறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

அவள் சொல்வதில் நியாயம் இருப்பதாகவே அவளைப் பெற்றவர்கள் எண்ணினார்கள். அன்றே சேதுபதி போன் செய்து தன் மகன் நித்திலாவிடம் பேச விரும்புவதாகத் தெரிவித்தார்.

இருவருடைய தொலைபேசி எண்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. ராகவ் ஜெர்மனியில் இருந்து போன் செய்வான் என்று சேதுபதி கூறினார். நித்திலாவும் அவனுடைய அழைப்பை ஆவலுடன் எதிர் பார்த்துக் காத்திருந்தாள்.

இரவு பத்து மணி போல் தான் ராகவ் அவளை அழைத்தான்.

''ஹலோ! நான் ராகவ் பேசுறேன்.''

''சொல்லுங்க. நான் நித்திலா பேசுறேன்.''

''சாரி லேட் ஆகிடுச்சு. ஆபிஸில் இருந்து இப்ப தான் வந்தேன். உங்க கூடப் பேசுறதுக்காக தான் சீக்கிரமா வந்தேன்.''

''சீக்கிரமாவா? மணி இப்போது பத்து ஆகிடுச்சு.''

''இந்தியாவில தான் பத்து மணி ஆகி இருக்கும். ஆனா இங்க இப்போ தான் ஆறரை மணியாகுது. ரெண்டு நாட்டுக்கும் மூன்றரை மணி நேரம் டிஃபரன்ஸ் இருக்கில்ல?''

''சாரி. சாரி நான் அதை மறந்துட்டேன்.''

''உங்களுக்கு லேட் ஆகிடுச்சா? நான் இப்போ பேசலாமா?''

''லேட் ஆகலை. நாம பேசலாம்.''

''உங்ககிட்ட ஸ்கைப் ஐடி இருக்கா?''

''இருக்கு.''

''அப்படின்னா நாம வீடியோ சாட் பண்ணலாமா?''

''வீடியோ சாட்டே பண்ணுவோம். அதான் நேரிலே பேசின மாதிரி இருக்கும்'' என்று அவனது கருத்தை ஆதரித்தவள் தனது ஸ்கைப் ஐடியை அவனுக்கு தெரிவித்தாள்.

அவன் அழைப்பை துண்டித்துவிட்டு தனது மடிகணினியை இயக்கி அவள் தந்த ஐடிக்கு ரிக்வஸ்ட் அனுப்பினான். அவள் தனது மடிகணினியை இயக்கி தனக்கு வந்த ரிக்வஸ்டை ஏற்றுக் கொண்டதும் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு பேச ஆரம்பித்தனர்.

அவனது முகத்தை பார்த்த அவளும், அவளது முகத்தை பார்த்த அவனும் போட்டோவிலே இருப்பது போல் தான் நேரிலும் இருக்கிறான்(ள்) என்று நினைத்துக் கொண்டனர்.

''என்னைப் பத்தி உங்ககிட்ட எவ்வளவு விஷயம் சொன்னாங்கன்னு தெரியலை,'' என்று ஆரம்பித்தவனை,

''எம்.எஸ் படிக்கப் போனவர் அந்த நாட்டிலேயே செட்டிலானது வரைக்கும் சொன்னாங்க'' என்று நித்திலா கூறவும் ராகவ் பெரிதாகப் புன்னகைத்தான்.

'டேய்! உன் கூடப் பேசி நான் ஒரு முடிவுக்கு வர வரைக்கும் தயவு செய்து என் முன்னாடி இப்படி ஸ்மைல் பண்ணாதேடா! நான் அப்புறம் ஒரேடியா கவுந்துடுவேன்' என்று நித்திலா மனதுக்குள் கூறிக் கொண்டாள்.

''நீங்க வேகமா சொல்லுறதை பார்த்தால் உங்களுக்கு நான் ஜெர்மனியிலே இருப்பது பிடிக்கலை போல!'' என்று சரியாகக் கணித்து ராகவ் கேட்க நித்திலா தன் கண்களில் ஆச்சரியத்தைக் காட்டினாள்.

''நீங்க கண்ணை விரிக்கிறதை பார்த்தால் சரியா சொல்லிட்டேன் போல!'' என்று அவன் தன்னைத் தானே தட்டிக் கொடுத்துக் கொண்டான்.

''யெஸ். ஃபாரின்ல செட்டில் ஆகணும்னா, எனக்கு அது பிடிக்காது.''

''தெளிவா சொல்லுங்க நித்திலா. ஃபாரின்ல இருக்கிறதுக்கே பிடிக்காதா? இல்ல, அங்கேயே லைஃப் லாங் செட்டிலாவது பிடிக்காதா?''

''நான் எங்க அம்மா அப்பாவுக்கு ஒரே பொண்ணு. அதனால நான் அவங்க பக்கத்திலே இருக்க ஆசைப் படுறேன். கொஞ்ச வருஷம் ஃபாரின்ல இருந்தால் எனக்கு பிரச்சனை இல்லை. ஆனா நிரந்தரமான்னா...'' என்றவள் தன் உதடுகளைப் பிதுக்கினாள்.

''தட்ஸ் நாட் எ ப்ராப்ளம். நானும் ஒரு அஞ்சு வருஷம் கழிச்சு இந்தியா வந்துடுவேன். நானும் எங்க வீட்டுக்கு ஒரே பையன். அதனால அவங்களுக்கு பக்கத்திலே இருக்க தான் நானும் ஆசைப்படுறேன்.''

''நிஜமா இந்தியா வந்துடுவீங்களா?'' என்று நித்திலா உற்சாகமாய் கேட்க,

''கண்டிப்பா வந்துடுவேன்'' என்று அவன் உறுதி அளித்தான்.

''அப்படின்னா எனக்கு எந்தப் ப்ராப்ளமும் இல்லை.''

''அப்போ இது தான் ஒரு பெரிய தடையா இருந்துச்சா?'' என்று சிரித்துக் கொண்டே ராகவ் கேட்க அவள் ஆமோதிப்பதாய் தலையாட்டினாள்.

அதன் பின்பு இருவரும் தங்களது விருப்பு, வெறுப்புகளை பகிர்ந்து கொண்டார்கள். அவர்கள் பேசி முடித்து அழைப்பை துண்டிக்கும் பொழுது ஒரு மணி நேரம் கடந்திருந்தது.

இருவருமே தங்களது பெற்றோர்களிடம் தங்களது சம்மதத்தை தெரிவித்தார்கள்.

சேதுபதி, பூங்கோதையுடனும் தனது மகள் மேகலாவின் குடும்பத்துடனும் சம்பிரதாயமாக பெண் பார்க்க வந்தார்.

ராஜதுரை தன் அண்ணன் வஜ்ரவேலுவையும் அவரது மனைவியையும் பெண் பார்க்கும் வைபவத்திற்கு அழைத்தார். அதில் சரோஜினிக்கு அவ்வளவாக விருப்பம் இல்லை. இருப்பினும் வீட்டிற்கு பெரியவர்கள் என்பதால் ஒன்றும் சொல்லாமல் அமைதியானார்.

பூங்கோதை நித்திலாவை பார்த்த உடனே, ''எங்களுக்கு பொண்ணை ரொம்பப் பிடிச்சிருக்கு'' என்றார்.

நித்திலாவின் பெரியம்மா, ''என் பொண்ணு ஜாதகமும் உங்க பையன் ஜாதகமும் பொருந்திப்

போயிருந்தா இந்நேரம் நீங்க எங்க வீட்டிலே உட்கார்ந்து என் பொண்ணை பார்த்து இந்த மாதிரி சொல்லி இருப்பீங்க!'' என்று அங்கலாய்த்தார்.

நித்திலாவும் ராஜதுரையும் சங்கடமுற்றனர். சரோஜினியின் முகம் கடுகடுவென்று ஆனது.

'எங்க வந்து என்ன பேச்சு பேசுறாங்க இந்த அக்கா. இதுக்கு தான் இவங்க அவசியம் வரணுமான்னு நான் யோசிச்சேன்' என சரோஜினி நினைத்துக் கொண்டிருக்கும் போதே,

பூங்கோதை நித்திலாவின் பெரியம்மாவிடம், ''யாருக்கு யாருன்னு அந்த ஆண்டவன் இல்ல தீர்மானிக்கணும். இப்பவும் இது உங்க வீடு தானே? நித்திலாவும் உங்க பொண்ணு தானே?'' என்று கேள்வி எழுப்பவும்,

''அவளும் என் பொண்ணு தான்'' என்று அவர் அசடு வழிந்தார்.

பூங்கோதையின் பதிலால் நித்திலாவும் அவளது பெற்றோர்களும் மனம் நிம்மதி அடைந்தனர்.

பெரியவர்கள் திருமணத்தை உறுதி செய்தனர். ஆறு மாதங்கள் கழித்து நவம்பர் மாதக் கடைசியில் திருமணம் செய்து வைக்கலாம் என முடிவெடுத்தனர்.

இருவரின் ஜாதகத்திலும் அதுவே நல்ல நேரம் என்று ஜோசியர்கள் கணித்ததால் அவ்வாறு முடிவு செய்தனர். திருமணம் உறுதியானதை அடுத்து நித்திலாவும் ராகவும் தினமும் பேசிக் கொண்டார்கள்.

நித்திலாவின் திருமணம் உறுதி ஆனதை தெரிந்து கொண்ட அவள் தோழிகள் அவளைக் கிண்டல் செய்து தள்ளினர்.

''கள்ளி! நாம அன்னைக்கு கேட்டப்போ இவ தனக்கு கல்யாணம்னு சொன்னாளா பாரு!''

''அவ எப்படி சொல்லுவா? மாப்பிள்ளை செம ஸ்மார்ட்டா இருந்திருப்பார்.''

''நாமெல்லாம் அவரை சைட் அடிச்சிடக் கூடாதுன்னு நினைச்சிருப்பாள்'' என்று ஆளுக்கொன்றாய் கூறி அவளை வெறுப்பேற்றினர்.

''நிஜமாவே எனக்கு அன்று தெரியாது'' என்று அவள் சொன்னதை யாரும் காதில் வாங்கிக் கொள்ள வில்லை. அவள் கூறியதை அவர்கள் நம்பினாலும் அவளை வம்பிழுப்பதை விட்டுவிடத் தயாரில்லை என்பது தான் உண்மை.

4



ராகவ் முதலில் பதிவு திருமணம் செய்ய வேண்டும் என்று விரும்பினான். அதை அவன் நித்திலாவிடம் கூடத் தெரிவிக்கவில்லை. முதலில் அவளின் தந்தையிடம் பேசலாம் எனத் தீர்மானித்தான். அதற்காக ராஜதுரையை அழைத்தான்.

''மாமா நான் ராகவ் பேசுறேன்.''

''சொல்லுங்க மாப்பிள்ளை.''

''ஆறு மாசம் கழிச்சு கல்யாணம் வச்சு இருப்பதா அப்பா சொன்னார்.''

''ஆமா மாப்பிள்ளை. உங்க ரெண்டு பேர் ஜாதகத்தை பார்த்ததில்....'' என்று தொடங்கியவரை இடைமறித்து,

''எனக்கு அது ஓகே தான் மாமா. ஆனா முதல்ல... இந்த மாசமே ரிஜிஸ்டர் மேரேஜ் முடிச்சிடலாம்'' என்றான்.

''எதுக்கு மாப்பிள்ளை இவ்வளவு சீக்கிரமா பண்ணனும்னு சொல்லுறீங்க?''

''நித்திலா ஜெர்மனி வரதுக்கு ஸ்பௌஸ் விசா வாங்கணும்.''

''அதுக்கு என்ன செய்யணும் மாப்பிள்ளை?''

''சென்னையில இருக்கிற மாக்ஸ் முல்லர் பவன் இன்ஸ்ட்யூட்'ல ஜெர்மன் கத்துக் கொடுக்கிற க்ளாஸிலே அவ சேரணும். அந்தக் க்ளாஸிலே சேருவதுக்கு சீட்டும் உடனே கிடைச்சிடாது. அதுக்கு வேற வெயிட் பண்ணனும். சீட் கிடைச்சதுக்கு அப்புறம் நாற்பதைஞ்சு நாள் க்ளாஸ். அதுக்கு அப்புறம் அவங்க வைக்கிற எக்ஸாமிலே நித்திலா பாஸானால் அவங்க ஒரு சர்ட்டிபிகேட் தருவாங்க.

அவ அந்த எக்ஸாமிலே பாஸ் பண்ணுறதுக்குள்ள எங்க கல்யாணத்தை ரிஜிஸ்டர் பண்ணின

சர்டிபிகேட்டும் ரெடியாகணும். கல்யாண சர்டிபிகேட் நம்ம கைக்கு வரதுக்கு ரொம்ப டைம் ஆகாது. ஆனா இந்த ரெண்டு சர்டிபிகேட்டும் இருந்தால் தான் விசாக்கு அப்ளேயே பண்ண முடியும். விசா கைக்கு வரதுக்கு சில மாசம் ஆகும்.

இது எல்லாத்துக்கும் ஒரு அஞ்சாறு மாசம் ஆகும். இப்பவே இதை முடிச்சு வச்சுட்டால் கல்யாணம் முடிஞ்சு நான் போகும் போதே அவளையும் கூட்டிட்டுப் போயிடுவேன். இல்லைன்னா சில மாசங்கள் கழிச்ச பிறகு தான் அவ கிளம்புற மாதிரி இருக்கும். அதுக்கு தான் சொல்லுறேன்.''

''நான் கொஞ்சம் யோசிச்சுப் பார்த்துட்டுச் சொல்லட்டுமா மாப்பிள்ளை?''

''தாராளமா மாமா. ஜெர்மன் போற எல்லோரும் இப்படித் தான் பண்ணுறாங்க. நீங்க வேணா விசாரிங்க. அப்புறம் மாமா நான் இந்த மாசம் இந்தியா வரதுக்காக ஏற்கனவே டிக்கெட் எடுத்து இருந்தேன். இப்போ ஆறு மாசம் கழிச்சு கல்யாணம் வச்சிருக்க தால லீவை கேன்சல் பண்ணப் போறேன். ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணுறதா இருந்தா நான் ஏற்கனவே எடுத்து வச்ச டிக்கெட்டை யூஸ் பண்ணி ஒரு நாலு நாள் மட்டும் இந்தியா வந்துட்டுப் போவேன்.

இந்த மாசமே கல்யாணம் ரிஜிஸ்டர் பண்ணத் தேவையில்லை தான். அவ எக்ஸாம் எழுதுறதுக்குள்ளே எப்ப வேணா பண்ணிக்கலாம். ஆனா எடுத்த டிக்கெட்டை யூஸ் பண்ணிக்கலாம்னு தான் இந்த

மாசமே ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணலாம்னு சொல்லுறேன். நீங்க முடிவு பண்ணிட்டு சொல்லுங்க'' என்றவன் வேறு விஷயங்களைச் சில நிமிடங்கள் பேசிவிட்டு அழைப்பைத் துண்டித்தான்.

விஷயத்தை ராஜதுரை தன் மனைவி மற்றும் மகளிடம் தெரிவித்தார். அன்று இரவு நித்திலா ராகவை அழைத்தாள். அவளது அழைப்பை ஏற்றவன்,

''இன்னும் அஞ்சு நிமிஷத்திலே வீட்டுக்கு போயிடுவேன். அதுக்கு அப்புறமா கூப்பிடுறேன்'' என்று கூறி அழைப்பைத் துண்டித்தான்.

பத்து நிமிஷத்திலே அழைத்தவன், ''என் மாமனார் என்ன சொல்லுறார்?'' என்று எடுத்த எடுப்பிலேயே கேட்டான்.

''ம்ம்ம் சுரைக்காய்க்கு உப்பில்லைன்னு சொல்லுறார்.''

''ப்ச்சு... அதெல்லாம் ஓல்ட் ஸ்டைல். ஏதாச்சும் புதுசா டிரை பண்ணு'' என்று ராகவ் கிண்டலாக உரைத்ததும்,

''செல்போனிலே பேலன்ஸ் இல்லைங்கிறார். லேப்டாப்பிலே சார்ஜ் இல்லைங்கிறார். பேஸ் புக்கிலே அவர் போட்ட ஸ்டேட்டஸுக்கு வந்த லைக் பத்தலைங்கிறார்...'' என்று சொல்லிக் கொண்டே போனவளை இடைமறித்து,

''ஒத்துக்கிறேன் நித்திலா. நீ இந்தக் கால யூத் ஐகான் என்று நான் ஒத்துக்கிறேன்'' என்று ராகவ் கிண்டலாக உரைக்க அவள் அமைதி காத்தாள்.

''என்னாச்சு? மேடம் சைலன்ட் ஆகிட்டீங்க?''

''.....''

''வாட் இஸ் பாதரிங் யூ?''

அவள் அப்பொழுதும் அமைதியாக இருக்க,

''உன் பிரச்சனை என்னன்னு சொன்னால் தான்டா எனக்குப் புரியும்.''

''நான் கண்டிப்பா அந்த எக்ஸாம் எழுதணுமா?'' என்று அவள் பாவமாய் கேட்க அவன் வாய்விட்டு நகைத்தான்.

''ஓ மை காட்! இதுக்கு தான் இவ்வளவு பில்டப்பா?''

''சிரிக்காதீங்க. நான் எவ்வளவு கவலையா இருக்கேன் தெரியுமா? ரெண்டு மாசத்துக்குள்ள புரியாத பாஷையை கத்துக்கிட்டு பாஸாகிறது ஈஸியான விஷயமா என்ன?''

''நீ நினைக்கிற அளவுக்கு அவ்வளவு கஷ்டமான விஷயம் இல்லைடா.''

''நீங்க எதுக்கு ஜெர்மனி போகணும்? நான் எதுக்கு அவங்க பாஷையை கத்துக்கணும்? நீங்க சென்னையிலேயே இருந்தீங்கன்னா இந்தப் பிரச்சனை வராதில்ல'' என்று அவள் வருத்தமாய் மொழிய அவன் அமைதியானான்.

இரு நிமிடங்களுக்கு மேலாய் இருவருமே போனை பிடித்துக் கொண்டு அமைதியாக இருந்தனர்.

''நான் சொன்னதைக் கேட்டு கோபமாகிட்டீங்களா? வருத்தமா இருக்கீங்களா?''

''நிச்சயமாய் சந்தோஷப்படலை. நான் அன்னைக்கே உன்கிட்ட சொன்னேனில்ல, நான் அஞ்சு வருஷம் கழிச்சு தான் சென்னை வருவேன்னு. நீ இப்ப வந்து இப்படிப் பேசினால் நான் என்ன சொல்ல?''

அவள் பதில் ஒன்றும் கூறாமல் அமைதியாக இருந்தாள்.

''லுக் நித்திலா! உனக்கு ஜெர்மனி வரப் பிடிக்கலைன்னா...'' என்று அவன் தொடங்கவும்,

'இந்தக் கல்யாணப் பேச்சை இத்தோடு நிறுத்திக்கலாம் என்று சொல்லப் போகிறானோ?' என்று நினைத்த பொழுதே அவளது வயிறு கலங்கியது.

ஆனால் அவனோ, ''உனக்கு ஜெர்மனி வரப் பிடிக்கலைன்னால் கல்யாணத்துக்கு அப்புறம் நீ சென்னையிலே இரு. அஞ்சு வருஷம் நீ உங்க அப்பா வீட்டிலேயே இருந்துக்கோ. நீ என் கூட வரணும்னு ஆசைப்பட்டால் பேசிக் ஜெர்மன் கோர்ஸ் க்ளாஸிலே சேர்ந்து படி. சாய்ஸ் இஸ் யுவர்ஸ். யோசிச்சு முடிவு பண்ணு. பை'' என்றவன் அழைப்பைத் துண்டித்தான்.

விடிய விடிய யோசித்தவள் ஒரு முடிவிற்கு வந்த வளாய் காலை பத்து மணிக்கு அவனது அலை

பேசிக்கு மிஸ்டு கால் கொடுத்தாள். ஜெர்மனியில் அது காலை ஆறரை மணி.

''காலங்கார்த்தால யாரு நம்மளை தூங்க விடாமல் இப்படி மிஸ்டு கால் குடுத்திருக்காங்க?'' என்று கடுப்புடன் எழுந்த ராகவ் நித்திலாவின் பெயரைப் பார்த்ததும்,

'இந்நேரத்திலே என்ன குண்டு போடப் போறாள்னு தெரியலையே! இவ கூடப் பேச ஆரம்பிச்சா நேரம் போயிடும். குளிச்சுட்டு வந்து இவ கூடப் பேசலாம். அப்போ தான் ஆபிஸ்க்கு கிளம்பிக்கிட்டே இவ கூடப் பேச முடியும்' என நினைத்தவனாய் குளியலறைக்குள் சென்று மறைந்தான்.

அவன் குளித்து முடித்து வெளியே வர எடுத்துக் கொண்ட இருபது நிமிடங்களில் அவள் இருபதிற்கும் மேற்பட்ட மிஸ்ட் கால்கள் கொடுத்துத் தள்ளி இருந்தாள்.

'அப்படியென்ன அவசரம்னு தெரியலையே!' என நினைத்தவன் அவளை அழைத்து, ''என்னாச்சு நித்திலா? காலங்கார்த்தால எதுக்கு இத்தனை மிஸ்ட் கால் குடுத்துத் தள்ளுறே?'' என்று கேட்டான்.

''நான் என்ன பண்ணுறது, நாலு ரிங் போகும் முன்னாடி நீங்க எடுக்கலைன்னா வாய்ஸ் மெசேஜுக்கு போயிடுது. கக்கரே பிக்கரேன்னு ஜெர்மன் மொழியில என்னத்தையோ திட்ட ஆரம்பிச்சுடுறாங்க.''

''நம்ம ஊரிலேயும் 'நீங்கள் அழைக்கும் நபர் தொடர்பு எல்லைக்கு வெளியில் உள்ளார்' அப்படின்னு சொல்லுவாங்களே! அது திட்டா?''

''அதை விடுங்க. திட்டினதோட பதினைஞ்சு இருபது ரூபாய் காசையும் பிடுங்கிடுறாங்க. இந்த ஜெர்மன்காரங்க அநியாயம் பண்ணுறாங்க'' என்றதும் அவன் கடுப்பானான்.

''ஜெர்மன் செல்போன் நெட்வொர்க் நடத்துறவன் நியாயவாதியா இல்ல அநியாயவாதியான்னு விவாதம் பண்ண தான் காலங்கார்த்தால மிஸ்டு கால் கொடுத்தியா?''

''அதுக்கில்ல, நேத்து நீங்க சொன்னதை நைட் முழுசும் யோசிச்சுப் பார்த்தேன். எனக்கு கேம்பஸ் இன்டர்வியூவில் வேலை கிடைச்சிருக்குன்னு சொன்னேனில்ல.''

எதுவா இருந்தாலும் அவள் முழுவதாய் சொல்லி முடிக்கட்டும் என நினைத்தவனாய் ''ம்ம்ம்...'' என்று மட்டும் சொன்னான்.

''அதனால நான் சென்னையிலே வேலை பார்த்துக் கிட்டு அப்பா அம்மாவோட இருக்கேன். இப்போ சில முஸ்லீம் கன்ட்ரீஸ்க்கு வேலைக்கு போறவங்களெல் லாம் அவங்க வைஃபை இங்கேயே விட்டுட்டு போறாங்க இல்ல. அது மாதிரி நினைச்சுக்கலாம்.''

''முஸ்லீம் கன்ட்ரீஸ்ல விசா கொடுக்கிறதிலே ரொம்பக் கெடுபிடி உண்டு. அதனால அவங்களெல்

லாம் வேற வழி இல்லாமல் குடும்பத்தை பிரிஞ்சு தனியா வேலைக்கு போறாங்க. ஆனா இங்க நிலைமை அப்படி இல்லையே!'' என்றதை அவள் காதில் வாங்கிக் கொள்ளாமல்,

''அஞ்சு வருஷம் தானே! அதுக்கு அப்புறம் நீங்க இங்க வந்துடப் போறீங்க'' என்று திட்டம் போட் டாள்.

''அப்படின்னா நீ தனியா இருந்துக்கிறேன்னு சொல்லுறியா?''

''தனியாவா? அப்பா அம்மா கூட இருக்கப் போறேன்னு தானே சொன்னேன்.''

''நான் சொல்ல வருவது, நான் இல்லாமல் தனியா.''

''நீங்க என் பக்கத்திலே இல்லைன்னா அதுக்கு பேரு தனியாவா?'' என்று அவள் கிண்டலாக உரைக்க,

''ஓகே நித்திலா. இப்போதைக்கு இதைப் பத்தி நீ யார்கிட்டவும் எதுவும் சொல்ல வேண்டாம். நான் ஆபிஸ்க்கு கிளம்புறேன். டைம் ஆச்சு. பை'' என்ற வன் அழைப்பைத் துண்டித்தான்.

''லூசு! லூசு! காலங்கார்த்தாலே மூட் அவுட் பண்ணுறாள். அவளும் அவ யோசனையும்!'' என்று வாய்விட்டுத் திட்டியவன், 'என்ன செய்யலாம்?' என்று கண்களை மூடிச் சிந்தித்தான். ஒரு வழியைக் கண்டுபிடித்தான்.

இவளுக்கு அவ வழியிலே போய் தான் புரிய வைக்கணும் என நினைத்துக் கொண்டவனாய் அலுவலகத்திற்குக் கிளம்ப ஆரம்பித்தான்.

5



அன்று மாலை நித்திலாவின் பேஸ்புக் அக்கவுண்டிற்கு ராகவிடம் இருந்து ஒரு செய்தி வந்திருந்தது.

'நான் வேலை விஷயமாக நான்கு நாட்களுக்கு ஸ்வீடன் போகிறேன். அங்கே என்னுடைய செல்போன் வேலை செய்யாது. ஜெர்மனிக்கு வந்த பிறகு உன்னுடன் பேசுகிறேன்' என்று பொய்யான தகவலை அனுப்பி இருந்தான்.

அவன் ஜெர்மனியிலே தான் இருந்தான். அவளிடம் பேசாமல் இருந்து அவளைத் தவிக்க விட எண்ணியே அவ்வாறு ஒரு பொய்யான தகவலை அவளுக்கு அனுப்பினான்.

'காலையிலே பேசும் போது கூடச் சொல்லலை. ஆபிஸ் போன பிறகு தான் தெரிஞ்சிருக்கும் போல. போற அவசரத்திலேயும் நமக்குத் தகவல் சொல்லி இருக்கார். குட் பாய்!' என்று நித்திலா தன் மனதிற்குள் ராகவைப் பாராட்டிக் கொண்டாள்.

அன்று இரவு அவனிடம் இருந்து அவளுடைய அலைபேசிக்கு அழைப்பு வரவில்லை. தெரிந்த விஷயம் தானே என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள். இரண்டாவது நாள் இரவிலும் அவனிடமிருந்து அழைப்பு வரவில்லை என்றதும் வருத்தமாக இருந்தது.

மூன்றாவது நாளும் அவனிடம் பேசாதது எரிச்சலைக் கிளப்பியது. மறுநாள் காலையில் அந்த எரிச்சல் அவளைத் தன் தாயிடம் எல்லாவற்றிற்கும் கோபம் கொள்ளச் செய்தது.

''இன்னைக்கு நீ நீயா இல்லை. உனக்கு என்னாச்சு நித்தி? இந்த சின்ன விஷயத்துக்கு எதுக்கு இவ்வளவு கோபம்?'' என்று சரோஜினி பல முறை மகளிடம் கேட்டார்.

தனது அறைக்குள் சென்ற நித்துலா, ''எனக்கு என்ன ஆச்சு?'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

மனசுக்குப் பிடிக்காத நிகழ்ச்சி ஏதாவது நடந்ததா என்று யோசித்துப் பார்த்தாள். இல்லை என்ற பதில் கிடைத்தது. அப்படியென்றால் வித்தியாசமாக என்ன நடந்தது என்று யோசித்துப் பார்த்தாள். வித்தியாசம் என்றால் மூன்று நாட்களாக ராகவ் போன் பண்ணவில்லை என்ற விடை கிடைக்கவும் திகைத்தாள்.

'ராகவிடம் மூன்று நாட்களாகப் பேசாமல் இருப்பதா என்னை இந்த அளவிற்கு பாதிக்கிறது? ஒரு நாலு

நாள் தானே தொடர்ந்து பேசிக் கொண்டு இருந்தா
இப்போ மூணு நாளாப் பேசலை. அதுக்காகவா நா
இப்படிப் பித்துப் பிடிச்சதைப் போல இருக்கேன்?
என்று குழம்பிப் போனாள்.

அன்று இரவும் அவனிடம் இருந்து அழைப்
வரவில்லை என்றதும் அவளது கண்களில் கண்ணீ
உற்பத்தியானது.

''எனக்கும் அவருக்கும் கல்யாணம் தான் உறு
செய்யப்பட்டிருக்கு. நான் இதுவரை அவரை நேரி
கூடப் பார்க்கவில்லை. நாலு நாட்களில் நான்கு ம
நேரம் பேசி இருக்கிறேன். அவ்வளவு தான். அதுக்
இப்படி இருந்தால், எங்களுக்கு கல்யாணம் ஆ
துக்கு அப்புறம் எப்படி என்னால அவரைப் பிரிஞ்
இருக்க முடியும்? அதுவும் அஞ்சு வருஷம்? லூசு
தனமா எப்படி அப்படி ஒரு முடிவை எடுத்தேன்!'
என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டாள்.

அடுத்த நாள் காலை ராஜதுரை மகளிடம் வந்து
''மாப்பிள்ளை சொன்னது சரி தான் நித்தி. ஜெர்மன்
போறதுக்கு விசா வாங்கணுங்கிறதுக்காக எல்லோரும்
முதல்ல ரிஜிஸ்டர் மேரேஜை முடிச்சிடுறாங்களாம்
நாம என்ன செய்யலாம்?'' என்று கேட்டார்.

''இந்த மாசமே ரிஜிஸ்டர் பண்ண ஏற்பாடு
பண்ணுங்கப்பா. அப்படியே அந்த ஜெர்மன் கிளாஸ்
பத்தியும் விசாரிங்கப்பா'' என்று நித்திலா பச்சைக்
கொடி காட்ட ராஜதுரை இது சம்பந்தமாக சேது
பதியைத் தொடர்பு கொண்டார்.

அன்று இரவு வழக்கமாக ராகவிடம் இருந்து போன்
வரும் நேரத்திற்காக நித்திலா ஆவலுடன் காத்துக்
கொண்டு இருந்தாள். சரியாக இரவு பத்தரை மணிக்கு
அவன் அழைக்க,

''ஹலோ! எப்படி இருக்கீங்க?'' என்று அவள்
கேட்ட கேள்வியில் வருத்தமும் ஏக்கமும் அப்பட்ட
மாக வெளிப்பட ராகவ் உற்சாகமானான்.

''நான் சூப்பரா இருக்கேன்'' என்று அவன் உற்
சாகமாய் குரல் கொடுக்க,

''நாலு நாளா என் கூடப் பேசாமல் இருந்தது உங்
களுக்கு சந்தோஷமா இருக்கா?'' என்று அவள்
பாவமாய் கேட்க,

''இல்லைடா. நாலு நாளுக்கு அப்புறம் உன் கூடப்
பேசுறதால சந்தோஷமா இருக்கேன்'' என்று கூறி
அவள் மனதைக் குளிர்வித்தான்.

''நான் நாலு நாளா ரொம்ப வருத்தமா இருந்தேன்
தெரியுமா?''

''ஏன்?''

''நீங்க போன் பண்ணலை இல்ல. அதான் ஒரே
சோகம். ப்ச்.''

''நீ ஒண்ணும் தனியா இருக்கலையே! உங்க
அப்பா அம்மாவோட தானே இருந்த, அப்புறம் ஏன்
சோகமா இருந்தே?''

''யார் இருந்தாலும் நீங்க இல்லைன்னா அது
தனியா இருக்கிற மாதிரி தானே?''

''நாலு நாளைக்கு முன்னாடி நான் இதைச் சொன்ன போது ஒரு பொண்ணு வேற மாதிரி சொன்னாளே...'' என்று அவன் கிண்டலடிக்க.

''அது போன வாரம். இது இந்த வாரம்'' என்றவள், ''நான் இன்னைக்கு காலையில எங்க அப்பாகிட்ட நம்ம ரிஜிஸ்டர் மேரேஜ்க்கு ஏற்பாடு பண்ணச் சொல்லிட்டேன். அந்தக் கிளாஸைப் பத்தி விசாரிக்கவும் சொல்லிட்டேன்'' என்றதும் 'உய்' என்று விசில் அடித்தான்.

''இப்போ உங்களுக்கு சந்தோஷமா?'' என்று அவள் மென்மையாகக் கேட்க,

''ரொம்ப ரொம்ப சந்தோஷம்டா. தாங்க்ஸ்'' என்றவன், ''நான் ஒண்ணு சொல்லட்டா?'' என்றதும்,

''சொல்லுங்க. எதுக்கு பெர்மிஷன் கேட்கிறீங்க?'' என வினவினாள்.

''விஷயம் அப்படிப்பட்டது'' என்று ராகவ் கூறவும்,

அவன் தன்னிடம் ஐ லவ் யூ சொல்லப் போகிறான் என்று அவள் ஊகித்தாள். ஒரு இன்ப எதிர்பார்ப்பு அவளுக்குள் ஊற்றாகக் கிளம்பியது.

''ம்ம்ம் சொல்லுங்க'' என்று அவள் கிசுகிசுப்பாக பொழிய,

''டூ பிஸ்ட் ஃபெரூக்ட்'' என்றான்.

''என்ன சொல்லுறீங்க?''

''ஜெர்மன் மொழியில சொன்னேன்.''

'தமிழ்லயோ இங்கிலீஷ்லயோ சொல்லி இருக்கலாம். ஆனால் இதை வெளிப்படையாகச் சொன்னால் அவனுக்கு கோபம் வந்து விடுமோ?' என நினைத்தவள் தான் நினைத்ததை வெளியில் சொல்லவில்லை.

'மொழி எதுவா இருந்தால் என்ன? சொல்ல வந்த விஷயம் தானே முக்கியம்!' என நினைத்தவளாய், ''ம்ம்ம்ம் ஆமா'' என்று மட்டும் சொன்னாள்.

''எதுக்கு ஆமான்னு சொல்லுறே?''

''நீங்க சொன்னதுக்கு தான்'' என்று அவள் கிசுகிசுப்பாக மொழிய,

''ஓகே நித்திலா. எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு. நாம நாளைக்கு வீடியோ சாட் பண்ணலாம். எனக்கு நாளைக்கு லீவு. எத்தனை மணிக்கு பேசலாம் என்பதை பேஸ் புக் மூலமா மெசேஜ் பண்ணி கன்ஃபர்ம் பண்ணிக்கலாம்'' என்றதும்,

அவளும் சரி என ஆமோதித்து அழைப்பைத் துண்டித்தாள். நான்கு நாட்கள் கழித்து அன்று அவள் சந்தோஷமாக உணர்ந்தாள். அன்று இரவு நிம்மதியாக உறங்கினாள்.

மறுநாள் அவர்கள் மடிகணினி மூலம் ஸ்கைப்பில் பேச ஆரம்பித்தார்கள்.

''அப்புறம் மேடம் எப்படி இருக்கீங்க?''

''பார்த்தால் எப்படித் தெரியுது?''

''ம்ம்ம... என் கூடப் பேசிக்கிட்டு இருந்த முதல் நாலு நாளில கொஞ்சம் குண்டானாய். அப்புறம் நான் பேசாததால அடுத்து வந்த நாலு நாளில ஏறின வெயிட்டெல்லாம் இறங்கி, திரும்பவும் ஒரே ராத் திரியிலே சதை போட்டு...'' என்று அவன் சொல்லிக் கொண்டே போக,

''இதோடா! இவருக்கு என்னோட ஒரு வாரத்து நிலமையும் ஒரே பார்வையில தெரிஞ்சிடுச்சாம்!'' என்று அவள் கிண்டலாக உரைக்க,

''இந்தக் கொஞ்ச நாளிலேயே உன்னைப் பத்தி நான் நல்லாத் தெரிஞ்சுக்கிட்டேன் நித்திலா'' என்று அவன் பெருமையாக உரைத்தான்.

''அப்புறம் நித்திலா உன்கிட்ட ஒரு உண்மையை சொல்லணும்...'' என்றவன் அவன் ஸ்வீடன் போகவில்லை என்பதையும் எதற்காக அப்படிப் பொய் சொன்னான் எனபதையும் விளக்கினான்.

''அடப்பாவி! பொய்யா சொன்னீங்க. உங் களை...'' என்று மிரட்டியவள், ''ஆனா நீங்க அப்படி செஞ்சதால தானே என்னால என்னைப் புரிஞ்சுக்க முடிஞ்சது. அதனால போனாப் போகுதுன்னு உங் களை மன்னிச்சு விடுறேன்'' என்று பெரிய மனுஷி யாக அவனுக்கு மன்னிப்பு வழங்கினாள்.

''உனக்கு ஜெர்மன் மொழி தெரியுமா நித்திலா?''

''இந்தக் கிண்டல் தானே வேண்டாங்கிறது. அதைப் பார்த்துப் பயந்து போய் தானே நான்

சென்னையிலே அஞ்சு வருஷம் இருந்துக்கிறேன்னு லூசுத்தனமா திட்டமெல்லாம் போட்டேன். அப்புற மும் எதுக்கு இப்படிக் கேட்கிறீங்க?''

''இல்ல, நான் நேத்து உன்கிட்ட ஜெர்மன் மொழி யில் ஒரு விஷயம் சொன்னேன். அதுக்கு என்ன அர்த்தம்னு நீ கேட்கவே இல்லையே'' என்று அவன் சிரித்துக் கொண்டே வினவ,

''இதுக்கு கூடவா எனக்கு அர்த்தம் தெரியாது?'' என்று அவள் வெட்கப்பட்டுக் கொண்டே கிசுகிசுப் பாக மொழிய,

அவளது வெட்கத்தை ரசித்தவன், ''கூகுளில் ஜெர்மன் ட்ரான்ஸ்லேட்டர் போட்டு அர்த்தம் பாரு நித்திலா'' என்றான்.

''ஏன் கூகுளில் பார்க்கச் சொல்லுறீங்க?''

''நான் சொல்லுறதைக் கேட்டு கூகுளை ஓபன் பண்ணிப் பாரு. ஆனா லேப்டாபிலே பார்க்காதே. நீ இதை மினிமைஸ் பண்ணினால் கேமரா ஆஃப் ஆகிடும். அப்புறமா என்னால உன்னோட எக்ஸ்பிர ஷனைப் பார்க்க முடியாது'' என்று அவன் கூறவும் குழம்பிக் கொண்டே தனது கைப்பேசியை எடுத்து இயக்கினாள்.

இணையதளத்தின் உதவியோடு அவள் அந்த மொழிபெயர்ப்பு பக்கத்தைத் திறந்து வைத்துக் கொண்டு, ''நேத்து என்ன சொன்னீங்கன்னு திரும்பச் சொல்லுங்க?'' என்று கேட்டாள்.

''நான் நேத்து சொன்னதுக்கு ரெண்டு மீனிங் இருக்கு. அதனால உனக்கு குழப்பம் வர சான்ஸ் இருக்கு. இப்ப அதுக்கு ஈக்குவலா சொல்லுறேன் அதை டைப் பண்ணு'' என்று அவன் சொல்லச் சொல்ல அவள் டைப் அடிக்க,

வந்த விடையைக் கண்டவள், ''உங்களை...'' என்று கூறிக் கொண்டே அவனது முகத்தில் ஒரு குத்துவிட்டாள்.

அதாவது அவளது மடிக்கனினியில் தெரிந்த அவனது முகத்தைக் குத்தினாள். ஏனென்றால் வந்த விடை அப்படி!

'நீ ஒரு முட்டாள்!' என்று வந்தால் அவளுக்கு கோபம் வராதா? அவன் காதல் சொன்னதாக அவள் எண்ணிக் கொண்டு இருக்க, அவனோ அவளை முட்டாள் என்று திட்டி இருக்கிறான் என்று தெரிந்ததும்,

''அடக் கடவுளே! இதை நீங்க சொன்ன போது ஆமான்னு சொல்லி உங்க பேச்சுக்கு ஆதரவு வேற கொடுத்தேனே!'' என அவள் புலம்ப அவன் வாய் விட்டு நகைத்தான்.

''இனிமே என்ன ஆனாலும் சரி வீடியோ சாட் தான். எப்படியும் இதை சொல்லும் போது விஷமமா சிரிச்சு இருப்பீங்கல்ல, அதுவே காட்டிக் கொடுத்திருக்கும். சே! இப்படி ஏமாந்து போயிட்டேனே!'' என்று அவள் அங்கலாய்த்தாள்.

அவனுடன் பேசிக் கொண்டே ஐ லவ் யூ என்றால் ஜெர்மனியில் எப்படிக் கூற வேண்டும் என்று பார்த்தாள். Ich liebe dich (இஷ் லீப டிஷ்) என்று வந்தது.

அவளுக்கு அதை எப்படி உச்சரிக்க வேண்டும் என்று தெரியவில்லை.

''இதை எப்படி...'' என்று தனது கைப்பேசியை அவனிடம் காட்டிக் கேட்க ஆரம்பித்தவள் பாதியிலேயே நிறுத்தினாள்.

அவனிடம் எப்படிக் கேட்பது என்று தயங்கிய வளாய் தனது கைப்பேசியை மேஜை மேல் தூக்கிப் போட்டாள்.

''என்ன கேட்க வந்தே?'' என்று அவன் கேட்க,

அவள் வெட்கத்துடன், ''இல்ல... ஒண்ணுமில்ல'' என்றதும்,

''ஐ லவ் யூ நிது!'' என்று அவன் ஆழ்ந்த குரலில் கூற அவளுக்கு மெய் சிலிர்த்தது.

அவன் கூறிய ஐ லவ் யூவை விட தனது பெயரை அவன் சுருக்கிய விதம் அவளை ரொம்பவே கவர்ந்தது. ஒரு வெட்க முறுவலுடன் அவள் அவனையே பார்த்திருக்க...

''இஷ் லீப டிஷ்'' என்றான்.

''என்ன சொல்லுறீங்க?''

''நீ கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என்கிட்ட உன் செல்போனை காட்டி இதை எப்படி உச்சரிக்கணும்னு

கேட்க நினைச்சியே, அந்த வார்த்தையை இப்படி தான் உச்சரிக்கணும். இஷ் லீப டிஷ்'' என்றதும் அவள் அதையே திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்த்தாள்.

''எப்படி சொல்லணும்னு சொல்லிப் பார்க்கிறியா? இல்ல என்கிட்ட ஐ லவ் யூன்னு சொல்லுறியா?'' என்று அவன் கேட்டுக் கொண்டே கண் சிமிட்ட, அவள் வெட்கத்துடன் இல்லை என்று தலையாட்டினாள்.

''ஒரு வார்த்தையே இவ்வளவு சிரமமா இருக்கே! நான் படிச்சிருவேனா? பாஸாகிடுவேனா? எவ்வளவு மார்க் வாங்கச் சொல்லுவாங்க? அந்த எக்ஸாமிலே பாஸாகலைன்னா என்னால் உங்க கூட வரவே முடியாதா? இன்னொரு சான்ஸ் குடுப்பாங்களா?'' என்று அவள் பரிதாபமாய் கேட்க, அவனுக்கு அவளைப் பார்த்தால் பாவமாக இருந்தது.

''நீ படிக்கப் போறது பேஸிக் தான்டா நிது. அந்த இன்ஸ்ட்யூட்'ல நல்லா சொல்லித் தருவாங்க.''

''அவங்க சொல்லித் தரது புரியலைன்னால் நீங்க சொல்லித் தருவீங்களா?''

''கண்டிப்பா. நானும் உனக்கு சொல்லித் தரேன். நீ எதுக்கும் கவலைப்படாதே'' என்று தேற்றினான்.

மே மாத இறுதியில் அவன் இந்தியா வரும் வரை அந்த ஒரு மாதமும் தினமும் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டனர்.

6



ராகவ் சென்னை வந்து இறங்கினான். ஏற்கனவே நித்திலாவை சம்பிரதாயமாக அவனது குடும்பத்தினர் பெண் பார்த்துவிட்டனர் என்றாலும், சம்பந்தப்பட்ட இருவரும் இதுவரை நேரில் பார்த்துக் கொள்ள வில்லை என்பதால் மீண்டுமொரு முறை பெண் பார்ப்பதற்கு இரு வீட்டுப் பெரியவர்களும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அதன்படி விமான நிலையத்தில் காத்திருந்த சேதுபதியும் பூங்கோதையும் ராகவை அழைத்துக் கொண்டு நேராக நித்திலாவின் வீட்டை நோக்கிச் சென்றனர்.

''என்ன ராகவ் சாப்பிடுறதே இல்லையா? இப்படி மெலிஞ்சு போயிட்ட'' என்று பூங்கோதை வருத்தத்துடன் மொழிய,

''நான் உங்ககிட்ட என்ன எதிர்பார்த்தேனோ அதை அப்படியே கரெக்ட்டா சொல்லிட்டீங்கம்மா'' என்று கிண்டலாகக் கூறிய ராகவ்,

''நான் நல்லா தான் இருக்கேன். நல்லா சாப்பிடுறேன். மெலிஞ்செல்லாம் போகலை. உங்க கண்ணுக்கு தான் அப்படித் தெரியுது'' என்றான்.

''என்னத்தை நல்லா இருக்க. அந்த ஊரிலே நம்ம ஊரு சாப்பாடு ஏதாவது கிடைக்குதா என்ன? ரொட்டிய சாப்பிட்டு காலத்தை கடத்துறே'' என்று புலம்பினார்.

''அம்மா நான் நல்லா இருக்கேன். இதுக்கு மேல என் சாப்பாட்டை பத்திப் பேசக் கூடாது'' என்று அவன் செல்லமாய் மிரட்டியும் பலனில்லை.

''இங்கேயே வந்துடுடான்னு சொல்லுறேன் கேட்கிறியா? கொஞ்ச வருஷம் ஆகட்டும்னு தள்ளிப் போடுறே.''

''ஐயோ அம்மா! நீங்களும் ஆரம்பிக்காதீங்க'' என்று அவன் அலறினான்.

''வேற யாரு ராகவ் இந்தப் பேச்சை உன்கிட்ட பேசுறாங்க?''

''எல்லாம் உங்க வருங்கால மருமகள் தான். அஞ்சு வருஷத்திலே கண்டிப்பா நாம இந்தியா வந்துடுவோம் தானேன்னு அஞ்சு லட்சம் தடவை கேட்டு இருப்பாள்'' என்று அவன் அலுத்துக் கொண்டதும் பூங்கோதையின் முகம் பூரிப்பானது.

''அவளும் என்னை மாதிரியே உன்னை இங்கேயே வந்துடச் சொல்லுறாளா?'' என்று சந்தோஷமாகக் கேட்ட பூங்கோதை மகன் ஆமாம் என்று தலை ஆட்டவும்,

''இந்த ஒரு விஷயத்துக்காகவே நான் என் மருமகள் கட்சியிலே இணைஞ்சுட்டேன்'' என்றார்.

''ஐயோ பாவம்!'' என்று சேதுபதி பரிதாபப்பட, ராகவ் புன்னகைத்தான். பூங்கோதை தன் கணவரை முறைத்தார்.

பேசிக் கொண்டே அவர்கள் மூவரும் நித்திலாவின் வீட்டிற்கு வந்து சேர்ந்தனர்.

வாடகைக் காரில் இருந்து இறங்கிய ராகவ் நித்திலாவின் வீட்டை நிமிர்ந்து பார்த்தான். அது ஒரு தனி வீடு. கார் நிறுத்தும் அளவிற்கு முன்னாடி இடம் இருந்தது. ஆனால் கார் எதுவும் அங்கே நிற்கவில்லை.

நித்திலாவின் பெற்றோர் கேட்டிலேயே நின்று அவர்களை வரவேற்றனர். பெண் பார்க்கவென்று மாப்பிள்ளை வீட்டினர் வரும் போது பெண்ணை அறையிலேயே இருக்கச் சொல்வார்கள். 'பெண்ணை வரச் சொல்லுங்க' என்ற சம்பிரதாய வாக்கியத்தை யாராவது உதிர்த்த பின்பே பெண் வெளியே வருவாள்.

ஆனால் இங்கே ஏற்கனவே பெண் பார்த்துத் திருமணம் பேசி முடிவு எடுத்துவிட்டதால் நித்திலா அறைக்குள் அடைந்து கொள்ளவில்லை. அவர்களை வரவேற்க அவளும் வாசலுக்கே வந்தாள்.

ராகவை முதன் முதலாக நேரில் கண்ட ராஜதுரைக்கும் சரோஜினிக்கும் திருப்தியாக இருந்தது. இவன் தங்கள் மகளுக்கு பொருத்தமானவன் என்ற எண்ணம் எழுந்தது.

இரு வீட்டுப் பெரியவர்களும் பேசிக் கொண்டே உள்ளே போய்விட்டனர்.

ராகவ் பின் தங்கிவிட, நித்திலா வாசல் நிலை கதவின் மேல் சாய்ந்து கொண்டு அவனையே பார்த்து வண்ணம் நின்றாள். அவளைப் பார்த்து அவ புன்னகைத்தான்.

'அவரோட டிரேட் மார்க் புன்னகையை எடுத்து விட்டே என்னை கவிழ்த்திடுறாரே!' என நினைத் தவள் இமை சிமிட்டாது அவனையே பார்த்திரு தாள்.

அவளது பார்வையில் மேலும் பெரிதாகப் பு னகைத்தவன் அவளை நோக்கி நடந்தான்.

''என்னங்க மேடம் எப்படி இருக்கீங்க?''

''நீங்க தான் ஒரே பார்வையிலே என்னோட ஒ வாரத்து நிலைமையை அப்படியே சொல்லுவீங் களே! இப்ப உங்களுக்கு என்னைப் பார்த்தா எப்படித் தெரியுது?'' என்று எதிர்கேள்வி கேட்டாள்.

''ம்ம்ம்... பொண்ணு பார்க்க வரவனுக்கு நம்மளை பிடிக்குமோ பிடிக்காதோன்னு ராத்திரி முழுசும் தூங் காமல் கவலைப்பட்ட மாதிரி தெரியுது'' என்று அவன் கிண்டல் பண்ணவும், அவள் அவனது புஜத்தில் கிள்ளி வைத்தாள்.

''அடிப்பாவி! முதல் முதலாப் பார்க்கிறோம் என்று கிஸ் அடிக்கலைன்னால் கூடப் பரவாயில்லை. இப்படிக் கிள்ளி வைக்கிறியே!'' என்று அவன் போலி யாய் அலறினான்.

''ம்ம்ம். கொடுப்பாங்க... கொடுப்பாங்க'' என்று அவள் செல்லமாய் முறைக்க,

''நான் உன்கிட்ட தான் நிது கேட்டேன். நீ வேற யாரோ கொடுக்கப் போற மாதிரி செல்லுறே!'' என்று அவன் அப்போதும் விடாது கிண்டல் பண்ணினான்.

''இன்னைக்கு என்கிட்ட அடி வாங்காமல் செங்கல்பட்டுக்கு போக மாட்டீங்க போல!'' என்று மிரட்டினாள்.

''இதோடா! உன்கிட்ட அடி வாங்க தான் நான் ஜெர்மனியிலே இருந்து வந்து இருக்கேனாக்கும்.''

''பின்ன வேற எதுக்கு வந்தீங்க?''

''என் மாமனாரும் மாமியாரும் உள்ள எனக்காக வெயிட் பண்ணுறாங்க. மேடம் கொஞ்சம் வழி விட்டீங்கன்னா நான் உள்ள போவேன்'' என்றதும் அவள் அசடு வழிந்தவாறே அவனுக்கு வழி விட்டு அவனை உள்ளே அழைத்துச் சென்றாள்.

''கல்யாணத்தை ரிஜிஸ்டர் பண்ண எல்லா ஏற்பாடும் செஞ்சுட்டீங்க தானே?'' என்று சேதுபதி கேட்க,

''எல்லாம் ரெடி சம்பந்தி. ரெண்டு நாள் கழிச்சு பதிவு பண்ணிடலாம்'' என்று பதில் சொன்ன ராஜதுரை ராகவைப் பார்த்து,

''நீங்க அன்னைக்கு ராத்திரியா மாப்பிள்ளை ஊருக்கு போறீங்க?'' என்று கேட்டார்.

''ஆமா மாமா.''

''ரிஜிஸ்டர் பண்ணுறதுக்கு வரும் போது எங்க தங்கப் போறீங்க? நேரா இங்கேயே வந்துடுறீங்களா?''

''இல்ல மாமா. நாங்க ஹோட்டலில் தங்கிக்குவோம். ஆக்சுவலா எனக்கு சென்னையிலே ஒரு வீடு இருக்கு. அதை வாடகைக்கு விட்டிருக்கேன். இப்போ குடியிருக்கவர் இன்னும் ரெண்டு மாசத்திலே காலி பண்ணப் போறதா சொல்லி இருக்கார். பெயின்ட் அடிச்சு அடுத்த ஆளுக்கு வாடகைக்கு விடணும். எங்க கல்யாணம் நடக்கிறப்போ அந்த வீடு காலியா இருந்தால் எங்களுக்கு உபயோகப்படும். அதனால கல்யாணம் முடிஞ்சு நாங்க ஜெர்மனிக்கு போன பின்னால வாடகைக்கு விட்டுக்கலாம்னு முடிவு பண்ணி இருக்கேன்'' என்றான்.

அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அதன்பின் ராகவ் குடும்பத்தினர் செங்கல்பட்டை நோக்கிப் பயணம் செய்தனர்.

7



சொன்ன நேரத்திற்கு இரு வீட்டவர்களும் பதிவாளர் அலுவலகத்தின் முன் ஒன்று கூடினார்கள். மணமக்கள் இருவரும் கையெழுத்திட்டு தங்களது திருமணத்தைப் பதிவு செய்தனர். சாட்சிக் கையெழுத்தை இரு தந்தைமார்களும் போட்டனர்.

பதிவாளர் அலுவலகத்தை விட்டு வெளியே வந்தனர். பெரியவர்கள் பேசிக் கொண்டே முன்னே நடக்க நித்திலாவும் ராகவும் பின் தங்கி மெதுவாக நடந்தனர்.

நித்திலா ராகவிடம், ''என்ன வேண்டிக்கிட்டீங்க?'' என்று கேட்டாள்.

''வேண்டுதலா? எதுக்கு?'' என்று அவன் குழப்பத்துடன் கேட்க,

அவள் தன் முகத்தை சோகமாய் வைத்துக் கொண்டு, ''கையெழுத்துப் போடும் போது ஒண்ணுமே வேண்டலையா? தாலி கட்டுற மாதிரி... இதுவும் நம்ம வாழ்க்கையிலே முக்கியமானது இல்லையா?'' என்றதும் ராகவிற்கு என்னவோ போலானது.

அவன் அதை வெறும் கையெழுத்தாக நினைத்தான். ஆனால் அவளோ அது அவர்களது வாழ்க்கையின் தொடக்கமாக நினைத்தாள்.

அவள் என்ன வேண்டிக் கொண்டாள் என்று தெரிந்து கொள்ள அவனுக்கு ஆசையாக இருந்தது. ஆனால் அவளிடம் கேட்பதற்கு தயக்கமாகவும் இருந்தது. தான் எதுவுமே வேண்டாததால் அவளிடம் கேட்பதற்கு வெட்கமாகவும் இருந்தது.

ஆனால் அவளே தன் வேண்டுதலை அவனிடம் தெரியப்படுத்தினாள்.

''நான் என்ன தெரியுமா வேண்டிக்கிட்டேன்? எங்களுக்குள்ளே இருக்கும் அன்பும் பாசமும்

என்னைக்கும் குறையாமல் இந்த பந்தம் இந்த ஜென்மத்தோடு முடிந்து விடாமல் அடுத்து வரும் ஜென்மங்களிலும் தொடரணும்னு வேண்டிக்கிடு டேன்'' என்று அவள் ஆத்மார்த்தமாய் மொழி அவன் சந்தோஷத்தில் திகைத்துப் போய் நின்றான்

கையெழுத்துப் போடும் போது தான் எதுவு வேண்டவில்லை. இனிமேலாவது அவளைப் போ கடவுளை வேண்டிக் கொள்வோம் என நினைத்தவ அவளை அழைத்துக் கொண்டு கோவிலுக்கு சென்று அர்ச்சனை செய்ய ஆசைப்பட்டான்.

''நாம கோவிலுக்கு போவோமா நிது?'' என்று அவன் கேட்டதும், அவள் உடனே சந்தோஷமா தலையாட்டினாள்.

அவன் அவர்கள் இருவரின் தந்தையிடமும் சென்று, ''நாங்க ரெண்டு பேரும் கோவிலுக்கு போயிட்டு வரட்டுமா?'' என்று அனுமதி கேட்டான்

அவர்கள் இருவரும் சம்மதம் வழங்கவும், ''நானே நித்திலாவை உங்க வீட்டிலே கொண்டு வந்து விடுறேன். சீக்கிரம் வந்துடுறோம்'' என்றான்.

இருவரும் அவர்களிடமிருந்து விடைபெற்று கோவிலுக்கு சென்றனர். அவன் தங்கள் இருவரின் பேரிலும் அர்ச்சனை செய்தான்.

'எங்கள் வாழ்க்கை சீரும் சிறப்பாக அமைய நீயே அருள் புரிய வேண்டும் கடவுளே!' என்று வேண்டிக் கொண்டான். கடவுளை வணங்கிவிட்டு சுற்றுப் பிரகாரத்தில் அமர்ந்தார்கள்.

''உங்க கையை காட்டுங்க ராகவ்'' என்று அவள் கூறியதும் அவன் தனது உள்ளங்கையை விரித்து அவளிடம் நீட்டினான்.

''கையை காட்டுங்கன்னு சொன்னா எதுக்குன்னு கேட்காம உள்ளங்கையை விரிச்சுக் காட்டுறீங்க. நான் உங்களுக்கு ஏதாச்சும் தரப் போறேனா என்ன?''

''இதென்னடா வம்பா போச்சு! கையை காட்டுன்னு சொன்னது என் வைஃப். அவகிட்ட எதுக்கு நான் எதிர்கேள்வி கேட்கணும்?''

அவள் புன்னகைத்துக் கொண்டே அவனது கையை திருப்பினாள். தனது கைப்பையில் இருந்த ஒரு நகை டப்பாவை எடுத்து அதில் இருந்த பிரேஸ்லெட்டை அவனுக்கு அணிவித்தாள்.

''ஹேய்! இதென்ன சர்ப்ரைஸ்!'' என்று அவன் சந்தோஷத்துடன் கேட்க,

''ம்ம்ம் நம்ம கல்யாணத்தன்னைக்கு நீங்க எனக்கு தாலி கட்டுவீங்கல்ல, அதே மாதிரி ரிஜிஸ்டர் கல்யாணத்துக்கு நான் உங்களுக்கு பிரேஸ்லெட் போட்டு விட்டிருக்கேன்'' என்றாள்.

''அப்படிப் பார்த்தால் நீயும் என் கழுத்துக்கு இல்ல ஒரு செயின் வாங்கிப் போட்டிருக்கணும்?''

''நானும் முதல்ல அப்படி தான் ஐடியா பண்ணினேன். அப்புறமா பட்ஜெட் இடிச்சுச்சா? அதான் செயின் வாங்காமல் பிரேஸ்லெட் வாங்கிட்டேன்.

அப்பாகிட்ட பணம் வாங்காமல் என்னோட பாக்கெட் மணி சேவிங்ஸில் இருந்து வாங்கணும்னு நினைச் சேன். அதான்.''

''நான் உன் அக்கவுண்டுக்கு பணம் அனுப் பட்டுமா நிது?''

''நோ...'' என்று அவள் வேகமாக மறுக்க,

''சட்டப்படி நீ என் வைஃப் நிது. என்கிட்ட பணம் வாங்கிக்க மாட்டியா?'' என்று வருத்தமாய் கேட்டான்.

''அதென்ன சட்டப்படி, எல்லா படியிலும் நான் தான் உங்க வைஃப்'' என்று அவள் கோபமாய் சிலிர்க்கவும்,

அவன் சிரித்துக் கொண்டே, ''எல்லா படியிலுமா? அது என்ன படி?'' என்று கிண்டல் செய்தவன், ''அப்புறம் ஏன் என்கிட்ட பணம் வாங்கிக்க மாட் டேன்னு சொல்லுறே?'' என்றான்.

''இப்போ உங்க கிட்ட பணம் வாங்கிக்கிட்டால் இந்த பிரேஸ்லெட் நான் வாங்கிக் கொடுத்ததா இல்லாமல் உங்க பணத்திலே வாங்கினதா மாறிடும். ப்ளீஸ்...'' என்று அவள் கண்ணையும் மூக்கையும் சுருக்கிக் கொண்டு கெஞ்ச,

''இட்ஸ் ஓகே. எனக்குப் புரியுது'' என்றவன் தனது பேன்ட் பாக்கெட்டில் இருந்து ஒரு மோதிர டப்பாவை எடுத்தான்.

''ஹேய்! நீங்களும் கிஃப்ட் வாங்கிட்டு வந்தீங் களா?'' என்று உற்சாகமாய் கேட்டவளின் இடக்கை

விரல் பற்றி அவன் அந்த வைர மோதிரத்தை அணி வித்துவிட்டான்.

''கோவில்ல வச்சு நம்ம நிச்சயதார்த்தம் முடிஞ் சிடுச்சு'' என்று நித்திலா கூறியதும் ராகவ் புன்னகைத் தான்.

''இப்படி ஸ்மைல் பண்ண எங்கே கத்துக்கிட் டீங்க? ஸ்மைல் பண்ணியே என்னை கவிழ்த்திடு றீங்க'' என்றதும் அவன் பெரிதாக புன்னகைத் தான்.

அவர்கள் கோயிலை விட்டு வெளியேறி வீட்டை அடைந்தனர். சரோஜினி மட்டுமே வீட்டில் இருந்தார்.

''அப்பா எங்கேம்மா?''

''அவர் வெளியே போய் இருக்கார்'' என்று மகளுக்கு பதிலளித்த சரோஜினி ராகவ் புறம் திரும்பி, ''வாங்க மாப்பிள்ளை. உட்காருங்க'' என்று வர வேற்றார்.

''இல்ல அத்தை நான் கிளம்புறேன். என் ஃபிரண்ட்ஸைப் பார்க்கப் போகணும். அம்மாவும் அப்பாவும் ஹோட்டல் ரூமிலே தனியா இருப்பாங்க'' என்றான்.

''ஜூஸ் மட்டுமாச்சும் குடிச்சுட்டுப் போங்க'' என்று கூறிய சரோஜினி பழச்சாறை கொண்டு வந்து கொடுத்தார்.

அவன் மறுக்காமல் அதை வாங்கிப் பருகிக் கொண்டு இருக்கும் போதே, ''நித்திலா அம்மா!'' என்று வாசல்புறம் இருந்து ஒரு குரல் கேட்டது.

''நீங்க பேசிக்கிட்டு இருங்க. நான் வந்துடுறேன்'' என்று கூறிய சரோஜினி வெளியேறிச் சென்றார்.

''நான் முதல் தடவை உன்னை பார்க்க வந்த அன்னைக்கு கிஸ் பண்ணாம கிள்ளி வச்சே. இன்னைக்கு ஹஸ்பண்டா வந்திருக்கேன். இன்னைக்காச்சும் என்னை ஸ்பெஷலா கவனிப்பியா நிது?''

''கவனிச்சிட்டாப் போச்சு. அன்னைக்கு மிஸ் ஆனதை இன்னைக்கு குடுக்கட்டுமா?'' என்று அவள் கேட்கவும்,

''உனக்கு இன்னைக்கு நாள் நல்லா இருக்கு போலடா ராகவ்!'' என்று அவன் உற்சாகமாய் கூற,

''ஹலோ மிஸ்டர்! அடி வாங்கிறதுக்கு இவ்வளவு உற்சாகமா? பரவாயில்லையே! நித்திலா உன்னோட வருங்காலம் ரொம்ப பிரகாசமா இருக்கும் போல! அடியை கூட சந்தோஷமா ஏத்துக்கிற ஹஸ்பண்ட் கிடைச்சிருக்கார்'' என்று அவள் கிண்டல் பண்ணவும்,

''ஏதுடா நமக்கு அப்படி ஒரு அதிர்ஷ்டம் அடிச்சிருச்சோன்னு நினைச்சேன். ஹூம்...'' என்று அலுத்துக் கொண்டவன் எழுந்து நின்றான்.

''டைம் ஆச்சு நிது. நான் கிளம்புறேன். ஜெர்மனிக்கு போயிட்டு போன் பண்ணுறேன்'' என்றதும் அவளது முகம் கவலையானது.

அவளது இரு கைகளையும் தனது இரு கைகளால் பிடித்துக் கொண்டவன், ''இன்னும் அஞ்சு மாசத்

திலே ஓடி வந்துடுவேன். அப்புறமா உன்னை என் கூடவே கூட்டிட்டுப் போயிடுவேன். அதுவரைக்கும் நீ சமர்த்தா ஜெர்மன் படிப்பியாம்'' என்று கிண்டல் செய்தவன் அவளது கை விரல்களை அழுத்திக் கொடுத்தான்.

அப்படியே விட முடியாதவனாய் தனது இதழ் அருகே கொண்டு சென்று இரு கைகளிலும் இரு முத்தங்கள் பதித்த பின் விடுவித்தான்.

''பை நிது'' என்று சொல்லி வெளியேறினான்.

அவன் பின்னோடு சென்றவள் அவன் காரில் ஏறி அது மறையும் வரை கேட் அருகே நின்று கொண்டு இருந்தாள்.

அவன் பத்திரமாக ஜெர்மனி சென்றடைந்தான். அதன் பின்பு அவர்கள் வழக்கம் போல் தினமும் பேசிக் கொண்டார்கள். அப்படி ஒரு நாள் பேசும் பொழுது அவளுடைய பிறந்த நாளைப் பற்றிய பேச்சு அவர்களிடையே எழுந்தது.

''ராகவ் என் பர்த்டே அன்னைக்கு லீவு போடுவீங்களா?'' என்று அவள் கேட்டதும் அவன் வாய் விட்டு நகைத்தான்.

''இது ஒண்ணும் அவ்வளவு பெரிய காமெடி இல்லையே! எதுக்கு இப்படி சிரிக்கிறீங்க?''

''என் பர்த்டேக்கு விஷ் பண்ணுவீங்களா? பொக்கே இல்லைன்னா கிஃப்ட் அனுப்புவீங்களான்னு கேட்டால் பரவாயில்லை. அதை விட்டுட்டு லீவு போடுவீங்களான்னு கேட்டால் சிரிக்காமல் என்ன

பண்ணுவாங்களாம்? நீ இருக்கிறது சென்னையில நான் இருக்கிறது ஜெர்மனியில. லீவு போட்டு என்ன பண்ணுறது சொல்லு?''

''ம்ம்ம் நாள் முழுசும் நான் உங்க கூடப் பேசிக்கிட்டு இருக்கலாம்'' என்று அவள் வெடுக்கென்று கூறினாள்.

''ஓ! பேசிக்கிட்டு இருக்கிறதுக்காக லீவு போடணுமா? அதை தான் நாம தினமும் நைட் செய்யுறோமே.''

''யெஸ். நாம தினமும் பேசுறோம். ஆனா அன்னைக்கு ஸ்பெஷல் டே இல்லையா? அதனால அன்னைக்கு நான் நினைச்ச போதெல்லாம் உங்க கூடப் பேசணும். இப்ப சொல்லுங்க லீவு போடுவீங்களா மாட்டீங்களா?''

''இப்பவே என்னால சொல்ல முடியாது நிது. உன் பர்த்டே நம்ம கல்யாணத்துக்கு கொஞ்ச நாள் முன்னால வருது. நான் இந்தியா கிளம்பப் போகும் சமயமா இருக்கும். அதனால என்னால உறுதியா சொல்ல முடியாது. வாய்ப்பு இருந்தால் கண்டிப்பா லீவு போடுறேன்'' என்று வாக்களித்தான்.

8



பதிவுத் திருமணம் முடிந்து இரு வாரங்கள் கடந்திருந்தது.

சென்னையில் ஒரு சொந்தக்காரரின் வீட்டு விசேஷத்தில் அனைவரும் ஒன்று கூடினார்கள். நித்திலாவின் குடும்பத்தினர், நித்திலாவின் பெரியப்பா குடும்பத்தினர், ராகவின் குடும்பம், அவன் அக்கா மேகலாவின் குடும்பம் என்று அனைவரும் ஒன்று கூடி இருந்தார்கள்.

''நீங்க நித்திலாவை உங்க கூட அழைச்சுட்டு வரலியா?'' என்று மேகலா கேட்டதற்கு, ''அவளுக்கு லேசா ஜூரம். அதனால வீட்டிலே ரெஸ்ட் எடுக்கிறேன்னு சொன்னாள்.''

மேகலாவின் குழந்தைகளும் நித்திலாவைப் பற்றி விசாரித்தனர்.

''நீங்க ஊருக்கு போகும் முன்னாடி எங்க வீட்டுக்கு வந்து அவளைப் பார்த்துட்டுப் போங்க'' என்று சரோஜினி அழைக்கவும் மேகலாவும் சரியெனத் தலையாட்டினாள்.

விசேஷ வீட்டில் ஆண்கள் அனைவரும் ஒன்று கூடி அமர்ந்து பேச ஆரம்பித்தார்கள். சேகரும் வஜ்ரவேலும் முறைத்துக் கொண்டு அமர்ந்திருந்தனர்.

'எதுக்கு சம்பந்தி இந்த முறை முறைச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கார்?' என்று சேதுபதி வருத்தப்பட ஆரம்பித்தார்.

'அவருக்கு வேண்டாத குடும்பத்துல பொண்ணு எடுக்க சம்மதம் சொல்லிட்டேனோ? இதனால

ஏதாச்சும் பிரச்சனை வருமா?' என ஒரு நிமிடம் எண்ண ஆரம்பித்துவிட்டார்.

'அவருக்குப் பிடிக்கலைன்னா அன்னைக்கே நம்ம கிட்ட சொல்லி இருப்பாரே! நித்திலாவை ராகவுக்கு தாராளமா கல்யாணம் பண்ணி வைங்கன்னு சொல்லி இருக்க மாட்டாரே!' என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டார்.

நாட்டு நிலவரத்தை பற்றிப் பேசுகிறோம் பேர்வழியென அரசியல் பேச்சு அவர்களிடையே வர ஆரம்பித்தது. அதிலும் சேகரும் வஜ்ரவேலுவும் வெவ்வேறு கட்சியின் ஆதரவாளர்களாக இருந்ததால் அவர்களுக்கு இடையே கருத்து மோதல் ஏற்பட்டது. அது அப்படியே அரசியலைப் புறந்தள்ளிவிட்டு தனி மனித மோதலாக மாறியது.

''நீ பெரிய இவனோ? உன்னை மாதிரி தானே உன் கட்சியும் உன் கட்சி ஆளுங்களும் இருப்பாங்க!'' என்று வஜ்ரவேலு தொடங்கி வைக்க,

''எனக்கு என்னடா குறைச்சல்? உன்னை மாதிரி மொள்ளாமாரித்தனமா நான் பண்ணிக்கிட்டு இருக்கேன்?'' என்று சேகர் எகிற, அங்கே ஒரு மோதல் ஆரம்பமானது.

''நான் என்ன மொள்ளமாரித்தனம் பண்ணிட்டேன்?''

''நீ என்னைக்கு எந்த நல்லதைப் பண்ணி இருக்க? நீ வாயைத் திறந்தாலே வில்லங்கமா தானே பேசுவே!

அந்த கோபால் விஷயத்திலே கூட நீ வில்லங்கம் பண்ணலை?'' என்று சேகர் கேட்டார்.

போன வாரம் நடந்த ஒரு விஷயத்தை அவர் சுட்டிக் காட்டினார். உண்மையில் அதில் தவறு வஜ்ரவேலுவின் பக்கம் தான். ஆனால் நிறைந்த சபையிலே அவருக்கு அதை ஒத்துக் கொள்ள மனமில்லை.

''நான் வில்லங்கம் பண்ணினதை நீ பார்த்தியா?''

''மொசப் பிடிக்கிற நாயை மூஞ்சப் பார்த்தா தெரியாது?''

''அப்ப என்ன நாயுங்கிறியா?'' என்று கேட்ட வஜ்ரவேலு, ''நான் நாயுன்னா என் பங்காளி நீயும் உன் கூட இருக்கிறவங்களும் அதானே?'' என்று கேட்க,

கூடி இருந்த இருவரது ஆதரவாளர்களும் களத்தில் இறங்கி மோத ஆரம்பித்தனர்.

எந்த வார்த்தையை யார் உச்சரித்தார்கள் என்று பகுத்தறிய முடியாத வண்ணம் அனைவரும் மோதிக் கொண்டனர். ஆளாளுக்கு பேச ஆரம்பித்தார்கள்.

''என்னயவாடா நாயின்னு சொன்னே?''

''நீங்க தானேடா முதல்ல ஆரம்பிச்சீங்க?''

''பழமொழி சொன்னா அதை அப்படியே எடுத்துக்குவீங்களாடா அறிவு கெட்ட கூதரைகளா!''

''யாருக்குடா அறிவில்லை? முட்டாப் பசங்களா!''

''டேய் விடுறா! இந்த தறுதலைகள் கூட எல்லாம் சரிக்கு சமமாப் பேசிக்கிட்டு.''

''யாருடா தறுதலை? நேரக்கு நேரா சொல்லுங் கடா கோழைப் பசங்களா!''

''யாருக்குடா தைரியம் இல்லை?''

''மீசையை மட்டும் பெருசா வச்சாப் போதாது. அதுக்கேத்த நெஞ்சுரம் வேணும்டா!''

''அப்படின்னா எங்களை மீசை வச்ச பொம் பளைன்னு சொல்லுறீங்களாடா?''

பேச்சு... இல்லையில்லை வசை மொழிகள் நீண்டு கொண்டே போனது. சேதுபதி விழி பிதுங்கி நின்றார். அவர் தன் வீட்டிலேயே அதிர்ந்து பேச மாட்டார். அவரால் கொதிக்கும் இந்தக் கூட்டத்தை அடக்க முடியவில்லை.

இருப்பினும் சண்டையை விலக்க முடிவு செய்து சேகரின் தோளைப் பற்றி, ''நீங்க எதுக்கு சம்பந்தி சரிக்கு சமமா சண்டை போடணும்? வாங்க'' என்று தடுத்துப் பார்த்தார்.

பலன் ஒன்றும் இல்லை.

ராஜதுரை அமைதியாக வேடிக்கை தான் பார்த்தார். அவரால் தன் அண்ணனை அடக்க முடியாது என்று தெரிந்ததால் அமைதி காத்தார்.

சேதுபதி வேகமாகச் சென்று தன் மாப்பிள்ளையை கூட்டி வந்தார். மேகலாவின் கணவன் வந்து தன் தந்தையை கையோடு இழுத்துக் கொண்டு போனான்.

அவர் பின்னோடு அவரது ஆதரவாளர்களும் சென் றார்கள்.

அவர்கள் அனைவரும் சென்ற பின்பும் வஜ்ர வேலு தன் பேச்சை நிறுத்திய பாடில்லை.

''யாருகிட்ட மோதுறானுங்க?'' என்று தன் மீசையை முறுக்கி விட்டுக் கொண்டார்.

''ஏன்டா தம்பி! இந்த உருப்புடாத பயல் சேகர் சம்பந்தம் பண்ணின இடத்திலா நீயும் சம்பந்தம் பண்ணப் போறே?'' என்று வஜ்ரவேலு இளக்கார மாய் கேட்க,

'இந்த மனுஷன் எதுக்கு வில்லங்கமா இப்படி ஒரு கேள்வியை கேட்டு வைக்கிறான்?' என்று சேதுபதி திடுக்கிட்டார்!

''சுத்த மரியாதை தெரியாத மனுஷங்க. பார்த் தேல்ல... உங்க அண்ணனை எப்படி அவமதிக் கிறாங்கன்னு?''

வஜ்ரவேலுவின் கேள்விக்கு ராஜதுரை பதில் ஒன்றும் அளிக்கவில்லை.

''என்னடா நான் பாட்டுக்கு கேட்கிறேன். நீ பாட் டுக்கு பேசாமல் இருக்கிறே?! எனக்கொரு அவ மானம்னா அது உனக்கு இல்லையா? சரியாத் தான் சொல்லி இருக்காங்க. தாயும் புள்ளையும் ஒண்ணுன் னாலும் வாயும் வயிறும் வேற தான்னு! உனக்கு இந்த அண்ணனை விட அந்த பங்காளி சேகர் பெருசாப் போயிட்டானோ?'' என்று கேட்ட போதும்,

ராஜதுரை பதில் அளிக்கவில்லை. ஆனால் அவரது மனம் கொஞ்சம் கொஞ்சமாக தன் அண்ணன் பக்கம் சாய ஆரம்பித்தது.

''நாம அப்படியாடா வளர்ந்தோம்? நம்ம அம்மா நம்மளை எப்படி எல்லாம் வளர்த்தாங்க? தம்பி உடையான் படைக்கு அஞ்சான்னு சொல்லுவாங்க. உனக்காக நான் இருக்கேன் அண்ணேன்னு நெஞ்சை நிமிர்த்திகிட்டு சொல்லுவியேடா. அதெல்லாம் பொய்யா? நான் நம்ம குடும்பத்தை தாங்கி நிறுத்தினதுக்கு ரொம்ப நல்லா பதில் மரியாதை செய்யுறடா!'' என்று வஜ்ரவேலு ஏளனம் செய்தார்.

இந்த இடத்தில் தான் ராஜதுரை வாய் திறந்தார். அது அவரது வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை உண்டு பண்ணப் போகிறது என்று தெரியாமல்,

''நான் உனக்காக என்ன வேணா செய்வேன் அண்ணா!'' என்றார்.

''அப்படிச் சொல்லுடா என் சிங்கக்குட்டி!'' என்று புளகாங்கிதம் அடைந்த வஜ்ரவேலு,

''என்னை நாயின்னு பல பேர் முன்னாடி சொன்னவனை என்கிட்ட வந்து மன்னிப்பு கேட்கச் சொல்லுடா?'' என்றவர் மேலும் சேதுபதியை சுட்டிக் காட்டி,

''இதோ நிக்கிறாரே, இந்த மனுஷனை தன் சம்பந்திகிட்ட போய் சொல்லச் சொல்லு. அந்த ஆளை

வந்து என்கிட்ட மன்னிப்பு கேட்கச் சொல்லு!'' என்றார்.

'இவனுங்க சண்டையில என்னை எதுக்கு இழுக்குறானுங்க?' என்று குழம்பிப் போய் நின்றிருந்த சேதுபதி அப்படியே விழித்துக் கொண்டு சும்மா இருந்திருக்கலாம்.

விதி யாரை விட்டது?

''நான் எதுக்காக என் சம்பந்தியை உங்ககிட்ட வந்து மன்னிப்பு கேட்கச் சொல்லணும்? இப்போ அதுக்கு என்ன அவசியம்?''

''நடந்ததெல்லாம் பார்த்துக்கிட்டு தானே இருந்தீங்க? அப்புறம் எப்படி இப்படி ஒரு கேள்வியை கேட்கிறீங்க?''

''ஏங்க அவர் யதார்த்தமா பழமொழி தானே சொன்னார்!''

''யதார்த்தமா பழமொழி சொன்னாரா? கேட்டுக்கிட்டியாடா தம்பி? உன் சம்பந்தி ஆகப் போற மனுஷனுக்கும் அந்த சேகர் பேசினதிலே உடன்பாடு போல!'' என்று வஜ்ரவேலு தூபம் போட்டார்.

இதற்கு சேதுபதியால் என்ன பதில் சொல்ல முடியும்? அதனால் அவர் பேச்சை மாற்றும் விதமாக,

''ஏங்க உங்களுக்கு இடையே என்ன சண்டைன்னே எனக்கு தெரியாது. அப்படி இருக்கும் போது தேவையில்லாமல் என்னை எதுக்கு இழுக்கு

றீங்க? நீங்களும் அவரும் ஏற்கனவே முறைச்சுக்கிற ஆளுங்க. ஏதோ ரெண்டு பேரும் மோதிக்கிட்டீங்க. விஷயத்தை அப்படியே விட்டுட்டுப் போவீங்களா?'' என்றார்.

''அவமானம் எங்களுக்கு தானே? அதான் அப்படியே விட்டுட்டுப் போகச் சொல்லுறீங்க.''

''நீங்களெல்லாம் பங்காளிங்க தானே? பங்காளின்னாலே ஒரு கட்டத்திலே பகை வந்துடும் போல! நீங்க எப்படியோ போங்க! எனக்கு என்ன வந்துச்சு?'' என்று கூறிக் கொண்டே அவ்விடம் விட்டு அகல இருந்த சேதுபதியை வஜ்ரவேலு தடுத்து நிறுத்தினார்.

''என்னங்க பாதிப் பேச்சிலே போய்கிட்டு இருக்கீங்க? இது தான் நீங்க என் தம்பிக்கு குடுக்கிற மரியாதையா?''

''இப்ப எதுக்குங்க வில்லங்கமா பேசுறீங்க? மேலும் மேலும் பேசினால் பிரச்சனை தான் வரும் என்று நினைச்சு நான் விலகி போகணும்னு நினைக்கிறேன். அது ஒரு தப்பா?''

''அதாவது, துஷ்டனைக் கண்டால் தூரப் போகணும்னு நினைக்கிறீங்க? அப்படின்னா நானும் என் தம்பியும் துஷ்டனுங்க. நீங்களும் அந்த சேகரும் நல்லவங்க! அப்படித் தானே?''

'இது என்னடா வம்பாப் போச்சு? இந்த மனுஷன் ஒண்ணை பத்தாக்கி இப்படித் திரிச்சு

திரிச்சுப் பேசுறான்' என்று சேதுபதி நொந்து கொண்டார்.

''தம்பி நீ ஒரு விஷயம் கவனிச்சியா? சண்டை நடக்கும் போது இடையில் இவரு தான் சம்பந்தியை சமாதானப்படுத்தி கூட்டிட்டுப் போகப் பார்த்தாரு. அதாவது இவர் அந்த சேகர் பக்கம். உன் பக்கம் இல்லை'' என்று வஜ்ரவேலு கனகாரியமாகப் போட்டுக் கொடுத்தார்.

''என்ன பேசுறீங்க? அவர் என் சம்பந்தி. அவர் சார்பா நான் பேசித் தானே ஆகணும்?''

''அப்படின்னா நான் யாரு?'' என்று ராஜதுரை முதல் முறையாய் தன் வாய் திறந்து கேட்க,

''நீங்க சம்பந்தி ஆகப் போகிறவர்'' என்று சேதுபதி பதிலளித்தார்.

''அப்படின்னா இன்னும் சம்பந்தி ஆகலைன்னு சொல்லுறீங்களா? எங்க அண்ணனுக்கு ஒரு அவமானம்னா நான் கை கட்டி பார்த்துக்கிட்டு சும்மா இருக்க மாட்டேன். நீங்க உங்க சம்பந்தியை எங்க அண்ணன்கிட்ட வந்து மன்னிப்பு கேட்கச் சொல்லுங்க!'' என்று ராஜதுரை கூறவும் சேதுபதி அதிர்ந்தார்!

''அது என்னால முடியாதுங்க'' என்று சேதுபதி அழுத்தம் திருத்தமாக கூறினார்.

''ஏன் முடியாது?'' என்று ராஜதுரை கோபமாகக் கேட்க,

''என்னால உங்களை மாதிரியெல்லாம் பேச முடியாதுங்க'' என்று சேதுபதி கூறினார்.

''அப்படின்னா என்ன அர்த்தம்?''

''பொண்ணு குடுக்கப் போற வீட்டிலே குரல் உசத்திப் பேச உங்களால முடியும். ஆனா பொண்ணு குடுத்த வீட்டிலே போய் குரல் உசத்தி பேச என்னால முடியாது. நியாயம் என் பக்கம் இருந்தா கூட என் சம்பந்திக்கு எதிரா என்னால பேச முடியுமான்னு தெரியலை. இதிலே எனக்கு சம்பந்தமே இல்லாத விஷயத்துக்காக நான் எதுக்கு அவர்கிட்ட பேசணும்? எனக்கு என் பொண்ணு வாழ்க்கை தான் முக்கியம். நான் அவர்கிட்ட இது விஷயமா எதுவும் பேச மாட்டேன்'' என்று திட்டவட்டமாக மறுத்தார்.

''பார்த்தியாடா துரை! இப்பவே இவங்க ரெண்டு பேரும் இப்படி நம்மை பேசுறாங்கன்னா, நாளைக்கு பொண்ணை கட்டிக் கொடுத்துட்டால் நம்மை கால் காசுக்கு கூட மதிக்க மாட்டாங்க போல! உன் பொண்ணை காண்பிச்சே உன்னை அடிமை மாதிரி நடத்துவாங்க போல!'' என்று வஜ்ரவேலு மேலும் கூற,

''மன்னிப்பு கேட்காத வரை என் பொண்ணு கல்யாணம் நடக்காது!'' என்று ராஜதுரை அறிவித்தார்.

சேதுபதி அதிர்ச்சியுடன் தன் வருங்கால சம்பந்தி சொல்வதைக் கேட்டுக் கொண்டு அவ்விடம் விட்டு அகன்றார்.

9



நடந்த சண்டையைக் கேட்ட சரோஜினி பதை பதைத்தார். எதுவாய் இருந்தாலும் வீட்டிற்குச் சென்று பேசிக் கொள்ளலாம் என நினைத்தார். அனைவரும் விசேஷ வீட்டில் இருந்து கலைந்து தத்தம் வீடு நோக்கிச் சென்றார்கள்.

சோகமே உருவாய் வந்து நின்ற தன் தாயைக் கண்ட நித்திலா குழம்பிப் போனாள்.

''என்னம்மா? ஏன் என்னவோ போல இருக்கீங்க?'' என்று கேட்டதும் சரோஜினி தனக்கு தெரிந்தவற்றை தன் மகளிடம் கூறினார். நித்திலாவின் வயிற்றில் ஒரு பயப்பந்து உருண்டது.

வஜ்ரவேலு விசேஷம் நடந்த வீட்டோடு தன் நல்ல காரியத்தை(??) நிறுத்திக் கொள்ளவில்லை. தம்பியுடனே அவர் வீட்டிற்கும் வந்து,

''நீ உன் நிலையில் ஸ்ட்ராங்கா இரு துரை! அசைஞ்சு குடுத்திடாதே! முதல்ல உன் மகளை கன்ட்ரோல் பண்ணு!'' என்று போட்டுக் கொடுக்க,

ராஜதுரையும் நித்திலாவிடம், ''நித்தி! இனிமேல் நீ ராகவ்கிட்ட பேசக் கூடாது!'' என்று கட்டளை யிட்டார்.

தந்தையின் பேச்சைக் கேட்டு நித்திலா கதிகலங்கிப் போனாள்.

'நான் இனிமேல் பேசக் கூடாதா? அதுவும் ராகவ் கிட்டவா? அது எப்படி முடியும்?' என்று அவளது மனம் கேள்வி கேட்டது.

சரோஜினிக்கு அங்கே நடந்த சண்டை பற்றி அரைகுறையாகத் தான் தெரியும். அதனால் அவரும் கணவரின் முடிவைக் கேட்டு அதிர்ந்து தான் போனார்.

''என்னங்க சொல்லுறீங்க?'' என்று சரோஜினி நடுவில் புக,

''வாயை மூடிக்கிட்டு பேசாமல் இரு! இல்லைன்னா வீட்டை விட்டு வெளியே போ!'' என்று ராஜதுரை கர்ஜிக்க,

சரோஜினி அரண்டு போனார். மச்சினரின் முன் தன் கணவன் அவ்வாறு கூறவும் மிகவும் அவமானமாக உணர்ந்தார். வஜ்ரவேலுவின் முன்னிலையில் சரோஜினியால் அதற்கு மேல் எதுவும் பேச முடியவில்லை.

''என்ன நித்திலா உங்க அப்பா சொன்னது கேட்டுச்சா?'' என்று வஜ்ரவேலு கேட்க,

நித்திலா ஒன்றும் சொல்லாது கண்ணீர் விட்டாள். அவளால் தான் பெரியப்பாவை எதிர்த்துக் கேள்வி கேட்க முடியவில்லை.

'நாம என்ன சொன்னாலும் அப்பா கேட்பார். அவர்கிட்ட எடுத்துச் சொல்லிப் புரிய வச்சுக்கலாம்.

பெரியப்பா கிளம்பிப் போன பின்னால அப்பாகிட்ட பேசலாம்' என நித்திலா நினைத்தாள்.

ஆனால் வஜ்ரவேலு அதற்கான சந்தர்ப்பத்தை அவளுக்கு அளிக்கவில்லை.

''உங்க பேச்சை கேட்கிறேன். இனிமேல் அவன் கூடப் பேச மாட்டேன்னு சொல்லுறாளா பார்ருடா தம்பி!'' என்று ராஜதுரையிடம் கூறிய வஜ்ரவேலு நித்திலாவிடம் திரும்பி,

''உங்கப்பனை விட நேத்து வந்தவன் உனக்கு பெருசாப் போயிட்டானோ?'' என்று எகிறினார்.

அவசரப்பட்டு எதுவும் சொல்ல வேண்டாம். பெரியப்பா திட்டினால் திட்டட்டும் என்று நித்திலா அப்பொழுதும் அமைதியாகவே இருந்தாள்.

ராஜதுரை நித்திலாவிடம் 'இனி நீ ராகவுடன் பேசக் கூடாது!' என்று சொன்னதோடு தன் காரியம் முடிந்துவிட்டது என்று நினைத்திருந்தார். அவருக்கு தன் மகளிடம் இருந்து உறுதிமொழி வாங்கும் திட்டமெல்லாம் கிடையாது.

ஆனால் வஜ்ரவேலு கூறிய 'உன் அப்பனை விட நேத்து வந்தவன் பெருசா போயிட்டனா?' என்ற இந்த வசனம் ராஜதுரையை உசுப்பிவிட்டது.

'என் மனைவியை விட நான் இவளைப் பெருசா மதிச்சு இத்தனை வருஷமா சீராட்டி வளர்த்துக்கிட்டு வரேன். ஆனா இவ என்னடான்னா நேத்து வந்தவ

னுக்காக என்னை எதிர்க்கத் துணிகிறாளா?' என்று கட்டுக் கடங்காத கோபம் வந்தது.

ராஜதுரை தன் மகளை முறைத்துக் கொண்டே, ''சொல்லு நித்திலா! என் மேல உனக்குப் பாசம் இருந்தால் நான் இனிமேல் அவன் கூடப் பேச மாட்டேன்னு சொல்லு!'' என்றார்.

அவள் மௌனமாகக் கண்ணீர் விட...

''இப்ப சொல்லப் போறியா இல்லையா? அப்போ என் மேல உனக்கு அவ்வளவு தான் பாசமா?'' என்று ராஜதுரை கர்ஜிக்கவும், நித்திலா மிரண்டு போனாள்.

கண்களில் கண்ணீர் ஊற்றாகப் பெருக, உதடுகள் அழுகையில் பிதுங்க, வார்த்தைகள் தந்தி அடிக்க நித்திலா அந்த வார்த்தைகளைக் கூறினாள்.

''இனிமேல் நான் ராகவ்கிட்ட பேச மாட்டேன்பா.''

அந்த வார்த்தைகளை உதிர்த்தவள் தனது அறையில் சென்று அடைந்து கொண்டாள். வஜ்ரவேலு சென்ற பின் நித்திலா தன் தந்தையிடம் பேச முயற்சித்தாள்.

''அப்பா! ராகவ்...'' என்று நித்திலா தொடங்கியதுமே,

''ராகவ் விஷயம் தவிர வேற ஏதாச்சும் இருந்தா பேசு! நான் அப்பவே உன்கிட்ட என்ன சொன்னேன்? என் மேல நீ உண்மையாவே பாசம் வச்சிருந்தா இந்த விஷயமா இதுக்கு மேல என்கிட்ட எதுவும் பேசாதே!

இல்ல உனக்கு அவன் தான் முக்கியம்னா இந்த அப்பனை வேண்டாம்னு சொல்லிட்டு இப்பவே வெளியே போயிடு!'' என்று கடுமையான குரலில் கூறிவிட்டு ராஜதுரை வெளியேறினார்.

இருபத்தி இரண்டு வருடங்களாய் உயிராய் வளர்த்த அப்பாவை எப்படி வேண்டாம் என்று சொல்ல முடியும்? நித்திலா செய்வதறியாது திகைத்தாள்!

'அப்பா! உங்க அண்ணன் மேல உள்ள நன்றி உணர்ச்சியைக் காட்டுறதுக்கு என் கல்யாண விஷயம் தானா கிடைச்சது?

இத்தனை நாளும் உங்க அண்ணன் சொன்னதுக் கெல்லாம் தலையாட்டினீங்க. எனக்கும் அம்மாவுக்கும் சில நேரம் அது கோபத்தைக் கொடுத்தாலும் போனால் போகுதுன்னு பொறுத்துப் போனோம்.

ஆனா இன்னைக்கு அண்ணனா பெத்த பொண்ணான்னு வரும் போதாச்சும் என் மகள் தான் எனக்கு முக்கியம்னு நீங்க சொல்லி இருக்க வேணாமா? ஏன்பா அப்படிச் செஞ்சீங்க? உங்களுக்கு உங்க மகளை விட உங்க அண்ணன் பேச்சு பெருசா போயிடுச்சா?

எந்தத் தப்பும் செய்யாத ராகவை நான் எப்படித் தண்டிப்பேன்?' என நினைத்துக் கண்ணீர் விட்டாள்.

'நான் உங்க மேல வச்ச பாசத்தை விட நீங்க என் மேல வச்ச பாசம் தான்பா அதிகம். அது கண்டிப்பா

உங்க மனசை மாத்தும். ஆனா அதுக்குக் கொஞ்ச காலம் ஆகும். அது வரைக்கும் நான் இந்த துக்கத்தை உங்களுக்காகத் தாங்கிக்கிறேன்' என்று நித்திலா மனதிற்குள் உறுதி எடுத்துக் கொண்டாள்.

இவள் தன் தந்தைக்காக துன்பம் அனுபவிக்கலாம்! ஆனால் ராகவ்? அவன் நித்திலாவிற்காக இந்த இடைக்காலப் பிரிவைச் சகித்துக் கொண்டு காத்திருப்பானா?

வஜ்ரவேலு கிளம்பிச் சென்ற பிறகும் அதன் பின் வந்த நாட்களிலும் சரோஜினி தன் கணவனுக்கு எடுத்துச் சொல்ல எவ்வளவோ முயன்றார். ஆனால் அத்தனையும் விழலுக்கு இறைத்த நீராய்ப் போனது. அவர் தன் பிடியில் இருந்து சற்றும் தளரவில்லை. தளர்வதற்கு அவரது அண்ணன் விடவில்லை என்றும் கூறலாம்.

ராகவ் தனக்குப் போட்ட மோதிரத்தைப் பற்றி நித்திலா தன் வீட்டில் தெரிவித்து இருக்கவில்லை. அவளுக்குக் கூச்சமாக இருந்ததால் பெற்றோரிடம் சொல்லாமல் விட்டு விட்டாள்.

சரோஜினி அவளது கையில் புதிதாக இருந்த மோதிரத்தைப் பார்த்த உடனே புரிந்து கொண்டார். ஆனால் ராஜதுரையால் கண்டுபிடிக்க முடியவில்லை. மகளது பெரிய நகைகளை வேண்டுமானால் அவருக்கு அடையாளம் தெரியலாம். மற்றபடி கம்மல் மோதிரம் பற்றியெல்லாம் அவருக்கு ஒன்றும் தெரியாது.

சரோஜினியும் மோதிரத்தைப் பற்றி தன் கணவரிடம் கூற மறந்து விட்டார். அதனால் ராஜதுரை அதைக் கழட்டி எறியுமாறு நித்திலாவை வற்புறுத்த வில்லை.

நித்திலா தன் தந்தைக்குக் கொடுத்த வாக்கினை நிறைவேற்றும் பொருட்டு தனது பேஸ்புக் அக்கவுண்ட்டை செயல் இழக்க வைத்தாள். ஸ்கைப்பை திறப்பதே இல்லை.

மீதம் இருந்த வழியான கைபேசியின் எண்ணை மட்டும் அவள் மாற்றவில்லை. அதனால் ராகவ் அவளை அழைத்துக் கொண்டே இருந்தான்.

அவள் தனது அழைப்புகளை எடுக்கவில்லை என்றதும் ராகவ் குழம்பிப் போனான். தனது தந்தைக்கு அழைத்து விவரம் அறிந்து கொண்டான்.

''இதுக்கு என்ன தான்பா முடிவு?'' என்று எழும்பாத குரலில் கேட்ட மகனது கேள்வியில் இருந்தே ராஜதுரையின் செயல் அவனை எந்த அளவிற்குப் பாதிக்கிறது என்பதை சேதுபதியால் உணர முடிந்தது.

அதன் பின்பு சேதுபதி இரு வீட்டுக்கும் பொதுவான ராமனை அழைத்துக் கொண்டு சமரசம் பேச ராஜதுரையின் வீட்டிற்குச் செல்ல முடிவு எடுத்தார். அவர் அவ்வாறு வலியச் சென்று ராஜதுரையுடன் பேசப் போவது பூங்கோதைக்குப் பிடிக்கவில்லை.

இருப்பினும் மகனது வாழ்க்கையில் எந்தத் தடங்கலும் வந்துவிடக் கூடாது என நினைத்து சேதுபதி இறங்கிப் போய் சமரசம் செய்ய முயன்றார்.

ஆனால் அன்றும் அந்த வஜ்ரவேலு அவர்களின் இடையே அமர்ந்து கொண்டு பேசிப் பேசியே சண்டையை வலுவடையச் செய்தார். சேதுபதி தோல்வியுடன் வீடு திரும்பினார்.

இனிமேல் திருமண விஷயமாக அங்கே செல்லக் கூடாது என்று பூங்கோதை தன் கணவனுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

திருமணப் பேச்சு பாதியில் நின்ற விஷயமறிந்த சேகர் மிகவும் வருத்தப்பட்டார். அவர் காஞ்சிபுரத்தில் இருந்து செங்கல்பட்டில் உள்ள தன் சம்பந்தி வீட்டிற்குச் சென்றார்.

''என்ன சம்பந்தி அன்னைக்கு நடந்த சண்டையாலயா நம்ம ராகவ் கல்யாணம் பாதியிலே நிக்குது? அந்த வில்லங்கம் புடிச்ச வஜ்ரவேலு சொந்த வீட்டிலே தன் வில்லங்கத்தைக் காட்ட மாட்டான்னு நான் நினைச்சேன். ஆனா இப்படி ஆகிடுச்சே!'' என்று சேகர் வருத்தப்பட்டார்.

''நான் வேணா போய் ராஜதுரையிடம் பேசட்டுமா?'' என்று கேட்டார்.

அவரது கேள்விக்கு சேதுபதி பதிலளிக்கும் முன் ராகவிடமிருந்து அழைப்பு வந்தது. சேகர் அவனிடம் பேச விரும்பினார். சேதுபதி தன் மகனிடம் இரண்டொரு வார்த்தை பேசிவிட்டு அலைபேசியை தன் சம்பந்தியிடம் கொடுத்தார்.

''ராகவ் என்னால தான் இப்படி ஆகிடுச்சு போல!'' என எடுத்த எடுப்பிலேயே சேகர் வருத்தம் தெரிவிக்க,

''உங்களால ஒண்ணும் ஆகலை மாமா. எது நடக்கணும்னு இருந்துச்சோ அது நடந்திடுச்சு. அவ்வளவு தான்'' என்று ராகவ் அவரைச் சமாதானம் செய்தான்.

''நான் வேணா நித்திலா வீட்டுக்குப் போய் பேசட்டுமா?'' என்று சற்று முன்பு தன் சம்பந்தியிடம் கேட்ட அதே கேள்வியை சேகர் மீண்டும் அவனிடம் கேட்க, அவன் திட்டவட்டமாக மறுத்தான்.

''வேண்டாம் மாமா. இது இன்னைக்கோட முடியப் போற பந்தமில்லை. எதிர்காலத்திலே இன்னும் எத்தனை பிரச்சனைகள் இது மாதிரி வருமோ? ஒவ்வொரு தடவையும் நாம இறங்கிப் போய் சமாதானம் செய்ய முடியுமா?

தன் அண்ணனோட வறட்டுப் பிடிவாதம் முக்கியமா? இல்லை தன் மகளோட வாழ்க்கை முக்கியமான்னு நித்திலா அப்பாவே முடிவு பண்ணட்டும்'' என்று கூறிவிட்டான்.

ராகவிற்கு தன் அக்காவின் மாமனார் சென்று பேசுவது, பேசுவது என்ன பேசுவது, மன்னிப்புக் கேட்பது பிடிக்கவில்லை.

'இன்று திருமணத்திற்காக மன்னிப்பு கேட்கச் சொல்வார்கள். குழந்தை பிறந்த பின் அதைக் காரணம் காட்டி வேறு ஒரு நிபந்தனை வைக்க மாட்டார்கள் என்று என்ன நிச்சயம்? எனக்காக என் அப்பா அவமானப்படுவதே அதிகம். என் அக்காவின் மாமனார் ஏன் அவமானப்பட வேண்டும்? தேவையே இல்லை' என்று நினைத்தான்.

அதனால் திருமண விஷயமாக ராகவ் வீட்டினர் யாருமே அடுத்த அடியை எடுத்து வைக்க முன் வரவில்லை. ராஜதுரையும் தன் பிடிவாதத்தில் இருந்து இறங்கி வரவில்லை.

இதனால் ராகவும் நித்திலாவும் தான் அதிகமாக தவித்துப் போனார்கள். அவனுக்கு அவளுடன் பேச முடியவில்லையே என்ற தவிப்பு மட்டும் தான். அவளுக்கோ, அப்படித் தவிப்பதற்கு தன் தந்தை காரணமாகி விட்டாரே என்ற குற்ற உணர்வும் சேர்ந்து கொண்டதால் அவனை விட அவள் தான் அதிகமாகத் தவித்தாள்.

தன் அறையில் தனியாக இருக்கும் சமயங்களில் அவனின் புகைப்படத்தை வைத்துக் கொண்டு கண்ணீர் விடுவதே நித்திலாவின் வாடிக்கையானது.

ஒரு நாள் ராகவின் அழைப்பு நித்திலாவின் கைபேசிக்கு வந்ததைக் கவனித்த ராஜதுரை தன் ஆட்சேபத்தை கடுமையாகத் தெரிவித்தார்.

தன்னையும் ராகவையும் இணைப்பதற்கு இந்த கைபேசி எண் ஒரு பாலமாக இருக்கும் என்று நித்திலா நம்பினாள்.

அதனால் தந்தையைச் சமாளிக்கும் பொருட்டு, "எனக்கு கேம்பஸிலே வேலை கிடைச்சிருக்கில்ல. அவங்களுக்கு இந்த நம்பர் தான் குடுத்து இருக்கேன். இப்ப மாத்தினா சரி வராதுப்பா. நான் உங்க பேச்சைக் கேட்டு அவர் கூடப் பேசலை இல்ல. அப்புறம் என்ன?" என்றாள்.

ராஜதுரை அதை அத்தோடு விட்டு விட்டார். நாளடைவில் ராகவிடம் இருந்து வரும் அழைப்பும் நின்று போனது. நித்திலா சோர்ந்து போனாள்.

அவளது தோழிகள் தங்களால் முடிந்த அளவுக்கு ஆறுதல் அளிக்க முயன்றனர். அவர்கள் அருகில் இருக்கும்போது நித்திலா தன் கவலையைச் சற்றே மறந்து சாதாரணமாக இருப்பதைக் கண்டவர்கள் அவளை அடிக்கடி சந்தித்தனர்.

ஜூன் மாத இறுதியில் வேலையில் வந்து சேருமாறு நித்திலாவிற்கு அழைப்பு வந்தபோது ராஜதுரை அவளை வேலைக்குச் சென்று வருமாறு கூறினார்.

நித்திலாவிற்கு வேலையை ஒத்துக் கொள்ள இஷ்டமில்லை. ராகவ் அவளை ஜெர்மனிக்கு வந்து தன்னை மாதிரியே மேற்படிப்பு படிக்கச் சொல்லி இருந்தான். ஆனால் இப்பொழுது தான் நிலைமை தலைகீழாக மாறி விட்டதே!

வீட்டில் இருந்து கொண்டு மோட்டு வளையைப் பார்த்தவாறே கண்ணீர் விடுவதற்கு வேலைக்குச் செல்வதே மேல் என்ற முடிவிற்கு வந்த நித்திலாவும் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தாள்.

நித்திலாவின் பெரியப்பா மகளுக்கு திருமணம் நிச்சயம் ஆனது. அதைக் கேட்ட சரோஜினிக்கு ஒரு பக்கம் சந்தோஷம் ஏற்பட்டது. இன்னொரு புறம் தன் மகள் கல்யாணம் பாதியிலேயே தடைபட்டு நின்றதால் வருத்தமும் ஏற்பட்டது.

சரோஜினி தன் மகளின் திருமணம் குறித்து தன் கணவரிடம் பேசிப் பார்த்தார். வழக்கம் போல் ராஜதுரை சரோஜினியின் பேச்சைக் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

அலுவலகத்தில் நித்திலாவின் மூன்று மாதப் பயிற்சி நல்லபடியாக முடிவடைந்தது. செழியன் என்பவனின் கீழ் வேலை செய்ய நியமிக்கப்பட்டாள். வேலையில் சேர்ந்ததில் இருந்து பாமா என்ற பெண்ணுடன் அவளுக்கு தோழமை ஏற்பட்டது. பாமா விற்கும் செழியனின் கீழ் தான் வேலை.

அலுவலகத்தில் வேலை செய்யும் நேரங்களில் நித்திலா தன் கவலையைக் கொஞ்சம் மறந்தாள். உற்சாகமும் இல்லாமல் கவலையும் இல்லாமல் சாதாரண மனநிலையில் நாட்களைக் கடத்தினாள்.



10

ராகவ் ஜெர்மனியில் இருந்து இந்தியா வந்து இறங்கினான். ஐந்து மாதங்கள் கழித்து தனது திருமணத்திற்கு தான் இந்தியா வர வேண்டும் என்று தீர்மானித்து இருந்தவன் இடையில் ஏற்பட்ட குழப்பத்தினால் நான்கே மாதத்தில் இந்திய மண்ணை மிதித்தான்.

அவன் தனது வருகைக் குறித்து தனது பெற்றோர் களிடம் கூடத் தெரிவிக்கவில்லை. விமான நிலையம் விட்டு வெளியே வந்தவன் வாடகைக்கு ஒரு காரை அமர்த்திக் கொண்டு நேராக நித்திலாவின் வீட்டிற்குச் சென்றான்.

செங்கல்பட்டிற்குச் சென்ற பின்னால் தன்னுடைய பெற்றோர்கள் அவளது வீட்டிற்கு செல்ல அனுமதிப்பார்களோ மாட்டார்களோ என்று பயந்தான்.

பெரியவராய் தன் தந்தை சென்று சமரசம் செய்து பார்த்து விட்டார். பலன் ஒன்றும் கிட்டவில்லை. என் கல்யாணம் நடக்க என்னால் ஆன முயற்சியை நான் மேற்கொள்ள வேண்டாமா என்று நினைத்தே அவன் நித்திலாவின் வீட்டை நோக்கிப் பயணித்தான்.

காலை ஒன்பது மணி அளவில் அவளது வீட்டு வாசலில் இறங்கினான்.

அன்று சனிக்கிழமை என்பதால் நித்திலா வேலைக்குச் செல்லாமல் வீட்டில் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டு இருந்தாள். ராஜதுரை சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சரோஜினி கோவிலுக்குச் சென்றிருந்தார்.

கார் நிற்கும் ஓசையைக் கேட்ட ராஜதுரை, ''நம்ம வீட்டு வாசலிலா கார் நிக்குது?'' என்று சந்தேகத்துடன் வினவ,

வந்திருப்பது யார் என்று பார்ப்பதற்காக நித்திலா வாசலுக்குச் சென்றாள். கேட்டைத் தள்ளித் திறந்து

கொண்டு ராகவ் நுழைய, நித்திலா நிலை வாசல் படியிலேயே சிலையாக நின்று விட்டாள்.

'அவரா? அவரே தானா? வந்து விட்டாரா?' என்று மனம் கேள்விகளை எழுப்பியது. ராகவும் அசையாமல் அவளையேப் பார்த்துக் கொண்டு நின்றான்.

பார்த்தவிழி பார்த்தபடி பூத்து இருக்க

காத்திருந்த காட்சி இங்கு காணக் கிடைக்க

ஊனுருக உயிர் உருக தேன் தரும் தடாகமே

மதி வருக வழி நெடுக ஒளி நிறைக வாழ்விலே

அவளது கண்களில் திரண்ட கண்ணீர் அவளது பார்வையை மறைக்க, அவளால் அவனைச் சரியாகப் பார்க்க முடியவில்லை.

முதன் முதலில் அவன் அவளது வீட்டிற்கு வந்த போதும் இருவரும் இதே இடத்தில் தான் நின்று கொண்டிருந்தார்கள். அன்று இருவரது கண்களிலும் காதல் இருந்தது. இன்றோ அவனது கண்களில் குற்றச்சாட்டு இருந்தது. அவளது கண்களில் குற்ற உணர்வு தென்பட்டது.

ராகவ் மெல்ல அடியெடுத்து அவளருகில் வந்தான். தான் அணிவித்த மோதிரத்தை அவள் இன்னமும் அணிந்திருக்கின்றாளா என்று பார்க்க விரும்பியவன் அவளது இடது கை விரல்களை நோட்டம் விட எண்ணி அவளது கையைப் பார்த்தான்.

அவளது இடது கை அவளது துப்பட்டாவைப் பற்றி இருந்ததால் அவனால் அவளது விரல்களைப் பார்க்க முடியவில்லை.

'என் முகத்தைப் பார்க்காமல் குனிந்து எதைப் பார்க்கிறார்?' என்று நினைத்தவள் அவனது பார்வை போன திக்கில் குனிந்து பார்த்தாள்.

அவளுக்கு அவன் என்ன பார்க்க நினைக்கிறான் என்ற விஷயம் புரிந்தது.

''யாரும்மா நித்தி வந்திருக்காங்க?'' என்று உள்ளிருந்து ராஜதுரை கேள்வி எழுப்பினார். அவளால் அவருக்கு எந்தப் பதிலையும் அளிக்க முடியவில்லை.

''நான் வரட்டுமா?'' என்று அடுத்த கேள்வியை எழுப்பிய ராஜதுரை எழுந்து கை கழுவச் சென்றார்.

அவர் எந்த நேரத்திலும் இங்கே வந்து விடும் அபாயம் இருப்பதை உணர்ந்தவள் தனது இடது கையை அவன் முன் நீட்டினாள்.

'நீ போட்ட மோதிரம் அங்கேயே தான் இருக்கிறது. பார்த்துக் கொள்!' என்று வார்த்தைகளால் சொல்லாமல் செயலால் விளக்கினாள்.

தான் அணிவித்த பிரேஸ்லெட் அவனது கையில் இருக்கிறதா என்று நித்திலா சந்தேகம் கொள்ளவில்லை. இத்தனை நடந்த பின்பும் அவன் நேரில் வந்து நிற்பது ஒன்று போதாதா அவனது நிலையை விளக்க என்ற எண்ணத்தினால் அவள் அவனது கையைப் பார்க்க முற்படவில்லை.

ராகவ் அவளிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாது அவளைத் தாண்டிக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தான்.

அவனை தங்கள் வீட்டில் எதிர்பார்க்காத ராஜதுரை திகைத்துப் போனார். அவர் அவனை வா என்றும் வரவேற்கவில்லை. அதே சமயம் போ என்றும் கூறவில்லை. அப்படி ஒருவன் தங்கள் வீட்டிற்கு நுழைந்தது போலவே அவர் காட்டிக் கொள்ள வில்லை.

வரவேற்பறையில் இருந்த சோபாவில் அமர்ந்தவர் அன்றைய செய்தித் தாளை எடுத்து அதை விரித்துப் படிக்க ஆரம்பித்து விட்டார்.

ராகவிற்கு அவமானமாக இருந்தது. தனது கண்களை மூடித் தன்னை நிலைப்படுத்திக் கொள்ள முயன்றான். நித்திலாவிற்கு தந்தையின் செயலால் வருத்தம் உண்டானது.

அவள் ராகவ் புறம் திரும்பி, ''உட்காருங்க'' என்றாள்.

அவளது உபசரிப்பை ஏற்று அமர்ந்து ராஜதுரையிடம் பேசுவதா அல்லது வெளியேறிப் போவதா என்று ராகவ் சிந்தித்துப் பார்த்தான்.

காரியம் பெரிதா அல்லது வீரியம் பெரிதா என யோசித்தவன் தற்போதைய நிலைமையில் தனக்கு காரியமே பெரிது என முடிவு செய்து அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தான்.

''மாமா!'' என்று அழைத்தவன் அவர் தன்னை நிமிர்ந்து நோக்குவார் என்று சில நொடிகள் காத்திருந்து பார்த்தான். அவர் செய்தித் தாளிலேயே தன் தலையைப் புதைத்துக் கொண்டார்.

ஒரு பெருமூச்சினை வெளியேற்றியவன், ''என்னோட அப்பா கல்யாண விஷயமா பேச வந்தப்போ நீங்க பிடி கொடுக்கலைன்னு கேள்விப்பட்டேன். அதான் நானே உங்களை நேரிலே பார்த்துப் பேசலாம்னு வந்தேன்'' என்றான்.

அப்பொழுதும் ராஜதுரை அசைந்து கொடுக்க வில்லை.

''யாரோ அடிச்சுக்கட்டும் கூடிக்கட்டும். அதனால நமக்கு என்ன மாமா வந்துச்சு?'' என்று அவன் கூறிக் கொண்டு இருக்கும்போதே ராஜதுரை செய்தித் தாளை மடித்து வைத்துவிட்டு,

''நித்தி! நீ படிக்கிறதுக்கு கதை புக் கேட்டேல்ல. நான் போய் வாங்கிட்டு வரேன். கதவைப் பூட்டிக் கிட்டு பத்திரமா இரு. அம்மா இப்ப வந்துடுவாள்'' என்றவர் வாசலை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

அவரை முந்திக் கொண்டு ராகவ் வீட்டை விட்டு வெளியேறி காத்திருந்த காரில் ஏறி செங்கல்பட்டிற்கு பயணப்பட்டான்.

அவன் வெளியேறியதை அதிர்வுடன் பார்த்துக் கொண்டிருந்த நித்திலாவை அவன் திரும்பியும் பார்க்கவில்லை. அவனால் வேறு என்ன தான் செய்ய முடியும்?

அவன் காரில் ஏறிச் சென்றதைக் கண்டு கொள்ளாமல் ராஜதுரை வெளியேறிச் சென்ற இரு நிமிடங்களில் சரோஜினி உள்ளே வந்தார். கண்ணீர் விட்டுக் கொண்டு அமர்ந்திருந்த மகளைக் கண்டு பதறியவர் அவள் அருகே சென்று விசாரித்தார்.

நடந்ததை அறிந்தவர், ''இன்னைக்குன்னு பார்த்து நான் வீட்டில் இல்லாமல் போகணும்!'' என்று நொந்து கொண்டார்.

''உன்கிட்ட ஏதாச்சும் பேசினாரா நித்தி?''

இல்லை எனும் விதமாய் அவள் தன் உதடுகளை பிதுக்கிக் காட்டி கண்ணீர் விட்டாள். மகளது நிலையை எண்ணி வருத்தமடைந்த சரோஜினி மகளை மடியில் சாய்த்து அவளது முதுகை வருடிக் கொடுத்தார். அவரால் செய்ய முடிந்தது அது மட்டுமே!

ராகவ் செங்கல்பட்டிற்குச் சென்று சேர்ந்தான். திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் வந்து இறங்கிய மகனைக் கண்டு சேதுபதியும் பூங்கோதையும் பதறினர்.

''என்னப்பா வருவதா சொல்லவே இல்லையே! உடம்பு நல்லா இருக்கு தானே? பிரச்சனை ஒண்ணும் இல்லையே?'' என்று இருவரும் பதறினர்.

''எனக்கு ஒண்ணும் இல்லை. நீங்க ரெண்டு பேரும் பதறாமல் இருங்க'' என்றான்.

மகனிற்கு உடல்நிலை குறைவோ, வேறு எந்த விதமான பிரச்சனையோ இல்லை என்பதைத்

தெரிந்து கொண்ட பின்பே அவனது பெற்றோர் நிம்மதியானார்கள்.

பூங்கோதை மகனுக்குப் பிடித்த உணவினைச் சமைத்துப் போட்டு அவனைக் கவனித்துக் கொண்டார். சேதுபதியும் தன்னால் முடிந்தவரை மகனை கலகலப்பாக வைத்துக் கொள்ள முயன்றார்.

அவர்கள் இருவரும் எவ்வளவு முயற்சி செய்தும் மகனது முகத்தில் தெரிந்த மெல்லிய சோகம் அவர்களை வாட்டியது.

11



ராகவ் இந்தியாவிற்கு வந்து இரு நாட்கள் கழிந்தன.

அன்று திங்கட்கிழமை. நித்திலா அலுவலகத்திற்கு வந்து தன் வேலைகளைச் செய்ய ஆரம்பித்தாள். அவளருகில் அமர்ந்திருந்த அவளது தோழி பாமா,

''ஹேய்! யாரு இந்த நியூ பேஸ்?'' என்று யாரையோ பார்த்து மெல்லிய குரலில் விமர்சித்தாள்.

நித்திலா நிமிர்ந்து பார்க்காது தன் வேலையைத் தொடர்ந்தாள்.

''செமையா ஸ்மைல் பண்ணுறானே!'' என்று அவள் தொடர்ந்து விமர்சிக்க, நித்திலாவிற்கு ராகவின் ஞாபகம் வந்தது.

''நம்ம டீம் லீடர் செழியனைப் பார்த்து ஸ்மைல் பண்ணுறான். அவருக்கு தெரிஞ்சவரா இருப்பானோ?'' என அவள் கூறிக் கொண்டு இருந்தாள்.

இவர்கள் அருகே நின்றிருந்த செழியன், ''ஹேய் ராகவ்! வாடா. எப்ப ஜெர்மனியில் இருந்து வந்தே?'' என்று கேட்கவும்,

நித்திலா அதிர்ச்சியும் ஆச்சரியமும் போட்டி போட நிமிர்ந்து பார்த்தாள். அவளுடைய ராகவ் தான் வந்து கொண்டிருந்தான்.

''ரெண்டு நாளைக்கு முன்னாடி. சனிக்கிழமை வந்தேன்டா செழியன்.''

'அப்படின்னா ஏர்போர்ட்டில் இருந்து நேரா எங்க வீட்டுக்கு தான் வந்தாரா?' என்று நித்திலா நினைத்துக் கொண்டாள்.

''உன்னைப் பார்த்து எத்தனை வருஷமாச்சுடா ராகவ்!''

''ஆமாடா. ரொம்ப வருஷமாயிடுச்சு. நான் மே மாசம் வந்தப்போ நீ ஆன் சைட்டுக்கு போய் இருந்த தால அப்பவும் உன்னைப் பார்க்க முடியலை.''

''உனக்குக் கல்யாணம்னு நம்ம ராகேஷ் சொல்லிக்கிட்டு இருந்தான். இன்விடேஷன் குடுக்க வந்தியா?'' என்று செழியன் கேட்க,

''இல்லைடா. கல்யாணம் தள்ளிப் போயிடுச்சு'' என்றதும் செழியன் அமைதியானான்.

நித்திலா வருத்தத்துடன் தலை கவிழ்ந்து கொண்டாள்.

நிலைமையை சகஜமாக்கும் பொருட்டு ராகவ், ''என் கதையை விடு. உனக்கு எப்போ கல்யாணம்?'' என்று கேட்டான்.

''அடுத்த மாசம் என் தங்கச்சிக்கு கல்யாணம்டா. அது முடிஞ்சதும் எனக்கு பார்க்க ஆரம்பிப்பாங்க. அது சரி விசிட்டர்ஸை எப்படிடா ஆபிஸ்குள்ள விட்டாங்க? வா வெளியே போய் பேசுவோம்.''

''நான் உன்னைப் பார்க்க வரலைடா'' என்று ராகவ் கூறவும் நித்திலாவிற்கு வியர்க்க ஆரம்பித்தது.

ராகவ் அவளது பதட்டத்தை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே, ''நான் இனிமேல் இங்க தான் வேலை பார்க்கப் போறேன'' என்றான்.

அவனது கூற்றைக் கேட்டு நித்திலாவிற்கு அதிர்ச்சியாக இருந்தது. அது ஆனந்த அதிர்ச்சியா இல்லையா என்று அவளால் வரையறுக்க முடிய வில்லை.

''என்ன இங்க வேலை பார்க்கப் போறியா? அப்ப ஜெர்மனியை விட்டுட்டு வந்துட்டியா ராகவ்?'' என்று ஆனந்த அதிர்ச்சியுடன் செழியன் கேட்டான்.

''ஆமாடா. ஒரு அஞ்சு வருஷம் கழிச்சு வரலாம்னு ப்ளான் போட்டேன். ஆனா கடவுள் வேற மாதிரி

முடிவு பண்ணிட்டார். அதான் இங்க வந்துட்டேன்.''

''இன்டர்வியூ அட்டென்ட் பண்ண வந்து இருக்கியா? இல்ல போன் ஸ்க்ரீனிங் (தொலைபேசி வாயிலாக நடக்கும் நேர்முகத் தேர்வு) மூலமா ஏற்கனவே செலக்ட் ஆகிட்டியா?''

''இந்த வேலை கிடைச்ச பிறகு தான்டா அங்க பார்த்துக்கிட்டு இருந்த வேலையை ரிஸைன் பண்ணிட்டு இந்தியாவுக்குக் கிளம்பி வந்தேன். நான் போய் மேனேஜரைப் பார்த்து ரிப்போர்ட் பண்ணிட்டு வரேன்'' என்று கூறி அந்த இடம் விட்டு அகன்றான்.

அன்று மதிய இடைவேளையின் போது செழியனும் ராகவும் ஒன்றாகச் சாப்பிடச் சென்றார்கள். அவர்கள் இருவரும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள்.

''நான் அப்பவே கேட்கணும்னு நினைச்சேன் ராகவ். சுத்தி நிறைய பேர் இருந்ததால கேட்கலை. ஏன்டா உன் கல்யாணம் தள்ளிப் போச்சு?'' என்று செழியன் கேட்டதும்,

''ரெண்டு பேமிலிக்கும் இடையில் சின்ன மனஸ்தாபம். கொஞ்சம் நாள் கழிச்சு சரியாகும்னு நினைக்கிறேன். பார்ப்போம்'' என்று கூறிய ராகவ் நித்திலா பற்றி செழியனிடம் எதுவும் தெரிவிக்க வில்லை.

வேலை பார்க்கும் இடத்தில் அவளுக்குத் தன்னால் எந்தப் பிரச்சனையும் வந்துவிடக் கூடாது

என்று நினைத்தே அவன் தன் நண்பனிடம் கூட உண்மையைக் கூறவில்லை.

ராகவ் இந்தியாவிற்கு வரும் முடிவை எடுத்த உடன் சென்னையில் உள்ள தன் வீட்டை தனக்காக தயார் நிலையில் வைக்க ஏற்பாடு செய்திருந்தான். அதனால் தனக்குச் சொந்தமான வீட்டிலேயே தங்கிக் கொண்டான்.

தான் சென்னையிலேயே வேலை செய்ய வந்து விட்டதாக ராகவ் தனது பெற்றோரிடம் தெரிவித்த போது இருவரும் சந்தோஷப்பட்டனர். அதே சமயம் அவன் சந்தோஷத்தோடு வராமல் ராஜதுரையின் செயலால் வருத்தப்பட்டு வந்திருப்பதை நினைத்து வருத்தமும் அடைந்தனர்.

அன்றிலிருந்து ராகவும் நித்திலாவும் ஒரே அலுவலகத்தில் அருகருகே வேலை செய்ய ஆரம்பித்தார்கள். ராகவ் செழியனிடம் பேச வரும் போதெல்லாம் நித்திலாவிற்கு படபடப்பாக இருக்கும்.

அவனுடன் பேச வேண்டும் என்ற ஆசையாக இருந்த போதும் தந்தையின் பேச்சை மீற முடியால் அவனைக் கண்டு கொள்ளாமல் இருப்பாள். ராகவும் நித்திலாவிடம் பேசுவதற்கு முற்படவில்லை.

'அங்க இருந்து இங்க எதுக்கு வந்தார்? இப்படிப் பேசாமல் வேடிக்கைப் பார்க்கிறதுக்கா வந்தார்? இதுக்கு அங்கேயே கண் காணாமல் இருந்திருக்கலாம்' என்று நித்திலா மனதிற்குள் திட்டினாள்.

'வேற என்ன செய்யணும் நித்திலா? நீயும் உன் அப்பாவும் பண்ணும் அலும்புக்கு ஒரு மனுஷன் வேற என்ன செய்ய முடியும்?' என்று அவளுடைய மனசாட்சி அவளை எதிர்த்துக் கேள்வி கேட்டதும் சட்டென அடங்கினாள்.

நித்திலா தன் பெற்றோரிடம் ராகவ் தனது அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்திருக்கும் விஷயத்தைக் கூறவில்லை.

12



இரு வாரங்கள் கடந்த நிலையில் சனிக்கிழமை நித்திலாவின் டீமை சேர்ந்த அனைவரும் மதிய உணவிற்கு வெளியே செல்ல முடிவெடுத்தனர். செழியன் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி ராகவும் வரச் சம்மதித்தான்.

நித்திலா தன் வீட்டிலிருந்து கிளம்பிச் சென்றவுடன் ராஜதுரையும் வெளி வேலையைப் பார்க்கச் சென்றார். அங்கே தனது பழைய நண்பர் ஒருவரைப் பார்த்தார்.

''டேய் துரை! எப்படி இருக்க? ரொம்ப நாள் ஆச்சு.''

''நான் நல்லா இருக்கேன்டா. நீ எப்படி இருக்க? வாடா உட்கார்ந்து பேசுவோம்'' என்று கூறிய

ராஜதுரை தன் நண்பரை ஒரு உணவகத்திற்கு அழைத்துச் சென்றார். இருவரும் சாப்பிட்டுக் கொண்டே பேச ஆரம்பித்தனர்.

''உன் பொண்ணு காலேஜ் படிக்கிறாளா இல்லை படிப்பை முடிச்சிட்டாளா துரை?''

''காலேஜ் முடிச்சுட்டாள். வேலைக்குப் போய் கிட்டு இருக்காள்.''

''கல்யாணத்துக்குப் பார்க்கலையா?''

''ஒரு வரன் வந்துச்சு. ஆனா சில காரணங்களால் அது தள்ளிப் போயிடுச்சு'' என்று மட்டும் ராஜதுரை கூறினார்.

''நான் என் பையனுக்கு வரன் பார்த்துக்கிட்டு இருக்கேன். உன் பொண்ணை நான் கொஞ்ச வருஷத்துக்கு முன்ன பார்த்து இருக்கேன். என் பையனுக்கு உன் பொண்ணை கட்டிக் கொடுக்கிறியா துரை? என் பையன் டில்லியில வேலை பார்க்கிறான். இன்னைக்கு இங்க வந்திருக்கான். உன் பொண்ணைப் பார்த்துட்டு அவனுக்குப் பிடிச்சிருந்தா நாம மேற்கொண்டு பேசுவோம்'' என்று அவர் நண்பர் படக்கென்று கேட்க,

ராஜதுரைக்கு என்ன சொல்வதென்று ஒன்றுமே புரியவில்லை.

அவருக்கு சேதுபதியுடன் சமாதானமாகப் போக விருப்பம் இல்லை. அதே சமயம் தன் மகளுக்கு வேறு வரன் பார்க்கும் எண்ணமும் இதுவரை

எழவில்லை. அதனால் நண்பரது கோரிக்கையை கேட்டுத் திகைத்துப் போய் அமர்ந்திருந்தார்.

அவரது நண்பரோ, ''வாடா! உன் வீட்டுக்குப் போவோம்'' என்று பரபரத்தார்.

''இல்ல... என் பொண்ணு இப்ப வீட்டிலே இல்லை. அவளோட ஆபிஸ் ஃப்ரண்ட்ஸோட லஞ்சுக்குப் போயிருக்காள்'' என்று கூறிய ராஜதுரை அந்த ஹோட்டலின் பெயரையும் குறிப்பிட்டார்.

ராஜதுரை தன் நண்பரைச் சமாளிப்பதற்காக தன் மகள் வீட்டில் இல்லை என்ற தகவலை தெரிவித்தார். ஆனால் அதுவே வினையானது.

''டேய் துரை! என் பையன் அதே ஹோட்டலில் தங்கி இருக்கிற அவன் பிரண்டைப் பார்க்கத் தான் போயிருக்கான். ஒரு நிமிஷம் இரு'' என்றவர் தனது அலைபேசியில் மகனை அழைத்து,

''நீ ஹோட்டலில் இருந்து கிளம்பிட்டியா கௌசிக்? இல்ல இன்னும் அங்க தான் இருக்கியா?'' என்று விசாரித்தவர், ''என் பிரண்டு ராஜதுரையோட பொண்ணு...'' என்று ஆரம்பித்து விவரம் கூறினார்.

அன்று நித்திலா என்ன உடை அணிந்திருக்கிறாள் என்று ராஜதுரையிடம் கேட்டு மகனிடம் சொன்னவர், ''நீ போய் அவளைப் பார்த்துப் பேசு, உனக்குப் பிடிச்சிருந்தா மேற்கொண்டு பேசுவோம்'' என்று கூறி அலைபேசியை அணைத்தார்.

ராஜதுரைக்குப் பேசும் சந்தர்ப்பத்தையே அவரது நண்பர் வழங்கவில்லை.

'இது என்னடா புதுப் பூதம்!' என நினைத்துக் கொண்டு ராஜதுரை அமர்ந்திருந்தார்.

அந்தப் பக்கம் அழைப்பை அணைத்த கௌசிக்கோ, 'இந்த அப்பாவுக்கு வேற வேலையே இல்லை. எல்லாத்தையும் படபடன்னு யோசிச்சு முடிவெடுக்கிறதே வேலையாப் போச்சு. இது அவசரமா செய்யக் கூடிய வேலையா என்ன? நாம போய் அந்தப் பொண்ணை பார்க்க வேண்டாம். அப்புறமா அப்பாகிட்ட ஏதாச்சும் காரணம் சொல்லிக்கலாம்' என நினைத்தவன் அந்த ஹோட்டலை விட்டு வெளியேற ஆரம்பித்தான்.

அப்பொழுது எதிரே வந்து கொண்டிருந்த குழந்தை தடுமாறி கீழே விழ இருப்பதைப் பார்த்தவன் தனது கைகளால் அதைத் தாங்கிப் பிடித்தான். அந்தக் குழந்தையின் தாய் அவனுக்கு நன்றி கூறிவிட்டு அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு அவ்விடம் விட்டு அகன்றாள்.

அந்தக் குழந்தை சப்பிக் கொண்டிருந்த சாக்லேட் அவனது கை முழுவதும் அப்பியதைக் கண்டவன் அதைக் கழுவ எண்ணினான். அருகில் இருந்த ஹோட்டல் பணியாளரிடம்,

''இதை வாஷ் பண்ணனும். வாஷ் பேஸின் எங்க இருக்கு?'' என்று கேட்டான்.

''ரெஸ்டாரண்டுக்குள்ள இருக்கு சார். உள்ள போய் கழுவிட்டு வாங்க'' என்று அந்தப் பணியாளர்

கைகாட்ட... கௌசிக் அந்த உணவகத்தின் உள்ளே சென்றான்.

உணவகம் அதிகக் கூட்டமில்லாமல் இருந்தது. அவன் அவ்வாறு உள்ளே போகும்போது நித்திலாவைக் கடந்து சென்றான்.

'இந்தப் பொண்ணு நல்லா இருக்காளே' என்று மட்டும் நினைத்துக் கொண்டே கை கழுவச் சென்றான். அப்போது தான் அவனுடைய தந்தை சொன்னது அவனது நினைவிற்கு வந்தது.

'இந்தப் பெண் தானோ? அவளோட ஆபிஸ் கொலீக்ஸ் கூட வந்திருக்கிறதா தானே அப்பா சொன்னார். இவங்களும் எட்டுப் பத்துப் பேரா தான் வந்திருக்காங்க. அப்பா என்ன கலர் டிரஸ் சொன்னார்?' என்று தனது மண்டையைத் தட்டி யோசித்தான்.

அது நினைவிற்கு வந்ததும் வெளியேறும்போது அந்தப் பெண் நித்திலாவா என்று சரி பார்க்க எண்ணினான். அது நித்திலா தான் என்று அவளது உடையின் நிறத்தைக் கொண்டு உறுதி செய்த கௌசிக்கிற்கு வெளியேற மனமில்லை. அவளிடம் பேசிப் பார்க்கலாமே என்று அவனுக்குத் தோன்றியது.

'தப்பா எடுத்துக்குவாளா? அப்பா நம்மகிட்ட சொல்லும்போது நமக்குக் கடுப்பா இருந்துச்சே தானே? ஆனா நான் ஒண்ணும் அவளைத் தனியா வெளியே கூட்டிட்டுப் போய் பேசப் போற

தில்லையே! இங்கேயே அவ பிரண்ட்ஸ் மத்தியிலே ஜஸ்ட் ஒரு ஹாய் தானே சொல்லப் போறேன்' என நினைத்தவனாய் அவளை நெருங்கினான்.

அவர்கள் அனைவரும் உணவிற்காகக் காத்திருந்தார்கள். காத்திருக்கும் நேரத்தில் கலகலப்பாகப் பேசிக் கொண்டு இருந்தார்கள். புதியவன் ஒருவன் தங்கள் அருகே வரவும் அவர்களது பேச்சு தடைபட்டது. அனைவரும் அவனையே என்னவென்பது போல் பார்க்க,

கௌசிக் நித்திலா புறம் கைகாட்டி, ''நான் நித்திலாகிட்ட பேச வந்தேன். என் பேர் கௌசிக். எனக்கும் அவங்களுக்கும் வீட்டிலே அலையன்ஸ் பேசுறாங்க. இவங்க இங்க வந்திருக்கிறதா அவங்கப்பா சொன்னார். என்னை இவங்க கூடப் பேசிப் பார்க்கச் சொன்னார் எங்கப்பா. நான் ஒரு அஞ்சு நிமிஷம் பேசலாமா?'' என்று கேட்டான்.

''ஓ! ஷூயர்'' என்று பல குரல்கள் எழுந்தன.

இரண்டு பேர் மட்டும் அமைதியாக இருந்தனர். அவர்கள் யாரென்று சொல்லவும் வேண்டுமோ?

'யாருடா இவன்?' என்று நித்திலா எரிச்சலுடன் அமர்ந்திருந்தாள். ராகவ் கடும் கோபத்துடன் வீற்றிருந்தான்.

''பிரண்ட்ஸ் ஒரு அஞ்சு நிமிஷம் பக்கத்து டேபிளில் உட்கார்ந்துக்கிறீங்களா? இந்த டேபிள் கார்னரில் இருப்பதால எனக்குப் பேச வசதியா இருக்கும்'' என்று கௌசிக் கூறியதும்,

அனைவரும், ''நோ ப்ராப்ளம்'' என்று கூறிக் கொண்டே அகன்றனர். நித்திலாவும் ராகவும் மட்டும் அசையாமல் அமர்ந்திருந்தனர்.

ராகவ் அங்கேயே அமர்ந்திருப்பதைப் பார்த்து நண்பர்கள் குழம்பினர்.

''சார் நீங்களும்...'' என்று கௌசிக் ராகவைப் பார்த்துக் கூற,

''தாராளமா போறேன் மிஸ்டர் கௌசிக். ஆனா நீங்க சொன்னது உண்மை தான்னு நான் எப்படி நம்புறது? இவங்க உங்களைத் தெரியாத மாதிரி பார்த்துக்கிட்டு இருக்காங்க. இப்போதைக்கு இவங்க எங்க பொறுப்பிலே இருக்காங்க. அதனால...'' என்று ராகவ் இழுக்கவும்,

''நீங்க சொல்லுறது வேலிட் பாயின்ட் சார்'' என்ற கௌசிக், தனது கைபேசியை எடுத்து தன் தந்தையை அழைத்து விவரம் கூறினான்.

அவர் ராஜதுரையிடம் கைப்பேசியைக் கொடுத்துப் பேசச் சொல்ல...

இங்கே கௌசிக் தனது கைப்பேசியை நித்திலாவிடம் கொடுத்துப் பேசச் சொன்னான். அவள் மிகுந்த தயக்கத்துடனும் குழப்பத்துடனும் அதை வாங்கி காதில் வைக்க,

ராஜதுரையின் குரலைக் கேட்டவள், ''அப்பா!'' என்றதும் ராகவ் தனது இருக்கையில் இருந்து எழுந்தான்.

வருவித்துக் கொண்ட புன்னகை ஒன்றை கௌசிக்கைப் பார்த்துச் சிந்தினான். அலுவலக நண்பர்கள் அனைவரும் இவர்களைப் பார்த்துக் கொண்டு இருந்தனர். நித்திலா அங்கிருந்து செல்ல இருந்த ராகவை அவனது கரம் பற்றித் தடுத்தாள்.

அவள் அவ்வாறு ராகவின் கரம் பற்றவும் அலுவலக நண்பர்கள் திகைத்தனர். கௌசிக் தன் புருவம் உயர்த்தினான். இது எதையும் நித்திலா கண்டு கொள்ளவில்லை.

நித்திலா அந்தக் கைப்பேசி அழைப்பைத் துண்டிக்காது கௌசிக்கைப் பார்த்து, ''நீங்க என் கூடப் பேசுறதுக்கு முன்னாடி இவர் கூடப் பேசுங்க'' என்றவள் ராகவை சுட்டிக் காட்டி,

''மீட் மிஸ்டர் ராகவ். மை ஹஸ்பண்ட்'' என்றாள்.

அலுவலகத்து நண்பர்கள் அனைவரும் ஆச்சரியம் அடைந்து தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டனர்.

நித்திலாவின் தோழி பாமா, 'அடிப்பாவி! இவ்வளவு நாளா முழுப் பூசணிக்காயை சோத்திலே மறைச்சு வச்சிருந்தியா?' என்று எண்ணினாள்.

செழியன், 'அதனால தான் ஜெர்மன் வேலையை விட்டுட்டு மாப்பிள்ளை இங்க வந்து செட்டிலாகி இருக்கானா? ஒரு வார்த்தை சொன்னானா பாரு!' என்று தனக்குள் நண்பனை உரிமையுடன் திட்டிக் கொண்டான்.

இதில் அதிகமாக அதிர்ந்தது கௌசிக்தான்.

''வாட்ட்ட்ட்?'' என்று அவன் அதிர்ச்சியுடன் கேட்க,

''யெஸ். எங்களுக்கு ரிஜிஸ்டர் மேரேஜ் ஆகிடுச்சு. லீகலி ஹி இஸ் மை ஹஸ்பண்ட்.'' என்றாள்.

''வீட்டுக்குத் தெரியாமல் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களா?'' என்று கௌசிக் கேட்டான்.

''இல்ல. என்னை எங்க வீட்டிலே அப்படி வளர்க்கலை. பெரியவங்க பார்த்து தான் நிச்சயம் பண்ணாங்க. இன்னும் சொல்லப் போனால் சாட்சி கையெழுத்துப் போட்டதே எங்க ரெண்டு பேரோட அப்பா தான்'' என்றவள் அவனது கைப்பேசியை அவனிடம் கொடுத்தாள்.

கௌசிக்கின் கைப்பேசி மூலம் அவள் பேசிய அனைத்தையும் அந்தப் பக்கம் ராஜதுரையும் கேட்டுக் கொண்டு தான் இருந்தார்.

அதற்கு மேல் பேசுவதற்கு ஒன்றும் இல்லாத கௌசிக், ''சாரி!'' என இருவரிடமும் மன்னிப்புத் தெரிவித்துவிட்டு அகன்றான்.

ராஜதுரையும் அவரது நண்பரும் ஒருவருக்கொருவர் மன்னிப்பை வேண்டிக் கொண்டது தனிக் கதை.

நண்பர்கள் அனைவரும் அமைதியாக உணவருந்தினர். அவர்கள் அனைவருக்கும் ராகவை இரு

வாரங்களாகத் தான் தெரியும். அதனால் அவனிடம் சகஜமாக அவனது பதிவுத் திருமணத்தின் பின் இருக்கும் கதையை கேட்க அவர்களால் முடியவில்லை.

பெண்கள் அனைவருக்கும் நித்திலா கடந்த மூன்று மாதங்களாகத் தெரிந்தவள் என்பதால் அவர்கள் அவளைக் கேள்வி கேட்க விரும்பினர். ஆனால் ஆண்களின் முன்னிலையில் அவளை எந்தக் கேள்வியும் கேட்கக் கூடாது என நினைத்து அமைதி காத்தனர்.

அவர்கள் உணவருந்திவிட்டு வெளியே வந்தனர். வரும்போது நித்திலா தன் ஸ்கூட்டியில் வராமல் ஆட்டோவில் வந்ததை கவனித்திருந்த ராகவ் அவளிடம் சென்று முதல் முறையாகப் பேசினான்.

''என் கூட வா. நான் உன்னை டிராப் பண்ணுறேன்.''

''வேண்டாம். நான் ஆட்டோவில் போயிடுவேன்'' என்றவள் நிற்காமல் விரைந்து சென்று விட்டாள்.

செல்லும் அவளையே ராகவ் வெறித்துக்கொண்டு நின்றிருந்தான். நண்பனின் தோள் மேல் கைப் போட்ட செழியன், ''சீக்கிரமே சரியாகிடும்டா மச்சான்'' என்று கூறி அவனை ஆறுதல் படுத்தினான்.

நித்திலா வீட்டிற்கு வரும்போதே ராஜதுரையும் வந்திருந்தார். தனது அறைக்குள் செல்வதற்கு முன்பு அவர் முன் வந்தவள்,

''நீங்க சொல்லுறதை நான் கேட்பேன். அதே சமயம் நீங்க சொல்லுற எல்லாத்தையும் நான் கேட்பேன்னு நினைக்காதீங்க'' என்று மட்டும் கூறிவிட்டு அகன்றாள்.

''என்ன ஆச்சு நித்தி?'' என்று கேட்ட சரோஜினியிடம்,

''அவரையே கேட்டுத் தெரிஞ்சுக்கோங்க'' என்று கூறிவிட்டுச் சென்று விட்டாள்.

ராஜதுரையின் மூலம் விஷயமறிந்த சரோஜினி, 'இவர் மட்டும் தான் லூசுன்னு நினைச்சேன். இவர் பிரண்டும் இவரைப் போல ஒரு லூசு தான் போல!' என நினைத்துத் தன் தலையில் அடித்துக் கொண்டார்.

அன்று மாலை தன் அறையில் இருந்து வெளிப்பட்ட நித்திலாவிடம் சரோஜினி தயங்கியவாறே, ''நீ இன்னைக்கு உன் டீம் மேட்ஸ் கூட தானே சாப்பிடப் போறதா சொன்னே? அவங்க கூடப் போகலையா? ராகவ் கூடப் போனியா?'' என்று கேட்டார்.

ராஜதுரையும் மகளது பதிலுக்காக அவள் முகத்தையே பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தார். நித்திலா அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டே,

''உங்ககிட்ட பொய் சொல்லுற அளவுக்கு நான் இன்னும் வளரலைம்மா. நான் என் டீம் மேட்ஸ் கூட தான் போனேன். என் டீம் லீடரும் அவரும் ஃபிரண்ட்ஸ்'' என்றதும்,

''ஓ!'' என்று கூறி சரோஜினி தன் தலையை ஆட்டிக் கொண்டார்.

''அப்புறம் இன்னொரு விஷயம். ராகவ் தன் ஜெர்மனி வேலையை விட்டுட்டு சென்னைக்கே வந்துட்டார். அவர் என் ஆபீஸிலே தான் ஜாயின் பண்ணி இருக்கார்.''

'இத்தனை நாளும் இதைச் சொல்லாம்ல் மறைச்சுட்டாளே!' என்று அவளது பெற்றோர்கள் எண்ணிக் கொண்டு இருக்கும்போதே,

''அப்ப இத்தனை நாளா அவன் கூட சேர்ந்து ஊரைச் சுத்தி இருப்பாள்னு யாரும் நினைக்க வேண்டாம். உங்க பேச்சை மீறி இது வரைக்கும் நான் அவர்கிட்ட ஒரு வார்த்தை கூடப் பேசின தில்லை. இன்னைக்கு தான் பேசும்படி ஆகிடுச்சு. அதுவும் ஒரே ஒரு வாக்கியம்'' என்று கூறிவிட்டு அகன்றாள்.

அன்று இரவு அவளது கைப்பேசிக்கு 'கூட்ட நாஹ்ட்' என்ற குறுஞ்செய்தி ஒன்று புதிய எண்ணில் இருந்து வந்தது.

'யாருடா இது? சம்பந்தா சம்பந்தமில்லாமல் மெசேஜ் பண்ணி இருக்காங்க. பொதுவா விளம்பரம் தான் வரும். இப்பெல்லாம் இது மாதிரி ஒண்ணும் புரியாத வார்த்தைகளையும் அனுப்புறாங்க போல' என்று திட்டிக் கொண்டே படுத்தவள் அடுத்த சில நொடிகளில் எழுந்து அமர்ந்தாள்.

'இது சம்பந்தமில்லாத வார்த்தை இல்லை நித்திலா. இது தெரியாத எண்ணாய் இருந்தாலும் உனக்கே உனக்கானவனின் எண்ணாக இருக்கலாம்! இது ஜெர்மன் மொழியாக இருக்கலாம்!' என மூளை அறிவுறுத்த அவள் வேகமாக அந்த வார்த்தைக்கான அர்த்தத்தை கூகுளில் தேடினாள்.

'குட் நைட்' என்று விடை வந்ததும் உதட்டில் சிரிப்பும் கண்களில் நீரும் ஒருங்கே வந்தன.

பெரியவர்களுக்குள் சண்டை நடந்ததற்குப் பின்பு... முதல் பதினைந்து நாட்கள் ராகவ் தினமுமே நித்திலாவின் கைபேசிக்கு அழைத்துக் கொண்டிருந்தான். நித்திலா அந்த அழைப்பை ஏற்று அவனிடம் பேசவில்லை என்றாலும் அவனது அழைப்பு அவளுக்கு ஒரு வித நிறைவைத் தந்து கொண்டு இருந்தது.

அவனது அழைப்பு வரும் போதெல்லாம் 'அவரது நினைவில் நான் இருக்கிறேன்!' என்ற நிம்மதி உணர்வு அவளுக்குள் தோன்றும். அதன் பின் வந்த நாட்களில் அவன் அழைக்கவில்லை என்றதும் தன்னை அவன் மறந்து விட்டானோ. கைவிட்டு விடுவானோ என்ற எண்ணங்கள் தோன்றி அவளது மனதை அலைக்கழித்தன.

அவன் இந்தியா வந்த பின்பே அவளுக்கு அது போன்ற எண்ணங்கள் உதிக்கவில்லை. இன்று தனக்கு அவன் இரவு வணக்கம் என்று செய்தியை

அனுப்பியதும், அது அவனிடம் பேசிய திருப்தியை அவளுக்குத் தந்தது.

அவள் தனது கைப்பேசிக்கு முத்தம் ஒன்றைப் பதித்தாள்.

''குட் நைட் ராகவ்!'' என்று கூறிக் கொண்டாள். ஆனால் பதிலுக்கு அவனுக்கு எந்தச் செய்தியையும் அனுப்பவில்லை.

அவள் பதில் அனுப்பாத போதும் ஒவ்வொரு நாள் இரவும் பெயர் எதுவும் போடாத அவனது 'இரவு வணக்கம்' என்ற ஜெர்மன் மொழி குறுஞ்செய்தி வர ஆரம்பித்தது. அது அவளுக்குப் பெரும் ஆறுதலை அளித்து அவளை சுகமாய் நித்திரை கொள்ள வைத்தது.

அதற்குப் பின் வந்த நாட்களிலும் நித்திலா ராகவிடம் பேசவில்லை. அவனும் ஒதுங்கியே போனான்.

அலுவலகத்தினர் இவர்களின் கண்ணாமூச்சி ஆட்டத்தைக் கண்டும் காணாமலும் இருக்க பழகிக் கொண்டனர். பாமாவிடம் மட்டும் நித்திலா நடந்ததைக் கூறினாள்.

13



அன்று நித்திலாவின் பிறந்த நாள். ராகவ் வாழ்த்து அனுப்புவான் என்று நினைத்து முதல் நாள் இரவு

பன்னிரெண்டு மணியில் இருந்தே அவள் தன் கை பேசியைக் கையில் பிடித்துக் கொண்டு காத்திருந்தாள்.

ஜெர்மன் மொழியில் பிறந்த நாள் வாழ்த்தை எப்படிக் கூறுவார்கள் என்றும் தெரிந்து வைத்துக் கொண்டு காத்திருந்தாள்.

ஜெர்மனில் மட்டும் இல்லை. அவளுக்கு நன்கு தெரிந்த தமிழிலோ ஆங்கிலத்திலோ கூட அவள் எதிர்பார்த்த வாழ்த்து, எதிர்பார்த்த நபரிடம் இருந்து வரவில்லை.

நித்திலாவின் மனம் காற்றுப் போன பலூனாய் சுருங்கியது. 'இன்று என் பிறந்த நாள் என்பதை மறந்து விட்டாரா?' என எண்ணிக் கொண்டே அலு வலகத்திற்கு வந்தாள்.

பாமா அவளுக்கு வாழ்த்துத் தெரிவித்து ஒரு சின்னப் பூங்கொத்தைப் பரிசளித்தாள். ராகவ் அலுவலகத்திற்கு வரவில்லை என்றதும் நித்திலா தவித்துப் போனாள்.

அவனுடைய டீமில் வேலை செய்யும் பெண் ணிடம் சென்று, 'என்ன உங்க டீம் லீடர் இன்னைக்கு லீவா?' என்று கேட்க எண்ணினாள்.

ஆனால் அவள் பதிலுக்கு, 'எங்க டீம் லீடரைப் பத்தி தெரிஞ்சுக்கணுமா இல்ல உங்க ஹஸ்பண்ட் பத்தித் தெரிஞ்சுக்கணுமா? ஒரு போன் போட்டு கேட்க வேண்டியது தானே?' என்று சொல்லி விட்டால் என்ன செய்வது என நினைத்தவளாய்

வாசலைப் பார்த்துக் கொண்டு எதிர்பார்ப்போடு காத் திருந்தாள்.

'என் பர்த்டேக்கு லீவு போடுங்கன்னு நான் அன் னைக்கு சொன்னதை இன்னைக்கு கடை பிடிக் கிறாரோ? சும்மாவே நாங்க ரெண்டு பேரும் பேசிக் கிறது இல்லை. இந்த லட்சணத்திலே சென்னையில இருந்துக்கிட்டு லீவு போட்டால் இவரைப் பார்க்கக் கூட முடியாதே. லூசு! லூசு!' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

'ஒருவேளை நமக்கு பர்த்டேன்னு கோவிலுக்குப் போயிருப்பாரோ?' என்ற எண்ணம் தோன்றியதும் அவள் மனதில் சுகமான ஒரு உணர்வு பரவியது.

ஆனால் பதினோரு மணி அளவில் உள்ளே வந்தவனின் நெற்றியில் கோவிலுக்கு சென்றதற் கான அறிகுறி எதுவும் தென்படவில்லை என்றதும் மனம் வாடினாள்.

இவள் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு இருக்க... அவனோ இவள் புறம் திரும்பாமலே அவளைக் கடந்து சென்றான்.

உணவு இடைவேளையின்போது உடன் பணி புரியும் பெண்ணிடம் அவன் சிரித்துப் பேசிக் கொண்டு இருப்பதைப் பார்த்த நித்திலா, 'என்ன இளிப்பு வேண்டி இருக்கு?' என்று வயிறு எரிந்தாள்.

எப்போதும் அவனது புன்னகையைக் கண்டு மயங்குபவள் இன்று வேறு ஒரு பெண்ணின் முன்

பாக நின்று கொண்டு அவன் அதே புன்னகையைக் சிந்தவும் கடுப்பானாள்.

மாலையும் ஆனது. இன்னும் சிறிது நேரத்தில் அலுவலகம் முடிந்து வீடு செல்ல வேண்டும். ஆனால் இதுவரைக்கும் அவனிடம் இருந்து வாழ்த்து வர வில்லை.

அவன் தனது பிறந்தநாளை மறந்து விட்டிருந்தால் கூட நித்திலாவின் மனம் ஆறியிருக்கும். அவன் முன்பாகவே தோழி ஒருத்தி நித்திலாவிற்கு வாழ்த்துச் சொன்னாள். அதைக் கேட்டுக் கொண்டு அமைதியாக இருந்தானே ஒழிய நிமிர்ந்து ஒரு பார்வை, ஒரு புன்னகையைக் கூடப் பரிசளிக்க வில்லை என்றதும் நித்திலா நொந்து போனாள்.

'நான் அன்னைக்கு போனில் இவர்கிட்ட என்ன சொன்னேன்? என் பர்த்டே அன்னைக்கு லீவு போட்டுட்டு என் கூடப் பேசிக்கிட்டே இருக்கணும்னு சொன்னேனா இல்லையா. ஆனா இவருக்கு ஒரு வாழ்த்துச் சொல்லக் கூட முடியலை. அட்லீஸ்ட் ஒரு எஸ்.எம்.எஸ். அதுகூடப் பண்ண முடியலை'' என்று எண்ணும் பொழுதே கண்ணீர் வந்தது.

அலுவலகத்தினரின் முன்பு அழக்கூடாது என்று அவள் கஷ்டப்பட்டுத் தன்னைத் தானே கட்டுப் படுத்திக் கொண்டாள். வேலை நேரம் முடிந்து அனை வரும் கலையத் தொடங்கினர். ஒரு சிலரே எஞ்சி இருந்தனர்.

இதற்கு மேல் தாமதித்தால் அவனும் சென்று விடு வான் என நினைத்தவள் அவன் முன் சென்று நின் றாள். ராகவ் அவள் புறம் திரும்பாது தன் வேலையி லேயே கவனமாக இருக்க,

''க்கும்'' என்று தொண்டையை கனைத்துப் பார்த்தாள்.

அவன் திரும்பவில்லை என்றதும் ஓங்கி முதுகிலே ஒரு அடி கொடுக்கலாமா என்று சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தாள். அருகே யாரும் இல்லை.

ஆனால் இவள் அடித்தால் எழும் சப்தத்தால் சற்றுத் தள்ளி இருப்பவர்களின் கவனம் இவர்கள் பக்கம் திரும்ப வாய்ப்பு அதிகம் என்பதால் தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''ராகவ்!'' என்று மெதுவாக நித்திலா அழைத்ததும், சுழல் நாற்காலியில் அமர்ந்திருந்தவன் சுழன்று அவள் புறம் திரும்பினான்.

எதற்காக என்னை அழைத்தாய் என்று அவளிடம் அவன் எதுவும் கேட்கவில்லை. அவன் ஏதாவது கேட்பான் அல்லது தன்னை வாழ்த்துவான் என்று எதிர்பார்த்துச் சில நொடிகள் நித்திலா அமைதியாக நின்று பார்த்தாள்.

அவன் அவள் முகத்தையே கேள்வியாகப் பார்த் தானே தவிர வாயைத் திறந்து எதையும் கேட்க வில்லை.

''உங்களுக்கு என்னை விஷ் பண்ண மனசு வரலையா?'' என்று கேட்கும் போதே, அது நேரம் வரை அடக்கி வைத்திருந்த கண்ணீர் அவள் கட்டுப்பாட்டையும் மீறி கன்னங்களில் உருண்டோடியது.

''பர்த்டேவும் அதுவுமா யாராச்சும் அழுவாங்களா நிது? கண்ணைத் துடை!'' என்றவன் எழுந்து நின்று தன் பேன்ட் பாக்கெட்டுக்குள் கைவிட்டு எதையோ எடுத்தான்.

நித்திலா தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். வெகு நாட்களுக்குப் பின் அவன் அழைத்த நிது என்ற அழைப்பே அவளது கண்ணீரை நிறுத்தி இருந்தது.

அவன் ஒரு சிறிய பொட்டலத்தை எடுத்துப் பிரித்தான். அதில் விபூதியும் குங்குமமும் கலந்து இருந்தன.

'நான் நினைச்ச மாதிரியே கோவிலுக்குப் போயிருக்கார்!' என்று நினைத்தவளின் முகம் மத்தாப்பூவாய் ஒளிர்ந்தது. அவன் அவளுக்கு அந்த விபூதி குங்குமத்தைத் தொட்டு எடுத்து அவளது நெற்றியில் பூசிவிட்டான்.

பின் தனது பையில் இருந்து நீளமான பார்சலை எடுத்து அவளது கையில் கொடுத்து, ''இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் நிது!'' என்று வாழ்த்தினான்.

''தாங்க்ஸ்'' என்று சொன்னவள் அவனிடம் கிளம்புகிறேன் எனும் விதமாய் தலை அசைத்துவிட்டு நகர்ந்தாள்.

தன்னிடம் சகஜமாகப் பேசாது போனாலும் அவளால் தன் உதாசீனத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்பதைக் கண்ட ராகவிற்கு மனம் நிம்மதியானது. சீக்கிரமே தங்களின் நிலை சரியாகும் என அவன் நம்பினான்.

காலை முதல் சற்று முன்பு வரை சோகமாய் இருந்த நிலை மாறி நித்திலா சிரித்த முகத்துடனே அலுவலகத்தை விட்டு வெளியேறினாள்.

'கோவிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணி இருக்கார். கிஃப்டும் வாங்கி வச்சிருக்கார். ஆனா நானா போய் கேட்கிற வரைக்கும் ரெண்டையும் என்கிட்ட குடுக்க மனசில்லாமல் இருந்திருக்கார். ஏன்? ஒரு வேளை காலையிலே அவர் இதை என்கிட்ட தந்து... நான் வாங்காமல் அவரை அவமானப்படுத்திடுவேனோன்னு நினைச்சிருப்பாரோ? அப்படித் தான் இருக்கும்' என நினைத்துக் கொண்டாள். உண்மையும் அதுவே!

வீட்டிற்கு வந்தவள் தனது அறைக்குச் சென்று அவன் கொடுத்த பரிசைப் பிரித்துப் பார்த்தாள். பன்னீர் ரோஜா நிறத்தில் அழகிய சாமுத்ரிகா பட்டுப் புடவை ஒன்று இருந்தது. அதை ஆசையுடன் தடவிப் பார்த்துக் கொண்டாள்.

அப்போது சரோஜினி அவளிடம் வந்து, ''என்ன நித்தி புதுப் புடவையா?'' என்று கேட்டார்.

''ஆமாம்மா. என் பிரண்ட்ஸ் எல்லோரும் சேர்ந்து பிரசண்ட் பண்ணி இருக்காங்க'' என்று சட்டென்று பொய் உரைத்தாள்.

''ஃபிரண்ட்ஸ்னா? ஆபிஸ் பிரண்ட்ஸா? இல்லை உன் காலேஜ் பிரண்ட்ஸா?''

கல்லூரித் தோழிகள் அனைவரையும் சரோஜினிக்கும் தெரியும் என்பதால், ''ஆபிஸ் பிரண்ட்ஸ்மா'' என்று மீண்டும் ஒரு பொய்யை அவிழ்த்து விட்டாள்.

புடவையைக் கையில் எடுத்துப் பார்த்த சரோஜினி, ''ரொம்ப நல்லா இருக்கு நித்தி'' என்றார்.

அலுவலகத்தில் வேலை அதிகமாக இருந்தது.

''நான் என் தங்கச்சி கல்யாணத்துக்காக ஒரு வாரம் லீவிலே போறேன். அதனால இந்த வாரம் கொஞ்சம் அதிகமா வேலை பாருங்க. அடுத்த வாரம் கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கலாம்'' என்று செழியன் கூறியதால் அவனது டீமைச் சேர்ந்த அனைவரும் மும்முரமாக வேலை பார்த்தனர்.

செழியன் அவர்களிடம், ''நீங்க எல்லோரும் என் தங்கச்சி கல்யாணத்துக்கு வரணும். சன்டே தான் கல்யாணம். அதனால எந்த சாக்குப் போக்கும் சொல்லக் கூடாது. கோவில்ல வச்சுக் கல்யாணம். நம்ம

ஆபீஸ்க்கு வந்துடுங்க. நான் வேன் ஏற்பாடு செய்யுறேன். இங்கே இருந்து வேனிலே வந்துடுங்க'' என்றான்.

அனைவரும் வருவதாக உற்சாகமாகத் தலையாட்டினர். நித்திலாவிற்குச் செழியனின் தங்கை கல்யாணத்திற்குச் செல்வதில் அவ்வளவாக விருப்பம் இல்லை. ஆனால் அவளது தோழிகள் வற்புறுத்தியதால் வருவதாக ஒத்துக் கொண்டாள்.

ஆனால் அங்கு சென்றால் தனக்கும் ராகவிற்கும் இடையே சண்டை வரும் என்று தெரிந்திருந்தால் போகாமல் இருந்திருப்பாளோ என்னவோ?

14



ஞாயிற்றுக்கிழமை காலையில் கண் விழித்ததும் நித்திலாவின் மனதில் முதலில் நினைவிற்கு வந்த விஷயம் இன்று செழியன் வீட்டுத் திருமணத்திற்குச் செல்ல வேண்டும் என்பதுதான்.

'சே! ஞாயிற்றுக்கிழமை கூட நிம்மதியா தூங்க விடாமல் இன்னைக்கும் சீக்கிரமா கிளம்பணுமா?' என்று அவளுக்கு அலுப்பாக இருந்தது.

பாமா கண்டிப்பாக வரவேண்டும் என்று கூறி யிருந்தாள். அப்படி இருந்தும் போக வேண்டுமா என்று தான் நித்திலாவிற்குத் தோன்றியது.

'ராகவும் செழியனும் நெருங்கிய நண்பர்கள். அதனால் ராகவ் கண்டிப்பாக திருமணத்திற்கு வருவார். அவரைப் பார்க்கிறதுக்காகவாவது போயிட்டு வருவோம். ஆபீஸில் அவர் வேற டீம் என்பதால் எப்பவாவது தான் பார்க்க முடியும். இன்னைக்கு அரை நாள் நம்ம பக்கத்திலே இருப்பார்' என்று நினைத்ததும் உற்சாகம் வரப் பெற்றவளாய்க் கிளம்பினாள்.

திருமணத்திற்கு பட்டு சுரிதார் போட்டுக் கொள்வோம் என்று பாமாவும் நித்திலாவும் முடிவு பண்ணி வைத்திருந்தார்கள். ஆனால் ஒரே மாதிரி உடை அணியலாம் என்ற திட்டத்தின் பேரில் அனைவரும் பட்டுப் புடவை கட்டுவது என்று தீர்மானமாயிற்று.

தலைக்குக் குளித்துவிட்டு வந்தவள் தலையைக் காய வைத்துக் கொண்டிருக்கும்போது சரோஜினி அவளது அறைக்கு வந்தார்.

''என்ன நித்தி குளிச்சிட்டியா? சேலை கட்டிவிடச் சொன்னியே! கட்டிவிடட்டுமா?''

''சமையல் வேலையை முடிச்சிட்டீங்களாம்மா?''

''காலை டிபன் மட்டும் தானே. அதனால பெருசா வேலை இல்லை'' என்றவர் மகளின் அலமாரியைத் திறந்து கொண்டே, ''எந்தப் புடவையைக் கட்டப் போற?'' என்று கேட்டார்.

அவளிடம் இருந்த ஐந்து பட்டுப் புடவைகளையும் வெளியே எடுத்து மகள் மீது வைத்துப் பார்த்தார்.

''எல்லாப் புடவையும் உனக்கு அழகா இருக்குடா நித்தி. இதிலே எதைக் கட்டப் போற?'' என்றதும் அவளது பார்வை அந்தப் புடவைகளை வலம் வந்தது.

ஆறாவதாக இருந்த அட்டைப் பெட்டியின் மேல் அவளது பார்வை நிலைத்தது. அதே சமயம் சரோஜினி அந்த அட்டைப் பெட்டியைப் பிரித்தார்.

''இது உன் பிரெண்ட்ஸ் உன் பர்த்டேக்கு பிரசண்ட் பண்ணின புடவை தானே நித்தி? பேசாமல் இதை கட்டிட்டுப் போ. அவங்களுக்கும் காண்பிச்ச மாதிரி இருக்கும்'' என்று சரோஜினி யோசனை கூறினார்.

'இதைப் பரிசளித்தது என்னோட தோழிகள் இல்லம்மா ராகவ்' என்று சொல்ல முடியாத நித்திலா மௌனம் காத்தாள்.

''என்னாச்சு நித்தி? உன் பிரண்ட்ஸ் உன்னை இந்தப் புடவையைக் கட்டிட்டு வரச் சொல்லலையா?'' என்று சரோஜினி ஆச்சரியமாகக் கேட்டதும்,

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாது நித்திலா விழித்தாள்.

''ஆச்சரியமா இருக்கு. எல்லோரும் சேலைன்னு ப்ளான் பண்ணும்போது ஒருத்தர் கூடவா உன்னை

இந்தச் சேலையைக் கட்டிட்டு வரச் சொல்லலை?', என்று சரோஜினி சந்தேகம் கேட்டார்.

இதற்கு மேல் சும்மா இருந்தால் சரோஜினி எதையாவது தோண்டித் துருவுவார் என நினைத்த நித்திலா, ''இதை தான்மா கண்டிப்பா கட்டிட்டு வரணும்னு கண்டிஷன் போட்டாங்க. ஆனா ப்ளவுஸ் தைக்கலை இல்ல. அதான் யோசிக்கிறேன்'' என்று சமாளித்தாள்.

''நீ எந்தக் காலத்திலே நித்தி டெய்லர் கடைக்குப் போனே? நான் தானே உனக்காக எப்பவும் போவேன். நீ இந்தப் புடவையைக் கொண்டு வந்து என்கிட்ட காண்பிச்ச உடனே அதுக்கான ப்ளவுஸைத் தச்சு வாங்கி வச்சுட்டேன். அந்த அட்டைப் பெட்டிக்கு உள்ளேயே இருக்கு பாரு'' என்றதும் வேறு வழி இல்லாமல் நித்திலா அதையே உடுத்துவது என்று முடிவெடுத்தாள்.

பன்னீர் ரோஜா நிறத்தில் இருந்த அந்தப் புடவையை அணிந்தவள் 'இந்தப் புடவையைப் பார்த்துட்டு ராகவ் என்ன சொல்லப் போறாருன்னு தெரியலையே!' என நினைத்துக் கொண்டாள்.

அவளது மனசாட்சியோ, 'இத்தனை நாளில் அவர் எத்தனை முறை உன்னிடம் வந்து பேசி இருக்கார்? அப்படியே அவர் பேசினாலும் நீ பதில் சொல்லிடுவியா?' என்று கேள்வி கேட்டதும், அவளுக்கு ராகவை நினைத்துப் பார்க்கும் பொழுது பாவமாக இருந்தது.

'எனக்காகப் பிடிச்ச வேலையை விட்டுட்டு நாடு விட்டு நாடு வந்து இருக்கிற மனுஷனை நான் ரொம்பவும் தான் சோதிக்கிறேன். அன்னைக்கு அவர் வீட்டுக்கு வந்தபோது அப்பா நடந்துக்கிட்ட முறைக்கும் நான் தினம் தினம் ஆபிஸில் நடந்துக்கிற விதத்துக்கும் என்ன வித்தியாசம் இருக்கு? ஒரு மனுஷன் பொறுமையாப் போறாருங்கிறதுக்காக அவரது பொறுமையை ரொம்பவும் சோதிக்கக் கூடாது. இனிமேலாச்சும் அவர்கிட்ட கொஞ்சம் சகஜமாகப் பேசணும்' என்று எண்ணிக் கொண்டாள்.

அன்று கௌசிக்கிடம் ராகவ் தான் என் கணவன் என்று சொன்னதை ராஜதுரை கண்டிக்காமல் இருந்தால் அவளுக்கு அவரது பேச்சை மீறும் துணிவு வந்தது. அதனால் அவனிடம் இனி சகஜமாகப் பேசலாம் என்ற முடிவினை எடுத்தாள்.

புடவையை மகளுக்குக் கட்டிவிட்ட சரோஜினி நகைப் பெட்டியில் இருந்து ஒரு நகையையும் பிரிஜ்ஜில் இருந்து பூவையும் எடுத்து வந்தார்.

''சின்னதா ஒரு நெக்லஸ் போட்டுக்கோ'' என்று கூறிய சரோஜினி நகையை மகளது கழுத்தில் மாட்டி விட்டார்.

அவளது தலையைத் தளரப் பின்னியவர், ''ஒரு முழம் பூ வாங்கி வச்சிருக்கேன். வச்சுக்கோ'' என்றவர் அந்தப் பூவை அவளது தலையில் வைத்து விட்டார்.

மகளுக்கு அலங்காரம் செய்து முடித்தவர் அவளை இப்படியும் அப்படியும் திரும்ப வைத்து அழகு பார்த்தார். தனது கைகளால் திருஷ்டி கழித்தவர்,

''அழகா இருக்கடா நித்தி. சீக்கிரமா உன் கல்யாண வேளை கூடி வரணும்'' என்று கூறிக் கொண்டே அங்கிருந்து சென்றார்.

''இதற்கு மேல் இங்கே இருந்தால் அம்மா புலம்பியே நம்மை ஒரு வழி பண்ணிடுவாங்க. எஸ்கேப் நித்தி!'' என்று கூறிக் கொண்டே அவசர அவசரமாக இட்லியை சாப்பிட்டுவிட்டு வீட்டை விட்டுப் புறப்பட்டாள்.

சேலைக் கட்டி, நகை அணிந்து, பூ வைத்து என்று தன்னை அலங்கரித்துக் கொண்டு வெளியே கிளம்பிய மகளைப் பார்த்த ராஜதுரை, ''கிளம்பிட்டியா நித்தி? தினமும் உன்னை சுரிதாரிலேயே பார்த்துப் பழகிப் போயிட்டேனா. இன்னைக்கு நீ திடீர்னு புடவை கட்டினதும், எனக்கு உன்னை அடையாளமே தெரியலை நித்தி. பத்திரமா போயிட்டு வா'' என்று மகளை வழி அனுப்பி வைத்தார்.

அவள் ஆட்டோ பிடித்து அலுவலகம் வந்து சேர்ந்தபோது வேன் தயாராக நின்றிருந்தது. ஆண்கள் அனைவரும் பட்டு வேஷ்டி சட்டையில் வந்திருந்தார்கள்.

நித்திலாவின் கண்கள் ராகவ் எங்கே என்று தேடியது. அவன் அங்கே இல்லை என்றதும் வாயிலைப்

பார்த்துக் கொண்டு நின்றாள். ராகவ் வேனுக்குள் அமர்ந்து கொண்டு அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

தான் வாங்கித் தந்த புடவையை உடுத்தி வந்தவளையே இமைக்க மறந்து ரசித்துக் கொண்டிருந்தான். அவனைக் காணாமல் அவள் தவிப்பதைக் கண்டவனின் மனம் சந்தோஷப்பட்டது.

'என்னை அவ்வளவு மிஸ் பண்ணுறியா நிது? ஆனா வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்லிடாதே!' என்று திட்டிக் கொண்டே வேனில் இருந்து இறங்கினான்.

ராகவ் வேனில் இருந்து இறங்கியதைப் பார்க்காமல் நித்திலா நுழைவு வாயில் பக்கம் தன் பார்வையை பதித்திருந்தாள். ஒரு புன்முறுவலோடு அவளை நெருங்கியவன்,

''இந்தச் சேலை உனக்கு ரொம்ப நல்லா இருக்கு நிது'' என்று கிசுகிசுப்பாக மொழிந்தான்.

அவனது குரலில் சடாரெனத் திரும்பியவள் வெண் பட்டு வேஷ்டி சட்டையில் இருந்தவனின் தோற்றத்தால் ஈர்க்கப்பட்டு இமைக்கவும் மறந்து சிலையாய் நின்றாள். ஆனால் வாயைத் திறந்து ஒன்றும் கூறவில்லை.

'நான் போட்டிருக்கிற டிரஸ் பிடிச்சிருக்கா இல்லையான்னு ஒரு வார்த்தை சொல்லுறாளா பாரு! அவ வாயால சொல்லலைன்னா என்ன. அதான் கண்

ணாலே சொல்லிட்டாளே! அதுவே போதும்' என்று ராகவ் தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டான்.

அனைவரும் வந்ததும், ''கிளம்பலாமா?'' என்று கேட்டு ராகவ் முதல் ஆளாய் வேனுக்குள் ஏறினான்.

அவன் கடைசி இருக்கைக்கு முந்தின இருக்கையில் ஜன்னலோரமாய் அமர்ந்து கொண்டான். ஒவ்வொருவராக வேனில் ஏறினர். உள்ளே வந்த நித்திலாவைப் பார்த்து தனக்கு அருகில் அமருமாறு ராகவ் கண் ஜாடை காட்டினான்.

அவளோ அவன் அமர்ந்திருந்த இருக்கைக்கு எதிரே உள்ள இருக்கையில் தன் தோழி பாமாவுடன் சென்று அமர்ந்து கொண்டாள். யாருமே ராகவ் அருகே அமரவில்லை. வண்டி கிளம்பியது.

ராகவ் தன் நண்பன் செழியனை அழைத்து, ''நாங்க கிளம்பிட்டோம்டா!'' என்று கூறினான்.

வேனில் இருந்த அனைவரும் சப்தமாகச் சிரித்துப் பேசிக் கொண்டு வந்தனர். நித்திலாவும் பாமாவுடன் பேசிக் கொண்டு தான் வந்தாள். ராகவ் மட்டும் அமைதியாக வெளியே வேடிக்கைப் பார்த்தபடி வந்தான்.

பாமா ஜன்னலோரமாக அமர்ந்திருந்தாள். நித்திலா உள்பக்கமாக அமர்ந்திருந்ததால் அவளால் தன் இருக்கையில் அமர்ந்திருந்தபடி ராகவை நன்றாகப் பார்க்க முடிந்தது.

'ஏன் யாரு கூடவும் பேசாமல் அமைதியா வராரு? நான் பக்கத்திலே உட்காரலைன்னு கோபமா இருக்காரா?!' என்று நினைத்த நித்திலா பாமாவுடன் பேசிக் கொண்டிருந்தாலும் அடிக்கடி ராகவை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

''என்ன நித்தி என் கூட பேசிக்கிட்டு இருந்தாலும் பார்வை என்னவோ அந்தப் பக்கமே இருக்கு. என்ன விஷயம்?''

''ஒண்ணுமில்ல பாமா'' என்று கூறிய நித்திலா நிலை கொள்ளாமல் தவிப்பதைக் கண்ட பாமா,

''நீ ராகவ் பக்கத்திலே போய் உட்காரணுமா? நான் வேணா முன்னாடி காலியா இருக்கிற சீட்டிலே போய் உட்கார்ந்துக்கிறேன்'' என்றாள்.

''இல்ல வேண்டாம்'' என்று நித்திலா மறுத்து விட்டாள்.

ராகவ் ஜன்னலில் இருந்து பார்வையைத் திருப்பவே இல்லை என்றதும் நித்திலாவிற்கு தான் ஏதோ தப்பு செய்தது போல் தோன்றியது.

தினமும் அலுவலகத்தில் அவனைக் கண்டு கொள்ளாமல் தான் இருப்பான். நான் இங்கு வந்தது வேலை செய்வதற்கு. அவரிடம் சிரித்துப் பேசுவதற்கு இல்லை என்று தனக்குத் தானே நொண்டிச் சமாதானம் செய்து கொள்வாள். ஆனால் இன்று அவ்வாறு தன் மனதை அவளால் சமாதானம் செய்ய முடியவில்லை.

ணாலே சொல்லிட்டாளே! அதுவே போதும்' என்று ராகவ் தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டான்.

அனைவரும் வந்ததும், ''கிளம்பலாமா?'' என்று கேட்டு ராகவ் முதல் ஆளாய் வேனுக்குள் ஏறினான்.

அவன் கடைசி இருக்கைக்கு முந்தின இருக்கையில் ஜன்னலோரமாய் அமர்ந்து கொண்டான். ஒவ்வொருவராக வேனில் ஏறினர். உள்ளே வந்த நித்திலாவைப் பார்த்து தனக்கு அருகில் அமருமாறு ராகவ் கண் ஜாடை காட்டினான்.

அவளோ அவன் அமர்ந்திருந்த இருக்கைக்கு எதிரே உள்ள இருக்கையில் தன் தோழி பாமாவுடன் சென்று அமர்ந்து கொண்டாள். யாருமே ராகவ் அருகே அமரவில்லை. வண்டி கிளம்பியது.

ராகவ் தன் நண்பன் செழியனை அழைத்து, ''நாங்க கிளம்பிட்டோம்டா!'' என்று கூறினான்.

வேனில் இருந்த அனைவரும் சப்தமாகச் சிரித்துப் பேசிக் கொண்டு வந்தனர். நித்திலாவும் பாமாவுடன் பேசிக் கொண்டு தான் வந்தாள். ராகவ் மட்டும் அமைதியாக வெளியே வேடிக்கைப் பார்த்தபடி வந்தான்.

பாமா ஜன்னலோரமாக அமர்ந்திருந்தாள். நித்திலா உள்பக்கமாக அமர்ந்திருந்ததால் அவளால் தன் இருக்கையில் அமர்ந்திருந்தபடி ராகவை நன்றாகப் பார்க்க முடிந்தது.

'ஏன் யாரு கூடவும் பேசாமல் அமைதியா வரார்? நான் பக்கத்திலே உட்காரலைன்னு கோபமா இருக்காரா?!' என்று நினைத்த நித்திலா பாமாவுடன் பேசிக் கொண்டிருந்தாலும் அடிக்கடி ராகவை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

''என்ன நித்தி என் கூட பேசிக்கிட்டு இருந்தாலும் பார்வை என்னவோ அந்தப் பக்கமே இருக்கு. என்ன விஷயம்?''

''ஒண்ணுமில்ல பாமா'' என்று கூறிய நித்திலா நிலை கொள்ளாமல் தவிப்பதைக் கண்ட பாமா,

''நீ ராகவ் பக்கத்திலே போய் உட்காரணுமா? நான் வேணா முன்னாடி காலியா இருக்கிற சீட்டிலே போய் உட்கார்ந்துக்கிறேன்'' என்றாள்.

''இல்ல வேண்டாம்'' என்று நித்திலா மறுத்து விட்டாள்.

ராகவ் ஜன்னலில் இருந்து பார்வையைத் திருப்பவே இல்லை என்றதும் நித்திலாவிற்கு தான் ஏதோ தப்பு செய்தது போல் தோன்றியது.

தினமும் அலுவலகத்தில் அவனைக் கண்டு கொள்ளாமல் தான் இருப்பான். நான் இங்கு வந்தது வேலை செய்வதற்கு. அவரிடம் சிரித்துப் பேசுவதற்கு இல்லை என்று தனக்குத் தானே நொண்டிச் சமாதானம் செய்து கொள்வாள். ஆனால் இன்று அவ்வாறு தன் மனதை அவளால் சமாதானம் செய்ய முடியவில்லை.

மேலும் வீட்டில் வைத்து அவனிடம் இனியாவது சகஜமாகப் பேசலாம் என முடிவு எடுத்திருந்தபடியால் அவனது கோபம் அவளை ரொம்பவே பாதித்தது. அதனால் அவன் அருகே சென்று அமரலாம் என்று முடிவு பண்ணினாள்.

அதனால் அவள் தன் தோழியிடம், ''பா...மா...'' என்று தயங்கியவாறு இழுத்தாள்.

''இப்ப நான் எழுந்து போகணும். அவ்வளவு தானே! இதைத் தான் நான் அப்பவே கேட்டேன். அப்படியெல்லாம் இல்லைன்னு ஃபிலிம் காட்டினே!'' என்று கிண்டலாக உரைத்துக் கொண்டே பாமா எழுந்து சென்று முன் இருக்கையில் அமர்ந்தாள்.

பின் இருக்கை முழுவதும் ஆண்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்களின் கண் முன்னே எப்படி ராகவ் அருகே சென்று அமர்வது என்று நித்திலாவிற்குத் தயக்கமாக இருந்தது.

வேறு வழியில்லாததால் தயங்கிக் கொண்டே அவள் அவனருகே சென்று அமர்ந்தாள். தன்னருகே யாரோ அமர்வதை உணர்ந்த ராகவ் திரும்பிப் பார்த்தான்.

அவன் நித்திலாவை அங்கே எதிர்பார்க்கவில்லை. இத்தனை நாட்கள் இல்லாமல் இன்று அவள் தன்னருகே வந்து உட்கார்ந்ததும் அவனுக்கு சந்தோஷமாக இருந்தது. அவர்கள் இருவரும் சிரித்துப் பேசிப்

பழகின பழைய நாட்கள் திரும்பவும் வரும் நாள் வெகு தூரத்தில் இல்லை என நினைத்தான். அவளிடம் சகஜமாகப் பேச எண்ணினான்.

''என்ன நிது இங்க வந்துட்டே? பாமா எங்கே? உன்னை உன் பிரண்டு பாதியிலே கழட்டி விட்டுட்டாங்களா?'' என்று ராகவ் கிண்டலாகக் கேட்க,

நித்திலா அவனை முறைத்துப் பார்த்துக் கொண்டே, ''ஐயோ பாவம்! தனியா இருக்கீங்களேன்னு அவளை முன்னாடி அனுப்பிட்டு நான் இங்க வந்தா, நீங்க நக்கலா பண்ணுறீங்க?'' என்று கேட்டாள்.

'நான் ஏதோ யோசனையில் வெளியே வெறிச்சுப் பார்த்துக்கிட்டு இருந்தேன். நான் கோபமாய் உட்கார்ந்து இருக்கிறதா நினைச்சு என் பக்கத்திலே வந்து இருக்காள் போல. நான் உன்னை ரொம்பப் பாதிக்கிறேனா நிது?' என்று மனதுக்குள் கூறிக் கொண்டான்.

''நான் அவ கூடவே போய் உட்கார்ந்துக்கிறேன்'' என்று நித்திலா கூறியதும்,

''சரி போ'' என்று அவன் அலட்டாமல் கூறினான்.

அவள் கோபத்தோடு எழுந்து கொள்ள முயற்சிக்கும் பொழுது தான் அவன் தன் கையைப் பிடித்துக் கொண்டு இருப்பது அவளுக்குத் தெரிந்தது.

அவள் அசையாமல் அமர்ந்து கொண்டு அவனையே வைத்த கண் வாங்காமல் பார்க்க,

எங்க வேணா போயிக்கோ நீ

என்னை விட்டுப் போயிடாம

இருந்தாலே அது போதுமே

என்று மெல்லிய குரலில் பாடினான்.

அவள் அடுத்த வரிகளை (தண்ணிய தான் விட்டுப்புட்டு தாமரையும் போனதுன்னா தர மேல தலை சாயுமே) பாடுவாளோ என்று எதிர்பார்ப்போடு அவன் சில நொடிகள் நிறுத்தினான்.

அவள் பாடுவதாக இல்லை என்றவுடன் அவளுக்கான வரிகளை விட்டுவிட்டு மேலே பாட ஆரம்பித்தான்.

மறஞ்சு போனாலும் மறந்து போகாத

நெனப்பு தான் சொந்தமே

பட்ட தீட்டத் தீட்டத் தான் தங்கமே

உன்ன பார்க்க பார்க்கத் தான் இன்பமே

நீ பார்க்காம போனாலே கிடையாது மறு சென்மமே

என்று மெல்லிய குரலில் அவன் உருகிப் பாடிக் கொண்டிருந்தான். அவனுக்கான பதிலைத் தர முடியாமல் நித்திலா தவித்துப் போய் அமர்ந்திருந்தாள்.

அவர்கள் இருவரும் அமர்ந்திருந்த இருக்கைக்கு எதிரே உள்ள இருக்கை காலியாக இருந்தது. பாட்டைப் பாடிக் கொண்டிருந்த ராகவும் மெல்லிய குரலில்

பாடினான். அதனால் அவன் பாடல் யாருடைய கவனத்தையும் ஈர்க்கவில்லை.

கூட மேல கூட வச்சு கூடலூரு போறவளே

உன் கூடக் கொஞ்சம் நானும் வாரேன்

கூட்டிக்கிட்டுப் போனால் என்ன?

ஒத்தையிலே நீயும் போனா அது நியாயமா

உன்னுடனே நானும் வாரேன் ஒரு ஓரமாக

என்று பாடியவனைத் தொடர்ந்து அவள் பாட ஆரம்பித்தாள்.

கூட மேல கூட வச்சு கூடலூரு போறவளை

நீ கூட்டிக்கிட்டு போகச் சொன்னா

என்ன சொல்லும் ஊரு என்னை

ஒத்துமையா நாம போக இது நேரமா?

என்று கேட்டு அவள் நிறுத்த

நீ வாயேன்னு சொன்னாலே வாழ்வேனே ஆதாரமா

நீ வேணான்னு சொன்னாலே போவேன்டி சேதாரமா

என்று பாடியவன் அவளது விரல்களைத் தன் விரல்களோடு கோர்த்துக் கொண்டு அவளது கையை இழுத்து தனது நெஞ்சில் பதித்துக் கொண்டு அமைதியாக சில நொடிகள் கண் மூடி அமர்ந்திருந்தான்.

நித்திலா தன் கையை மெதுவாக உருவிக் கொண்டாள். கண் திறந்து பார்த்தவன் அவளைப் பார்த்து ஒரு புன்னகையைச் சிந்தினான்.

வெகு நாட்களுக்குப் பின் அவன் தன்னைப் பார்த்துப் புன்னகைத்ததைக் கண்ட நித்திலா பரவசம் அடைந்தாள். அவளது முகத்தில் தெரிந்த பிரகாசத்தில் அவனது புன்னகை இன்னும் விரிந்தது.

காற்றில் பறந்த அவளது கேசத்தை மென்மையாக ஒதுக்கி விட்டவன், ''நான் எதிர்பார்த்ததைவிட இந்த சேலை உனக்கு ரொம்ப நல்லா இருக்குடா நிது'' என்றான்.

''தாங்க்ஸ்!'' என்று சொன்னவள், ''நீங்க என்ன திடீர்ன்னு பட்டு வேஷ்டி சட்டையில வந்து இருக்கீங்க?'' என்று கேட்டாள்.

''நீங்க எல்லாம் பட்டு சேரின்னு டிரஸ் கோட் செலக்ட் பண்ணின மாதிரி நாங்களும் நம்ம தமிழ் கலாசாரத்தை நினைவு படுத்துற மாதிரி பட்டு வேஷ்டி கட்டலாம்னு முடிவு பண்ணினோம். என்ன நல்லா இல்லையா?'' என்று அவன் கேட்டதும்,

''இல்ல...'' என்று வேகமாக மறுத்தவள், ''சூப்பரா இருக்கீங்க!'' என்று வெட்கத்துடன் மொழிந்தாள்.

இப்பொழுது நன்றி உரைப்பது அவன் முறையாயிற்று.

''ம்ம்ம்... நான் ஒண்ணு சொல்லுவேன். அதைச் செய்வியா?''

''நான் என்ன செய்யணும்?''

''செய்வியா மாட்டியான்னு சொல்லு.''

''நீங்க முதல்ல விஷயம் என்னன்னு சொல்லுங்க. அப்புறமா நான் முடியுமா முடியாதான்னு சொல்லுறேன்.''

அவன் இருக்கையில் இருந்து எழுந்து தலைக்கு மேல் வைத்திருந்த பையை உருவி எடுத்துக் கொண்டு அமர்ந்தான். அதில் இருந்து ஒரு நகை டப்பாவை எடுத்து அவளிடம் நீட்டினான்.

அவள் தயக்கத்துடன் வாங்கி அதைப் பிரித்துப் பார்த்தாள். பெரிய பெரிய முத்துக்களால் ஆன முத்து மாலை பெரிய பதக்கத்துடன் இருந்தது.

''தங்கமா? எனக்கு வேண்டாம்'' என்று அவள் வேகமாகத் திருப்பிக் கொடுக்க அவன் அவளை முறைத்தான்.

''புரிஞ்சுக்கோங்க ராகவ். இந்தப் புடவையைக் கொண்டு போனதுக்கே எங்க அம்மா யாரு கொடுத்தாங்க, என்ன ஏதுன்னு விசாரணை பண்ணினாங்க. என் பிரண்ட்ஸ் எல்லோரும் சேர்ந்து பிரசண்ட் பண்ணினதா சொல்லி தான் சமாளிச்சேன். நிலைமை அப்படி இருக்க என்னால இந்த நகையை எப்படி எடுத்துட்டுப் போக முடியும்?'' என்று அவள் கேட்டதும்,

''ஓ!'' என்று ஏமாற்றமாய் ஒலி எழுப்பியவன் ஜன்னலோரமாய் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

''ராகவ்!'' என்று அவள் அழைத்தும் அவன் திரும்பவில்லை என்றதும், ''இன்னைக்கு மட்டும் வேணா

போட்டுக்கட்டுமா? வீட்டுக்குப் போகும் போது கழட்டிக் கொடுத்துட்டுப் போறேன்'' என்றதும் அவன் திரும்பி அமர்ந்தான்.

''வீட்டுக்குக் கொண்டு போக மாட்டியா? யாருக்கும் தெரியாம மறைச்சு வச்சுக்கோயேன்.''

''ப்ளீஸ் ராகவ். புரிஞ்சுக்கோங்க.''

''சரி திரும்பு. நானே போட்டு விடுறேன்'' என்ற வன் அதைக் கைகளில் எடுத்தான்.

அவள் திரும்பி அமர்ந்தாள். அப்போது பின் சீட்டில் இருந்த நண்பன் ஒருவன் ''நடத்துடா மச்சான்!'' என்று வாயை மட்டும் அசைத்து சைகை செய் தான்.

''உதை விழும்!'' என்று ராகவ் பதிலுக்கு சைகை காட்ட,

''நான் எதுவும் பார்க்கலைடா மச்சான்'' என்று தனது கைகளால் அவன் கண்களை மறைத்துக் கொள்ள,

'அது!' என்று ராகவ் புன்னகைத்துக் கொண்டான்.

தலை குனிந்து அமர்ந்திருந்த நித்திலா இவர் களின் சைகை பாஷையைக் கவனிக்கவில்லை.

அவளது கழுத்தில் அந்த மாலையை அணி வித்துவிட்டவன் அவளது புறங்கழுத்தில் மென்மை யாக முத்தமிட்டான். அவனது மீசையின் உராய்வில் சிலிர்த்தவள் திரும்பி நேராக உட்கார்ந்து அவனது கைகளைக் கிள்ளினாள்.

''கிஸ் கேட்டாலோ கொடுத்தாலோ கிள்ளுறதே உனக்கு வழக்கமாப் போச்சு'' என்று கிண்டலாக உரைத்தவன் அவளைப் பார்த்துப் புன்னகைக்க,

''இத்தனை நாளா இந்த ஸ்மைலை எங்க மறைச்சு வச்சு இருந்தீங்க? ஒரு நாளாவது என்னைப் பார்த்து இப்படி ஸ்மைல் பண்ணுனீங்களா?'' என்று அவள் மனத்தாங்கலுடன் கேட்க,

''நீ என்னை நிமிர்ந்து பார்த்தால் தானே நான் உன்னைப் பார்த்து ஸ்மைல் பண்ண முடியும்'' என்று அவன் மடக்கினான்.

வெகு நாட்களுக்குப் பின்பு இருவரும் சகஜமாகப் பேசிக் கொண்டனர்.

15



அவர்கள் அந்தக் கோவிலை சென்று அடைந் ததும் அனைவரும் வேனில் இருந்து இறங்கினர்.

''ஊருக்கு வெளியே ஒதுக்குப்புறமா இருந்தாலும் இவ்வளவு பெரிய கோவிலா இருக்கே?!'' என்று வியந்து கொண்டே அனைவரும் உள்ளே சென்றனர்.

ராகவுடன் இணைந்து நித்திலா கோவிலுக்குள் நுழைவதைப் பார்த்த செழியன் புன்னகைத்துக் கொண்டான்.

கோவிலில் இரண்டு மூன்று திருமணங்கள் நடந்து கொண்டிருந்தது. அதனால் ஜனநடமாட்டம் அதிகமாக இருந்தது. கல்யாணம் திருவிழா என்றாலே குழந்தைகளுக்கு தான் கொண்டாட்டம். கோவிலிலும் குழந்தைகள் இங்கும் அங்கும் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தனர்.

மேளச் சத்தம் ஒரு புறம் கேட்டது என்றால் பக்திப் பாடல் ஒரு புறம் ஒலிப் பெருக்கியில் ஒலித்துக் கொண்டிருந்தது.

''இதுல எதுடா நம்ம செழியன் வீட்டுக் கல்யாணம்?'' என்று ஒருவன் கேட்க,

''அதுக்கு முன்னாடி நாம சாமி கும்பிட்டுட்டுப் போவோமே!'' என்று ராகவ் கூற அனைவரும் அதை ஏற்றுக் கொண்டு சன்னிதானத்துக்குள் நுழைந்தனர்.

இவர்கள் உள்ளே நுழைந்த போதே குருக்கள் இவர்கள் முன் தீபாராதனை தட்டைக் காட்டவும் அனைவரும் அதைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டனர். இன்னொரு குருக்கள் விபூதி குங்குமத்தை அனைவருக்கும் கொடுத்தார்.

தனது நெற்றியில் பூசிய பின் தனது கைகளில் மீதம் இருந்த விபூதியையும் குங்குமத்தையும் கொட்டுவதற்கு கிண்ணம் எதுவும் வைக்கப்பட்டிருக்கிறதா என்று சுற்று முற்றும் தேடிய ராகவ் அப்படி எதுவும் தென்படவில்லை என்றதும் அதை நித்திலாவின் கைக்கு இடமாற்றினான்.

அவள் ஏன் என்பது போல் பார்க்கவும், ''கிண்ணம் எதுவும் இல்லை நிது. அதான் உன் கையிலே கொட்டிட்டேன்'' என்றதும் அவள் அவனைச் செல்லமாய் முறைத்தாள்.

''என்னை அப்புறமா முறைக்கலாம். முதல்ல சாமியைக் கும்பிடு'' என்றான்.

ராகவ் நித்திலாவின் அருகே நின்று கொண்டு இரு கை கூப்பி இறைவனை வணங்கினான். நித்திலாவின் கையில் குங்குமம் இருந்ததால் அவள் தனது கண்களை மட்டும் மூடி இறைவனை வணங்க ஆரம்பித்தாள்.

'ஆண்டவா! என் வாழ்க்கையை நீ தான் சீராக்க வேண்டும்!' என்று இருவருமே வேண்டிக் கொண்டனர்.

''கெட்டி மேளம்! கெட்டி மேளம்!'' என்ற குரல் ஒலித்ததைத் தொடர்ந்து கெட்டி மேளம் முழங்கியது.

'நல்ல சகுனம்!' என்று நித்திலா எண்ணும் பொழுதே தன் மேல் யாருடைய கையோ உரசுவது போல் இருக்க நித்திலா கண் திறந்து பார்த்தாள். அந்தக் கை ராகவிற்கு உரியது என்பதை உணர்ந்தவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவனோ அவளையே தீர்க்கமாகப் பார்த்துக் கொண்டு அவளது கழுத்தில் தாலியைக் கட்டிக் கொண்டிருந்தான்.

''மூணாவது முடிச்சை நான் போடுறேன் ராகவ்'' என்று அவனுடைய அக்கா மேகலா கூறிக் கொண்டே நித்திலாவின் கழுத்தில் மூன்றாவது முடிச்சைப் போடும் பொழுது தான் நித்திலா தன் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த தாலியைப் பார்த்தாள்.

அப்படியே அதிர்ந்து போய் விழித்தாள்!

அலுவலக நண்பர்கள் அனைவரும் என்ன சொல்வதென்று தெரியாமல் குழம்பினர்.

தன்னை ஒரு வார்த்தை கூடக் கேட்காது தனக்குத் தாலி கட்டியவனை நித்திலா தீப்பார்வை பார்த்தாள்.

அவன் அதை லட்சியம் செய்யாதவனாய் அவளை இழுத்துக் கொண்டு போனான். அவனுக்கு எதிரே நின்று கொண்டிருந்த அவனது பெற்றோர்களின் காலில் தான் விழுந்ததோடு இல்லாமல் அவளையும் விழ வைத்தான்.

''எல்லா வளமும் பெற்று தீர்க்க ஆயுசோட நல்லா இருக்கணும்!'' என்று அவர்கள் அட்சதை தூவி ஆசீர்வாதம் செய்தனர்.

அனைத்தும் ஒரு நிமிடத்திற்குள் நடந்தேறியது. நித்திலாவின் கண்களில் இருந்து கண்ணீர் அருவியாகக் கொட்டியது. அவள் தன்னைச் சுற்றிலும் பார்வையிட்டாள். ராகவின் பெற்றோர்கள் மட்டுமல்லாமல் மேகலாவின் கணவன் மற்றும் குழந்தைகளும் அங்கே இருப்பதைக் கண்டாள்.

'என்ன காரியம் பண்ணிட்டார்! எப்படி இப்படிச் செய்யலாம்? நான் என் அப்பா அம்மாவுக்கு இதை

எப்படிப் புரிய வைப்பேன்? இவ்வளவு நேரம் பேசிக்கிட்டு வந்தோம் இல்ல. ஒரு வார்த்தை சொன்னாரா?

எல்லாம் பக்காவா ப்ளான் பண்ணி தான் செஞ்சிருக்கார். இல்லைன்னா அவரோட மொத்த குடும்பமும் இங்க. இந்த நேரத்திலே எப்படி சரியா வர முடியும்? இவர் மட்டும் இவர் குடும்பத்தினர் முன்னாடி கல்யாணம் பண்ணிக்குவார். ஆனா நான் மட்டும் யாருமே இல்லாமல் தனியா கல்யாணம் பண்ணிக்கணுமா? அப்படி பண்ணிக்க நான் என்ன அநாதையா?

எங்க அப்பா அம்மாவை விட்டுவிடுவோம். என்கிட்ட ஒரு வார்த்தை கேட்கணும் என்று தோணலை இல்ல...' என்று வெகுண்டவள் விறுவிறுவென கோவிலை விட்டு வெளியேறினாள். அவள் பின்னோடு பாமா ஓடினாள்.

''என்னடா ராகவ் ஓடிப் போயிட்டாள்?'' என்று பூங்கோதை அழுகுரலில் கேட்க,

''அவ எதிர்ப்பாள்ன்னு நாம எதிர்பார்த்தோம் தானே! தாலியைக் கழட்டி எறியலைன்னு சந்தோஷப் பட்டுக்கோங்க. சீக்கிரமே சரியாகிடும்மா'' என்று தன் தாயை சமாதானப்படுத்திய ராகவ் தன் தந்தையின் புறம் திரும்பி,

''அப்பா...'' என்று ஆரம்பிக்க,

''நீ போய் மருமகளை சமாதானம் பண்ணு ராகவ். நாங்க இப்படியே ஊருக்குக் கிளம்புறோம். அப்புறமா

எங்களுக்கு போன் பண்ணு'' என்று சேதுபதி கூறினார்.

ராகவ் மேகலாவின் கணவனின் புறம் திரும்பினான். அவரும் சேதுபதி கூறியதைப் போலவே, ''நீ போய் நித்திலாவைச் சமாதானம் பண்ணு ராகவ். நாங்க கிளம்புறோம்'' என்றார்.

சரியென்று தலை அசைத்துவிட்டு ராகவ் அவர்கள் அனைவரிடமும் விடைபெற்று விட்டுக் கோவிலை விட்டு வெளியேறினான்.

அலுவலக நண்பர்கள் அங்கு வந்த செழியனிடம், ''இன்னைக்கு உங்க தங்கச்சிக்கு இங்க கல்யாணம் நடக்கப் போறதில்லையா? ராகவ் - நித்திலா கல்யாணத்துக்கு தான் எங்களை வர வச்சீங்களா?'' என்று கேட்டனர்.

''நித்திலா தான் என் தங்கச்சி. அவ கல்யாணம் தான் நடந்துச்சே! என் கூடப் பொறந்த தங்கச்சி கல்யாணம் இன்னும் மூணு நாளில நடக்கப் போகுது. இன்னைக்கு இல்ல. வாங்க போகலாம்'' என்றதும்,

அனைவருமே கோவிலை விட்டு வெளியேறினர். கல்யாணப் பெண்ணும் மாப்பிள்ளையும் கோவிலை விட்டு வெளியேறி விட்டார்கள். அதற்கு மேல் அங்கே அவர்களுக்கு என்ன வேலை?

கோபமாய் வெளியே வந்த நித்திலா டாக்ஸி ஒன்றைப் பிடித்து வீட்டுக்குச் சென்று விடலாம் என எண்ணினாள். ஆனால் அங்கே நின்று கொண்டிருந்த

வண்டியெல்லாம் கோவிலுக்கு வந்து இருந்தவர்களின் வண்டி என்று தெரிந்ததும் இங்கு இருந்து எப்படி வீட்டிற்குச் செல்வது என்று தடுமாறினாள்.

அவளருகே வந்த செழியன், ''இங்க ஆட்டோ கூட கிடைக்காது நித்திலா. நீங்க வந்த வேனிலே ஏறுங்க. உங்களை நான் ஆபிஸ் வாசலில் இறக்கி விடுறேன்'' என்று கூறியதும் நித்திலா அவனை முறைத்துப் பார்த்தாள்.

இவனை நம்பின பாவத்துக்கு என்று அவளுக்கு ஆத்திரமாக வந்தது. எய்தவன் இருக்க அம்பை நொந்து என்ன பயன் என்று நினைத்துக் கொண்டவள் வேறு வழி இல்லாததால் மற்றவர்களோடு சேர்ந்து அந்த வேனுக்குள் ஏறி அமர்ந்து கொண்டாள்.

பாமாவும் நித்திலாவும் அருகருகே அமர்ந்து கொண்டார்கள். நித்திலா ஜன்னலோரமாக அமர்ந்திருந்தாள். அவர்களுக்கு எதிரே இருந்த இருக்கையில் ராகவ் ஜன்னலோரமாக அமர்ந்தான். அவன் அருகே செழியன் அமர்ந்து கொண்டான்.

வேன் புறப்பட்டது. அனைவரும் தங்களுக்குள் பேசிக் கொண்டே வந்தனர். பாமா செழியனையும் ராகவையும் அடிக்கடி திரும்பிப் பார்த்து முறைத்துக் கொண்டே வந்தாள்.

''மச்சான் இந்த கொசுத் தொல்லை தாங்க முடியலைடா'' என்று செழியன் ராகவ் புறம் குனிந்து முணுமுணுத்தான்.

''யாரைடா சொல்லுறே?''

''நம்ம நித்தி ப்ரண்டு பாமாவை தான் சொல்லுறேன்.''

''ஏன்டா என்ன ஆச்சு? அவ என்ன செஞ்சாள்?''

''அச்சோ! நம்ம பிரண்டு விடாம கண்ணீர் விடுறாளே. அவளைச் சமாதானம் செய்யுற வேலையை ஒழுங்கா செய்வோம்னு இல்லாமல் நம்ம இரண்டு பேரையும் சைட் அடிச்சுக்கிட்டு இருக்காள்'' என்று பெருமையாகக் கூறினான்.

''ஏன்டா! அவ நம்மளைப் பார்க்கிற பார்வையில் நாம முழுசா வீடு போய்ச் சேருவோமா இல்லை இங்கேயே பஸ்பம் ஆகிடுவோமான்னு நானே பயந்து போய் உட்கார்ந்திருக்கேன். நீ என்னடான்னா சைட் அடிக்கிறான்னு பெருமை பீத்துறே!''

''வேற என்னடா செய்யுறது? பார்க்கிற பார்வையிலே அனல் பறக்குது. உஷ்ணம் தாங்க முடியலை. வார்த்தையிலயாச்சும் கொஞ்சம் குளுமை சேர்ப்போமேன்னு பார்த்தேன். ஆமா நீ எப்படிடா இவ்வளவு கூலா இருக்க?''

''யாரு நானு? கூலா இருக்கேனா? போடா!'' என்று ராகவ் சப்தமில்லாமல் எகிற,

''உன்னைப் பார்த்தா டென்ஷனா இருக்கிற மாதிரி தெரியலையேடா ராகவ்'' என்று செழியன் மீண்டும் கூறினான்.

''மச்சான் வரும் போது இதை விட செம டென்ஷனா வந்தேன். என் கல்யாணம் நடக்குமா நடக்காதான்னு ஏகப்பட்ட டென்ஷன். இப்போ அந்த டென்ஷன் போயிடுச்சு. அதான் கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருக்கேன்.''

''இருந்தாலும்.. நித்திலா உன் கூட உன் வீட்டுக்கு வராமல் அவங்க வீட்டுக்குப் போயிட்டா.''

''என் கூட.. என் வீட்டுக்கா?'' என்று கேலியாகக் கேட்ட ராகவ், ''அந்த ஆசை, கனவெல்லாம் எனக்குக் கிடையாது மச்சான். அவளா வரும் போது வரட்டும்'' என்றான்.

''அப்படின்னா எதுக்கு வீணா இப்பத் தாலியைக் கட்டினே? அப்படியே விட்டுட்டு இருக்க வேண்டியதுதானே? அவ அப்பா மனசு மாறினதுக்கு அப்புறமா கல்யாணத்தைப் பண்ணி இருக்க வேண்டியதுதானே?''

''அப்படியே எதுக்கு விடணும்? அன்னைக்கு ஒருத்தன் ஹோட்டல்லே என் கண்ணு முன்னாடியே அவளைப் பொண்ணு பார்க்க வந்தானே, அது மாதிரி இன்னும் எவனாச்சும் வரதுக்கா? இனிமேல் எவனும் வர மாட்டான் இல்ல!'' என்று அவர்கள் இருவரும் மெல்லிய குரலில் பேசிக் கொண்டு வந்தார்கள்.

செழியனும் அவனது கருத்தை ஆதரித்து அமைதியானான்.

''ரொம்ப தாங்க்ஸ்டா செழியா!''

''நீ எனக்கு தாங்க்ஸ் சொல்லுற அளவுக்கு நான் அப்படி என்னடா பெருசா செஞ்சேன்?''

''உன் தங்கச்சி கல்யாணம் என்ற பேரிலே தானே இதை என்னால நடத்த முடிஞ்சது.''

''என் தங்கச்சி பேரும் அவளோட கல்யாணத் தேதியும் இவங்க யாருக்கும் சரியாத் தெரியாது என்பதால நாம தப்பிச்சோம்டா.''

''கரெக்ட் செழியன். அதனால தான் நம்மால பொய்யான மாப்பிள்ளை பொண்ணு பேரு போட்டு பத்திரிகை அடிக்க முடிஞ்சது. இதெல்லாம் உன்னால தானேடா சாத்தியம் ஆச்சு.''

''டேய் ராகவ்! என் தங்கச்சிக்கு கல்யாணம் அப்படின்னு என் பேர் போட்டு பத்திரிகை அடிச்ச தென்னவோ வாஸ்தவம் தான். ஆனா அந்த செலவு முழுசும் நீ தானே ஏத்துக்கிட்டே!''

''அதை விடுடா. என்னால தானே நம்ம ஆபிஸ் பிரண்ட்ஸ் யாரையுமே உன் தங்கச்சி கல்யாணத் துக்கு கூப்பிட முடியாமல் போச்சு'' என்று ராகவ் வருத்தப்பட்டான்.

''மச்சான் நான் இந்தக் கம்பெனியில வேலைக்கு சேர்ந்து சில மாசம் தான் ஆகுது. ரொம்ப க்ளோஸ் பிரண்ட்ஸ் அப்படின்னு யாரும் கிடையாது. இன் னைக்கு இவங்ககிட்ட என் தங்கச்சி கல்யாணப் பத்திரிகையை தருவேன். நம்மளைப் புரிஞ்சுக்கிட்டு வரணும் என்று நினைக்கிறவங்க வரட்டும்.''

''என்னால உன் தங்கச்சி கல்யாணத்துக்கு வர முடியுமான்னு தெரியலைடா.''

''இட்ஸ் ஓகேடா. உனக்கு நேரம் கிடைக்கும் போது நீ வீட்டுக்கு வந்து பாரு.''

''புதன்கிழமை உன் தங்கச்சி கல்யாணம். அந்த வேலையெல்லாம் விட்டுட்டு இன்னைக்கு என் கல்யாணத்துக்கு வந்ததுக்கு ரொம்ப தாங்க்ஸ்டா மச்சான்.''

''நீ இன்னொரு தாங்க்ஸை சொல்லு. அப்புறமா என்ன நடக்குதுன்னு மட்டும் பாரு!'' என்று செழியன் மிரட்டவும் அவர்கள் இருவரும் சிரித்துக் கொண் டனர்.

அலுவலக நண்பர்கள் யாரும் ராகவ் மற்றும் செழியனிடம் வந்து எந்தக் கேள்வியும் கேட்க வில்லை. நித்திலாவே ராகவ் என் கணவன் என்று அனைவரின் முன்பும் தன் வாயால் ஒத்துக் கொண்டாள். அதன் பின் நாம பேச என்ன இருக்கிறது என நினைத்து அமைதியாகி விட்டனர்.

ராகவ் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அந்தக் கோவிலில் இருந்ததால், இது அவர்கள் குடும்ப விவகாரம் என நினைத்து ஒதுங்கிக் கொண் டனர் பாமா மட்டும் தான் முறைத்துக் கொண்டே வந்தாள்.

வேன் அலுவலகத்திற்குள் நுழைந்து நின்றதும் ராகவ் முதல் ஆளாய் இறங்கினான். நித்திலா இறங்கி

அலுவலகம் விட்டு வெளியேற முயற்சிக்க ராகவ் அவள் கை பிடித்துத் தடுத்தான்.

''அவ கையை விடுங்க!'' என்று நித்திலாவை முந்திக் கொண்டு பாமா எகிறினாள்.

ராகவ் பாமாவை முறைத்துக் கொண்டே, ''தேவையில்லாமல் நீங்க எதுக்கு எங்க விஷயத்திலே தலையிடுறீங்க?'' என்று கேட்டான்.

''இப்ப நீங்க கையை எடுக்கலைன்னா நான் போலீஸில் கம்ப்ளையின்ட் பண்ணுவேன்.''

''என்னன்னு கம்ப்ளையின்ட் பண்ணுவீங்க? என் ஃபிரண்டோட ஹஸ்பண்ட் அவ கையைப் பிடிச்சு இழுத்தான்னா? மைன்ட் யுவர் ஓன் பிசினஸ்'' என்று ராகவ் பாமாவை மிரட்டவும்,

''கையை எடுங்க!'' என்று நித்திலா அடிக்குரலில் சீறினாள்.

''உன்கிட்ட ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லணும். சொல்லி முடிச்சதும் உன் கையை விடுறேன்'' என்றவன்,

''இன்னைக்கு என்ன நாள் தெரியுமா? நம்ம கல்யாணம் நடக்கிறதா இருந்த நாள். உங்க அப்பா குறிச்ச அதே முஹூர்த்தம், அதே மாப்பிள்ளை. ஆனா இடம் மட்டும் தான் மாறி இருக்கு. உங்க அப்பா தானே என்னை மாப்பிள்ளையா செலக்ட் பண்ணினார். என் மேல புதுசா ஏதாவது ஒரு குறையை நீயோ உங்க அப்பாவோ கண்டு பிடிச்சீங்களா?

இல்லையே. அப்புறம் நான் என்ன தப்பு பண்ணினேன்னு என்னை வேண்டாம்னு உங்க அப்பா தூங்கி எறிஞ்சாருன்னு உங்க அப்பாகிட்ட போய் கேளு!'' என்றவன் அவளது கைகளை விடுவிக்க,

அவள் அந்த இடம் விட்டு வெளியே ஓடினாள். அவள் ஆட்டோ ஒன்றை நிறுத்தி அதில் ஏறித் தனது இல்லம் நோக்கிப் பயணித்தாள். பாமாவும் அவளோடு செல்லலாம் என நினைத்திருக்க, நித்திலா அதற்குள் ஆட்டோவில் ஏறிச் சென்று விட்டாள். இருந்தாலும் வேறு ஒரு ஆட்டோவில் பாமா அவளைப் பின் தொடர்ந்தாள்.

''என்னடா ராகவ் இப்ப எங்க போகப் போறே? என் வீட்டுக்கு வரியா?'' என்று செழியன் கேட்டதும்,

''இல்லைடா என் மாமனார் என்ன செய்யப் போறாருன்னு தெரியலை. அதனால அவர் வீட்டுக்கு போகப் போறேன்'' என்றான்.

''டேய் ராகவ்! தனியாவா?''

''இதுக்கெல்லாம் பயந்தால் எப்படி? வருவதைப் பார்த்துக்கலாம்னு துணிஞ்சு தான் தாலி கட்டி இருக்கேன்'' என்றவன் நண்பனிடம் விடைபெற்று தனது காரில் ஏறி அதை நித்திலாவின் வீட்டை நோக்கிச் செலுத்தினான்.

ஆட்டோவில் சென்று கொண்டிருந்த நித்திலா சற்று முன்பு ராகவ் கூறியதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

'இன்னைக்கு தான் என் கல்யாணத்துக்கு நாள் குறிச்சு இருந்தாங்க என்ற விஷயத்தை நான் எப்படி மறந்து போனேன்? அது தெரிஞ்சிருந்தாலாச்சும் கொஞ்சம் உஷாரா இருந்திருக்கலாமோ? ஆனா அப்பக் கூட இவர் இப்படியொரு வேலை பண்ணுவாருன்னு நான் கண்டிப்பா யோசிச்சுப் பார்த்திருக்க மாட்டேன்.

இந்த ஒரு மாசமா ஆபிஸில் என்கிட்ட வந்து கூடப் பேசாத மனுஷன் இப்படி ஒரு கல்யாணம் பண்ணுவாருன்னு துளி கூடச் சந்தேகப்பட்டு இருக்க மாட்டேன்.

அப்பா இதை எப்படி எடுத்துக் கொள்ளுவாருன்னு தெரியலையே! முன்பிருந்த என்னோட அப்பான்னா நான் என்ன சொன்னாலும் நம்புவார். ஆனா இப்ப இருக்கிறவர் வஜ்ரவேலு தம்பி ராஜதுரை ஆச்சே! அவரை நம்ப வைக்கிறது கஷ்டமாச்சே!

அம்மா கண்டிப்பா என்னை நம்புவாங்க. இன்னும் சொல்லப் போனால் கல்யாணம் நடந்ததை நினைச்சு சந்தோஷம் கூடப் படுவாங்க. காலையில கூட எனக்கு இன்னும் கல்யாணம் ஆகலையேன்னு வருத்தப்பட்டாங்களே! ஆனா இப்படித் திருட்டுக் கல்யாணம் நடந்ததை நினைச்சு ரொம்ப வருத்தப் படுவாங்க.

முருகா! நான் எங்கப்பாவுக்கு எப்படிப் புரிய வைக்கப் போகிறேன்? நீ தான் எனக்கு உதவி

செய்யணும்!' என்ற வேண்டுதலோடு வீடு நோக்கிப் பயணித்தாள்.

நித்திலா தன் வீட்டிற்குள் சென்ற பின்பே பாமா தன் வீடு நோக்கிச் சென்றாள். அவர்கள் குடும்ப விஷயத்தை அவர்களே பேசித் தீர்த்துக் கொள்வார்கள் என நினைத்து பாமா ஒதுங்கிப் போனாள்.

16



அழுது சிவந்த கண்களுடன் வீட்டிற்குள் வந்த மகளைக் கண்ட ராஜதுரை பதறினார்.

''நித்தி என்னம்மா ஆச்சு?'' என்று அவர் பதறிக் கொண்டு கேட்க,

''அப்பா!'' என்றதற்கு மேல் ஒரு வார்த்தையும் சொல்ல முடியாதவளாய் நித்திலா சப்தமாக அழுதாள்.

சந்தோஷமா சிரிச்சுக்கிட்டுப் போன பெண் வரும் போது இப்படி சப்தமாக அழுகிறாளே என்று குழம்பிப் போன ராஜதுரை, ''சொல்லிவிட்டு அழு நித்தி!'' என்று ஒரு அதட்டல் போட்டார்.

அவளது வாய் நடுங்கியது. நடுக்கத்தில் அவளால் ஒரு சொல்லைக் கூட உதிர்க்க முடியவில்லை. தனது சேலைக்குள் மறைந்திருந்த தாலியை எடுத்து தந்தையின் கண் முன்னே காட்டினாள்,

''தாலியா ?!?!?!'' என்று அதிர்ந்து போய் ராஜதுறை அப்படியே தரையில் அமர்ந்து விட்டார்.

சரோஜினி அப்போது தான் வீட்டிற்குள் வந்தார். அவரது கண்களுக்கு முதலில் பட்டது நித்திலா தனது கைகளால் நீட்டிப் பிடித்துக் கொண்டிருந்த அவளது கழுத்தில் தொங்கிய தாலியே! அதன் பின்பே தரையில் அமர்ந்திருந்த ராஜதுரையைப் பார்த்தார்.

''என்னங்க!'' என்று கூவிக் கொண்டே அவர் அருகே ஓடிச் சென்றார்.

''யாரு கட்டினது?'' என்று ராஜதுரை கோபமான குரலில் கேட்டதும்.

''ரா...க...வ்!'' திக்கிக் கொண்டே நித்தில பதில் கூற, ராஜதுரை தன் கண்களை மூடி அமைதியானார்.

'யாரைத் தேற்றுவது? அழும் மகளையா? இல்லை அதிர்ந்து போய் அமர்ந்திருக்கும் கணவரையா?' என்று சரோஜினி குழம்பிப் போனார்.

'இவர் இப்போ என்ன முடிவு எடுக்கப் போறாருன்னு தெரியலையே. முருகா! நீ தான் இந்தப் பிரச்சனையை தீர்த்து வைக்கணும்' என்று கடவுளிடம் சரோஜினி வேண்டிக் கொண்டிருந்தார்.

இரு நிமிடங்களுக்கு அந்த வீட்டில் அமைதி நிலவியது. யாரும் யாருடனும் பேசவில்லை.

கண் திறந்த ராஜதுரை தன் மகளைப் பார்த்து, ''அப்ப நீ உன் கல்யாணத்துக்கு தான் கிளம்பிப்

போனியா? இன்னைக்கு தானே உன் கல்யாணம் நடக்கிறதா இருந்தது. அப்போ நீயும் சேர்ந்து தான் ப்ளான் பண்ணி இருக்க! அன்னைக்கு அவன் தான் உன் புருஷன்னு என் ஃபிரண்டு பையன் கௌசிக்கிடம் நீ சொன்னப்பவே நான் சுதாரிச்சு இருக்கணும். இவ் வளவு தூரம் அமைதியா இருந்தது தப்பாகப் போச்சு'' என்று கோபமாக இரைந்தார்.

''அப்பா... என்னப்பா... என்னன்னவோ சொல்லு றீங்க! நான் ப்ளான் பண்ணினேனா?'' என்று அழுகுரலில் கேட்ட நித்திலாவிடம்.

''உனக்கே தெரியாமலா ஒருத்தன் உன் கழுத்திலே தாலி கட்டுவான்?'' என்று ராஜதுரை எகத்தாளமாய் கேட்டார்.

''ஆமாம்ப்பா. அப்படி தான் நடந்துச்சு.''

''இதை நம்புறதுக்கு நான் ஒண்ணும் முட்டாள் இல்ல.''

''அப்பா சத்தியமாப்பா'' என்று நித்திலா பரிதவிக்க.

அவளது கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த முத்து மாலையை தூக்கிக் காண்பித்த ராஜதுரை, ''நீ வீட்டை விட்டுப் போகும் போது இது உன் கழுத்திலே இல்லையே! இது எப்படி வந்துச்சு! யார் வாங்கிக் கொடுத்தாங்க?'' என்று கேட்டார்.

''இது... அவர்...'' என்று நித்திலா தயங்க.

''இதையும் உனக்குத் தெரியாமலே உன் கழுத்தில் போட்டானோ?'' என ராஜதுரை கிண்டலாக வினவ.

நடந்த களேபரத்தில் இந்த முத்து மாலையை கழட்டிக் கொடுக்காதது எவ்வளவு பெரிய பிசகு என நினைத்துப் பார்த்த நித்திலா கண் மூடி அமைதியானாள்.

''என்னங்க...'' என்று இடையிட்ட சரோஜினியின் புறம் திரும்பிய ராஜதுரை.

''அவளை வீட்டை விட்டுப் போகச் சொல்லு!'' என்று உத்தரவிட்டார்.

''அப்பா!'' என்று நித்திலாவும்.

''என்னங்க சொல்லுறீங்க!''என்று சரோஜினியும் ஒருங்கே அதிர்ந்தனர்.

''நான் சொன்னால் சொன்னது தான்.''

''உங்க பிடிவாதத்துக்கு ஒரு அளவே இல்லையா? இது நம்ம பொண்ணு வாழ்க்கைங்க. நாம உட்கார்ந்து என்ன பண்ணலாம்னு யோசிப்போம். பேசித் தீர்க்க முடியாதது எதுவுமே இல்லைங்க.''

சரோஜினி சொன்னது தன் காதிலே விழாத தினுசில், ''அவ சம்பந்தப்பட்ட எதுவுமே இங்க இருக்கக் கூடாது. அவளுடைய எல்லாப் பொருளையும் எடுத்துக்கிட்டு போகச் சொல்லு'' என்று கர்ஜித்தார்.

''இல்லங்க... அது வந்து...'' என்று தொடங்கிய சரோஜினியை இடையிட்டு.

''சொன்னதை செய். அவன் வீட்டுக்கு அவளை அனுப்பிட்டு எனக்கு போன் பண்ணு. அதுக்கு அப்புறமா

நான் வீட்டுக்கு வரேன்'' என்று சொன்னவர் வெளியேறினார்.

அவரது கண்களில் மகளின் ஸ்கூட்டி சாவி கண்ணில் பட அதை எடுத்து அவளிடம் விட்டெறிந்தவர், ''உன் சம்பாத்தியத்துல வாங்கின இல்ல... அதையும் ஓட்டிட்டு போயிடு!'' என்றார்.

அவர் வெளியேறிய பின்பே சரோஜினி மகளின் அருகே சென்றார்.

''அம்மா!'' என்று அவரை கட்டிக் கொண்டு நித்திலா அழுதாள்.

மகளை சிறிது நேரம் அழவிட்ட சரோஜினி, ''அழுதது போதும் நித்தி. கண்ணைத் துடை!'' என்று உத்தரவிட்டார்.

''போ போன்னு சொல்லுறாரே. நான் எங்கம்மா போவேன்?''

''ஏன் உனக்குத் தாலியை கட்டிய மனுஷன் இதே ஊரிலே தானே இருக்கார். அங்க போ.''

''அவர் வீட்டுக்கு நான் கண்டிப்பா போக மாட்டேன். ஏதாச்சும் லேடீஸ் ஹாஸ்ட்டலுக்கு போறேன்.''

''நீ போய் நின்ன உடனே எந்த ஹாஸ்டலில் உனக்கு இடம் குடுப்பாங்க? உனக்குப் பிறந்த வீடு தான் இல்லைன்னு ஆகிடுச்சு. புகுந்த வீட்டு மனுஷங்களையும் பகைச்சுக்காதே நித்தி.''

''அதுக்காக அவர் வீட்டுக்கு நான் எப்படிம்மா போவேன்?''

''நாணலா வளைஞ்சா தான் வாழ்க்கையை ஒட்ட முடியும் நித்தி. நான் யாருக்காகவும் எதுக்காகவும் வளைய மாட்டேன்னு பிடிவாதம் பிடிச்ச உங்க அப்பா நிலமை என்னாச்சுன்னு பார்த்தியா... அவர் பெத்த பொண்ணுக்கு அவரால ஊரைக் கூட்டிக் கல்யாணம் பண்ணி வைக்க முடியலை. இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகலை. உன்னை முறையா கொண்டு போய் அவங்க வீட்டிலே விட்டுட்டு சமாதானம் பேசி செய்ய வேண்டியதை செய்யலாம். ஆனா இப்பவும் அவருக்கு வளைஞ்சு குடுக்கிறதிலே இஷ்டம் இல்லை. நீ பிடிவாதம் பிடிச்சு அவர் பொண்ணுன்னு நிரூபிக்காதே நித்தி.''

''எல்லாம் சரிம்மா. நான் அங்க போனா அப்பாவோட கோபம் இன்னும் அதிகமாகுமே. அப்புறமா அவர் என்னைக்குமே என்னை மன்னிக்க மாட்டாரே.''

''உங்க அப்பா என்ன சொல்லிட்டுப் போனாருன்னு கவனிச்சியா? அவளை அவன் வீட்டுக்கு அனுப்பி வச்சுட்டு எனக்கு போன் பண்ணுன்னு தான் சொன்னார். அதனால நீ அங்கேயே போ.''

சரோஜினி அவளுடைய துணிகளை அவளது அலமாரியில் இருந்து அப்படியே மொத்தமாய் எடுத்து பெட்டிகளில் அடுக்க ஆரம்பித்தார். நித்திலா அசையாது ஒரே இடத்தை வெறித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

தன் தந்தை தன்னை வீட்டை விட்டு வெளியேறச் சொன்னதை நித்திலாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

எல்லாப் பெண் குழந்தைகளும் தங்களின் தந்தையிடம் தான் அதிகம் ஒட்டிக் கொள்வார்கள். நித்திலாவும் அதற்கு விதிவிலக்கல்ல. அவளுக்கு தன் தாயை விட தகப்பனைத் தான் அதிகம் பிடிக்கும். அனைத்தையும் அவரிடம் தான் பகிர்ந்து கொள்வாள்.

சிறு வயதில் அவளுக்கு ஜூரம் வந்தால் அவள் ராஜதுரையை விட்டு இம்மியும் அகல மாட்டாள். ராஜதுரை தனக்கு உடல் நிலை சரியில்லை என்றால் கூட அதைப் பொருட்படுத்தாது தொழிலைப் பார்க்கக் கிளம்பிவிடுவார்.

ஆனால் நித்திலா பள்ளிக்குச் செல்ல முடியாமல் ஜூரம் என்று படுத்து விட்டால் அவரும் அன்று தன் தொழிலுக்கு விடுமுறை அளித்துவிடுவார். அவர் வெளியேற அவள் அனுமதிக்க மாட்டாள் என்பது தான் உண்மை.

நித்திலா தன் கஷ்டத்தை மட்டும் அல்ல சந்தோஷத்தையும் தன் தந்தையிடம் தான் முதலில் பகிர்வாள்.

அவள் நான்காம் வகுப்பு படிக்கும் போது போட்டி ஒன்றில் முதல் பரிசை வென்றதாக பள்ளி நிர்வாகம் அவளுக்கு கோப்பையை பரிசளித்தது. அந்த சமயம் ராஜதுரை வெளியூர் சென்றிருந்தார்.

அவள் அதை சரோஜினியிடம் காட்டவில்லை. தன் தந்தைக்கு முன் தன் தாய் அதைப் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக அதை மறைத்தும் வைத்து விட்டாள். மூன்று நாட்களுக்கு பின் தன் அப்பாவிடம் காட்டிய பின்பே தன் தாயிடம் அந்தத் தகவலை தெரிவித்தாள்.

தந்தைக்கும் மகளுக்கும் இடையே இருக்கும் பாசப் பிணைப்பைப் பார்த்து சரோஜனி பொறாமைப்படும் விதமாக தான் நித்திலாவின் அனைத்து நடவடிக்கை களும் அமையும்.

நித்திலாவுக்கும் அவளது தந்தைக்கும் இடையே முதல் முதலாக கருத்து மோதல் ராகவ் விஷயத்தில் தான் வந்தது. அதுவும் அதற்கு காரணம் வஜ்ரவேலு என்பதாலேயே நித்திலா அடங்கிப் போனாள். ஏனென்றால் அவளது தந்தையின் நன்றி உணர்ச் சியை அவள் நன்கு அறிவாள்.

'என் மேல் உள்ள பாசம் எப்படியும் என் தந்தையை மாற்றும்' என்று அவள் உறுதியாக நம்பிக் கொண் டிருக்க...

அந்த உறுதியைக் குலைப்பது போல் ராகவ் கட்டாயத் தாலி கட்டிவிட்டான். ராஜதுரையும் மகளை நம்பாது வீட்டை விட்டு வெளியேறும்படிக் கூறிவிட்டார்.

உயிராய் நினைத்த தந்தை நொடியில் தன்னை வெறுக்கக் காரணமான ராகவ் மேல் நித்திலாவிற்கு கோபம் பெருகியது.

சமைத்து வைத்த சாதத்தை சாம்பார் ஊற்றி பிசைந்து கொண்டு சரோஜினி மகள் அருகே வந்து அமர்ந்தார்.

''சாப்பிடு நித்தி'' என்று கூறி சாதத்தை அவள் வாய் அருகே கொண்டு போனார்.

''எனக்கு வேண்டாம்மா.''

''பசி இருந்தா பிரச்சனைகள் எல்லாம் பூதாகரமா தெரியும். உன் வாழ்க்கை இன்னைக்கு தான் ஆரம் பிச்சு இருக்க. முதல் நாளே பட்டினி கிடக்கணுமா?'' என்று அதட்டி மகளுக்கு ஊட்டி விட்டார்.

அவள் சாப்பிட்டு முடித்ததும் கை கழுவி விட்டு மீண்டும் மகள் அருகே வந்து அமர்ந்தார்.

''உனக்கு ராகவோட வீடு தெரியுமா நித்தி?''

''தெரியாதும்மா.''

''அவர் வீட்டு அட்ரஸ் தெரியுமா?''

''அதுவும் தெரியாது.''

''அவர் போன் நம்பர் தெரியுமா?''

''தெரியும்.''

''அதைச் சொல்லு'' என்றதும் அவள் தன் கைபேசியை பார்க்காமலே மனப்பாடமாக ஒப்பிக்க, சரோஜினி தனது கைபேசியில் இருந்து அந்த எண்ணிற்கு அழைத்தார்.

''நான் நித்திலா அம்மா சரோஜினி பேசுறேன். எனக்கு உங்க வீட்டு அட்ரஸ் வேணும். நித்தி உங்க வீட்டுக்கு கிளம்பிக்கிட்டு இருக்காள்.''

"....."

"அப்படிங்களா? சரி" என்று அழைப்பைத் துண்டித் தார்.

நித்திலா தன் தாயைப் பார்த்து, "ஏன்மா நீங்களும் நான் சொன்னதை நம்பலையா?" என்று பாவமாய் கேட்டாள்.

"இந்த உலகத்திலே நான் என் பொண்ணை நம்பாமல் வேற யாரை நம்பப் போறேன்?"

"அப்படின்னா... ஏன் இப்படி பண்ணீங்கன்னு அவர்கிட்ட ஏன்மா நீங்க சண்டை போடலை?"

"சண்டை போட்டு... உனக்கு போக்கிடம் இல் லாமல் ஆக்கச் சொல்லுறியா?" என்று சரோஜினி கேட்டதும் நித்திலா அமைதியானாள்.

"ராகவ் என்னம்மா சொன்னார்?"

"மாப்பிள்ளை நம்ம வீட்டு வாசல்ல தான் நிற் கிறாராம். நீ கிளம்பு!" என்றவர் அவளைக் கை பிடித்து எழுப்பினார்.

நேராக பூஜை அறைக்கு மகளை இழுத்துச் சென் றார். விபூதியை எடுத்து மகளது நெற்றியில் பூசி விட்டு, "உன் வாழ்க்கை சந்தோஷமா இருக் கணும்மா!" என்று வாழ்த்தினார்.

பெட்டிகளை அவர் வீட்டுக்கு வெளியே கொண்டு வந்ததும் ராகவ் அவற்றை வாங்கிக் கொண்டான். 'உள்ளே வாங்க மாப்பிள்ளை' என்று சரோஜினியும்

அழைக்கவில்லை. அவனும் உள்ளே நுழைய வில்லை. பெட்டிகளை அவனது கார் டிக்கியில் அடுக்கினான்.

சரோஜினி அவர்கள் பக்கத்து வீட்டுப் பையனை அழைத்து நித்திலாவின் ஸ்கூட்டிச் சாவியை அவ னிடம் கொடுத்து, "இந்தக் காருக்கு பின்னாடியே போய் அவங்க வீட்டிலே விட்டுட்டு வந்துடுப்பா. வரும் போது ஆட்டோ பிடிச்சு வந்துடு" என்று கூறி அதற்கான பணமும் கொடுத்தார்.

அந்தப் பையன் ஸ்கூட்டியை தள்ளிக் கொண்டு தெருவில் கொண்டு போய் நிறுத்தினான். அதன் மேல் ஏறி அமர்ந்து கொண்டு காரை தொடர்வதற்காக காத்திருந்தான்.

ராகவ் முன் பக்கக் கதவைத் திறந்து கொண்டு நித்திலா ஏறுவதற்காக காத்திருந்தான். தாயிடம் விடைபெற்று வந்த நித்திலாவோ கணவனை அலட்சியம் செய்து பின் பக்கமாக ஏறி அமர்ந்தாள்.

ராகவ் அவள் பின் பக்கமாக ஏறி அமர்ந்ததற்கு வாயால் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. ஆனால் அதே சமயம் தனது செய்கையால் பலமாக ஆட் சேபித்தான். அவன் முன்பக்கக் கதவைச் சாற்றி விட்டு காரைக் கிளப்பவில்லை. அந்தக் கதவை திறந்த வாறே நின்று கொண்டு தெருவை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

"என்ன ஒரு அழுத்தம்!" என்று திட்டிக் கொண்ட நித்திலா பின் பக்கமே அமர்ந்து இருந்தாள்.

அவளது ஸ்கூட்டியின் மேல் அமர்ந்திருந்த பையனோ என்ன இன்னும் நீங்கள் கிளம்பவில்லையா என்று ஹாரன் அடித்துக் கேட்க, அவனைக் கண்டு கொள்ளாது ராகவ் நின்ற நிலையிலேயே நிற்க...

நித்திலா வேறு வழியின்றி பல்லைக் கடித்துக் கொண்டு காரை விட்டு இறங்கி முன் பக்கமாக ஏறி அமர்ந்தாள். அவள் அமர்ந்ததும் கதவைச் சாற்றியவன் சரோஜினியை பார்த்து தலை அசைத்து விட்டு இருக்கையில் அமர்ந்து காரை ஓட்ட ஆரம்பித்தான்.

நடந்ததையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சரோஜினி மகள் முரண்டு பிடித்தாலும் மாப்பிள்ளை அவளைத் தன் வழிக்கு கொண்டு வந்துவிடுவார். அவர்களது வாழ்க்கை நல்லபடியாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டார்.

அவர்கள் மூவரும் கிளம்பிச் சென்றதும் நேராக தனது படுக்கை அறைக்குச் சென்று ஒரு மூச்சு அழுதார். மகள் முன்னிலையில் அழுதால் அவள் மேலும் கலங்குவாள் என்று நினைத்து இது நேரம் வரை சரோஜினி தன் அழுகையை அடக்கி வைத்திருந்தார். யாருமில்லாத தனிமை கிட்டவும் மகளது வாழ்க்கையை நினைத்துக் கண்ணீர் விட்டார்.

'எந்த ஒரு தாய்க்கும் என் நிலைமை வரக்கூடாது முருகா!' என்று வேண்டிக் கொண்டார்.

ராகவ் அந்தப் பையன் தன்னைப் பின் தொடர்ந்து வருவதற்கு ஏதுவாக மெதுவாகக் காரைச் செலுத்தி

னான். காரில் இருந்த இருவரும் ஒரு வார்த்தை கூடப் பேசிக் கொள்ளவில்லை.

கார் ஒரு சிக்னலில் நின்ற போது நித்திலா அந்த முத்து மாலையைக் கழட்டி அவனிடம் நீட்டினாள்.

''நீ நம்ம வீட்டுக்கு தானே வரப் போற நிது. அதனால இது உன்கிட்டவே இருக்கட்டும்'' என்று கூறியவனின் மடியில் அதை வைத்து விட்டு அவள் வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

'நகையை தானே கழட்டினாள். தாலியை கழட்டலையே!' என ஆறுதல் அடைந்தவன் அதை தன் பாக்கெட்டில் பத்திரப்படுத்தினான்.

17



ராகவ் தன் வீட்டின் முன் சென்று காரை நிறுத்தினான். நித்திலாவின் பக்கத்து வீட்டுப் பையன் அவளது ஸ்கூட்டியை ஒப்படைத்து விட்டுச் சென்றான். அவனை வீட்டுக்குள் அழைத்து உபசரிக்கும் சூழ்நிலை இல்லை என்பதால் ராகவ் அவனை அப்படியே அனுப்பி வைத்தான்.

நித்திலா வீட்டை நிமிர்ந்து பார்த்தாள். அது ஒரு தனி வீடு. வீட்டின் முன் பக்கம் கார் மற்றும் இரு சக்கர

வாகனங்கள் நிறுத்த இடமிருந்தது. ஏற்கனவே ராகவின் இரு சக்கர வாகனம் அங்கு நின்று கொண்டிருந்தது. ராகவ் கேட்டை திறந்து காரை அங்கே நிறுத்தினான்.

பின் அவளது ஸ்கூட்டியையும் உள்ளே தள்ளிக் கொண்டு வந்தான். அது வரைக்கும் நித்திலா காரில் இருந்து இறங்கவில்லை.

'மகாராணிக்கு ஏறுவதற்கு கதவைத் திறந்து விட்டது மாதிரி இறங்கியதுக்கும் கதவைத் திறந்துவிடணும் என்று எதிர்பார்க்கிறாங்களோ?!' என மனதுக்குள் நக்கல் பண்ணியவன்.

என்ன தான் செய்கிறாள் என்று பார்ப்போம் என நினைத்துக் கொண்டு வீட்டின் கதவைத் திறந்து விட்டான். பின் டிக்கியை திறந்து அவளது பெட்டிகளை இறக்கி வீட்டிற்குள் கொண்டு போய் வைத்தான்.

அவள் அது வரையிலும் அசையவில்லை என்றதும் பதிலுக்கு பதில் செய்யுறாளா எனப் புன்னகைத்துக் கொண்டவன் அவள் புறம் இருந்த கதவைத் திறந்தான்.

அவள் எழுந்து வெளியேறும் போது பாதி வழியை அவன் அடைக்க அவள் அவனை இடித்துக் கொண்டு வெளியே வரும்படி இருந்தது.

தன் மேல் மோதிக் கொண்டு வெளியே வந்த நித்திலாவின் காதில் ''தாங்க் யூ. இது மாதிரி நீ இடிச்சால்

எத்தனை தடவை வேணா நான் கார்க் கதவைத் திறந்து விடுவேன்'' என்றான்.

'இதுக்கு நான் அப்பவே போய் இருக்கலாம்' என்று நித்திலா நினைத்துக் கொண்டாள்.

முகத்தில் தோன்றிய பெரிதான புன்னகையுடன் அவளது கைகளைப் பிடித்தவன் ''வெல்கம் ஹோம் நிது!'' என்று கூறிக் கொண்டே அவளை உள்ளே அழைத்துச் சென்றான்.

நித்திலா வீட்டைச் சுற்றிக் கண்களை ஓடவிட்டாள். அவளது எண்ணம் புரிந்தவனாய் ராகவ் அவளைக் கைப்பிடித்து அழைத்துச் சென்று வீட்டை சுற்றிக் காண்பித்தான்.

அந்த வீட்டில் இரு படுக்கை அறைகள் இருந்தன. இரண்டுமே குளியலறை வசதியுடன் இருந்தன. சமையலறை பத்துக்கு பத்தடியில் இருந்தது. 'ட' வடிவ சமையல் மேடை இருந்தது. கேஸ் அடுப்பு, குக்கர், பாத்திரங்கள், ஃப்ரிஜ் என்று சகலமும் இருந்தன.

சமையலறையைத் தாண்டி முற்றம் மாதிரியான இடத்தில் துவைக்கும் இயந்திரமும் இருந்தது. குடும்பம் நடத்தத் தேவையான அனைத்துமே அங்கே இருந்தன.

மணி நான்கு என்பதை பார்த்த நித்திலா தனது பெட்டியைத் திறந்து ஒரு சுரிதாரை எடுத்துக் கொண்டு படுக்கை அறைக்குள் சென்று மறைந்தாள். உடையை

மாற்றி வந்தவள் தனது ஸ்கூட்டி சாவியை எடுத்துக் கொண்ட வெளியேற எத்தனிக்க...

''எங்க நிது கிளம்பிட்டே?'' என்று ராகவ் கேட்டான்.

அவள் பதில் சொல்லாமலே வெளியே செல்ல முயல அவளது கைகளை இறுக்கிப் பிடித்தவன். ''எங்க போறேன்னு சொல்லிட்டுப் போ. நீ இப்போ என் பொறுப்பிலே இருக்க...'' என்று உறுமினான்.

''பக்கத்திலே இருக்கிற கடைக்கு போறேன். சீக்கிரமா வந்துடுவேன். எங்கேயும் ஓடிப் போக மாட்டேன்'' என்று அவளும் பதிலுக்குக் கத்தினாள்.

''நானே கூட்டிட்டுப் போறேன். ஒரு நிமிஷம் இரு வரேன்.''

''இல்லை. எனக்குப் போகத் தெரியும். நான் ஒண்ணும் குழந்தை இல்லை'' என்றவள் அவனது பிடியில் இருந்து தனது கையை உருவிக் கொண்டு வெளியேறினாள்.

'வீட்டுக்குள் நுழைஞ்சதும் என் கூட சண்டை போடுவாள்னு எதிர்பார்த்தேன். ஆனா புலி பாயாமல் பதுங்குதே! அது ஏன்னு தெரியலையே? முருகா! நீ தான் என்னை காப்பாத்தி கரை சேர்க்கணும்.' என்று வேண்டிக் கொண்டவன்.

தனது தந்தைக்கு அழைத்து தாங்கள் இருவரும் பத்திரமாக வீடு வந்து சேர்ந்து விட்டதாகத் தெரிவித் தான்.

அவனும் கோவிலில் இருந்து கிளம்பியதில் இருந்து நான்கு முறை போன் பண்ணி தகவல் சொல்லிக் கொண்டே தான் இருந்தான். ஆனாலும் பூங்கோதைக்கு தான் மனமே ஆறவில்லை.

அவர்கள் இருவரும் வீடு வந்து சேர்ந்து விட் டார்கள் என்று அறிந்த பின்பே அவரால் இயல்பாக மூச்சவிட முடிந்தது. தாங்கள் வந்து சேர்ந்த தகவலை சரோஜினியின் அலைபேசிக்கும் அழைத்துத் தெரிவித்தான்.

அதன்பின் தொலைக்காட்சியின் முன் அமர்ந்து கொண்டு சேனலை மாற்றி மாற்றி பொழுதை ஓட்டிக் கொண்டிருந்தான்.

'எங்க போயிட்டாள்? அப்படி என்ன முக்கியமான வேலை? ஒரு வேளை லேடீஸ் ஹாஸ்டல் எதுவும் தேடக் கிளம்பி இருப்பாளோ?' என்ற எண்ணம் எழுந்த போது அவனுக்கு பயம் ஏற்பட்டது.

அப்பொழுது யாரோ ஒரு பையன் மூன்று சக்கர மிதிவண்டியை ஒட்டிக் கொண்டு வீட்டின் முன் வந்து நின்றான். ராகவ் அவனிடம் சென்று யார் என்று விசாரித்தான்.

''நித்திலாங்கிறவங்க வீடு இது தானே?'' என்று கேட்டு உறுதி செய்த பையன். ''மளிகை ஜாமான் சார். டோர் டெலிவரி பண்ண வந்து இருக்கேன்'' என்று கூறி இரு பெரும் பைகளை ஒப்படைத்து விட்டுச் சென்றான்.

''மேடம் சமையல் செய்ய மளிகை ஜாமான் வாங்கப் போனாங்களா? அதுக்கு எதுக்கு தனியாப் போகணும்?'' என்று புலம்பிக் கொண்டே அந்த சாமான்களை சமையலறையில் கொண்டு போய் வைத்தான்.

ஏழு மணி ஆகியும் நித்திலா வீடு திரும்பவில்லை என்றதும் ராகவ் அவளது கைப்பேசிக்கு அழைத்துப் பார்த்தான். அவள் அவனது அழைப்பை ஏற்க வில்லை. அவன் விடாது தொடர்ந்து அழைத்துக் கொண்டே இருந்தான்.

பதினைந்தாவது அழைப்பை எடுத்தவள், ''நான் எங்கேயும் ஓடிப் போக மாட்டேன்னு சொன்னே னில்ல. இன்னும் கொஞ்ச நேரத்திலே வீட்டுக்கு வரேன்'' என்று கூறி அவன் பேச இடம் கொடுக் காமல் அழைப்பைத் துண்டித்தாள்.

அவள் வீட்டிற்குள் நுழைந்த போது மணி எட்டு. கார் நிறுத்தும் இடத்தில் நின்று கொண்டு ராகவ் யாருடனோ கைப்பேசியில் பேசிக் கொண்டிருந் தான்.

பெரிய பையுடன் உள்ளே நுழைந்தவள் நேராக சமையலறைக்குச் சென்று அதை வைத்தாள். அங் கேயே கை கழுவி விட்டு வந்தவள் கையிலிருந்த பொட்டலத்துடன் சாப்பாட்டு மேஜையில் அமர்ந்து அதை பிரித்துச் சாப்பிட ஆரம்பித்தாள்.

அவள் சாப்பிட்டு முடிக்கும் தருவாயில் ராகவ் போன் பேசி முடித்து விட்டு வீட்டிற்குள் நுழைந் தான்.

''சாப்பாடு வாங்கிட்டு வரப் போனியா? நாம ரெண்டு பேரும் சேர்ந்து சாப்பிடப் போகலாம்னு நான் நினைச்சேன். நானும் காலையில் இருந்து எதுவுமே சாப்பிடலை'' என்றதும் ஒரு நொடி அவள் சாப் பிடாமல் இருந்தாள்.

அதன் பின் தோளைக் குலுக்கியவள் அந்தக் கடைசி வாய் சாப்பாட்டையும் சாப்பிட்டு முடித்துக் கை கழுவினாள். அவள் தனக்கு மட்டுமே சாப்பாடு வாங்கி வந்திருப்பதைக் கண்ட ராகவ் தனது அறைக் குள் சென்று உடை மாற்றி வந்தான்.

அவள் முன் வந்தவன் ஒரு சாவிக் கொத்தை அவளிடம் நீட்டியவாறு, ''நீ வந்தால் வெளியே நிக்கணுமேன்னு தான் நான் வெளியே போகாமல் இருந்தேன். இது இந்த வீட்டோட இன்னொரு செட் கீ. இதை நீ வச்சுக்கோ. எனக்கு பசிக்குது. நான் போய் சாப்பிட்டுட்டு வரேன். நானே கதவை லாக் பண் ணிட்டு போறேன்'' என்று கூறிக் கொண்டு இருக்கும் போதே யாரோ அவர்களது வீட்டு கேட்டைத் தட்டும் சப்தம் கேட்டது.

அவனை முந்திக் கொண்டு நித்திலா வெளியேறி, ''இந்த வீடு தான். அதை உள்ளே கொண்டு வாங்க'' என்றாள்.

அந்த ஆள் சில பொருட்களை வைத்துவிட்டு அவளிடம் பணம் பெற்றுவிட்டுச் சென்றான். ராகவ் வந்து இறங்கிய பொருட்களையே வெறித்துப் பார்த்த வண்ணம் இருந்தான்.

கேஸ் அடுப்பு, குக்கர் மற்றும் சில சமையல் பாத்திரங்களை கண்டவன் சாப்பிடச் செல்ல இருந்த திட்டத்தை கைவிட்டு விட்டு அவள் முன்னே சென்று.

''இதெல்லாம் என்ன நித்திலா?'' என்று கேட்டான்.

''ஏன் பார்த்தா தெரியலையா?''

''நம்ம வீட்டிலே தான் இது எல்லாமே இருக்கே! அப்புறம் எதுக்கு இதையெல்லாம் வாங்கி இருக்கே?''

''அதெல்லாம் உங்களோடது தானே?''

தன் புருவத்தை உயர்த்தியவன், ''அப்படின்னா என்ன அர்த்தம்?'' என வினவினான்.

''உங்க பொருளை வச்சு நீங்க சமைச்சு சாப்பிடுங்க. என் பாத்திரங்களை வச்சு நான் சமைச்சு சாப்பிடுறேன்.''

''அதாவது தனித் தனி சமையல்னு சொல்லுற?''

''ஆமா. தனி ரூம். தனி சமையல், கரண்ட் பில்லில் கூட பாதி குடுத்திடுறேன். இன்னும் இந்த வீட்டுக்காக என்ன செலவு செய்யுறீங்களோ அது எல்லாத்துக்குமே பாதி பணம் தந்துடுறேன்.''

''நீ வேற நான் வேறடான்னு சொல்ல வரியா?''

''நீங்க யாரோ நான் யாரோ. நாம வெறும் ஹவுஸ் மேட் தான்.''

''ஹவுஸ் மேட்... ஹவுஸ் மேட்'' என்று இரு முறை சொல்லிப் பார்த்தவன், ''எனக்கு தெரிஞ்ச எந்த ஹவுஸ் மேட்டும் தனித் தனி சமையல் செய்ய மாட்டாங்க. ஆளுக்கொரு நாள் சமைப்பாங்க'' என்று நக்கலாக உரைத்தான்.

''ஃபிரண்ட்ஸ் ஹவுஸ் மேட்டா இருந்தா அது மாதிரி வேலையை பிரிச்சுப்பாங்க.''

''அப்ப நான் விரோதிங்கிறியா?'' என்று அவன் கேட்டதற்கு பதில் சொல்லாமல் அவள் மௌனம் காக்க...

''இவ்வளவு நேரமும் பதிலுக்கு பதில் பேசிக்கிட்டு இருந்தல்ல... இப்போ மட்டும் ஏன் வாயை மூடிக்கிட்ட? பதில் சொல்லுடி!'' என்று அவன் கத்த.

''ஃபிரண்டு வீட்டு கல்யாணத்துக்கு கூட்டிட்டுப் போறதா பொய் சொல்லி என்னை கடத்திட்டுப் போய் கட்டாயத் தாலி கட்டி எங்க அப்பா அம்மாவை எனக்கு விரோதியாக்கினவங்க எனக்கு ஃபிரண்டா இருக்க முடியாது!'' என்று அவளும் பதிலுக்குக் கத்தினாள்.

''ஆமா உன் கழுத்திலே கத்தி வச்சு கடத்திட்டுப் போனேன். பெருசா பேச வந்துட்டா...'' என்று தொடங்கியவனை இடைமறித்து.

''உங்க வீட்டிலே எல்லோரும் உங்க கல்யாணத்தை பார்க்கணும்னு நினைச்சு அவங்களை வர வச்சீங்கல்ல... ஆனா என் வீட்டிலே இருந்து யாருமே வர முடியாமல் பண்ணிட்டீங்களே. நான் என்ன அநாதையா? ஏன் இப்படி ஒரு கல்யாணம் எனக்கு நடக்கணும்?'' என்று கேட்டாள்.

''அதையே தான் நானும் கேட்கிறேன். எனக்கு ஏன் இப்படி ஒரு கல்யாணம் நடக்கணும்? உன்னை போட்டோவில பார்த்துட்டு புடிச்சிருக்குன்னு சொன்ன பாவத்துக்காக நானும் என் குடும்பமும் இவ்வளவு துன்பப்படுறோம்?''

''யாரோ ரெண்டு பேரு அடிச்சுக்கிட்டா உங்க அப்பா ஏன் கோபப்படணும்? தப்பு பண்ணினது உங்க வீட்டு ஜனங்களா இருந்தாலும் எங்க அப்பா அதை, பெரிசு படுத்தாமல் உங்க வீட்டுக்கு வந்து கல்யாணத்தைப் பத்தி பேசினாருல்ல... யாரும் எப்படியும் போகட்டும்னு உங்க அப்பா நம்ம கல்யாணத்தை பத்தி பேசி இருக்க வேண்டியது தானே? அத விட்டுட்டு உங்க சம்பந்தியை வந்து மன்னிப்பு கேட்கச் சொல்லுங்க. அதுக்கு அப்புறமா கல்யாணத்தை பத்தி பேசலாம்னு சொல்லி ஏன் திருப்பி அனுப்பினார்?

அப்ப உன் கல்யாணத்தைப் பத்தி உங்க அப்பாவுக்கு அக்றை இல்லைன்னு தானே அர்த்தம்?

ஜெர்மனியிலே இருந்து எத்தனை போன் பண்ணி இருப்பேன். ஒரு தடவையாச்சும் அதை எடுத்துப்

பேசி இருப்பியா. எனக்கும் உனக்கும் என்ன பிரச்சனை? மனுஷனை நிம்மதியா இருக்க விட்டியாடி!'' என்று அவன் தன் மனதில் உள்ளதை வாய் விட்டுப் புலம்ப நித்திலாவால் பதில் பேச முடிய வில்லை.

''நீ எக்கேடோ கெட்டுப் போன்னு விட்டுட்டு நான் அங்கேயே இருந்திருக்கணும். அப்படிப் பண்ணாமல் என் வேலையை விட்டுட்டு இங்க வந்து உங்ககிட்ட தொங்கிக்கிட்டு நின்னேன் இல்ல... என்னைச் சொல்லணும். என்னை மதிச்சு ஒரு வார்த்தை பேசினாரா உங்க அப்பா? அப்பவாச்சும் எனக்கு புத்தி வந்ததா? இல்லையே!

ஒரு நாளாவது உன்னை ஆபிஸில் தொந்தரவு பண்ணி இருப்பேனா? உனக்கு புதுசா ஒரு மாப்பிள்ளையை பார்த்து அனுப்பி வைக்கிறார் உங்க அப்பா! அதை பார்த்ததும் எனக்கு அப்படியே குளிர்ந்து போச்சு'' என்று குளிர்ச்சியே இல்லாத குரலில் கூறியவன் மேலும்.

''ஊரு உலகத்திலே பொண்ணை பெத்த எந்த அப்பாவும் செய்யாத ஒரு காரியத்தை என் மாமனார் செய்யுறாரேன்னு எனக்கு பெருமை புரிபடலை. அப்பவும் வேடிக்கை தானே பார்த்தேன். எதிர்த்து நின்னு கேள்வியா கேட்டேன்?

அன்னைக்கு உங்க அப்பாவை நிக்க வச்சு கேள்வி கேட்காத குத்தத்துக்கு தான் நீ இன்னைக்கு என்னை விரோதிங்கிற... எனக்கு இது தேவை தான்.

ஆபிஸிலே வேலை பார்க்கிற அத்தனை பேருக்கும் முன்னால இவர் தான் என் ஹஸ்பண்ட்ன்னு சொன்னியே... அதுக்கு அப்புறமாச்சும் என்னை அன்பா ஒரு பார்வை பார்த்திருப்பியா இல்லை ஒரு சிரிப்பு தான் சிரிச்சிருப்பியா!

உங்க அப்பா காதுபட தானே ராகவ் தான் என் புருஷன்னு சொன்ன. உங்க அப்பா அதுக்கு அப்புறமாச்சும் எங்க வீட்டை சேர்ந்தவங்க கிட்ட நம்ம கல்யாணத்தை பத்திப் பேசினாரா? இல்லையே!

அப்போ உங்க அப்பாவும் கல்யாணத்தை நடத்தி வைக்க மாட்டார். நீயும் உங்க அப்பா பேச்சை மீறி வர மாட்டே. நீங்க எப்ப மனசு மாறி வருவீங்கன்னு எதிர்பார்த்துகிட்டு நான் நாக்கை தொங்கப் போட்டுக்கிட்டு நாய்க்குட்டி மாதிரி உங்க பின்னாடியே அலையணுமா?

அதுக்கு வேற ஆளைப் பாரு! இவ அப்பாவை கல்யாணத்தை பார்க்க விடாமல் பண்ணிட்டேனாம். கேள்வி கேட்கிறாள் கேள்வி!

இன்னைக்கு நடந்ததுக்கு பேரு கல்யாணமாடி? கல்யாணம்னா உனக்கு என்னன்னு தெரியுமா?'' என்று எகிறியவன்.

அவள் ஏதாவது பதில் சொல்வாளா என்பது போல் சில நொடிகள் அமைதியாக இருந்தான். அவள் ஒன்றும் கூறவில்லை என்றதும் தன் பொருமலை தொடர்ந்தான்.

''நல்ல நாள் பார்த்து பத்திரிக்கை அடிக்கக் குடுத்து, முதல் பத்திரிக்கையை குலதெய்வம் கோவில்ல வச்சு சாமி கும்பிட்டு ஊருக்கெல்லாம் குடுத்து, பொண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் நல்ல நாளிலே போய் பட்டுப் புடவையும் வேஷ்டியும் வாங்கி, வாசலை அடைச்சுப் பந்தல் போட்டு, வாழைமரம் கட்டி, ஊருக்கே கேட்கிற மாதிரி ஸ்பீக்கரிலே பாட்டை அலறவிட்டு, எல்லோருக்கும் சாப்பாடு போட்டு, மேளம் கொட்டி, அக்னி வளர்த்து, சடங்கு சம்பிரதாயமெல்லாம் பண்ணி... நம்ம கல்யாணத்திலே இதுல ஏதாச்சும் ஒண்ணு நடந்துச்சுன்னு சொல்லு பார்ப்போம்?

எங்க அப்பாவுக்கு நான் ஒரே பையன். என் கல்யாணத்தை சிறப்பா பண்ணணும்னு அவர் ஆயிரம் கனவு கண்டிருப்பார். ஆனா அது அத்தனையும் கனவாவே போச்சு. தன் பையன் கல்யாணத்துக்கு யாரோ மூணாம் மனுஷன் மாதிரி அவர் வந்து நின்னுட்டுப் போனாரு. அதைப் பாராட்ட உனக்கு மனசில்லைன்னாலும் திட்டாமலாச்சும் இரு'' என்று அவன் நீளமாய் கொந்தளிக்க.

அவளால் ஒரு வார்த்தை கூட எதிர்த்துக் கூற முடியவில்லை. அவர் கேட்கிறதெல்லாம் சரி தான். ஆனாலும் என் அப்பாவின் விரோதத்தை சம்பாதித்து விட்டேனே... என்றே அவள் மனம் சிந்தித்தது. ஆணி அடித்தது போல் அதே இடத்தில் நின்று கொண்டிருந்தாள்.

அவளைத் திட்டிவிட்டு மடமடவென்று தனது அறைக்குள் நுழைந்தவன் பர்முடாஸுக்கு மாறி வெளியே வந்து வீட்டின் கதவுகளை அடைக்க ஆரம்பித்தான்.

'காலையில் இருந்து சாப்பிடலை. பசிக்குது. சாப்பிடப் போறேன்னு கிளம்பினாரே... சாப்பிடப் போகலையா? நான் நல்லா மூணு வேளையும் சாப்பிட்டேனே!' என நினைத்த பொழுது அவளுக்கு வயிற்றைப் பிசைந்தது.

அவன் சோபாவில் அமர்ந்து டிவியை சேனலை மாற்றி மாற்றிப் பார்க்க ஆம்பித்தான்.

அவள் தான் வாங்கி வந்திருந்த புதிய அடுப்பை வெளியே எடுத்து அவன் வைத்திருந்த இரண்டாவது கேஸ் சிலிண்டரை அடுப்போடு இணைக்கும் வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள்.

புதிதாக வாங்கி வந்திருந்த ட்யூபை அவளால் அடுப்பின் வாயோடு மாட்ட முடியாமல் திண்டாடினாள். அவளிடமிருந்து சலிப்பான 'ப்ச்சு' என்ற ஒலி கிளம்பியது.

சமையலறைக்கு வந்த ராகவ் அவள் பதினைந்து நிமிடங்களாகப் போராடித் தோற்ற வேலையை இரண்டே நிமிடத்தில் செய்து முடித்துவிட்டு வெளியேறினான்.

தான் வாங்கி வந்திருந்த பொருட்களை அடுக்கி முடித்தாள். படுக்கலாம் என நினைத்து இரண்டாவது

படுக்கை அறைக்குள் நித்திலா நுழைந்த பொழுது மணி ஒன்பதரை ஆனது. அது வரைக்கும் அவன் அசையாமல் அங்கேயே தான் அமர்ந்திருந்தான்.

படுக்கையில் படுத்தவளால் தூங்க முடியவில்லை. பெட்டியில் உள்ள துணிமணிகளை அடுக்கும் வேலையைப் பார்க்கலாம் என நினைத்து அவற்றை அடுக்க ஆரம்பித்தாள்.

அவளது துணிகளுக்கு இடையே அவள் மறைத்து வைத்திருந்த ராகவின் புகைப்படமும் இருந்தது. அதை எடுத்துத் தனியே வைத்தாள்.

உடைகளை அடுக்கும் வேலையும் முடிந்தது. வழக்கம் போல் அவனது புகைப்படத்தை எடுத்து தன்னருகே வைத்துக் கொண்டு படுத்தாள்,

''ஏண்டா இப்படி பண்ணினே?'' என்று கேட்டு அவன் முகத்தில்... அந்தப் புகைப்படத்தில் ஒரு இடி இடித்தாள்.

பதினைந்த நிமிடங்கள் கடந்தும் தூக்கம் வராமல் அவஸ்தைப்பட்டாள். மணி என்ன என்று பார்ப்பதற் காக அவள் தன் கைப்பேசியை எடுக்கும் பொழுது தான் அவன் அனுப்பும் 'குட் நைட்' குறுஞ்செய்தி இன்று வரவில்லை என்பதைக் கண்டாள்.

'எப்போதும் அதைப் பார்த்துட்டு தானே தூங்கு வோம். இன்னைக்கு வரலைங்கிறதால தான் தூக்க மும் வர மாட்டேங்கிறதா?' என்று நினைத்துக்

கொண்டே அந்தக் கைபேசியை கையில் பிடித்த வாறே அமர்ந்திருந்தாள்.

நேரம் சென்று கொண்டே இருந்தது. அவள் ஆவலுடன் எதிர்பார்த்த குறுஞ்செய்தி மட்டும் வருவதாக இல்லை என்றதும் கதவைத் திறந்து வெளியே வந்தாள். ராகவ் அதே இடத்தில் அமர்ந்து கொண்டு தொலைக்காட்சியில் செய்திகளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

வெளியே வந்தவள் அவனைப் பார்ப்பதும் பின் தன் கையில் இருந்த கைபேசியை பார்ப்பதுமாய் நேரத்தைக் கடத்தினாள். ஓரக் கண்ணால் அவளது நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டிருந்த ராகவ்.

'மேடம்க்கு குட் நைட் மேசேஜை பார்க்காமல் தூக்கம் வரமாட்டேங்குதா? ஒரு நாளாச்சும் பதில் அனுப்பி இருப்பியா? இன்னைக்கு அனுப்ப முடியாது போடி!' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டே அமர்ந்திருந்தான்.

அவள் உள்ளே சென்று படுப்பதாக இல்லை என்றதும் தொலைக்காட்சியை அணைத்து விட்டு படுப்பதற்காக தனது அறை நோக்கி சென்றான்.

ராகவ் நித்திலாவை கடக்கும் போது அவள் மெல்லிய குரலில், ''குட் நைட்'' என்றாள்.

அவன் அவளை ஊடுறுவும் பார்வை பார்த்தான்.

''இன்னைக்கு காலையிலே எனக்கு கல்யாணம் ஆச்சு. என் வைஃப் என்னைத் தனியா விட்டுட்டு

பக்கத்து ரூமிலே தூங்கப் போறாள். எனக்கு இந்த ராத்திரி நல்ல ராத்திரியாவா அமையும்?'' என்று கேள்வி எழுப்பினான்.

அவனது பதிலைக் கேட்டவளின் முகம் கசங்கியது. அவளது வாடிய முகத்தைக் கண்டவனால் அவளை தாண்டிக் கொண்டு செல்ல முடியவில்லை.

கண்களை மூடி சில நொடிகள் அமைதியாக இருந்தான். அவன் தன் கண்களை திறந்த போது அவள் அங்கேயே நிற்பதைக் கண்டான். தனது இரு கைகளால் அவளது முகம் தாங்கி அவளது உதடுகளை சிறை செய்தான். அவளது உடலில் மின்சாரம் பாய்ந்தது.

அந்த முத்தத்தில் கிறங்கியவள் எதிர்ப்புக் காட்டாமல் நின்றாள். நீண்ட முத்தத்தை பதித்தவன் அவளது உதடுகளை விடுவித்து விட்டு அவளை இறுக்கி அணைத்துக் கொண்டான். சில நொடிகளுக்கு அவனது அணைப்பு இறுகிக் கொண்டே போனது.

அவளது காதோரத்தில், ''இன்னைக்கு ராத்திரி நான் உன்னை ரொம்ப மிஸ் பண்ணுவேன் நிது'' என்று கூறிவிட்டு அவளை விடுவித்து விட்டு தனது அறை நோக்கிச் சென்றான்.

அவன் படுக்கை அறைக்குள் சென்று மறைந்ததும் நித்திலா தனது அறை நோக்கிச் சென்றாள். படுக்கையில் படுத்தாள். அவளது கைபேசிக்கு ஒரு

குறுஞ்செய்தி வந்ததாக அது ஒலி எழுப்பி அறிவித்தது. எடுத்துப் பார்த்தாள்.

கூட்ட நாஹ்ட். இஷ் லீப டிஷ் - யுவர் ராகவ்

என்ற குறுஞ்செய்தி மின்னியது. எப்பொழுதும் பெயர் போடாத குட் நைட் செய்தி மட்டுமே வரும். இன்று தான் தன் பெயரை அனுப்பி இருக்கிறான் என்று நினைத்துப் பார்த்தவள் அந்த இரண்டாவது வாக்கியத்தை பார்த்தாள். அது சொன்ன 'ஐ லவ் யூ' என்ற செய்தியைக் கண்டு பெரிதாகப் புன்னகைத்தாள்.

அந்த அலைபேசிக்கு ஒரு முத்தமும் படுக்கையில் இருந்த கணவனின் புகைப்படத்திற்கு ஒரு முத்தமும் பரிசளித்தாள்.

''யுவர் ராகவ்'' என்று சொல்லிப் பார்த்தாள். ''யூ ஆர் ஆல்வேஸ் மைன்'' என்று சொல்லிக் கொண்டாள்.

அன்று காலையில் இருந்து இன்பமும் துன்பமும் மாறி மாறி ஏற்பட்டு அவளது மனதை வெகுவாக சோர்வடையச் செய்திருந்தது. சற்று முன் ஏற்பட்ட புதுவித அனுபவம் ஒரு கிறக்கத்தை கொடுத்தது. அனைத்து உணர்ச்சிகளும் சேர்ந்து கலவையாய் அவளைத் தாக்க அவள் வெகு விரைவிலேயே கண் அயர்ந்தாள்.

அவனால் தான் உடனே தூங்க முடியவில்லை. காலையில் இருந்து எதையும் சாப்பிடாததால் உண்

டான பசி ஒரு புறம்... அன்றைய இரவில் மனைவி தன் பக்கத்தில் இல்லாத அவஸ்தை ஒரு புறம்... அடுத்து வரும் நாட்களில் அவளை எப்படிச் சமாளிப்பது என்ற பயம் ஒரு புறம் என்று அவன் குழம்பிப் போய் தூக்கம் வராமல் தவித்தான். நடுஜாமம் தாண்டி அசதியில் கண் அயர்ந்தான்.

18



வழக்கம் போல் காலையில் கண்விழித்த நித்திலா இருக்கும் இடமறிந்து ஒரு பெருமூச்சினை வெளியேற்றினாள். பல் தேய்த்து முடித்தவள் முகத்தை கழுவிக் கொண்டு அறையை விட்டு வெளியேறினாள்.

நேற்று கணவனின் நீண்ட விளக்கத்தைக் கேட்ட பிறகு... அவன் பக்கம் இருந்த நியாயம் புரிந்தாலும் அவளால் அவனுடன் இணக்கமாகப் பேசிப் பழக முடியவில்லை. இவனால் தானே என் அப்பா என்னை வீட்டை விட்டு வெளியேற்றினார் என்ற கோபம் அடிமனசில் இருந்து மறைய மறுத்தது.

ஃப்ரிஜில் இருந்து பாலை எடுத்து தனக்காக வாங்கிய அடுப்பில் வைத்து சூடேற்றி காபி கலந்து

குடித்தாள். மாவு எதுவும் இருக்கிறதா என்று ஃப்ரிஜைத் திறந்து பார்த்தாள்.

அப்படி எதுவும் இல்லை என்றதும் கிரைண்டர் இல்லையோ என நினைத்து சமையலறையை சுற்றி நோட்டம் விட்டாள். ஒரு மூலையில் கிரைண்டர் துணியினால் மூடப்பட்டிருந்தது. துணியை விலக்கி பார்த்த போது அது உபயோகிக்கப்படாமல் இருப்பது தெரிந்தது.

'ப்ளான் பண்ணி எல்லாத்தையும் வாங்கி வச்சிருக் காரா? நான் கஷ்டப்படக் கூடாதுன்னு பொருளெல் லாம் வாங்கி வச்சு என்ன பிரயோஜனம்? மனசை கஷ்டப்படுத்திட்டாரே!' என்று நித்திலா நினைத்த பொழுது அவன் மேல் கோபம் வளர்ந்தது.

தனது அறையில் இருந்து வெளிப்பட்ட ராகவ் நித்திலாவிடம், ''குட் மார்னிங் நிது'' என்றான்.

விருப்பம் இல்லாவிட்டாலும் மரியாதையின் பொருட்டு அவளும் பதிலுக்கு, ''குட் மார்னிங்'' என்றாள்.

'இது போதும்! நான் கேட்டதுக்கு இப்படி தன்மையா பதில் பேசினாலே கூடிய சீக்கிரம் பிரச் சனை தீர்ந்து விடும்' என ராகவ் நினைத்துக் கொண் டான்.

ராகவ் தனக்கான காபியை கலந்து குடித்தான். வீட்டின் கதவைத் திறந்து வராண்டாவில் விழுந்து

கிடந்த அன்றைய செய்தித் தாளை எடுத்துக் கொண்டு அங்கேயே அமர்ந்தவன் அதில் மூழ்கி விட்டான்.

நித்திலா காலை உணவிற்காக உப்புமாவும் மதிய உணவிற்காக கலவை சாதமும் தயாரிக்க ஆரம்பித் தாள்.

'நேத்து முழுசும் சாப்பிடலை. இப்பவும் காபி மட்டும் குடிச்சிட்டு ஜாலியா பேப்பர் படிச்சுக்கிட்டு இருக்கார். சாப்பிடுற எண்ணமே இல்லையா? நான் ஏதாச்சும் செஞ்சு தருவேன்னு நினைச்சுக்கிட்டு இருக்காரா? நோ மிஸ்டர் ராகவ்! நெவர்!' என்று நினைத்த நித்திலா தனது வேலையில் மும்மர மானாள்.

சமையலை முடித்த நித்திலா குளிக்கச் சென்றாள். செய்தித் தாளை படித்து முடித்த ராகவும் தனது அறைக்குள் சென்று குளிக்க ஆரம்பித்தான்.

குளித்து முடித்து பெர்முடாஸும் பனியனும் அணிந்து வந்தவன் சமையலறைக்குச் சென்று இரு முட்டைகளை வேக வைத்தான். அப்பொழுது நித்திலா சமையலறைக்கு வந்தாள்.

பெரிய கத்தியுடன் நின்றிருந்த ராகவை கண் டவள், 'இவ்வளவு பெரிய கத்தியை வச்சுக்கிட்டு எதை வெட்டப் போறார்?' என்று ஓரக் கண்ணால் வேடிக்கை பார்த்தாள்.

அவன் வெள்ளரியையும் தக்காளியையும் மெல் லிய வட்டங்களாக மடமடவென்று அரியும்

காட்சியைக் கண்டவள், 'ஜெர்மனியிலே செஃப்பா வேலை பார்த்து இருப்பாரோ?' என்ற எண்ணிக் கொண்டாள்.

ராகவ் பிரிஜ்ஜில் இருந்து ஒரு பெரிய பாட்டிலை எடுத்தான். அவள் அது என்னவென்று பார்த்தாள். 'சான்ட்விச் ஸ்ப்ரட்' என்று அதில் எழுதி இருந்தது.

ரொட்டித் துண்டுகளை எடுத்தவன் அதன் மேல் அந்தப் பாட்டிலில் இருந்ததை ஸ்பூனால் எடுத்துத் தடவி அந்தக் காய்கறிகளை வைத்து மேலே இன்னொரு ரொட்டித் துண்டை போட்டு மூடினான்.

இது மாதிரி நான்கு சான்ட்விச்சுகளை செய்தவன் டோஸ்டரில் போட்டு அதை டோஸ்ட் செய்தான். பின்பு நான்கு சாத்துக்குடி பழங்களை வெட்டி சாறு பிழிந்தான்.

நித்திலா சாப்பாட்டு மேஜையில் அமர்ந்து உப்புமாவை சாப்பிட அவனோ பிரட் சான்ட்விச், மிளகுத் தூள் தூவப்பட்ட இரு முட்டைகளின் வெள்ளைக் கரு, பழச்சாறு சகிதம் சாப்பிட அமர்ந்தான். அவன் ஜெர்மனியில் காலை உணவாக எதை உட்கொள்வானோ அவற்றையே தயாரித்து இருந்தான்.

'அஞ்சே நிமிஷத்திலே தட்டு நிறைய சாப்பாடு ரெடி பண்ணிட்டு வந்துட்டாரே! நான் தான் இந்த இத்துப் போன உப்புமாவை சாப்பிடுறேனா? இந்த லட்சணத்திலே அவருக்குப் பங்கு தர முடியாதுன்னு

தெனாவட்டா வேற நினைச்சுக்கிட்டேன்' என நொந்து போன நித்திலா தனது உணவினை சாப்பிட ஆரம்பித்தாள்.

ராகவ் சாப்பிட ஆரம்பிக்கும் முன்பு, ''உனக்கு வேணுமா?'' என்று கடமையாய் மனைவியின் புறம் திரும்பி வினவினான்.

அவள் வேண்டாம் என்பதாய் தனது தலையை இடவலமாக அசைத்ததும் தனது உணவினை சாப்பிட ஆரம்பித்தான்.

சாப்பிட்டு முடித்தவன் உடனே தான் உபயோகித்த பாத்திரங்கள் அனைத்தையும் கழுவி வைத்தான். தனது அறைக்கு சென்று அலுவலகம் செல்லத் தயாராக உடை அணிந்து வந்தான்.

அவன் தனது மடிகணினி பையுடனும் தனது இரு சக்கர வாகனத்தின் சாவியுடனும் தயாராகக் காத்திருந்த போது நித்திலாவும் அலுவலகம் செல்லத் தயாராகி வந்தாள். அவள் தனது விரல்களில் தனது ஸ்கூட்டியின் சாவியை கழற்றிக் கொண்டே வந்தாள், அதைக் கண்ட ராகவ் கடுப்பானான்.

''ஒரு நிமிஷம் நில்லு நித்திலா!'' என்று கூறி வெளியே செல்ல இருந்தவளை தடுத்து நிறுத்தினான்.

''இப்ப எதுக்கு உன் வண்டிச் சாவியை எடுத்திருக்கே?''

''ஆபிஸ் போறதுக்கு'' என்ற அவள் அலட்டாமல் கூறவும், ராகவ் தனது கண்களை மூடிக் கோபத்தை கட்டுப்படுத்த முயற்சி செய்தான்.

கண்களை திறந்தவன் அவளைப் பார்த்து, ''இங்க வீட்டிலே என்னை அவமானப்படுத்துற மாதிரி வெளியேயும் அவமானப்படுத்தலாம்னு கனவு காணாதே நித்திலா. நான் அமைதியா போறேன்னு ஓவரா அட்வான்டேஜ் எடுத்துக்க நினைக்காதே! நான் எல்லா நேரமும் ஒரே மாதிரி இருக்க மாட்டேன். மரியாதையா என் கூட ஒரே வண்டியில ஆபிஸ்க்கு வா!'' என்று உத்தரவு பிறப்பித்தான்.

'இவர் சொல்லிட்டா நான் கேட்டுக்கணுமா?' என்று நித்திலா மனதிற்குள் ஆவேசப்பட்டாலும், அலுவலகத்தினரின் கேள்விகளையும் கேலிகளையும் தவிர்க்க வேண்டுமென்றால் கணவன் சொல்வதை செய்வது தான் உத்தமம் என்பதை உணர்ந்தாள்.

''சரி நான் உங்க கூடவே ஆபிஸ்க்கு வரேன். ஆனா பைக்கிலே வர மாட்டேன்'' என்று அவள் ஒரு நிபந்தனை விதிக்க. மறுமொழி கூறாமல் ராகவ் தனது காரின் சாவியை எடுத்துக் கொண்டு வெளியேறினான்.

அவன் காரை வெளியே எடுத்துத் தயாராக நிறுத்தினான். அவள் வீட்டைப் பூட்டிக் கொண்டு வந்த காரின் முன்பக்க இருக்கையை திறந்து அதில் ஏறி அமர்ந்தாள். காரில் பாட்டு சப்தம் மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தது.

ஒன்றாக அலுவலகத்தின் உள்ளே நுழைந்தவர்களை அலுவலகத்தினர் எதிர்கொண்டு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர். இருவரும் இன்முகத்தோடு அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

''என்னப்பா இப்படி யாருகிட்டவும் சொல்லாமல் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க?''

''சிச்சுவேஷன் அந்த மாதிரி அமைஞ்சு போச்சு. நித்திலா பேமிலிக்கும் என் பேமிலிக்கும் கொஞ்சம் மிஸ் அன்டர்ஸ்டான்டிங். அதான் சொல்ல முடியாமல் போச்சு. சாரி.''

''கல்யாணத்தை தான் சொல்லாமல் முடிச்சிட்டீங்க. ரிசப்ஷனாவது உண்டா?'' என்று ஒருவர் கேட்க.

''கண்டிப்பா! கூடிய சீக்கிரத்திலே ரிசப்ஷன் இருக்கும். இன்விடேஷன் அடிச்சு உங்க எல்லோரையும் இன்வைட் பண்ணுவோம்'' என்று இன்முகமாகவே ராகவ் பதில் அளித்தான்.

'நல்லவேளை இவர் கூட வந்தேன். தனியா வந்திருந்தா என்ன பதில் சொல்லுறதுன்னு தெரியாமல் முழிச்சிருப்பேன்!' என்று நித்திலா சந்தோஷப்பட்டுக் கொண்டாள்.

அலுவலகத்தில் அன்று வேலை வழக்கம் போல் சென்றது. முன் தினம் என்ன நடந்தது என்று பாமா தன் தோழியிடம் விசாரித்து அறிந்து கொண்டாள்.

மதிய உணவு இடைவேளையின் போது பாமாவும் நித்திலாவும் சாப்பிட அமர்ந்தனர்.

''இன்னைக்கு உன் சமையலா நித்தி?''

''ஆமா பாமா. நான் ஜெர்மனிக்கு போய் சமையல் செய்யத் தெரியாமல் முழிக்கக் கூடாதுன்னு எங்க அம்மா கொஞ்சம் சொல்லிக் கொடுத்தாங்க. முதல்ல இன்ட்ரஸ்ட்டா கத்துக்கிட்டு இருந்தேன். அப்புறமா...'' என்றவள் சிறிய இடைவெளி விட்டு.

''வேலைக்கு வந்த பின்னால அதுக்கு நேரம் இல்லை. அதனால இன்னைக்கு எனக்கு தெரிஞ்சதை சமைச்சேன்'' என்று கூறினாள்.

''கவலைப்படாதே நித்தி. சமையல் புக். இன்டர் நெட் எல்லாம் எதுக்கு இருக்கு? அதுக்கும் மேல ஏதாவது உனக்கு சந்தேகம் இருந்தால் உங்க அம்மாவுக்கு போன் பண்ணி கேட்டுத் தெரிஞ்சுக்கோ.''

''இல்ல பாமா. அம்மாவுக்கு போன் பண்ண மாட்டேன்.''

''ஏன் நித்தி?''

''அது அப்பாவுக்குத் தெரிஞ்சால் பெரிய பிரச்சனை ஆகலாம். என்னால எங்க அம்மாவுக்கு எந்த பாதிப்பும் வரக் கூடாது'' என்ற நித்திலா கூறுவதிலும் ஒரு நியாயம் இருப்பதை பாமா புரிந்து கொண்டாள்.

செழியன் அவன் தங்கை கல்யாணத்திற்காக விடுமுறை எடுத்திருந்ததால் அலுவலகம் வரவில்லை.

ராகவ் சாப்பிட கேன்டீன் செல்லலாம் என்று இருக்கையில் இருந்து எழுந்தான். அப்பொழுது செழியன் அவனைப் போனில் அழைத்தான். அவனுடன் போனில் பேசிக் கொண்டே ராகவ் கேன்டீன் நோக்கி நடந்தான்.

அப்போது பாமா நித்திலாவின் உணவில் இருந்து ஒரு கரண்டி எடுத்து வாயில் போட்டுவிட்டு முகத்தை சுளித்தாள்.

அதைக் கண்ட ராகவ், 'கிரேட் எஸ்கேப்டா ராகவ்!' என்று உள்ளுக்குள் கூறிக் கொண்டு வெளியே சப்தமாக சிரித்தான்.

''என்னடா மச்சான் நேத்து நடந்த கதையை சொல்லிக்கிட்டு வந்தே... திடீர்ன்னு இப்படி சிரிக்கிறே! நட்டு கழண்டிருச்சா?''

''இல்லடா இங்க ஆபிஸிலே வேற ஒரு ஜோக். அதை பார்த்து சிரிச்சேன். அதை விடு. நான் என்ன சொல்லிக்கிட்டு இருந்தேன்?''

''உங்க அத்தையே உனக்கு போன் பண்ணினாங்கன்னு சொல்லிக்கிட்டு இருந்த ராகவ்.''

''யெஸ். எங்க அத்தை. எங்க ரெண்ட பேரையும் வழி அனுபி வச்சுட்டாங்க. அவ்வளவு தான் மேட்டர்'' என்றான்.

''ஏன்டா உன் மாமனார் மாறவே மாட்டாரா?'' என்று செழியன் கேட்க.

''நமக்கு எதுக்குடா அவரைப் பத்தின பேச்சு?'' என்று ராகவ் தட்டிக் கழிக்க,

நண்பன் நித்திலாவின் தந்தை குறித்து அடுத்தவரிடம் விவாதிக்க விரும்பவில்லை என்பதைத் தெரிந்து கொண்ட செழியன் பேச்சை மாற்றினான்.

அன்று மாலை வேலை முடிந்ததும் இருவரும் ஒன்றாக வீடு திரும்பினார்கள். ராகவ் வழியில் ஒரு ஹோட்டலில் நிறுத்தி, ''சாப்பிட வரியா நிது?'' என்று கேட்டான்.

''இல்லை எனக்கு வேண்டாம். நீங்க போய் சாப்பிட்டுட்டு வாங்க. நான் அதுக்குள்ள பக்கத்திலே இருக்கிற டிபார்ட்மென்டல் ஸ்டோருக்கு போயிட்டு வந்துடுறேன்'' என்றவள் அவன் பதிலுக்காக காத்திருக்காமல் இறங்கி வெளியேறினாள்.

''இவ சமைக்கிற சமையலுக்கு எவ்வளவு மளிகை ஜாமான் தான் வாங்குவாள்?'' என நக்கல் பண்ணிக் கொண்டே ராகவ் அந்த உணவகத்திற்குள் நுழைந்தான்.

அவள் திரும்பி வந்த போது அவன் காரின் அருகே காத்திருந்தான்.

''அதுக்குள்ள சாப்பிட்டு முடிச்சிட்டீங்களா?''

''இல்ல நான் சாப்பிடலை. பார்சல் வாங்கினேன்'' என்றவன் அவள் ஏறி அமர்ந்ததும் காரைக் கிளப்பினான்.

வீட்டிற்குள் வந்து இருவரும் உடை மாற்றி வந்ததும், ''இந்தா நிது. உனக்கு சப்பாத்தி வாங்கினேன். சாப்பிடு'' என்று இரு பொட்டலங்களை அவளிடம் நீட்ட.

''இல்ல எனக்கு வேண்டாம்'' என்றவள் சற்று முன் தான் வாங்கி வந்திருந்த கவரில் இருந்து ரெடிமேட் தோசை மாவு பாக்கெட்டை எடுத்து தனக்கான தோசைகளைச் சுட ஆரம்பித்தாள்.

அவன் தன்னுடைய உணவினை சாப்பிட்டு விட்டு அவளுக்காக வாங்கி வந்த சப்பாத்திகளை ஃப்பிரிஜில் பத்திரப்படுத்தினான்.

''நிது நான் இன்னைக்கு காலையில லேட்டா எழுந்ததால ஜாகிங் போகலை. இல்லைன்னா காலையிலே சீக்கிரமே எழுந்து வெளியே கிளம்பிடுவேன். நாளைக்கு காலையில நான் ஜாகிங் போவேன். நானே வீட்டை பூட்டிட்டு போயிடுவேன்'' என்று கூறவும்.

இதை எதுக்கு என்கிட்ட சொல்லிக்கிட்டு இருக்கார் என்பது போல் நித்திலா அவனைக் குழப்பமாய் பார்க்க...

''காலங்கார்த்தால எங்கடா காணாமல் போயிட்டானேன்னு நீ தேடக் கூடாதேன்னு சொல்லுறேன்'' என்றதும் சரி என்று தலையாட்டினாள்.

அன்று இரவும் வழக்கம் போல் அவனிடமிருந்து குறுஞ்செய்தி வந்தது.

கூட்ட நாஹ்ட். இஷ் ஃபெர்மிஸ டிஷ் - யுவர் ராகவ் என்று வந்திருந்தது. நேற்றைப் போலவே இன்றும் அனுப்பி இருக்கிறான் என்று அவள் நினைத்துக் கொண்டிருக்க அதன் பின்பே இரண்டாவது வாக்கியம் மட்டும் மாறி இருப்பதை கவனித்தான்.

அதற்கான அர்த்தம் புரியாததால் தனது அலை பேசியில் கூகுளை திறந்து அதற்கான அர்த்தத்தை தேடினாள். அதற்கான அர்த்தம் 'ஐ மிஸ் யூ' என்று கண்டுபிடித்தவளின் மனம் வாடியது.

தாங்கள் இருவரும் அருகில் இருந்தும் தொலைவில் இருக்கும் நிலை என்று சரியாகும் என யோசிக்க ஆரம்பித்தாள்.

'எங்கப்பாவை விட எனக்கு இவர் தான் முக்கியம்னு நான் நினைச்சிருந்தா.. என்னைக்கோ எங்கப்பாவை எதிர்த்துக்கிட்டு இவர்கிட்ட போயிருப்பேன். அன்னைக்கு என் கழுத்தில் தாலி இல்லை தான்... ஆனா விஷயம் என் கழுத்திலே தாலி இருந்துச்சா இல்லையாங்கிறது இல்லை. அன்னைக்கே இவர் என் கணவரா தானே இருந்தார். ஆனால் அன்னைக்கும் சரி இன்னைக்கும் சரி இவர் கூட நான் கூட்டணி வச்சிக்கிறதிலே என் அப்பாவுக்கு இஷ்டமில்லையே!

அவரோட வெறுப்பிலே என்னால எப்படி வாழ்க்கையை தொடங்க முடியும்?' என சிந்தித்துப்

பார்த்தவளின் கன்னங்களிலே கண்ணீர் கோடாக இறங்கியது.

அவள் தனக்கு மட்டுமே சமைத்து சாப்பிட்டுக் கொண்டு அவனுடனே அலுவலகம் செல்லத் தொடங்கினாள்.

''உன் வைஃப் சாப்பாடு எடுத்துட்டு வரும் போது நீ மட்டும் ஏன் கேன்டீனில் சாப்பிடுற?'' என்று அலுவலக நண்பன் ஒருவன் ராகவை பார்த்துக் கேட்க.

''நித்திலாவுக்கு இட்லி, சட்னி இதெல்லாம் பண்ணத் தெரியுது. ஆனா காய், குழம்பெல்லாம் சமைக்கத் தெரியலை. அதனால் மேடம் கொஞ்ச நாள் தனக்கு மட்டும் சமைச்சு டிரைனிங் எடுத்துக்கப் போறாங்களாம்'' என்று ராகவ் சிரித்துக் கொண்டே கூறியதை அவனும் நம்பினான்.

19



நித்திலா முதல் இரு நாட்கள் கணவனுடனே காரில் வந்து இறங்கி அவனுடனே திரும்பிச் சென்றாள். புதனன்று அவளுக்கு வேலை வெகு விரைவிலேயே முடிந்து விட்டது.

'இவருக்காக நான் ஏன் காத்திருக்கணும்?' என நினைத்தவளாய் 'நான் வீட்டிற்கு செல்கிறேன்' என்ற குறுஞ்செய்தியை கணவனின் அலைபேசிக்கு அனுப்பி விட்டு அலுவலகம் விட்டு வெளியேறினாள்.

ஆட்டோவிலே வீட்டுக்கு போவோமா என நினைத்து ஒரு ஆட்டோவை கை காட்டி நிறுத்தினாள். அவளது வீடு இருக்கும் ஏரியாவிற்கு செல்ல எவ்வளவு கட்டணம் என விசாரித்தவள் அவன் எக்குத்தப்பாகப் பணம் கேட்டதும் பேருந்தில் பயணிக்கலாம் என முடிவெடுத்தாள்.

இரு பேருந்துகள் மாறி அவள் சோர்வுடன் வீடு வந்து சேர்ந்த போது மணி ஒன்பதைக் கடந்திருந்தது.

வீட்டிற்குள் கார் நிற்பதைக் கண்டவள், 'அதுக்குள்ள வந்துட்டாரா?' என நினைத்துக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தாள். அங்கே கண்ட காட்சியை கண்டவளுக்கு எரிச்சலாக வந்தது.

அவள் அலுத்துக் களைத்து இரு பேருந்து மாறி சோர்வுடன் வீட்டிற்குள் நுழைந்தால்... அவளின் கணவனோ சோபாவில் அமர்ந்து கொண்டு தன்னுடைய கால்களை டீப்பாயில் வைத்து அவற்றை ஆட்டிக்கொண்டே தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான். போதாத குறைக்கு இரவு உணவினையும் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

உள்ளே நுழைந்தவளைக் கண்டுகொள்ளாது அவன் தன் காரியத்திலே கண்ணாக இருக்க அவளது எரிச்சல் அதிகமானது.

'இனிமேல் சமைச்சு சாப்பிடணுமா?' என்று நினைத்த போது அவளுக்கு அலுப்பாக இருந்தது.

இரு தினங்களுக்கு முன்பு இரவில் ராகவ் அவளுக்கும் சேர்த்து உணவினை வாங்கி வந்தது போல் இன்றும் உணவை வாங்கி வந்திருப்பானோ என்ற நப்பாசையில் அவள் சாப்பாட்டு மேஜை மற்றும் சமையலறையில் தனக்கான உணவு இருக்கிறதா என்று தேடிப் பார்த்தாள். அப்படி ஒன்றும் இல்லாத தால் மனம் வெறுத்துப் போனாள்.

'நான் பாட்டுக்கு ஆபிஸ்க்கு மட்டும் போயிட்டு வந்துகிட்டு இருந்தேன். இப்ப என்னடான்னா மூணு வேளை சாப்பாட்டையும் நானே சமைக்க வேண்டி இருக்கு. உதவி செய்யக் கூட ஆள் இல்லை. ப்ச்சு என்ன வாழ்க்கை இது!' என்று சலித்துக் கொண்டாள்.

அவள் அலுப்புடன் தனது அறைக்குள் சென்று நுழைந்து கொண்டாள்.

''நடக்கக் கூட முடியாத அளவுக்கு டயர்டா வந்திருக்காள். கொஞ்ச நேரம் ஆபிஸிலே உட்கார்ந்து இருந்தால் என் கூடவே காரில் வந்திருக்கலாம். இப்ப நான் இவளை என்ன சொல்லித் திட்டுறது?'' என்று ராகவ் வாய்விட்டுப் புலம்பிக் கொண்டிருந்தான்.

உடையை மாற்றி வந்தவள் மற்றொரு சோபாவில் அமர்ந்தாள். அவன் தொலைக்காட்சியை நிறுத்தி விட்டு ரிமோட்டை அவள் புறம் தள்ளி வைத்தான்.

'உனக்கு பிடித்ததை நீ பார்த்துக் கொள்' என்று அவன் சொல்ல வருவது அவளுக்குப் புரிந்தது.

'இதில ஒண்ணும் குறைச்சல் இல்ல!' என்று நினைத்துக் கொண்டாள்.

''நான் நாளையில் இருந்து என்னோட ஸ்கூட்டியில ஆபிஸ் போகப் போறேன். என்னால உங்களுக்காக காத்திருக்கவும் முடியாது. இப்படி பஸ்ஸிலே அவஸ்தைப்படவும் முடியாது'' என்று அறிவித்தாள்.

''உன்னிஷ்டம்'' என்றதோடு அவளது கூற்றை மறுத்து அவன் ஒன்றும் சொல்லவில்லை.

அவன் உடனே சம்மதம் சொன்னது அவளுக்கு பிடிக்கவில்லை. அவனிடம் இருந்து தான் என்ன எதிர்பார்க்கிறோம் என்று அவளுக்கே சரி வர விளங்கவில்லை.

சோர்வுடன் தனது கண்களை மூடிக் கொண்டு சோபாவில் சாய்ந்தாள். அவள் சாப்பிடுவதற்கு எந்த ஏற்பாடும் செய்யாமல் அமைதியாக அமர்ந்திருப்பதைக் கண்டவன்.

''நித்திலா சாப்பிடலையா?'' என்று மெதுவாகக் கேட்டான்.

அவள் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

''நிது பசிக்கலையா?' என்று அவன் மீண்டும் கேட்கவும்,

''எனக்கு பசிச்சா உங்களுக்கு என்ன பசிக்கலைன்னா உங்களுக்கு என்ன? நீங்க சாப்பிட்டீங்க இல்ல... பேசாமல் போய் தூங்குங்க'' என்று கத்தினாள்.

'ஓ! நீ வரும் போது நான் ஹாயா உட்கார்ந்து சாப்பிட்டு கிட்டு இருந்தது தான் உன் பிரச்சனையா?' என நினைத்துக் கொண்டவன் அவளையே பார்த்துக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தான்.

பத்து நிமிடங்கள் கழித்து கண் திறந்து பார்த்தவள் கணவன் தன்னையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருப்பதைக் கண்டு,

''இங்க என்ன லுக்கு வேண்டியிருக்கு? இங்க என்ன படமா காட்டுறாங்க?'' என்று எரிந்து விழுந்தாள்.

''என் கண். என் வைஃப். நான் அப்படி தான் பார்ப்பேன்'' என்று அவன் கூறவும் எழுந்து அவளது அறைக்குச் சென்றாள்.

ஐந்து நிமிடங்களுக்கு மேல் அவளால் அறையில் உட்கார்ந்து இருக்க முடியவில்லை. பசி வயிற்றைக் கிள்ளியது. மதியம் வேறு அரை குறையாக தான் சாப்பிட்டாள். கணவன் மீது கோபித்துக் கொண்டு பட்டினி கிடக்க தன்னால் முடியாது என்பது அவளுக்குப் புரிந்தது.

எழுந்து சமையலறைக்குள் சென்றவள் தோசை சுடலாம் என எண்ணியவளாய் ஃப்ரிஜில் இருந்து மாவை வெளியே எடுத்தாள்.

சட்னியை முதலில் அரைப்போம் என நினைத்து தேங்காயை தேடினாள். காலையிலேயே தேங்காய் தீர்ந்து விட்டது என்பது அப்பொழுது தான் அவளது ஞாபகத்திற்கு வந்தது.

இட்லி பொடியும் இல்லை. இப்போ எதை தொட்டுக் கொண்டு சாப்பிடுவது என்று நினைத்த பொழுது தனது நிலையை எண்ணி அவளுக்கு கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது.

சுவரில் சாய்ந்த வண்ணம் அவள் கண்ணீர் விட ராகவ் அவளை இழுத்து தன்னோட அணைத்துக் கொண்டான்.

''இதுக்கெல்லாமாடா அழுவாங்க? எனக்கு பசிக்குதுடா. சாப்பாடு வாங்கித் தான்னு சொல்ல வேண்டியது தானே?'' என்று கூறிக் கொண்டே அவளது கண்ணீரை துடைத்து விட்டான்.

அவளது உச்சந்தலையில் முத்தமிட்டான். அவனது அணைப்பும் முத்தமும் அவளது அழுகையை அதிகரிக்கவே செய்தது.

''அழக்கூடாது!'' என்றவன் அவளை சாப்பாடு மேஜைக்கு அழைத்துச் சென்றான்.

அங்கிருந்த நாற்காலியில் அவளை அமர வைத்தான். அங்கே ஒரு தட்டில் அவளுக்கான சாப்பாடு

இருந்தது. ஒரு டம்ளரில் தண்ணீரையும் பிடித்து வைத்தவன்.

''சாப்பிட்டு விட்டுத் தூங்கு'' என்று சொல்லி அவளது தலையை அழுத்திவிட்டு தனது அறைக்குள் சென்று மறைந்தான்.

சாப்பாடு வாங்கி வந்துட்டு இவ்வளவு நேரம் என்னை தவிக்க விட்டிருக்கார். என்று எண்ணிக் கொண்டே அரக்கப் பரக்க உணவை எடுத்து சாப்பிட்டாள்.

'நல்ல வேளை அவரோட ரூமுக்கு போயிட்டார். இல்லைன்னா அவர் முன்னாடி இப்படி சாப்பிட ரொம்பக் கஷ்டமா இருந்து இருக்கும்' என்று நினைத்துக் கொண்டாள்.

சற்று நேரம் முன்பு வரைக்கும் தனக்கு யாருமே இல்லையோ என்ற உணர்வு நித்திலாவின் மனதை வாட்டிக் கொண்டிருந்தது. ஆனால் இந்த நொடி... எனக்காக, என் மனமறிந்து, என் தேவை உணர்ந்து காரியங்களை நிறைவேற்ற என் கணவர் இருக்கிறார் என்ற உணர்வு தோன்றி அவளை சந்தோஷப்பட வைத்தது.

அவள் சாப்பிட்டு முடித்து கை கழுவிவிட்டு தனது அறைக்குள் படுக்கச் சென்றவுடன் கணவனின் இரவு வணக்கம் குறுஞ்செய்தி வந்தது.

'அவர் ரூமுக்குள்ள போனாலும் நான் என்ன செய்யுறேன்னு பார்த்துக்கிட்டே இருக்காரு போல!' என்று கூறியவள்.

கணவனின் புகைப்படத்தை கையில் எடுத்துக் கொண்டு, ''குட் நைட் ராகவ்'' என்று கூறி முத்தமிட்டு விட்டு படுத்துத் தூங்கினாள்.

மறுநாள் சாப்பிட்டு முடித்து அலுவலகம் செல்லத் தயாரான போது தான் நேற்று கணவனிடம் வீம்பாக தனது இரு சக்கர வாகனத்தில் அலுவலகம் செல்லப் போவதாக அறிவித்தது நினைவிற்கு வந்தது.

'அடடா! அவசரப்பட்டு வாயை விட்டுப்புட்டேனே! இப்ப என்ன செய்யுறது? நானும் உங்க காரிலேயே வரட்டுமான்னு போய் கேட்போமா?' என்று எண்ணம் வந்ததும்..

'நம்ம கெத்தை விட்டுட்டு அவர்கிட்ட போய் நானும் வரேன்னு சொல்லுறதாவது. நோ நித்திலா! அவரா காரிலே வரியான்னு கேட்டால் போனாப் போகுதுங்கிற மாதிரி ஒத்துக்கோ' என்று மூளை அறிவுறுத்தவும்.

வரவேற்பறையில் அமர்ந்திருந்த ராகவிற்கு முன்பாக குறுக்கும் நெடுக்கும் நடை போட்டாள்.

'நிமிர்ந்து பார்க்கிறாரா பாரு!' என்ற அவள் பொருமிக் கொண்டு இருக்க...

அவனோ, 'உனக்கு வேண்டியதை நீ தான் கேட்டுப் பெற வேண்டும்' என்ற எண்ணத்துடன் அவளைக் கண்டு கொள்ளாது அமர்ந்திருந்தான்.

இவர் சரிப்பட மாட்டார் என்று நினைத்துக் கொண்டே ஸ்கூட்டியை கிளப்பிக் கொண்டு அலுவலகம் கிளம்பினாள்.

அன்று மாலை அவள் வேலை முடித்து தன் ஸ்கூட்டியை ஓட்டிக் கொண்டு வீடு நோக்கிச் சென்றாள். அவள் சிக்னலுக்காக காத்துக் கொண்டு இருந்த போது அவளருகே நின்று கொண்டிருந்த காரை திரும்பிப் பார்த்தாள். அது அவளது கணவனின் கார்.

அதைக் கண்டவளுக்கு முதல் நாள் போலவே இன்றும் எரிச்சல் வந்தது. எரிச்சலுக்கு காரணம் காரில் அமர்ந்திருந்த பெண்கள். அவனது டீமை சேர்ந்த பெண்கள் தான். அவர்கள் அனைவரும் இரவு உணவிற்காக வெளியே சென்றார்கள்.

பின் சீட்டில் மூன்று பெண்கள் அமர்ந்திருந்தனர். ராகவ் அருகே ஒரு ஆண் நண்பன் தான் அமர்ந்திருந்தான். ஆனாலும் நித்திலாவால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

'நான் இங்க கஷ்டப்பட்டு கியரை மாத்தி மாத்தி (ஸ்கூட்டிக்கு ஏதும்மா கியர்!??!) வண்டியை ஓட்டிக்கிட்டு போவேனாம். என் காரிலே அவர் டீம் மேட்ஸ் எல்லாம் ஓசி சவாரி செல்வாங்களாம். இந்த நிலத்திலா என்ன இளிச்சவாயா?' என்று நினைத்த போது கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

மனைவியின் பார்வையில் தெரிந்த உஷ்ணத்தை கண்ட ராகவ் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

மறுநாள் காலை அலுவலகம் செல்லத் தயாரானவள் முதலிலேயே சென்று காரின் முன் இருக்கையில் அமர்ந்து கொண்டாள். அதைக் கண்ட ராகவ் சிரித்துக் கொண்டான். அவளை வெறுப்பேற்ற முடிவு செய்தவனாய் தனது இரு சக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு அவளைக் கண்டு கொள்ளாது அவன் வெளியேற...

''எவ்வளவு திமிருடா உனக்கு! இன்னைக்கு வீட்டுக்கு வா. உனக்கு இருக்கு கச்சேரி!'' என்று நித்திலா தன் கணவனை திட்டிக் கொண்டே வீட்டைத் திறந்து தனது ஸ்கூட்டி சாவியை எடுத்துக் கொண்டு வந்தாள்.

கதவை பூட்டியவள் திரும்பிப் பார்க்க கார் அங்கு நிற்கவில்லை என்றதும் அதிர்ந்தாள்.

'அச்சச்சோ! காரைப் பூட்டி சாவியை எடுக்காமல் விட்டுவிட்டேனா?!' என ஒரு நொடி ஆடிப் போனாள்.

அப்போது தான் கணவனின் இரு சக்கர வாகனம் உள்ளே நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டாள். சரியாக அதே நேரம் ராகவ் காரை கேட்டருகே ரிவர்ஸ் எடுத்து நிறுத்தினான்.

அவனை முறைத்துக் கொண்டே காரின் முன் இருக்கையில் ஏறியவள் பொரிய ஆரம்பித்தாள்.

''உங்க மனசிலே என்ன நினைச்சுக்கிட்டு இருக்கீங்க? ஒரு பேச்சுக்கு நான் ஸ்கூட்டியிலே போறேன்னு

சொன்னா உடனே அப்படியே போன்னு விட்டுவிடுவீங்களா?

நான் தான் காரிலே போகலாம்னு காரிலே ஏறி உட்கார்ந்தேன் இல்ல... காரை எடுக்காமல் எதுக்கு உங்க பைக்கை எடுத்துட்டுப் போனீங்க? நான் உங்ககிட்ட வந்து கெஞ்சணும்னு எதிர்பார்க்கிறாங்களா?''

''நீ என்கிட்ட கெஞ்ச வேண்டிய அவசியமில்லை நித்திலா. ஆனா உனக்கு வேண்டியதை நீ தான் வாயைத் திறந்து கேட்கணும். என்னால உன் மனசுக்குள்ள ஓடுறதையெல்லாம் கண்டுபிடிச்சு அதுக்கு தகுந்த மாதிரி நடந்துக்க முடியாது. புதன்கிழமை நைட் சாப்பாடு விஷயங்கிறதால நீ கேட்காமலே வாங்கிக் கொடுத்தேன். அதுக்காக ஒவ்வொண்ணும் அப்படியே நடக்கணும்னு நீ எதிர்பார்த்தேன்னா ஏமாந்து தான் போவாய்.''

''எங்க வீட்டிலே நான் வாயை திறந்து எதையும் கேட்க வேண்டிய அவசியம் வந்ததில்லை. எங்கப்பாவே எனக்கு தேவையானதை செய்வார். நான் ஆசைப்பட்டதை நிறைவேத்துவார்'' என்று அவள் வீறாப்பாய் மொழிய,

''அப்படின்னா உங்க அப்பாகிட்டயே போ!'' என்று அவன் கடுமையான குரலில் கூறினான்.

''அப்படிப் போக வழியில்லாமல் அந்தப் பாதையை தான் அடச்சுட்டீங்களே!'' என்று அவள் பதிலுக்கு கத்த அவன் அமைதியானான்.

அவர்கள் அலுவலகம் செல்லும் வரைக்கும் காரில் அமைதி நிலவியது. அவள் காரை விட்டு இறங்கப் போகும் போது.

''ஒரு நிமிஷம்...'' என்று கூறி அவளை தடுத்தவன் அவளது கண்களைப் பார்த்துக் கொண்டே,

''உன்னோட ஆசையெல்லாம் நிறைவேத்துற உங்க அப்பா... உனக்கு என்னைக் கல்யாணம் பண்ணி வைக்கணும்னு ஏன் நினைக்கலை? ஒரு வேளை நீ அப்படி ஆசைப்படலையோ?'' என்று நக்கலாகக் கேட்டுவிட்டு அவள் இறங்கும் முன்பு காரை விட்டு வெளியேறினான்.

'என்ன கேள்வி கேட்கிறாரு! என்னை அழ வைக்கிறதுக்குன்னே ஜெர்மனியில் இருந்து கிளம்பி வந்தார் போல!'' என்று மனதுக்குள் புலம்பிக் கொண்டாள்.

'அவன் கேட்டதில் தவறென்ன?' என்று மனசாட்சி எடுத்துரைத்தது. வழக்கம் போல் அதை அலட்சியம் செய்தாள்.

20



நித்திலாவிற்கும் ராகவிற்கும் திருமணமாகி ஒரு வாரம் கடந்திருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை.

அலுவலகம் செல்லத் தேவையில்லை என்பதால் இருவருமே தாமதமாக எழுந்தனர்.

ஒன்பது மணிக்கு மெதுவாக எழுந்த ராகவ் குளித்து விட்டுத் தனது அறையில் இருந்து வெளியே வந்தான். அவன் வரவேற்பறை சோபாவில் அமர்ந்து அன்றைய செய்தித் தாளைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

நித்திலா தனது அறையில் இருந்து வெளிப்பட்டாள். அவளும் குளித்து முடித்திருந்தாள். அவளது கையில் அழுக்கு நைட்டி இருந்தது. அதைத் துவைக்கும் மெஷினில் போடுவதற்காக அவள் சென்று கொண்டு இருந்தாள்.

அப்போது எதுவோ கீழே விழுந்ததை ராகவ் கவனித்தான். அது நித்திலாவின் கழுத்தில் அவன் கட்டிய தாலி.

அதைப் பார்த்த ராகவ். 'பழம் நழுவி பாலில் விழுந்தது. அது நழுவி வாயில் விழுந்தது என்பது இது தான் போல!' என்று நினைத்துக் கொண்டு அந்தத் தாலியை கைப்பற்றிக் கொண்டு தனது அறைக்குள் சென்று மறைந்தான்.

அவனது தாய் பூங்கோதை அன்று நாள் நன்றாக இருப்பதாகவும் தாலியைத் தங்கச் சங்கிலியில் கோர்த்து அணிந்து கொள்ளுமாறும் கூறி இருந்தார்.

ஆனால் அவனுக்கு தன் மனைவியிடம் சென்று இது குறித்துப் பேசி மீண்டும் ஒரு சண்டை போடு

வதில் விருப்பமில்லை. அதனால் அவன் இந்த விஷயம் குறித்து அவளிடம் பேசாமல் இருந்தான்.

ஆனால் கடவுள் அவன் பக்கம் இருக்கிறார். நித்திலா குளிப்பதற்கு நைட்டியை கழட்டும் போது தாலியும் நைட்டியோடு சேர்ந்து கழண்டு விட்டது. அதை நித்திலா கவனிக்கவில்லை. அதே சமயம் அது தரையில் விழுவதை ராகவ் பார்த்து விட்டான். அது அவனது அதிர்ஷ்டமே!

முன்பே அவனது அன்னை கொடுத்திருந்த தங்கச் சங்கிலியையும் மஞ்சள் கயிறையும் வைத்துக் கொண்டு அவன் அந்தத் தாலியை கோர்க்க ஆரம் பித்தான்.

சேதுபதி பூங்கோதையின் தாலியைக் கோர்க்கும் போது அருகில் இருந்து அவன் பார்த்திருக்கிறான். அதனால் அவன் இலகுவாகவே அந்த வேலையை செய்து முடித்தான்.

பூங்கோதை அந்தச் சங்கிலியை ஒன்பது மணிக்குள் மாற்றச் சொல்லி இருந்தார். இல்லாவிடின் பத்தரை மணிக்கு மேல் மாற்றச் சொல்லி இருந்தார். அது தான் நல்ல நேரம் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதனால் ராகவ் பத்தரை மணிக்கு மேல் அதை அவளிடம் கொடுக்கலாம் என முடிவு செய்தான். கடவுள் முன் வைத்து பிரார்த்தனை செய்து விட்டு அவளிடம் கொடுக்கலாம் என்று நினைத்தவன்

பர்முடாஸில் இருந்து பேன்ட் சட்டைக்கு மாறி னான்.

மீண்டும் வரவேற்பறைக்கு வந்து தொலைக் காட்சியை பார்க்க ஆரம்பித்தான்.

நித்திலா சமையலறையில் எதையோ உருட்டிக் கொண்டிருந்தாள். ராகவ் அன்று மதியம் அசைவம் சாப்பிடத் தீர்மானித்ததால் காலையில் தனக்கென்று எதையும் சமைக்கவும் இல்லை. வெளியே சென்று சாப்பிடவும் இல்லை.

ஆனால் நித்திலா சாப்பாட்டு மேஜையில் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்ததும் அவன் ஒரு ஆப்பிளை எடுத்து வெட்டி சாப்பிட ஆரம்பித்தான்.

'துரை இன்னைக்கு ஒண்ணும் சமைக்கலை போல! விரதமா இருக்குமோ? பேன்ட் சட்டை போட்டு எங்கேயோ கிளம்பத் தயாரா இருக்கிறதை பார்த்ததும் வெளியே சாப்பிடப் போறாருன்னு நினைச்சால் ஆப்பிளை சாப்பிட்டுக்கிட்டு இருக்கார். ஒரு வேளை இது ஸ்டார்ட்டரோ? ஃப்ரூட்ஸ் எல்லாம் டெசர்ட்டா சாப்பிடணும்' என்று அவனை மனதிற்குள் கிண்டல் செய்து கொண்டே நித்திலா சாப்பிட்டு முடித்தாள்.

தனது அறைக்குத் திரும்பியவள் வீட்டிலேயே இருந்தால் பொழுது போகாது என்பதால் வெளியே செல்லத் திட்டமிட்டாள்.

அதனால் அவள் தனது தலையை வாரி முடித்து முகத்திற்கு ஒப்பனை செய்து முடித்து கண்ணாடியின்

முன் நின்று இப்படியும் அப்படியும் சரிபார்த்த பொழுது தான்... கடந்த ஒரு வாரமாக தன் கழுத்தில் மஞ்சள் நிறத்தில் மின்னிக் கொண்டிருந்த அந்தத் தடிமனான தாலிக் கயிற்றினை காணவில்லை என்பதைக் கவனித்தாள்.

அவளுக்கு பகீரென்று இருந்தது!

'அச்சோ! என் தாலி எங்க போச்சு? எப்போல இருந்து காணோம்னு தெரியலையே? காலையில இருந்துச்சா? இல்லை நேத்தே கீழே விழுந்துடுச்சா?' என்று யோசித்த பொழுது இரவு படுக்கப் போகும் பொழுது தன் கழுத்தில் இருந்தது ஞாபகம் வந்தது.

'அப்படின்னா வீட்டிலே தான் எங்கேயாவது விழுந்திருக்கும். எல்லா இடத்திலும் தேடிப் பார்ப் போம்' என நினைத்துக் கொண்டே தனது தேடுதல் வேட்டையைப் படுக்கையில் இருந்து தொடங்கி வைத்தாள்.

அதன் பின் அறை முழுவதும் தேடினாள். குளிய லறையிலும் இல்லை என்றதும் வரவேற்பறை, சமைய லறை என்று அவளது தேடல் நீண்டு கொண்டே போனது.

'அட! மேடம் தன் தாலி தன்கிட்ட இல்லைன்னு கவனிச்சுட்டாங்க போல!' என மனதிற்குள் நக்க லடித்த ராகவ் தொலைக்காட்சி நிகழ்ச்சியிலேயே கவனமாக இருப்பதாகப் பாவனை செய்தான்.

எங்கு தேடியும் கிடைக்கவில்லை என்றதும் நைட்டி யில் சிக்கி இருக்குமோ என்ற சந்தேகம் அவளுக்கு வந்தது. அங்கே சென்று சரி பார்த்தவள் அங்கேயும் இல்லை என்றதும் பதை பதைக்க ஆரம்பித்தாள்.

'கட்டின உடனே இது ஏன் என் கழுத்திலே ஏறுச்சுன்னு நான் அழுததால என் கழுத்திலே அது தங்காமலே போயிடுச்சா? ஆண்டவா! நான் என்ன பண்ணுவேன்? இப்போ நான் என்ன செய்யணும்? யார்க்கிட்ட போய் இது பத்தி பேச முடியும்?

அம்மாகிட்டவும் பேச முடியாது. என் மாமியார் கிட்டவும் கேட்க முடியாது. கல்யாணத்தன்னைக்கு முறைச்சுப் பார்த்துட்டு வந்தவள் அதுக்கு அப்புறம் இந்த ஒரு வாரமா அவங்க கூடப் பேசவே இல்லை. இதை மட்டும் எப்படிக் கேட்க முடியும்? அப்படியே கேட்டாலும் தாலியைக் காணோம்னு நான் சொல் வதை நம்புவாங்களா?' எனப் பயந்தவள்.

மீண்டும் ஒரு முறை அனைத்து இடங்களிலும் தேடிப் பார்க்க முடிவு செய்தாள். படுக்கையறையிலும் குளியலறையிலும் இரண்டாவது முறை தேடியும் கிடைக்கவில்லை என்றதும் அவளது கண்களில் கண்ணீர் வடிய ஆரம்பித்தது.

'முருகா! எப்படியாவது என் தாலியைக் கண்டு பிடிச்சுக் கொடுத்திடு. இனிமேல் அதை நான் பத் திரமாப் பார்த்துக்குவேன்' என்று மனதிற்குள்ளேயே இறைவனிடம் மன்றாடினாள்.

அவளது கண்ணீரைக் கண்ட ராகவ் 'எதுக்கு இப்படிக் கண்ணீர் வடிக்கிறே? போன வாரம் இதோ நாள் இது உன் கழுத்திலே ஏறிடுச்சுன்னு தானே கண்ணீர் வடிச்சே? அதை ஒரு சுமையாத் தானே நினைச்சே?!' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டே அமர்ந்திருந்தான்.

அவள் மேலும் மேலும் கண்ணீர் வடிக்கவும் அவனால் அவளை வேடிக்கை பார்க்க முடிய வில்லை. அவளிடம் ஓடிச் சென்று அவளது கண் ணீரை துடைத்து ஆறுதல் கூற வேண்டும் என்று அவனது மனம் வெகுவாக ஆசைப்பட்டது.

'வேண்டாம் ராகவ்! இப்போ நீ போய் ஆறுதல் சொன்னால் அவள் உன் மேல் கோபப்பட்டு எறிஞ்சு விழுவாள். அவளா முன் வந்து தன் பிரச்சனையை உன்னிடம் சொல்லட்டும். எப்படியும் இதை வேற யார்கிட்டவும் அவளால பேச முடியாது. அவ உன் கிட்ட வந்து தான் ஆகணும். கொஞ்ச நேரம் அமை தியா இரு!' என்று அவனது மூளை அறிவுறுத்தவும்,

அவள் புறம் திரும்பாமல் தொலைக்காட்சி நிகழ்ச்சி யிலேயே தன் கண்களை பதித்திருந்தான்.

இரண்டாவது முறை தேடியும் தாலி கண்ணில் படவில்லை என்றதும் நித்திலா தன் கணவனிடம் சென்று பேச முடிவு செய்தாள்.

அவள் அவன் முன்னே வந்து நின்று தன் கைகளை பிசைந்து கொண்டிருப்பதை கண்ட ராகவ்

என்ன என்பதை வாயால் கேட்காமல் தன் புருவங் களை உயர்த்திக் கேட்டான்.

''என் தாலி...'' என்பதற்கு மேல் அவள் ஒன்றும் சொல்ல முடியாமல் தயங்க... அவனின் பார்வை அவளது கழுத்தை ஆராய்ந்தது.

''என் தாலி..'' என்று அவள் மீண்டும் ஆரம்பிக் கவும்.

''உன் கழுத்திலே இல்ல போல? வேண்டாம்னு கழட்டி வச்சிட்டியா?'' என்று அவன் கேட்டான்.

அவனது கேள்வியால் வெகுண்டவள் அவனை முறைத்துக் கொண்டே, ''நான் ஒண்ணும் கழட்டி வைக்கலை. அதைக் காணோம்'' என்று கோபமாய் கூறினாள்.

அவனிடம் வந்து தன்மையாகப் பேசி அடுத்து என்ன செய்யலாம் என்று ஆலோசிக்க நினைத்தவள் அவன் இது மாதிரி கேட்கவும் கோபமாய் கத்த ஆரம்பித்தாள்.

''சரி நீயா கழட்டலை. அதுக்கே உன் மனசு புரிஞ்சு கழண்டு கீழே விழுந்துடுச்சு போல. நல்லதாப் போச்சுன்னு போக வேண்டியது தானே.''

''அதை கழட்டணும்னு நான் எப்பவும் நினைச்ச தில்லை.''

''அதே சமயம் அது உன் கழுத்திலே ஏறணும்னு நீ ஆசைப்படலைல்ல?'' என்று அவன் மடக்கினான்.

''என்னை சேர்ந்த எல்லோரும் என் பக்கத்திலே இருந்து ஆசீர்வாதம் பண்ணி அது என் கழுத்திலே ஏறணுங்கிறது தான் என்னோட ஆசை... வேண்டுதல்!'' என்று அவள் தன் மனதை வெளியிட்டாள்.

''அது தான் நடக்காதுன்னு தெரிஞ்சு போச்சே! அப்புறம் எதுக்கு வீணா ஆசைப்பட்டே? இதுல வேண்டுதல் வேற! உன் ஆசை பேராசைன்னு உனக்கே தெரியலை? கடவுள் என்ன வேலை வெட்டி இல்லாம ஃப்ரீயா இருக்கார்ன்னு நினைச்சியா? நாட்டிலே அநியாயம் பெருகிக்கிட்டே போகுதாம். அதை விசாரிச்சு தண்டனை வழங்கவே அவருக்கு நேரம் பத்தலையாம். இதுல உங்க அப்பா மனசை மாத்தி எங்க அப்பாகிட்ட மன்னிப்பு கேட்க வச்சு... இதெல்லாம் நடக்கிற காரியமா சொல்லு?''

''எங்க அப்பா எதுக்கு உங்கப்பாகிட்ட வந்து மன்னிப்பு கேட்கணும்?''

''தப்பு செஞ்சது உங்க பக்கத்து மனுஷங்க தானே!''

''இருந்துட்டு போகட்டும். அதை கண்டுக்காமல் உங்க வீட்டை சேர்ந்தவங்க போக வேண்டியது தானே!''

''நாங்க கண்டுக்காமல் இருக்க போய் தான் உங்க அப்பா தான் புடிச்ச முயலுக்கு மூணே கால்னு வாதாடிக்கிட்டு இருக்கார்'' என்று அவன் வெறுப்புடன் உமிழ.

''பேச்சை மாத்தாதீங்க. என் தாலியை காணோம்னு நானே வருத்தமா இருக்கேன். மேல மேல பேசி என்னைக் கஷ்டப்படுத்தாதீங்க'' என்று அவள் இறங்கி வந்ததும் ராகவ் அமைதியானான்.

''ராகவ் ப்ளீஸ்...'' என்று அவள் கெஞ்சவும்.

அவன் கடிகாரத்தில் மணி பார்த்தான். மணி பத்து நாற்பது என்பதைக் கண்டவன் அவளிடம் திரும்பி,

''போய் முகத்தை கழுவிட்டு வா!'' என்று கூறினான்.

''ராகவ் நான் என்ன சொல்லுறேன்...'' என்றவளை இடைமறித்து.

''நான் சொல்லுறதை கேளு நிது'' என்றதும் அவள் தனது அறைக்குள் சென்று முகம் கழுவி துடைத்து விட்டு வந்தாள்.

ராகவ் பூஜை அலமாரியின் முன் நிற்பதை கண்டவள் அங்கே சென்றாள். அவன் சாமி படத்திற்கு பூவை அணிவித்துக் கொண்டிருந்தான். என்ன வென்று புரியவில்லை என்றாலும் அவளும் தன் பங்கிற்கு அங்கே புத்தம் புதிதாய் ஜொலித்துக் கொண்டிருந்த விளக்கிற்கு எண்ணெய் ஊற்றி திரி போட்டு ஏற்றினாள்.

அவன் அவளைப் பார்த்துக் கொண்டே தனது பாக்கெட்டில் இருந்த தாலிச் சங்கிலியை கடவுளின் படத்திற்கு முன்பு வைத்தான்.

தன் தாலி தொலையவில்லை என்பதைக் கண்டதும் அவளது மனம் வெகுவாக நிம்மதி அடைந்தது. அது சங்கிலியில் கோர்க்கப்பட்டிருப்பதைக் கண்டவள்.

'இதை கோர்க்கிறதுக்காக இவர் தான் எடுத்துட்டுப் போனாரோ?' எது எப்படியோ திரும்பப் கிடைச் சிடுச்சே!' என நினைத்தவள் இரு கை கூப்பி இறை வனை வணங்கினாள்.

அவனும் கடவுளைப் பிரார்த்திக்க ஆரம்பித்தான். இருவரது வேண்டுதலுமே தங்களுடைய எதிர் காலம் சிறப்பாக அமைய வேண்டும் என்பதாக இருந்தது.

அவன் அந்தச் சங்கிலியை எடுத்து அவள் முன் நீட்ட அவள் தன் தலையை குனிந்து அதை அணி விக்குமாறு செய்கையால் கூறினாள்.

முதல் முறை போல் இல்லாமல் அவளே தன் னுடைய கழுத்தில் அணிவிக்கச் சொல்லி குனிந்து நின்றதைக் கண்டவனின் மனம் சந்தோஷம் அடைந்தது. உதட்டில் நிறைந்த புன்னகையுடன் அவன் அதை அவளுக்கு அணிவித்தான். குங்குமத்தை எடுத்து அவளது வகிட்டில் வைத்தான்.

பூஜை அலமாரியை மூடியவன் அங்கிருந்து நகர்ந்தவாறே, ''இன்னைக்கு நாள் நல்லா இருக்காம். எங்கம்மா என்கிட்ட பத்தரை மணிக்கு மேல இதை மாத்திக்கச் சொன்னாங்க. ஆனா நீ என்ன சொல்வி யோன்னு நினைச்சு உன்கிட்ட சொல்லாமல்

இருந்தேன். காலையிலே உன் நைட்டியில இருந்து தாலி கீழ விழுந்ததும் நான் எடுத்துட்டு போய் கோர்த்து வச்சேன். பத்தரை மணி ஆகட்டும்னு தான் காத்துக்கிட்டு இருந்தேன்'' என்று விளக்கமளித் தான்.

'தாலி கட்டுவதும் அதை பிரித்துக் கட்டுவதும் ஒவ்வொரு பெண்ணுடைய வாழ்க்கையிலும் முக்கிய மான நிகழ்வுகள். சந்தோஷமாக நடத்தப்பட வேண் டிய நிகழ்ச்சிகள்.

ஆனா அதெல்லாம் என் வாழ்க்கையில மட்டும் ஏன் தயக்கத்தோடு ஒளிவு மறைவோடும் நடக் கணும்? அப்படிப் பெருசா நான் என்ன பாவம் பண் ணினேன் என்று எனக்கு இந்த தண்டனை?' என நினைத்துப் பார்த்தவளின் கண்களில் கண்ணீர் உருண்டோடியது.

ராகவ் அவளது கண்ணீரை உரிமையுடன் துடைத்துக் கொண்டே, ''இப்போ எதுக்கு அழறே? தாலி தான் காணாமல் போகலையே! என் கையிலே தானே கிடைச்சது. அழக்கூடாது!'' என்றவன்.

அவளை இழுத்து தன் மார்பில் சாய்த்துக் கொண் டான். அவளும் ஏதும் முரண்டு பிடிக்காமல் அவன் மேல் சாய்ந்து கொண்டாள்.

'கடவுளே! இவ இப்படியே என் கூட சண்டை போடாமல் வாழ நீ தான் அருள் புரியணும்!' என்று அவன் வேண்டிக் கொண்டான்.

நித்திலா கணவனின் அணைப்பில் தான் இருக்கிறோம் என்ற நினைவில்லாமல் அவன் மேல் சாய்ந்து கொண்டு நின்றிருந்தாள். ஒரு வாரமாக அவள் அடைந்த மனவருத்தத்திற்கு அந்த அணைப்பு ஆறுதல் அளித்ததால் அவள் பேசாமல் அமைதியாய் நின்றாள்.

ராகவ் அவளது உச்சியில் அழுத்தமாய் ஒரு முத்தம் பதித்தான். அவளது தலை முதல் கால் வரை அது மின்சாரத்தைப் பாய்ச்ச அவள் தன் சுய உணர் வுக்கு வந்து விலகவும் அவனின் கைபேசி சிணுங் கவும் சரியாக இருந்தது.

அழைப்பு தன் வீட்டில் இருந்து என்பதைக் கண்டவுடன் எடுத்து காதில் வைத்து, ''ஹலோ!'' என்றான்.

''நான் அம்மா பேசுறேன்டா ராகவ்'' என்று பூங் கோதை கூறவும்.

''சொல்லுங்கம்மா'' என்றான்.

''நான் சொன்னபடி தாலியை சங்கிலியில கோர்த் தீங்களாப்பா?''

''கோர்த்துட்டேன். சரியா பத்தரை மணிக்கு மேல அவ கழுத்திலே போட்டு விட்டுட்டேன்ம்மா.''

''அப்படியே கோயிலுக்கு போயிட்டு வந்துடுங் களேன் ராகவ்.''

''கோயிலுக்கா?'' என்று இழுத்தவன் அமைதி யானான்.

'இவ நான் சொன்னதை கேட்டுட்டு தான் மறு வேலை செய்வாள்னு எங்கம்மாவுக்கு நினைப்பு. இன்னைக்கு என்னமோ அதிர்ஷ்டக் காத்து என் பக்கம் வீசுச்சு. அதனால எனக்கு இந்த சங்கிலியை மாட்ட வாய்ப்பு கிடைச்சது. என் நிலைமை தெரியாம இவங்க வேற...' என்று மனதிற்குள் அலுத்துக் கொண்டான்.

''என்னப்பா சத்தத்தை காணோம்?''

''இல்லைம்மா... வீட்டிலேயே சாமி கும்பிட்டுட்டு தான்...'' என்று தொடங்கியவனை இடைமறித்து,

''ரெண்டு பேரும் கோயிலுக்கு போயிட்டு வாங்க'' என்று அழுத்தமாகக் கூறிவிட்டு பூங்கோதை அழைப்பைத் துண்டித்தார்.

'இவகிட்ட எப்படிச் சொல்ல?' என்பது போல் அவன் தயங்கிக் கொண்டு நிற்க... அவளோ தனது அறைக்குள் சென்று தனது கைப்பையை எடுத்து தன் தோளில் மாட்டியவாறு அவன் முன்னே வந்து நின்று,

''நான் ரெடி, கோவிலுக்கு கிளம்பலாமா?'' என்று கேட்டாள்.

'நான் காண்பது கனவா இல்லை நனவா?' என்று ராகவ் ஆச்சரியப்பட்டுப் போனான்.

அவளைக் கிண்டல் செய்து அவளைக் கோபம் கொள்ளச் செய்யாமல் அவளுடன் கிளம்பி கோவி

லுக்குச் செல்ல முடிவெடுத்தவன் தனது இரு சக்கர வாகன சாவியை எடுத்துக் கொண்டு வந்தான்.

''கோவில்ல காரை பார்க்க பண்ண இடம் கிடை யாது. அதனால பைக்கிலே போகலாமா?'' என்று தயக்கத்தோடு அவன் வினவ,

விவாதம் ஏதும் செய்யாமல் அவள் தனது தலையை யாட்டி சம்மதம் தெரிவித்ததும் அவனால் நடப்பதை நம்ப முடியவில்லை.

அவர்கள் கோவிலுக்கு சென்று சாமியை தரிசித்து முடித்ததும் அங்கேயே சிறிது நேரம் அமர்ந்திருந் தார்கள். மணி பன்னிரெண்டே முக்கால் ஆன போது அவனின் வயிறு குரல் கொடுத்து. காலையில் சாப்பிடாததால் அவனுக்கு பசிக்க ஆரம்பித்தது.

காலையில் அவன் அசைவம் சாப்பிட முடிவு செய்து இருந்தான். ஆனால் இப்பொழுது கோவி லுக்கு வந்ததால் அசைவம் சாப்பிட வேண்டாம் என்று முடிவு செய்தான்.

''எனக்குப் பசிக்குது. சாப்பிடப் போகலாமா?'' என்று கேட்டான்.

''போகலாம் வாங்க'' என்று அவள் உடனே ஒத்துக் கொண்டாள்.

'ம்ஹூம். இன்னைக்கு இவளுக்கு என்னமோ ஆச்சு. டேய் ராகவ்! இன்னைக்கு யார் முகத்திலேடா முழிச்சே? இன்னைக்கு உன் பக்கம் அதிர்ஷ்டக்

காத்து அடிக்கலைடா. அதிர்ஷ்ட சூறாவளி வீசுது' என்று தனக்குள் நக்கல் அடித்துக் கொண்டவன் ஹோட்டலை நோக்கி தனது வண்டியை செலுத்தி னான்.

ஹோட்டலில் இடம் தேடி அமர்ந்தவன், ''நீ என்ன சாப்பிடுறே?'' என்று கேட்டான்.

''எனக்கு அவ்வளவா பசிக்கலை. நீங்க மட்டும் சாப்பிடுங்க. நான் வேணா ஜூஸ் இல்லைன்னா மில்க் ஷேக் குடிக்கிறேன்'' என்றதும்.

அவளுக்கு ஒரு மில்க் ஷேக்கும் தனக்கு ஒரு சாப்பாடையும் கொண்டு வரச் சொன்னான். அவன் சாப்பிட்டு முடித்து அவர்கள் இருவரும் வெளியே வரும் வரை அனைத்தும் நன்றாக தான் போனது.

வண்டியை கிளப்பிக் கொண்டே, ''சினிமாவுக்கு போகலாமா?'' என்று அவன் கேட்டதும்.

அவள் வண்டியில் ஏறாமல், ''நீங்க போயிட்டு வாங்க. நான் ஆட்டோ பிடிச்சு வீட்டுக்கு போறேன்'' என்றாள்.

''வீட்டிலே போய் என்ன செய்யப் போற? சும்மா தானே இருப்ப... அதுக்கு சினிமாவுக்கு போக லாமே?''

''சும்மா இருப்பேனா? இனிமே தான் நான் சமைக் கணும்.''

''நான் தான் சாப்பாடு வாங்கித் தரேன்னு சொன்னே னில்ல...''

''அடுத்தவங்க காசிலே சாப்பிடறதுக்கும் அவங்களுக்கு செலவு வைக்கிறதுக்கும் ஒரு லிமிட் இருக்கு இல்லையா?'' என்று அவள் ஒரு தீவிரத்துடன் கேட்க.

'நீ குடிச்ச மில்க் ஷேக்கும் நான் சாப்பிட்ட சாப்பாடும் ஒரே விலை தான்!' என்று சொல்ல நினைத்ததை சொல்ல முடியாமல்.

''என்னடா காலையில இருந்து ரொம்ப குணவதியா நடந்துக்கிறியே... திருந்திட்டியோன்னு நினைச்சேன். நீ மாறலை. மாறவும் மாட்ட. இப்படியே இரு!'' என்றவன் விருட்டென்று தனது வண்டியை கிளப்பிக் கொண்டு சென்றான்.

அவள் ஒரு ஆட்டோவைப் பிடித்து வீடு வந்து சேர்ந்தாள். சமைத்து சாப்பிட்டு ஒரு தூக்கம் போட்டு எழுந்தாள்.

ராகவ் தன் அம்மாவிற்கு அழைத்து தாங்கள் கோவிலுக்கு போய் வந்த விஷயத்தை தெரிவித்தான். பூங்கோதை தான் சொல்லியபடி மகனும் மருமகளும் ஒன்றாக கோவிலுக்குச் சென்று வந்ததை நினைத்து மகிழ்ந்து போனார்.

21



மாலை நான்கு மணிக்கு நித்திலாவின் கல்லூரித் தோழிகள் அவளைப் பார்க்க வந்தனர். ஏற்கனவே

போன் மூலம் நித்திலா நடந்ததைத் தெரிவித்து இருந்தாள். அவர்களை நித்திலா உற்சாகத்துடன் வரவேற்று அமர வைத்தாள்.

''ராகவ் எங்கே நித்தி?''

''தெரியலை. சினிமாவுக்கு போயிருக்கலாம்.''

''இது என்ன பதில் நித்தி?''

''ப்ச்சு...'' என்று அலுத்துக் கொண்ட நித்திலா. ''என்னை சினிமாக்கு கூப்பிட்டார். நான் வரலைன்னு சொல்லிட்டேன். என் கூட கோபிச்சுக்கிட்டு வெளியே போனார். எங்க போனாரோ?'' என்றாள்.

''ஏன் நித்தி இப்படி இருக்க?'' என்று ஒரு தோழி கேட்டதும்.

''அவ செஞ்சதிலே என்ன தப்பு?'' என்று இன்னொருத்தி கேட்க.

அவர்கள் இரு வேறு குழுவாகப் பிரிந்து தங்களுக்குள் விவாதம் பண்ணினார்கள். ஒரு சிலர் நித்திலாவிற்கு ஆதரவு தெரிவித்தனர் என்றால் ஒரு சிலர் ராகவ் செய்தது சரி என்று வாதிட்டனர். ஏற்கனவே குழம்பிப் போய் இருந்த நித்திலா மேலும் குழம்பும் வண்ணம் இருந்தது அவர்களது விவாதம். இரண்டு மணி நேரத்திற்குப் பின் அவர்கள் கிளம்பிச் சென்றார்கள்.

மாலை ஆறரை மணிக்கு மேல் இடியுடன் கூடிய மழை பெய்தது. ராகவ் வீடு திரும்பவில்லை என்றதும் நித்திலாவிற்கு கவலையாக இருந்தது.

'எங்க போனாருன்னு தெரியலையே! சினிமாவுக்குப் போயிருந்தால் கூட படம் முடிஞ்சு இந்நேரம் வீட்டுக்கு வந்திருக்கணுமே? வேற எங்க போயிருப்பார்? கையில ரெயின் கோட் கூட இல்லை' என்று நினைத்து வருத்தப்பட்டாள்.

ராகவ் சினிமாவிற்கு செல்லவில்லை. பரிசுப் பொருள் ஒன்றை வாங்கிக் கொண்டு செழியனின் வீட்டிற்குச் சென்றான்.

தனது வாழ்க்கையில் அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாத காரணத்தினால் தான் அன்று செழியனின் தங்கை திருமணத்திற்கு தன்னால் வர முடியுமா என்று தெரியவில்லை என்று நண்பனிடம் தெரிவித்தான்.

நடக்கவிருந்தது செழியனின் திருமணமாய் இருந்திருந்தால் எப்பாடுபட்டேனும் சென்றிருப்பான். அவனது தங்கை திருமணம் தானே என்று போகாமல் தவிர்த்து விட்டான்.

அதனால் செழியனின் தங்கைத் திருமணத்தை விசாரிக்க அவன் வீடு தேடிச் சென்றான். நித்திலாவையும் தன்னுடன் அழைத்துச் செல்ல அவனுக்கு ஆசை தான். ஆனால் இந்தத் திருமணத்தைக் காரணம்

காட்டி தானே என் கழுத்தில் கட்டாயத் தாலிகட்டினார் என்று செழியனின் வீட்டில் வைத்து அவள் ஏதேனும் பேசிவிடுவாளோ என்று அஞ்சியே அவள் இல்லாமல் தனியே சென்றான்.

செழியனின் வீட்டில் வேறொரு நண்பனைக் கண்டவன் அவனோடு வெளியே சென்று விட்டான்.

ஆறரை மணிக்கு ஆரம்பித்த மழை இரவு ஒன்பது மணி வரை விடாமல் கொட்டித் தீர்த்தது. ராகவ் ஒன்பது மணிக்கு மேல் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டே வீடு வந்து சேர்ந்தான். அவளிடம் ஒன்றும் பேசாமல் தனது அறைக்குள் சென்று மறைந்தான்.

''ஒருத்தி கவலையா நிக்கிறாளே! அவகிட்ட ஏதாச்சும் சொல்லுவோம்னு தோணுதா பாரு!'' என்று நித்திலா முணுமுணுத்தாள்.

அவனோ, ''சொட்டச் சொட்ட நனைஞ்சு போய் ஒருத்தன் வந்திருக்கானே... அவன் தலையை துவட்டுவோம்னு தோணுதா பாரு!'' என்று திட்டிக் கொண்டு இருந்தான்.

அதிக நேரம் மழையில் நனைந்ததால் அன்று இரவே அவனுக்கு ஜுரம் வந்தது. உடல் நெருப்பாகக் கொதிக்க ஆரம்பித்தது. காலை ஐந்து மணிக்கு கண் விழித்த ராகவ் எழுந்து அமரவே சிரமப்பட்டான்.

கஷ்டப்பட்டு குளியலறைக்கு சென்று பல் துலக்கி வந்தான்.

'பாலைக் காய்ச்சி அதோட சேர்த்து ஒரு மாத் திரையை விழுங்குவோம். அப்போ தான் ஜூரம் குறையும்' என்று எண்ணிக் கொண்டே சமையலறை நோக்கி நடந்தவனால் வரவேற்பறையில் உள்ள சோபா வரையிலும் தான் நடக்க முடிந்தது.

அதற்கு மேல் நடக்க முடியாமல் அந்த சோபாவிலேயே படுத்தவன் சிறிது நேரத்தில் தூங்கியும் விட்டான். காலையில் வழக்கம் போல் எழுந்த நித்திலா தனது அறையில் இருந்து வெளி யேறினாள்.

'என்ன சோபாவிலே படுத்துத் தூங்குறார்? ஏன் ரூமிலே படுக்கலையா?' என நினைத்துக் கொண்டே தனக்கான காலைக் காபியை தயாரித்துக் குடித்தாள். பின் தனக்கான சமையலை செய்து வைத்து விட்டுக் குளிக்கச் சென்றாள்.

அப்பொழுதும் ராகவ் எழுந்து கொள்ளவில்லை என்றதும் சரியான கும்பகர்ணன் தான் என்று நினைத்துக் கொண்டாள். அவள் அலுவலகம் செல்லத் தயாராகி வந்த போதும் அவன் கண் விழிக்கவில்லை என்றதும் அவளுக்கு சந்தேகம் வந்தது.

அவனருகே சென்று, ''என்னங்க...'' என்று அழைத்துப் பார்த்தாள்.

அவன் அப்போதும் கண் விழிக்கவில்லை என்றதும் அவனைத் தொட்டு அசைக்க எண்ணி அவனது புஜத்தில் கை வைத்தாள். அவன் போட் டிருந்த சட்டையையும் மீறி சூடு தெரியவும் அதிர்ந்து போய் அவனது நெற்றியில் கை வைத்துப் பார்த் தாள்.

''முருகா! இதென்ன இப்படிக் கொதிக்குது! இது கூடத் தெரியாமல் இவ்வளவு நேரம் இருந்திருக் கேனே! மழையில நனைஞ்சதால ஜூரம் வந்திடுச்சா? இவ்வளவு நேரமும் எனக்கு ஏன் தோணாமல் போச்சு?'' எனப் புலம்பினாள்.

அவனது முடியை கோதிக் கொடுத்துக் கொண்டே ''எழுந்திருங்க ராகவ்!'' என்று கூறினாள்.

அவளது முடி கோதலில் உண்டான சுகத்தாலோ என்னவோ அவன் மெதுவான குரலில், ''நிது!'' என்று அழைத்தான்.

ஜூர மிகுதியிலும்... கண் திறக்க முடியாமல் கிடக்கும் இந்த நிலையிலும் தனது தொடுகை அவனை அசைக்கிறது என்றால் இதை என்னவென்று சொல்வது என்று அயர்ந்து போய் அசைவற்று நின்றாள்.

கணவனின் உடல் நிலையை எண்ணிப் பார்த் தவள் அவனை பிடித்து உலுக்கி எழுப்பினாள். அந்த உலுக்கலின் பயனால் அவன் கண் திறந்து பார்த்தான். இருக்கும் இடம் அறிந்து மெதுவா எழுந்து

அமர முயற்சி செய்தான். அவன் எழுவதற்கு அவள் உதவி செய்தாள்.

அலுவலகம் செல்லத் தயாராக உடை அணிந்து, தோளில் தொங்கிய கைப்பையுமாக நின்றவளைப் பார்த்தவன், ''உனக்கு என்ன வேணும்?'' என்றான்.

''வாங்க ஹாஸ்பிட்டல் போவோம். ஜூரம் நெருப்பா கொதிக்குது.''

''நீ ஆபிஸ்க்கு கிளம்பிட்ட போல!''

''ஆபிஸ்க்கு போகத் தான் கிளம்பினேன்.''

''அப்போ போக வேண்டியது தானே! என் போகாமல் நின்னுக்கிட்டு இருக்க?''

''எனக்கு நீங்க ஜூரமா படுத்து இருக்கிற விஷயம் அப்போ தெரியாது. இப்ப தான் தெரிஞ்சது. அதான்...'' என்றவளை இடையிட்டு,

''நீ காலையிலே எத்தனை மணிக்கு எழுந்தே?'' என்று கேட்டான்.

இப்போ எதுக்கு இந்தக் கேள்வி என்று புரியாது விழித்தாலும், ''நான் ஆறு மணிக்கு எழுந்தேன்'' என்று கணவனது கேள்விக்குப் பதில் கூறினாள்.

''நான் பாலோட சேர்த்து மாத்திரையை முழுங்க லாம்னு நினைச்சு அஞ்சு மணிக்கு இங்க வந்தேன். இதுக்கு மேல நடக்க முடியாமல் இங்கேயே படுத் துட்டேன் போல. இப்போ மணி என்ன?'' என்று கேட்டவன் சுவர் கடிகாரத்தை பார்த்துவிட்டு.

''இப்போ மணி ஒன்பதாச்சு. அப்படின்னா நீ எழுந்து மூணி நேரம் ஆச்சு. என்னடா ஒருத்தன் அசையாமல் படுத்து இருக்கானே... என்னாச்சுன்னு என்னைத் தொட்டுப் பார்க்கணும்னு உனக்கு தோணலை இல்ல?'' என்று வெறுப்பாகக் கேட்டான்.

''இல்லைங்க...'' என்றவளை இடைமறித்து.

''காலையில் எழுந்ததில் இருந்து எத்தனை தடவை என்னைக் கடந்து போயிருப்ப... நான் என்ன தெருவில போகிற யாரோ ஒரு மனுஷனா? உனக்கு வேண்டாத ஹஸ்பண்ட்டா இருந்தாலும் ஹஸ்பண்ட் தானே? அதுக்காச்சும் மரியாதை குடுத்து எழுப்பிப் பார்த்து இருக்கலாம்'' என்றான்.

''நீங்க என் ஹஸ்பண்ட் என்பதால் அக்கறைப் பட்டு தான் இப்போ வந்து எழுப்பினேன்.''

''நீ எதுக்கு இப்ப வந்து எழுப்பினேன்னு நான் சொல்லட்டுமா?'' என்றவன் அவளது முகத்தை கூர்மையாகப் பார்க்க.

உன் மனசிலே இருக்கிறதை சொல்லி முடி என்பது போல் அவள் அமைதியாக அவன் முகம் பார்த்து நின்றாள்.

''டிரைவர் வேலை பார்க்க ஆள் வேணுமே! அதை விட ஏன் இன்னைக்கு நீ தனியா வந் திருக்கேன்னு ஆபிஸில் யாராச்சும் உன்கிட்ட கேள்வி கேட்டால் பதில் சொல்லத் தெரியாமல் முழிக்கக்

கூடாதேன்னு தானே என்னை எழுப்பினே?'' என்று அவன் குற்றம் சாட்ட அவள் அமைதியானாள்.

அவன் கூறியது போல் கார் ஓட்ட அவள் அவனை எதிர்பார்க்கவில்லை என்றாலும் அவன் இரண்டாவதாக சொன்ன காரணம் உண்மையே என்பதால் மறுத்து எதுவும் கூறாமல் மௌனமாக நின்றாள்.

''ஆபிஸ்க்கு கிளம்பிப் போ! இப்ப தான் காரணம் தெரிஞ்சிடுச்சே! ராகவ் வர மாட்டான். அவனுக்கு ஜூரம் என்று கேட்கிறவங்களுக்கு பதில் சொல்லு'' என்று அவன் கோபமாக இரைய.

அவள் அவனது கோபத்தைக் கண்டு கொள்ளாது, ''ஹாஸ்பிட்டலுக்கு போவோம் வாங்க'' என்று கூப்பிட்டாள்.

''எனக்கு துணை தேவையில்லை. நானே ஹாஸ்பிட்டலுக்கு போயிடுவேன். நீ போ.''

இவ்வளவு உறுதியாக மறுப்பதால் இதற்கு மேல் அவனை மருத்துவனைக்கு கூப்பிடுவதில் பயன் இல்லை என்ற முடிவிற்கு வந்தாள். அடுத்ததாக அவளது நினைவிற்கு வந்த விஷயம் அவனது உணவு.

''நான் சமைச்ச சாதத்திலே குழம்பை ஊத்திட்டேன். அது உங்களுக்கு யூஸ் ஆகாது. உங்களுக்காக கஞ்சி ரெடி பண்ணவா?''

''என்னைக்கும் இல்லாத அக்கறை இன்னைக்கு என்ன வந்துச்சு? நானே பண்ணிக்குவேன்.''

''இல்ல... சாப்பாடாச்சும் செஞ்சு வச்சுட்டு போறேன்.''

''அடுத்தவங்ககிட்ட இருந்து நான் எந்த உதவியும் எதிர்பார்க்கிறதில்லை. அதுக்கு ஒரு லிமிட் இருக்கு இல்லையா?'' என்று அவன் குத்தினான்.

இது தன்னுடைய நேற்றைய பேச்சிற்கான பதிலடி என்பது அவளுக்குப் புரிந்தது. இருப்பினும் அவனை அப்படியே விட்டுச் செல்ல மனமில்லாமல்,

''பாலை சூடு பண்ணி தரேன். முதல்ல மாத்திரையை முழுங்குங்க'' என்றாள்.

''கெட் அவுட் ஆஃப் மை சைட்'' என்று அவன் கத்த வேறு வழியில்லாமல் கண்ணில் நிறைந்த நீருடன் வெளியேறினாள்.

அவள் சென்ற பின் மெதுவாக சமையலறைக்கு வந்து பாலை சூடு பண்ணினான். அவள் தயாரித்த காலை உணவு மதிய உணவும் அங்கே இருப்பதைக் கண்டவன்.

''அடடா! சாப்பிடாமல் போயிட்டாளா? இது தெரிஞ்சிருந்தால் அவ சாப்பிட்டு முடிச்சதுக்கு அப்புறமா திட்டி இருப்பேனே!'' என்று வருத்தப்பட்டான்.

அவள் தானாகவே மனம் மாறி வந்து தன்னை ஏற்றுக் கொள்ளும் வரை அவன் காத்திருக்கத் தயார் தான். ஆனால் ராஜதுரை மனம் மாறினால் தான்

அவள் மனம் மாறும் எனும் போது... அது இப் போதைக்கு நடக்காது என அவன் நம்பினான்.

அவளை விலக்கி வைத்தால் தான் அவள் தன்னை நெருங்கி வருவாள் என்பது அவன் எண்ணம். அதனால் தான் காலையில் அவளிடம் கடுமையாக நடந்து கொண்டான்.

பாலோடு ஒரு குரோசினை விழுங்கியவன் தனது கைப்பேசியில் இருந்து செழியனின் எண்ணிற்கு அழைப்பு விடுத்தான்.

''என்னடா மச்சான் காலங்கார்த்தால என் ஞாபகம்? இன்னும் அஞ்சு நிமிஷத்திலே ஆபிஸ் வந்துடுவேன். வந்த பிறகு பேசிக்கலாமா?'' என்று செழியன் கேட்கவும்,

''செழியா! நான் இன்னைக்கு ஆபிஸ் வரலை. ஜூரம். எனக்கு லீவு சொல்லிடு'' என்றான்.

''சொல்லிடுறேன்டா. லீவு உனக்கு மட்டுமா இல்ல நித்திலாவுக்குமா?''

''இல்லடா. எனக்கு மட்டும் தான். அவளைத் திட்டி ஆபிஸ்க்கு அனுப்பி வச்சுட்டேன்.''

''ஏன்டா ராகவ் அப்படி செஞ்சே?''

''அப்ப தான்டா சில விஷயங்களை அவ புரிஞ் சுப்பா.''

''அப்புறம் தனியா எப்படி சமாளிப்பே?''

''தனியா சமாளிக்கிறது கஷ்டம் தான்டா. எப்படி யாச்சும் மேனேஜ் பண்ணிக்குவேன்.''

''உன்னை ஹாஸ்பிட்டலுக்கு கூட்டிட்டுப் போக நான் வரட்டுமாடா ராகவ்?''

''இல்ல செழியா வேண்டாம். ஒரு வாரம் கழிச்சு இன்னைக்கு தான் நீ ஆபிஸ்க்கு போகப் போறே! அதனால நீ இங்க வர வேண்டாம். நீ எனக்கு வேற ஒரு ஹெல்ப் மட்டும் பண்ணு.''

''சொல்லுடா. செய்யுறேன்.''

''நான் திட்டினதிலே நித்திலா சாப்பிடாமல் போயிருக்காள். லஞ்சு பாக்ஸையும் எடுத்துட்டுப் போகலை. அவளை எப்படியாவது.. ஏதாச்சும் காரணம் சொல்லி... ம்ம்ம் உங்க பேட்ச் ட்ரீட்ன்னு சொல்லி சாப்பிட வச்சிடு. மொத்த செலவையும் நான் ஏத்துக் கிறேன்.''

''ஏன்டா உன் வைஃப் ஒரு ஆளை சாப்பிட வைக்க எட்டு பத்து பேருக்கு செலவு பண்ணப் போறியா?''

''பரவாயில்லடா. இல்லைன்னா அவ கண்டிப்பா சாப்பிட மாட்டாள். பணம் பெரிய விஷயமில்லடா. எனக்கு அவ சாப்பிட்டால் போதும்.''

''ஓகேடா மச்சான். உன் வைஃபை சாப்பிட வைக்க வேண்டியது என்னோட பொறுப்பு. நீ உன்

உடம்பை பார்த்துக்கோ!'' என்று கூறி செழியன் அழைப்பைத் துண்டித்தான்.

ஆட்டோவில் வந்து இறங்கிய நித்திலாவை ஆச்சரியமாகப் பார்த்த பாமா, ''என்ன நித்தி ஆட்டோ விலே வந்து இறங்கிறே? எங்க உன் ஹீரோ?'' என்று கேட்டாள்.

''என் ஹீரோ ஜீரோவாகி படுத்துக்கிடக்கிறார்.''

பாமா புரியாத பாவனையில் நோக்கவும்....

''ஜூரமா படுத்து இருக்கார் பாமா. அதைச் சொன்னேன்'' என்று விளக்கினாள்.

''அவர் ஜூரமா படுத்திருக்கும் போது நீ அங்கேயே இருக்க வேண்டியது தானே! ஒரு குடும்பக் குத்து விளக்கா அவர் பக்கத்திலே இருந்து நீ அவரை கவனிச்சுக்க வேண்டாமா? அதை விட்டுட்டு ஆபிஸில் என்னத்த வெட்டி முறிக்கிறதுக்கு கிளம்பி வந்த?'' என்று பாமா கிண்டல் பண்ண.

''கடுப்பேத்தாம போயிடு'' என்று நித்திலா எரிச்சல் பட்டாள்.

அதற்கு மேல் ஒன்றும் கேட்காத பாமா தங்களது இடத்திற்கு வந்து அமர்ந்த பின்பு தோழியிடம், ''என்ன ஆச்சு நித்தி?'' என்று வினவினாள்.

''ஆபிஸ்க்கு கிளம்பிப் போன்னு கழுத்தைப் பிடிச்சு தள்ளாத குறையா சொல்லிட்டார்.''

''ராகவ் உன்னை கொடுமைப்படுத்துறாரா நித்தி?''

''இல்ல பாமா. நான் தான் அவரைக் கொடுமைப் படுத்துறேன். என்னை சந்திச்சதில் இருந்து அவர் நிம்மதி இல்லாமல் இருக்கார். எல்லாத்துக்கும் நான் தான் காரணம்'' என்று கூறிக் கண்ணீர் விட்டாள்.

அவளது கண்ணீரைத் துடைத்த பாமா, ''ரிலாக்ஸ் நித்தி. இது ஆபிஸ். கன்ட்ரோல் யுவர்செல்ஃப்'' என்றாள்.

''என்னால் அவர் வாழ்க்கையில் இருந்து விலகவும் முடியலை. அவர் இழுத்த இழுப்புக்கு போகவும் முடியலை. அவரை வாழவும் விடாமல் விலகிப் போகவும் விடாமல் நான் தான் அவரை சித்திரவதை பண்ணுறேன்'' என்று கூறிய நித்திலா மேஜையில் கவிழ்ந்து படுத்தாள்.

பாமா அவளது முதுகை வருடிக் கொடுத்தாள். ஐந்து நிமிடத்தில் தன்னை சமாளித்துக் கொண்ட நித்திலா வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள்.

அரை மணி நேரத்திற்கு ஒரு முறை கணவனின் எண்ணிற்கு அழைத்துக் கொண்டே இருந்தாள். ஆனால் ஒரு முறை கூட அவன் அவளது அழைப்பை ஏற்றுப் பேசவில்லை.

''கோபத்திலே எடுக்காமல் இருக்காரா இல்லை தூங்குறாரான்னு தெரியலையே!'' என்று புலம்பிக் கொண்டிருந்த நித்திலாவை பார்க்க பாமாவிற்கு பாவமாக இருந்தது.

ராகவ் தட்டுத் தடுமாறி ஆட்டோ பிடித்து மருத்துவமனைக்கு சென்றான். பரிசோதனை முடிந்து மருந்துகளையும் சாப்பிடுவதற்கு பிரட்டையும் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான்.

ஒரே ஒரு ரொட்டித் துண்டை மட்டுமே அவனால் சாப்பிட முடிந்தது. மாத்திரைகளை மட்டும் விழுங்கியவன் படுக்கையில் படுத்துத் தூங்கினான்.

மதிய உணவின் போது செழியன் அவனது குழுவினர் அனைவரையும் சாப்பிட கேன்டீன் அழைத்துச் சென்றான். வேற வழியில்லாமல் அவர்களுடன் சென்ற நித்திலா சாப்பாட்டைக் கொறித்தாள்.

அவள் முதல் ஆளாய் கை கழுவ எழுந்து சென்றாள். அப்போது பாமா, ''இன்னைக்கு எதுக்கு செழியன் திடீர்ன்னு ட்ரீட்?'' என்று கேட்டான்.

''ரொம்ப சீக்கிரத்திலே காரணம் கேட்கிறியேம்மா. கேட்கிறியே!'' என்று அவன் சிவாஜி பாணியில் கூறவும், பாமா அவனை முறைத்துப் பார்த்தாள்.

''நெல்லுக்கு இறைக்கும் நீர் அங்கே உள்ள புல்லுக்கும் பாயும்னு நீங்க கேள்விப்பட்டதில்லையா?''

''கேள்விப்பட்டு இருக்கேன் செழியன். ஆனா இங்கே நெல்லு யாரு? புல்லு யாரு?''

''நெல்லு நம்ம நித்திலா. நாமெல்லாம் புல்லு'' என்று செழியன் கூறியதும் பாமா புரியாமல் விழிக்க,

செழியன் அவசர அவசரமாக நடந்ததை விளக்கினான்.

''நித்திலாவுக்காக மாதுளை ஜூஸ் ஆர்டர் பண்ணி இருக்கேன். எப்படியாச்சும் அவங்களை குடிக்க வச்சிடுங்க'' என்று கூறினான்.

அவன் கூறிய வேலையை பாமா செவ்வனே செய்து முடித்தாள். தங்களது இடத்திற்கு வந்து அவர்கள் வேலையைப் பார்க்க ஆரம்பித்தனர். பாமா அடிக்கடி நித்திலாவை திரும்பிப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

''என்னாச்சு பாமா? என்னை எதுக்கு உத்து உத்துப் பார்க்கிறே?'

''ராகவ் நல்லவர் தான் இல்ல...'' என்று பாமா தொடங்கவும்.

''ஹேய்! என்ன திடீர்ன்னு ராகவ் பத்தி பேசுறே?'' என்று நித்திலா ஆச்சரியமாக வினவினாள்.

''நீ காலையில அவ்வளவு சொன்ன போது கூட எனக்கு ராகவ் மேல கோபம் இருந்துச்சு நித்தி'' என்றதும் நித்திலா புரியாத பாவனையில் பார்த்தாள்.

''அவர் உனக்கு கட்டாயத் தாலி கட்டினாருன்னு எனக்கு அவர் மேல கோபம் இருந்துச்சு நித்தி. நான் செழியன் கிட்ட போய் சண்டை கூட போட்டேன் வேற வழி இல்லைன்னு அவர் விளக்கம் சொன்னாலும் எனக்கு ராகவ் மேல கோபம் இருந்துக்கிட்டே

தான் இருந்துச்சு. நீ காலையில அழுததும் அந்தக் கோபம் அதிகமாச்சு.

ஆனா ஜூரத்திலே கூட நீ சாப்பிடாமல் போயிட்டேன்னு கவலைப்பட்டு... உன்னை சாப்பிட வைக்கிறதுக்காக எங்களுக்கெல்லாம் சாப்பாடு வாங்கிக் கொடுத்து...'' என்று ஆரம்பித்தவள் நித்திலா ஆச்சரியமாக நோக்கவும் சற்று முன் செழியன் தன்னிடம் சொன்னதை தோழியிடம் கூறினாள்.

''அவர் உன் மேல அளவு கடந்த அன்ப வச்சிருக்கார் இல்ல?'' என்று பாமா கேட்கவும்.

நித்திலா கண்களில் நிறைந்த நீருடனும், உதட்டில் நிறைந்த புன்னகையுடனும், முகம் கொள்ளா பெருமையுடனும் தன் தலையை அசைத்து தோழியின் கூற்றை ஆமோதித்தாள்.

அன்று மாலை ஒரு மணி நேரத்திற்கு முன்பே அலுவலகத்தில் இருந்து கிளம்ப முடிவு செய்த நித்திலா செழியனிடம் சென்று அனுமதி கேட்டாள்.

''நீங்க கிளம்புங்க நித்திலா. நான் நிறைய தடவை ராகவுக்கு போன் பண்ணினேன். அவன் போனை எடுக்க மாட்டேங்கிறான். தூங்கிக்கிட்டு இருப்பான்னு நினைக்கிறேன்.

வீட்டுக்கு போனதும் அவன் எப்படி இருக்கான்னு எனக்கு ஒரு எஸ்.எம்.எஸ். பண்ணுங்க'' என்று

செழியன் கூறவும். அவள் ஆமோதிப்பாய் தலையாட்டி விடைபெற்றாள்.

22



ஆட்டோ பிடித்து வீடு வந்து சேர்ந்தவள் தன்னிடம் உள்ள சாவியைக் கொண்டு வீட்டைத் திறந்து உள்ளே நுழைந்தாள். கணவன் வரவேற்பறையில் இல்லை என்றதும் அவனது படுக்கை அறையில் எட்டிப் பார்த்தாள்.

அவன் படுத்திருப்பதைக் கண்டவள் சமையலறைக்கு சென்று ஆராய்ந்தாள். அவன் சமைத்தற்கான அறிகுறி எதுவும் இல்லை என்றதும் வருத்தம் கொண்டாள்.

அவனது அறைக்குச் செல்லும் வழியில் டீப்பாய் மீது இருந்த பிரட் பாக்கெட்டையும் மாத்திரைகள் அடங்கிய கவரையும் கண்டவள் அதன் அருகே சென்று ஆராய்ந்தாள்.

''வாங்கிட்டு வந்த பிரட்டை கூட சாப்பிடாமல் மாத்திரையை மட்டும் போட்டிருக்கார். நான் கஞ்சியை ரெடி பண்ணி வச்சிட்டுப் போயிருப்பேனில்ல! அப்படி என்ன பிடிவாதம்?'' என்று

திட்டிக் கொண்டே கணவனின் அறைக்குள் முதல் முறையாக நுழைந்தாள்.

அவனது நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். அவனது உடல் குளிர்ந்து இருந்ததைக் கண்டவள் நிம்மதி அடைந்தாள். அவனுக்கு வியர்த்துக் கொண்டிருப்பதை கண்டவள் நிமிர்ந்து மின்விசிறியை நோக்கினாள். அது ஓடட்டுமா நிக்கட்டுமா என்ற ரீதியில் ஓடிக் கொண்டிருந்தது.

''சாப்பிடலைன்னாலும் மாத்திரையாச்சும் போட்டாரே. இல்லைன்னா ஜூரம் இறங்கி இருக்காது'' என்று கூறிக் கொண்டே மின்விசிறியின் வேகத்தை அதிகப்படுத்தினாள்.

அவனது அலமாரியில் இருந்து ஒரு துண்டை எடுத்துக் கொண்டு அவனருகில் சென்றவள் அவனது நெற்றி மட்டும் கழுத்துப் பகுதிகளில் இருந்த வியர்வையை துடைத்து விட்டாள். அதன் பின்பு அவன் அருகில் அமர்ந்து அவனது முடியை கோதிக் கொடுக்க ஆரம்பித்தாள்.

''ஏன்டா உனக்கு இவ்வளவு பிடிவாதம்? நீயும் சாப்பிடாமல் நானும் நிம்மதியா இல்லாமல்...'' என்றவள் சிறிது இடைவெளிவிட்டு.

''அப்படி நான் என்ன தப்புப் பண்ணிட்டேன்? எங்க அப்பா அம்மாவுக்கு நல்ல பொண்ணா இருக்கணும்னு ஆசைப்பட்டேன். அது ஒரு தப்பா? நீ செஞ்ச காரியத்தால எங்க அப்பாவோட

வெறுப்புக்கு ஆளாகிட்டோமேங்கிற கடுப்பிலே உன்கிட்ட கடுமையா நடந்துக்கிட்டேன். என் இடத்திலே நீ இருந்தா என்ன செஞ்சு இருப்ப?'' என்று கேட்டவள்,

குனிந்து அவன் நெற்றியில் முத்தமிட்டாள். அந்த முத்தத்தினை உணராது மாத்திரைகளின் உபயத்தால் அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

''காலையில என்ன சொன்னே... நீ எனக்கு வேண்டாத ஹஸ்பண்டா? எனக்கு உன்னை பிடிக்காமல் போனால் இந்த உலகத்திலே வேற யாரையுமே பிடிக்காதுடா. ஐ லவ் யூ. ஐ லவ் யூ சோ மச்'' என்றவள் அவனது கன்னத்தில் முத்தம் பதிக்க.

அவளது கண்களில் திரண்ட நீர் அவனது கன்னத்தில் உருண்டோடியது. அவன் லேசாக அசைவது போல் தெரியவும் அவனது கன்னத்தில் வழிந்த தனது கண்ணீரை துடைத்துவிட்டு அறையை விட்டு வேகமாக வெளியேறினாள்.

கணவனின் உடல்நிலை குறித்து ஒரு குறுஞ் செய்தியை செழியனுக்கு அனுப்பி வைத்தாள். கணவனிற்காக கஞ்சி தயாரிப்பதில் ஈடுபட்டாள். அவள் துவையலை அரைப்பதற்கு மிக்ஸியை உபயோகப்படுத்தினாள். அந்தச் சத்தம் கேட்டு ராகவ் கண்விழித்தான்.

படுக்கையில் இருந்து மெல்ல எழுந்து அமர்ந்தவன், ''வந்துட்டாளா? ரொம்ப நேரம் தூங்கிட்டேன் போல!'' என்று மெல்ல முணுமுணுத்தான்.

தன் மீது கிடந்த துண்டைக் கண்டவன் ஒன்றும் புரியாது சில வினாடிகள் விழித்தான். அப்போது தான் வேகமாக சுழன்ற மின்விசிறியும் அவனது கவனத்திற்கு வந்தது.

''இது இவ வேலை தானா? ஜூரம் இறங்கினதும் வேர்த்திருக்கும்'' என்று கூறிக் கொண்டே தனது அறையில் இருந்து வெளியே வந்தான்.

அவனது நடை தடுமாறியது. சாப்பாடென்று எதுவுமே உள்ளே போகாததால் அவன் மிகவும் சோர்வாக உணர்ந்தான். அவனது அறையின் வாயிலில் சாய்ந்து நின்றான்.

அவன் சோர்ந்து போய் நிற்பதைக் கண்டவள் வேகமாக அவன் அருகில் வந்து. ''இப்படி வந்து உட்காருங்க'' என்று அவனை வழி நடத்திச் செல்ல முயன்றாள்.

''என் மேல இருந்து கையை எடு'' என்று அவன் தீனமான குரலில் என்றாலும் மிக உறுதியுடன் கூறினான்.

அவள் புரியாது அவனைப் பார்க்க...

''நான் தான் உனக்கு அடுத்தவனாச்சே! உனக்கு எதுக்கு இந்த அக்கறை? கையை எடு. நானே போய் உட்கார்ந்துக்குவேன்'' என்றான்.

கணவனின் உடல்நிலை சரியில்லாததால் அவனிடம் தர்க்கம் பண்ண விரும்பாமல், ''உங்களுக்கு

உடம்பு சரியில்லாததால் என்னை வேலைக்கு அமர்த்தி இருப்பதா நினைச்சுக்கோங்களேன்'' என்று அவனை ஒட்டியே பேச முயன்றாள்.

''வேலைக்காரின்னா எட்ட நில்லு. என் மேல கை வைக்காதே!'' என்று அப்போதும் அவன் உறுதியுடன் கூற.

''ஓகே. அப்ப உங்க வைஃபா உங்களை தொடுற உரிமை எனக்கு இருக்கு இல்லையா? உங்களை பார்த்துக்கிற கடமையும் எனக்கு இருக்கு தானே?'' என்று கேட்டாள்.

''இந்த ஒரு வாரமா நீ என் வைஃபா உன் கடமையை செஞ்சியா?'' என்று தீர்க்கமாகக் கேட்டான்.

அதற்கு மேல் அங்கே நிற்க முடியாதவனாய் தள்ளாடிக் கொண்டே சோபாவை நோக்கிச் சென்றான். பிடிக்க வந்த அவளையும் வேண்டாம் என்று கை நீட்டித் தடுத்தான்.

அவன் சோபாவில் சென்று அமர்ந்ததும் அவன் எதிரே சென்று அமர்ந்தாள். அழுகையில் துடித்த உதடுகளை அடக்கப் பாடுபட்டாள்.

''அப்படின்னா செக்ஸ் தான் வாழ்க்கையா? அது தான் ஒரு வைஃபோட கடமைன்னு சொல்லுறீங்களா?'' என்று அழுகுரலில் கேட்டாள்.

''டெஃபனிட்டா இல்லை. செக்ஸ் பத்தி நான் பேசவே இல்லை. நீ என் மனைவியா எந்த

விஷயத்திலும் நடந்துக்கலைன்னு தான் சொல்லு றேன். எந்த ஒரு மனைவியும் ஒரே வீட்டில் தனித் தனி ரூமிலே இருக்க மாட்டாள். தனி அடுப்பு, தனி சமையல்... ஒரே ஆபிஸ்க்குப் போறதுக்கு தனி வண்டி எக்ஸ்ட்ரா எக்ஸ்டரா...'' என்று அவன் குற்றம் சாட்டியதும் என்ன சொல்வதென்று தெரியாமல் விழி பிதுங்கி நின்றாள்.

''இதைப் பத்தி நாம அப்புறமா பேசுவோம். உங் களுக்காக கஞ்சி ரெடி பண்ணி இருக்கேன். முதல்ல அதைச் சாப்பிடுங்க. காலையில இருந்து எதுவுமே சாப்பிடாமல் இருக்கீங்க.''

''நீ எனக்கு எந்த உதவியும் செய்ய வேண்டாம்னு தானே இவ்வளவு நேரமா சொல்லிக்கிட்டு இருக்கேன்'' என்று அவன் பிடிவாதமாக உரைக் கவும்,

அவளால் தன் அழுகையை கட்டுப்படுத்த முடிய வில்லை. தனது கைகளில் முகம் புதைத்து அழுதாள். அவள் அழுவதை ஒன்றும் செய்ய முடியாதவனாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

'ஏன்டி ஒரு நிலையா நிக்க முடியாமல் இந்தப் பாடு படுறே? ஒண்ணு என்னை முழுசா வெறுத்து ஒதுங்கி இரு. இல்லைன்னா என்னோட சேர்ந்து வாழு. நேரத்துக்கு ஒரு மாதிரி ஏன் உன் குணத்தை மாத்திக்கிட்டு இப்படி அல்லாடுறே?' என்று மன திற்குள் பரிதவித்தான்.

ஐந்து நிமிடங்கள் கழித்து தலை நிமிர்த்தி அவனைப் பார்த்தவள், ''ப்ளீஸ் ராகவ்'' என்றாள்.

அதற்கு மேல் அவளிடம் மறுக்க முடியாதவனாய், ''போய் எடுத்துட்டு வா. அதுக்கு முன்னாடி போய் முகம் கழுவு'' என்றான்.

அவள் தனது முகத்தைத் துடைத்துக் கொண்டே குளியலறைக்கு விரைந்தாள். முகத்தை கழுவிவிட்டு சமையலறைக்குச் சென்றவள் அவனது கஞ்சியையும் துவையலையும் எடுத்துக் கொண்டு வந்தாள்.

நித்திலா அவனிடம் கஞ்சி அடங்கிய கிண் ணத்தை நீட்டவும் அவன் அதை வாங்கிக் கொண் டான்.

''போய் உன் சாப்பாட்டை எடுத்துக்கிட்டு வா.''

''முதல்ல நீங்க சாப்பிடுங்க. நான் அப்புறமா சாப்பிடுறேன்.''

''நீ காலையில செஞ்சு வச்சுட்டு சாப்பிடாமலே போன சட்னியை நான் ஃப்ரிஜ்க்குள்ளே எடுத்து வச்சிருக்கேன். அதை சூடு பண்ணிட்டு தோசையை சுட்டு எடுத்துக்கிட்டு வா. அப்புறமா நான் சாப்பிடு றேன்.''

''இல்லங்க.. கஞ்சி ஆறிடுச்சுன்னா சாப்பிட முடியாது.''

''இப்போதைக்கு என் வாய்க்கு எந்த டேஸ்டும் தெரியாது. அதனால நான் சொன்னதைச் செய்!'' என்றவன் தனது கண்களை மூடிக் கொள்ள,

அவள் அவசர அவசரமாகச் சென்று தனக்கான உணவைத் தயாரித்து எடுத்து வந்தாள். இருவரும் சேர்ந்தே உணவருந்தினார்கள். சாப்பிட்டு பத்து நிமிடங்கள் ஆனவுடன் நித்திலா கணவனது மாத்திரை களையும் தண்ணீரையும் அவனிடம் நீட்ட,

அவன் ஒன்றும் சொல்லாமல் அவற்றை வாங்கிக் கொண்டான். அவன் மாத்திரைகளை விழுங்கியதும், ''படுத்துகிறீங்களா?'' என்று கேட்டாள்.

''ரொம்ப நேரம் தூங்கிட்டேன். அதனால எனக்கு இப்ப தூக்கம் வராது. நீ போய் தூங்கு'' என்றான்.

''உங்க ரூமை லாக் பண்ணாதீங்க. திறந்து வச்சுட்டே தூங்குங்க.''

''ஏன் லாக் பண்ண வேண்டாம்னு சொல்லுறே?''

''உங்க ரூம் கதவு திறந்திருந்தால் தானே நான் நைட்ல உங்களை வந்து பார்த்துக்க முடியும்.''

''ஓகோ!'' என்றவன் அவளைத் தீர்க்கமாகப் பார்த்துக் கொண்டே, ''நீ ஏன் என்னை வந்து பார்க் கணும்?'' என்று கேட்டான்.

''உங்களுக்கு உடம்பு நல்லா இருக்கான்னு நான் பார்த்துத் தெரிஞ்சுக்க வேண்டாமா?''

''பக்கத்து ரூமிலே இருந்து வந்து எட்டிப் பார்த் துட்டு போறதுக்கு நீ என்ன பக்கத்து வீட்டுக் காரியா?'' என்று கேலியாகக் கேட்டவன் அவளை முறைப்பாய் ஒரு பார்வை பார்த்தான்.

அவனது முறைப்பைக் கண்டு பயந்து மேலே ஒன்றும் பேசாமல் அவள் தனது அறை நோக்கி நடந் தாள்.

என்றைக்குமே ராகவ் தன் படுக்கையறை கதவை பூட்ட மாட்டான். ஆனால் அன்று கடமையாய் பூட்டிவிட்டே தூங்கச் சென்றான்.

இரவு பதினோரு மணிக்கு எழுந்து கணவனின் உடல்நிலையை ஆராய எண்ணி அவனது அறைக் கதவில் கை வைத்துப் பார்த்தாள். அது பூட்டி யிருப்பது தெரிந்து அதிர்ந்தாள்.

''நீ என்ன சொல்லுறது நான் என்ன கேட்கிறதுன்னு வேலை செய்யுறார்!'' என்று திட்டிக் கொண்டே தன் அறைக்குள் நுழைந்தவள் என்ன செய்யலாம் என்று யோசித்தாள்.

'அவர் போனுக்குக் கூப்பிட்டுப் பார்ப்போமா? தூங்கிக்கிட்டு இருப்பவரைத் தொந்தரவு செய்யுற மாதிரி இருக்குமோ? ஆனா காலையில முடியாமல் சோபாவில் சுருண்டு படுத்த மாதிரி இப்பவும் அவர் பெட்டிலே படுத்திருந்தால்?

பேசாமல் போன் பண்ணுவோம். ஒரு ரிங் போன உடனே கட் பண்ணிடுவோம். முழிச்சு இருந்தா அவரே போன் பண்ணுவார்' என்று எண்ணியவளாய் கணவனின் கைபேசிக்கு அழைத்தாள்.

முதல் மணி அடிக்கவும் அழைப்பைத் துண்டித் தாள். ஐந்து நிமிடங்கள் காத்திருந்தும் எந்த ஒரு

அழைப்பும் அவனிடம் இருந்து வரவில்லை என்றதும் மறுபடியும் அதே மாதிரி அழைத்துப் பார்த்தாள். ஐந்து நிமிடங்கள் மீண்டும் காத்திருப்பு. மறுபடியும் ஒரு அழைப்பு என்று அவள் நான்கு முறை அழைத்த பின் மனம் இறங்கி அவன் அழைத்தான்.

''ஹலோ! என்னங்க ஜுரம் சரியாகிடுச்சா?''

''.....''

''நான் பேசுறது கேட்குதா? என்னங்க.. ஏதாவது பேசுங்க. கதவையும் பூட்டி வச்சுக்கிட்டீங்க'' என்று அவள் பதட்டத்துடன் பேச,

''நீ என் ரூமிலே வந்து படுத்தால் நான் உன்னை என்ன செஞ்சுடுவேன்னு நினைச்சு இன்னைக்குக் கூட அந்த ரூமிலே போய் படுத்தே? படுத்தவள் அப்படியே நிம்மதியா தூங்க வேண்டியது தானே? சும்மா நொய் நொய்ன்னு போன் போட்டு இம்சை பண்ணிக்கிட்டு...'' என்றவன் அழைப்பைத் துண்டித்தான்.

அவன் அவ்வளவு சொல்லியும் அவளுக்கு அங்கே சென்று படுப்பதற்கு மனமில்லை. அதே சமயம் அவன் கூறியது போல் மற்ற நாட்களைப் போல் அவளால் நிம்மதியாகத் தூங்கவும் முடியவில்லை.

இரவில் தாமதமாகத் தூங்கியவள் காலையிலும் தாமதமாகத் தான் எழுந்தாள். எழுந்தவுடன்

குளியலறைக்குச் சென்று முகம் கழுவி பல் துலக்கிவிட்டு கணவனை தேடி பக்கத்து அறைக்குச் சென்றாள்.

அறைக் கதவு திறந்தே தான் இருந்தது. படுக்கையில் அவன் இல்லை என்றதும் குளியலறையைப் பார்வையிட்டாள். அதுவும் வெளிப்புறுமாகத் தாழிடப்பட்டு இருந்தது. வீடு முழுவதும் தேடியும் அவன் எங்கேயும் தென்படவில்லை.

''எங்க போனாருன்னு தெரியலையே?'' என்று புலம்பிக் கொண்டே வாசல் கதவைத் திறந்து பார்த்தாள். அவனது காரும், இரு சக்கர வாகனமும் அங்குதான் இருந்தன.

''ஜுரத்தோடே ஜாகிங் போயிருக்க மாட்டார். அப்படின்னா காலையில எங்க தான் போனார்?'' என்று புலம்பிக் கொண்டே அவனது அலைபேசிக்கு அழைத்துப் பார்த்தாள்.

அவன் அழைப்பை ஏற்றதும் அவன் ஹலோ சொல்லும் முன்னாடி, ''எங்க இருக்கீங்க?'' என்றாள்.

''செங்கல்பட்டுக்குப் போய்கிட்டு இருக்கேன்.''

''செங்கல்பட்டுக்கா? எதுக்கு?''

''அங்க போனால் எங்க அம்மா என்னைப் பக்கத்திலே இருந்து பார்த்துக்குவாங்க அதுக்கு தான். அவங்க மடியிலே கொஞ்ச நேரம் படுத்திருந்தாலே ஜுரம் விட்டுவிடும். அதான்...''

நீ நேற்று அதை செய்யத் தவறி விட்டாய் என்று மறைமுகமாக அவன் கூறுவது புரிந்ததால் அவள் சில நொடிகள் அமைதியானாள்.

''இன்னும் ஜுரம் இருக்கா?''

''நைட் திரும்பவும் வந்துச்சு. இப்ப கொஞ்சம் பரவாயில்லை.''

இரவில் அவளைத் திட்டியதால் அவனுக்குச் சங்கடமாக இருந்தது. சிறு குற்ற உணர்ச்சி கூடத் தோன்றியது. அதனால் அவள் கேட்டதற்கெல்லாம் தன்மையாகவே பதில் சொன்னான்.

''நைட் ஜுரம் வந்துச்சா? என்னை எழுப்பி இருக்கலாமில்ல?''

அதற்கு மௌனமே பதிலாகக் கிடைத்தது.

''கார் இங்க நிக்குது. பஸ்லயா போறீங்க?''

''இல்லை டாக்ஸியிலே. நீ ஆபிஸ்க்கு கிளம்பிப் போ நித்திலா. நைட் தனியா இருக்கணுமோன்னு பயப்படாதே. நான் நைட் வீட்டுக்கு வந்துடுவேன். போனை வச்சுடுறேன்.'' என்றதும் போனை காதில் இருந்து எடுத்தவள் வாய் விட்டுப் பொரிய ஆரம் பித்தாள்.

''இப்பதான் பிறந்த குழந்தை இவரு! அம்மா மடியிலே ஒளிஞ்சுக்க ஜுரத்தோடு கிளம்பிப் போய்கிட்டு இருக்காரு! என் வைஃப் நான் அப்படித் தான் பார்ப்பேன்னு அன்னைக்கு சொல்லத்

தெரிஞ்சவருக்கு நீ என் வைஃப். அப்படி தான் உன் மடியிலே படுப்பேன்னு படுத்துக்க வேண்டியது தானே! நான் தான் இவர் ரூமுக்குப் போகணுமா? இவர் என் ரூமுக்கு வர மாட்டாரா?

அது வேற ஒண்ணும் இல்ல நித்திலா... இங்க இருந்தா இன்னைக்கும் உன் கையால சாப்பிட வேண்டி வந்துடுமோன்னு நினைச்சிருப்பாரு. அவ்வளவு ரோஷம்! தலைவருக்கு பிரட் டோஸ்ட்டை விட்டா வேற எதையும் செஞ்சு சாப்பிடத் தெரியாது. அதான் அவங்க அம்மாவை தேடி ஓடிட்டாரு'' என்று பொரிந்தாள்.

போனை வைத்து விடுகிறேன் என்று சொன்ன ராகவோ அவள் ஏதாவது பதில் சொல்வாள் என்று அழைப்பைத் துண்டிக்காமல் காத்து இருந்தான். அது தெரியாத நித்திலாவோ பொரிந்து தள்ளினாள்.

ஒரு புன்சிரிப்புடனே மனைவியின் திட்டை அவன் கேட்டுக் கொண்டு இருந்தான். அந்தப் பக்கம் இருந்து வேறு பேச்சு எதுவும் வரவில்லை என்றதும் அழைப்பைத் துண்டித்தான்.

அவனைக் காலையில் செங்கல்பட்டில் எதிர்பார்க் காத சேதுபதி, ''என்னப்பா இந்நேரத்திலே நீ மட்டும் தனியா வந்து இருக்கே?'' என்று கேட்டார்.

பூங்கோதையோ, ''உடம்பு சரியில்லையாடா? முகமே சுரந்து போய் இருக்கு'' என்று கேட்டுக்

கொண்டே அருகில் வந்து அவனது கழுத்தில் கை வைத்துப் பார்த்தார்.

ஒரே பார்வையில் ஒரு அம்மாவால் மட்டும் எப்படி நிலைமையை கணிக்க முடிகிறது என்று வியந்து கொண்டே ராகவ் வீட்டிற்குள் நுழைந்தான்.

''நேத்திலே இருந்து ஜுரம். இப்பக் கொஞ்சம் பரவாயில்லை. ஜெர்மனியிலே இருக்கிறப்போ உடம்பு சரி இல்லாமல் போகும் போதெல்லாம் உங்க பக்கத்திலே இருக்கணும் போலத் தோணும். அப்போ என்னால வர முடிஞ்சதில்லை. அதான் இன்னைக்கு வந்துட்டேன்.''

''நித்திலா எங்கடா?''

''அவ நேத்து என்னைப் பார்த்துக்கிட்டாள். இன்னைக்கு அவளை ஆபீஸ் போகச் சொல்லி இருக்கேன். நான் சாயந்திரமா கிளம்பிப் போயிடு வேன்.''

''அவளையும் கூட்டிட்டு வந்து இருக்கலாமில்ல.''

''இல்லைம்மா. முதன் முதலா நம்ம வீட்டுக்கு நாங்க வரும்போது நல்ல சுகத்தோடவும் சந்தோஷத் தோடவும் நுழையணும்னு நினைச்சேன். அதான் அவளை விட்டுட்டு வந்துட்டேன்.''

''ஞாயித்துக்கிழமை ரிசப்ஷன். இன்னும் நாலு நாள் தான் இருக்கு. நீ இப்படி படுத்துக் கிடக்கிறே...'' என்று பூங்கோதை புலம்பினார்.

அவனது வரவேற்பு நிகழ்ச்சியை வரும் ஞாயிறன்று செங்கல்பட்டில் வைத்து நடத்த சேதுபதி ஏற்பாடு செய்திருந்தார்.

''கவலைப்படாதீங்கம்மா. உங்களோட கஷா யத்தைப் போட்டுக் குடுங்க. இன்னைக்கு சாயங் காலத்துக்குள்ள சரியாகிடுவேன்.''

''ரிசப்ஷன் பத்திரிகை குடுக்கப் போற இடத்தி லெல்லாம் என் கல்யாண விஷயமா உங்களைக் கேள்வி கேட்டுக் குடையுறாங்களாப்பா?'' என்று ராகவ் வருத்தத்தோடு கேட்க,

''அதெல்லாம் ஒண்ணுமில்லப்பா. அப்படியே பேசினாலும் உங்க ரிசப்ஷன் வரைக்கும் பேசுவாங்க. அதுக்கப்புறம் அவங்களுக்கு வேற விஷயம் கிடைச் சிடும். இதை மறந்துடுவாங்க. அதனால இதை யெல்லாம் பெருசு படுத்தக்கூடாதுப்பா. நீ சந் தோஷமா இருக்க இல்ல? எனக்கு அது போதும்!' என்றதும் ராகவ் புன்னகைத்தான்.

''நித்திலாக்கு சமைக்கத் தெரியுதா ராகவ்? நீ ஏதாச்சும் அவளுக்கு உதவி செய்யுறியா?'' என்று பூங்கோதை கேட்டதும்,

நித்திலாவின் சமையலைச் சாப்பிட்டு விட்டு பாமா முகம் சுளித்த காட்சி அவனின் கண் முன்னே வந்தது. அவன் ஒரு புன்சிரிப்போடு,

''சுமாரா சமைக்கிறாராம்மா. நானும் கிச்சனிலே வேலை செய்யுறேன்'' என்றான்.

மனைவியின் தனிச் சமையல் பற்றிய உண்மையைச் சொல்லாமல், அதே சமயம் பொய்யும் இல்லாத ஒரு பதிலை அவன் கூறினான்.

அவன் தன் தாயிடம் மனைவியைப் பற்றி எதுவும் தெரிவிக்க விரும்பவில்லை. அவர்கள் இருவருக்கும் இடையே நடக்கும் சண்டையைப் பற்றிக் கூறி தன் தாயை வேதனைப்படுத்த வேண்டாம் என்று ராகவ் நினைத்தான்.

ஆனால் அனுபவ அறிவு உள்ள பூங்கோதையால் கண்டு கொள்ள முடியாதா என்ன? மகனும் மருமகளும் சமாதானமாகப் போயிருந்தால் இந்நேரம் மருமகள் தன்னிடம் போனில் பேசி இருப்பாள். அவள் அவ்வாறு பேசாததில் இருந்தே அவர்களுக்கு இடையே சுமுக உறவு இன்னும் ஏற்படவில்லை என்பதை அந்தத் தாயால் கணக்கிட முடிந்தது.

ஆனால் முன்பெல்லாம் தன் மகனின் முகத்தில் தென்படும் சோகம் இப்போது மறைந்து இருப்பதைக் கண்டார். மனைவியைப் பற்றிப் பேசும் போதெல்லாம் அவனது முகத்தில் மெல்லிய கோடாய் வந்து போகும் புன்னகையைக் கண்டு அவர் நிம்மதியானார். தன் மகன் வாழ்க்கை கூடிய சீக்கிரத்தில் சீராகும் என்று நம்பினார்.

பூங்கோதை மகனுக்கு பத்தியமாய் சமைத்துப் போட்டு அருகில் இருந்து கவனித்துக் கொண்டார். மாலை ஐந்து மணிக்கே அவன் கிளம்பி விட்டான்.

செங்கல்பட்டில் நடக்க இருக்கும் வரவேற்பு நிகழ்ச்சி குறித்து இதுவரை நித்திலாவிடம் அவன் பேசவில்லை. அதை அவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ என்று பயந்தே அவளிடம் சொல்லாமல் இருந்தான்.

அவன் சென்னையிலும் ஒரு வரவேற்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து கொண்டு இருந்தான். அலுவலக நண்பர்களுக்கான நிகழ்ச்சி என்பதால் அதில் கலந்து கொள்ள அவள் மறுக்க மாட்டாள் என நம்பினான். ஆனால் செங்கல்பட்டுக்கு வர அவள் சம்மதிப்பது கடினம் என நினைத்தான். எப்படியாகிலும் சமாளிக்கத் தானே வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

புதன்கிழமையில் இருந்து இருவரும் வழக்கம் போல் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தார்கள்.

23



வெள்ளிக்கிழமை நித்திலாவின் பெரியப்பா மகளுக்கு திருமணம் நடக்க இருந்தது. சரோஜினியும் ராஜதுரையும் சென்றிருந்தார்கள். ராஜதுரையைப் பார்ப்பவர்களெல்லாம் நித்திலாவின்

திருமணம் பற்றிப் பேசியே அவருக்கு எரிச்சல் மூட்டினார்கள்.

ராஜதுரை சொந்தக்காரர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாதவராய் பந்தி நடக்கும் இடத்திற்குச் சென்று பந்தியை மேற்பார்வை பார்க்கிறேன் என்று அங்கேயே இருந்து கொண்டார்.

சரோஜினியிடம் கேட்டவர்களுக்கு தன்னால் முடிந்த வரையில் அவர் பதில் கொடுத்தார். பதில் அளிக்க முடியாத நிலை ஏற்பட்ட போது மணமேடைக்கு அருகே நின்று கொண்டு அய்யர் கேட்கும் உதவிகளைச் செய்ய ஆரம்பித்தார்.

திருமணம் இனிதாக நடந்தேறியது. தன் மகளுக்கு இப்படி ஒரு திருமணம் நடைபெறக் கொடுத்து வைக்கவில்லையே என்று சரோஜினியால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

திருமணம் முடிந்து அனைவரும் கிளம்பிவிட்டார்கள். நெருங்கின உறவினர்கள் மட்டுமே எஞ்சி இருந்தனர்.

அப்பொழுது ஒரு உறவினர் வஜ்ரவேலுவிடம், ''என்னப்பா வேலு உன் பையனுக்கு சொந்தத்திலேயே பெண்ணு பார்த்துப் பேசி முடிச்சிட்டதா கேள்விப்பட்டோம். அப்படியா?'' என்றார்.

''ஆமாங்கண்ணே. நீங்க கேள்விப்பட்டது சரி தான்.''

''பொண்ணு உன் பங்காளி சேகரோட தங்கச்சி பொண்ணாமில்ல?''

''ஆமாங்கண்ணே.''

''உனக்கும் சேகருக்கும் ஆகாதேப்பா!''

''நான் என்ன அவன் வீட்டிலா சம்பந்தம் பண்ணப் போறேன்? அவர் தங்கச்சி வீட்டிலே தானே!''

''அப்படின்னா உன் தம்பி மகளை சேகரோட சம்பந்தி வீட்டிலேயே கட்டிக் கொடுத்திருக்கலாமே!''

''கட்டிக் கொடுத்திருக்கலாம். என் தம்பி பொழைக்கத் தெரியாதவண்ணே! அதான் நல்ல சம்பந்தத்தை விட்டுட்டான். ஆனா அவன் பொண்ணு அவனை மாதிரி இல்லண்ணே! அதான் ஓடிப் போய் கல்யாணம் பண்ணிக்கிடுச்சு'' என்றார்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த சரோஜினி தன் கணவரை திரும்பிப் பார்த்து முறைத்தார். ராஜதுரை இடிந்து போய் அங்கே இருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து விட்டார்.

'இவர் பேச்சைக் கேட்டுத் தானே நான் அந்தக் கல்யாணதிற்கு தடை விதித்தேன். இத்தனைக்கும் என் பொண்ணுக்கும் அந்தப் பையனுக்கும் ரிஜிஸ்டர் கல்யாணமே ஆகி இருந்ததே! அந்தப் பையன் போலீஸிலே ஒரு புகார் கொடுத்திருந்தால் போலீஸே என் பொண்ணையும் அவனையும் சேர்த்து வச்சிருப் பாங்களே!

ஆனா அவங்க அப்படிச் செய்யாமல் என் வீடு தேடி சமரசம் பேச ரெண்டு தடவை வந்தாங்களே! இவருக்காகத் தானே நான் அவங்களை அவமானப் படுத்தி அனுப்பினேன்.

என் பொண்ணு வடிச்ச கண்ணீரைக் கூடக் கண்டும் காணாமலும் இருந்தேனே! அதுக்கு எனக்குக் கிடைச்ச பேரு தான் இந்தப் பொழைக்கத் தெரியாதவனா?'' என்று உள்ளுக்குள் நொறுங்கிப் போனார்.

அதற்கு மேல் அவர்களால் அங்கே இருக்க முடியவில்லை. வீட்டிற்குக் கூடச் செல்லாமல் மன அமைதியைத் தேடி நேராக கோவிலுக்குச் சென்றார்கள்.

அன்று தன் பெரியப்பா மகளின் திருமணம் என்பதை நினைத்துப் பார்த்த நித்திலாவிற்கு அலுவலகத்தில் இருப்பே கொள்ளவில்லை.

'அம்மாவும் அப்பாவும் கல்யாணத்துக்குப் போயிருப்பாங்க. எல்லோரும் என் கல்யாணம் பத்திப் பேசியே அவங்களை வெறுப்பேத்தி இருப்பாங்களே!' என நினைத்து மறுகினாள்.

மதியத்துக்கு மேல் அவளால் அலுவலகத்தில் தாக்குப் பிடிக்க முடியாது என்று தோன்றியதால் செழியனிடம் சென்று, ''எனக்கு வீட்டுக்குப் போகணும். பெர்மிஷன் தர முடியுமா? இல்லைன்னா

ஹாஃப் டே லீவு எடுத்துக்கிறேன்'' என்று கூறினாள்.

அவனிடம் இருந்து விடைபெற்று அலுவலகத்தை விட்டு வெளியேறினாள். அவளுக்கு தன் கணவனிடம் சொல்லிவிட்டுச் செல்ல வேண்டும் என்று தோன்றவில்லை.

அவளுடைய மன உளைச்சலுக்குக் காரணமே யாருமில்லாமல் நடந்த அவர்களது திருமணமே! அதை நடத்தி வைத்தவன் அவன்! அவனால் தானே இன்று என்னுடைய பெற்றோர்கள் அவமானப்பட்டிருப்பார்கள் என்று நினைத்தவளுக்கு அவன் மீது கோபமும் எரிச்சலும் ஏற்பட்டதால் அவனிடம் ஒன்றும் தெரிவிக்காமல் அலுவலகம் விட்டு வெளியேறினாள்.

தன் வீடு நோக்கி ஆட்டோவில் சென்றாள். ஆட்டோவில் சென்று கொண்டிருக்கும் போதே தனது பெற்றோர் வேறொரு ஆட்டோவில் சென்று கொண்டிருப்பதைப் பார்த்தாள். தான் பயணம் செய்து கொண்டிருந்த ஆட்டோ ஓட்டுநரிடம் தன் பெற்றோர்கள் சென்று கொண்டிருந்த ஆட்டோவைப் பின் தொடருமாறு கூறினாள்.

அந்த இரு ஆட்டோக்களும் கோவிலை அடைந்த போது மணி மதியம் மூன்றே முக்கால்.

கோவில் திறந்து இருந்தது. ஆனால் இன்னும் சன்னதி திறக்க நேரம் ஆகும் என்பதால் மக்கள்

பிரகாரத்தில் அமர்ந்திருந்தார்கள். அந்தக் கோவில் பெரிதாக இருந்ததால் மக்கள் தங்கள் வசதிக்கு ஏற்ப எங்கெல்லாம் நிழல் தென்படுகிறதோ அங்கெல்லாம் அமர்ந்திருந்தனர்.

நித்திலாவின் பெற்றோரும் அப்படி ஒரு இடம் தேடி அமர்ந்தனர்.

நித்திலா அவர்கள் பின்னோடு சென்று, ''அம்மா! அப்பா!'' என்று மெதுவாக அழைத்தாள்.

''நித்தி!'' என்று கூவிக் கொண்டே சரோஜினி மகளைத் திரும்பிப் பார்த்தார்.

ராஜதுரை மகளை நிமிர்ந்து பார்க்கவில்லை. தன் அண்ணன் கூறியதைக் கேட்டதில் இருந்து அவருக்குக் குற்ற உணர்ச்சி உண்டாகி இருந்தது. அதனால் அவரால் தன் மகள் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

தன் மேல் உள்ள கோபத்தினால் தான் அப்பா தன்னை நிமிர்ந்து கூடப் பார்க்க மறுக்கிறார் என நித்திலா நினைத்துக் கொண்டாள்.

''எப்படிப்பா இருக்கீங்க? இன்னைக்குக் கல்யாண வீட்டிலே உங்களை எல்லோரும் ரொம்ப அவமானப்படுத்தினாங்களா?'' என்று கேட்டுக் கொண்டே நித்திலா கண்ணீர் விட, ராஜதுரை மேலும் வருந்தினார்.

''அதெல்லாம் ஒண்ணும் இல்லை நித்தி. நீ எங்கே இந்நேரத்திலே? ஆபீஸ்க்குப் போகலையா?'' என்று சரோஜினி கேட்டார்.

அப்போது ராகவிடம் இருந்து நித்திலாவின் கைபேசிக்கு அழைப்பு வந்தது.

''நீ வீட்டுக்குக் கிளம்பிட்டேன்னு செழியன் சொன்னான். ஏன் நிது? என்னாச்சு? உடம்பு சரியில்லையா?'' என்று அவன் அக்கறையுடனும் பதட்டத்துடனும் விசாரித்தான்.

''இல்லை'' என்று ஒற்றை வார்த்தையை அவள் வேண்டா வெறுப்பாய் உச்சரித்தாள்.

முகத்தை இவ்வளவு கோபமாக வைத்துக் கொண்டு யாரிடம் பேசுகிறாள் என்று அவளைப் பெற்றவர்கள் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தனர்.

''அப்புறம் ஏன் ஆபிஸில் இருந்து பாதியிலே கிளம்பிப் போயிருக்க? என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லி இருக்கலாமில்ல!''

''என்னோட பிரச்சனையே நீங்க தான்! உங்ககிட்ட நான் ஏன் சொல்லணும்?'' என்று கோபமாகக் கேட்டவள் அழைப்பைத் துண்டித்தாள். கைபேசியை அணைத்தும் வைத்தாள்.

''யாரு நித்தி போனிலே? எதுக்கு இவ்வளவு கோபமா பேசினே?'' என்று சரோஜினி விசாரிக்க,

''அவர் தான்'' என்று கோபம் சற்றும் குறையாமல் அவள் கூறினாள்.

''அவர் தான்னா.. மாப்பிள்ளையா? உனக்கு எதுக்கு அவர் மேல இவ்வளவு கோபம்?''

''அவர் தானேம்மா எல்லாப் பிரச்சனைக்கும் காரணம்? இன்னைக்கு நீங்க அவமானப்பட்டதுக்கு. நான் இன்னைக்கு நம்ம வீட்டுக்கு வர முடியாமல் போனதுக்கு. அப்பா என்னை வீட்டை விட்டுத் துரத்தினதுக்கு. இப்படி எல்லாத்துக்குமே அவர் தானே காரணம் அப்புறம் அவர்கிட்ட நான் சிரிச்சா பேச முடியும்?''

'என்ன சொல்கிறாள் இந்தப் பெண்?' என்று நினைத்தபோதே சரோஜினியின் பெற்ற வயிறு கலங்கியது.

''அப்படின்னா இந்த ரெண்டு வாரமா அவரை முறைச்சுக்கிட்டு தான் அவர் கூட இருக்கியா?'' என்று அவர் பதட்டமாகக் கேட்க,

''நான் வேற என்ன செய்வேன்னு நீங்க எதிர்பார்த்தீங்க? அவர் கூட சந்தோஷமா வாழ் வேன்னா? அவர் வீட்டிலே தனி ரூமிலே தனி சமையல் பண்ணி சாப்பிட்டுக்கிட்டு நான் தனியா தான் இருக்கேன்'' என்றதும் சரோஜினி இடிந்து போனார்.

அவரது முக மாறுதலைக் கண்ட நித்திலா, ''என்னம்மா ஆச்சு?'' என்று பதறினாள்.

அவளைக் கோபமாக முறைத்துப் பார்த்துக் கொண்டே சரோஜினி பேச ஆரம்பித்தார்.

''இத்தனை நாளும் நீ மாப்பிள்ளை கூட சண்டை தான் போட்டுக்கிட்டு இருந்தியா? உனக்கு அறிவே கிடையாதா? இப்ப சொல்லுறேன். நீங்க ரெண்டு பேரும் நல்லா கேட்டுக்கோங்க. உன் கல்யாணத்துக்கு திட்டம் போட்டுக் குடுத்தது நான்!'' என்று அழுத்தம் திருத்தமாக சரோஜினி உரைக்க, ராஜதுரையும் நித்திலாவும் அதிர்ந்து போய் அமர்ந்திருந்தனர்.

''உன் பிறந்த நாளுக்கு மறுநாள் அப்பா வெளியூர் போனார். அன்னைக்கு நான் மாப்பிள்ளையை உங்க ஆபீஸ்க்கு வந்து சந்திச்சேன் என்றவர் அன்று நடந்ததை அவர்கள் இருவருக்கும் எடுத்துரைத்தார்.

* * *

சரோஜினி நித்திலாவின் அலுவலகத்திற்கு வந்து ரிசப்ஷனில் இருந்த பெண்ணிடம், ''நான் ராகவைப் பார்க்க வந்திருக்கேன்'' என்றார்.

''எந்த ராகவ்? என்ன டெஸிக்னேஷன்? அதாவது, என்னவா வேலை பார்க்கிறார்?''

''அது எனக்குத் தெரியாது. அவங்க அப்பா பேர் சேதுபதி. ரெண்டு வாரத்துக்கு முன்னாடி தான் இங்க வந்து ஜாயின் பண்ணியிருக்கார்'' என்றதும்,

''ஓகே. நான் அவரை வரச் சொல்றேன். நீங்க யாரு? உங்க பேர் என்னன்னு சொல்லுங்க?''

''அவர்கிட்ட சரோஜினின்னு சொல்லுங்க. அவருக்குத் தெரியும்'' என்றவர் அங்கு போடப் பட்டிருந்த இருக்கையில் அமர்ந்து தன் மருமகனுக் காக காத்திருக்க ஆரம்பித்தார்.

ஐந்து நிமிடங்கள் கழித்து வெளியே வந்த ராகவ், ''வாங்க அத்தை. என்னைத் தேடி ஆபீஸ்க்கே வந்திருக்கீங்க. என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

''அன்னைக்கு நீங்க வீட்டுக்கு வந்தபோது நான் வீட்டிலே இல்லாமல் போயிட்டேன். அவர் உங்க கிட்ட அப்படி நடந்துக்கிட்டதுக்கு நான் உங்ககிட்ட மன்னிப்புக் கேட்டுக்கிறேன் மாப்பிள்ளை.''

''அதை விடுங்க அத்தை.''

''அவர் ஊரிலே இருந்ததால என்னால உடனே வந்து உங்களைப் பார்க்க முடியலை. உங்க போன் நம்பரும் எனக்குத் தெரியாது. இல்லைன்னா போனிலாச்சும் மன்னிப்பு கேட்டிருப்பேன்.''

''அத்தை நான் தான் அதை மறந்திடுங்கன்னு சொல்லுறேனே! அதுக்காகவா அத்தை இவ்வளவு தூரம் வந்தீங்க?''

''அதுக்காக மட்டும் இல்லை. நான் உங்ககிட்ட கொஞ்சம் தனியாப் பேசணும் மாப்பிள்ளை.''

''நீங்க இங்க வந்தது நித்திலாவுக்குத் தெரியுமா?''

''இல்ல மாப்பிள்ளை. தெரியாது. அவங்க அப்பா ஊரிலே இல்ல. உங்க கல்யாண விஷயமா உங்க கிட்டவும் உங்க அம்மா அப்பாகிட்டவும் நான் பேசணும். அவங்களைப் பார்க்க முடியுமா? ஆனா நித்திலா அப்பாவுக்குத் தெரியாமல் என்னால செங்கல்பட்டு வரைக்கும் வர முடியாது. உங்க அப்பா அம்மா சென்னைக்கு வருவாங்களா?'' என்று தயக்கத்துடன் இழுத்தார்.

ராகவ் சில நொடிகள் தன் கண்களை மூடி யோசித் தான்.

''நீங்க இப்படி உட்கார்ந்திருங்க. நான் எங் கப்பாகிட்ட பேசிட்டு சொல்லுறேன்'' என்றவன் வெளியே சென்று தன் தந்தையிடம் பேசிவிட்டு வந்தான்.

தன் மகன் வாழ்க்கையில் நல்லது நடக்காதா என்று காத்துக் கொண்டிருந்த சேதுபதி சென்னை வரு வதற்கும் சரோஜினியைச் சந்திப்பதற்கும் சம்மதித் தார்.

சரோஜினியின் அருகில் வந்த ராகவ், ''அத்தை! நித்திலாகிட்ட வீட்டு சாவி இருக்குதா? இல்ல நித்திலா ஆபீஸ் விட்டு வரும்போது நீங்க வீட்டிலே இருந்தே ஆகணுமா?'' என்று வினவினான்.

''நான் வீட்டிலே இருக்கணும்னு அவசியமில்லை மாப்பிள்ளை. சாயங்காலம் நான் கோவிலுக்குப்

போறதா ஏற்கனவே ஒரு பொய்யைச் சொல்லி காலையில அவள் ஆபீஸ் கிளம்பும்போதே அவகிட்ட இன்னொரு செட் சாவியைக் குடுத்துட்டேன்.''

''அப்படின்னா இப்ப நீங்க வீட்டுக்குப் போங்க. ஆறு மணிக்கு கோவிலில் பார்ப்போம்'' என்று கூறியவன் எந்தக் கோவிலில் சந்திப்பது என்றும் கூறினான்.

சரியாக அந்த நேரத்திற்கு தான் கோவிலில் காத்திருப்பதாக வாக்களித்துவிட்டு சரோஜினி அலுவலகம் விட்டு வெளியேறினார்.

அன்று மாலை சொன்ன நேரத்திற்கு ராகவ் தனது பெற்றோர்களுடன் வந்து சேர்ந்தான் சரோஜினி ஏற்கனவே அங்கே வந்து காத்திருந்தார்.

''வாங்க சம்பந்தி!'' என்று சரோஜினி அவர்களை வரவேற்க,

சேதுபதி தன் தலையை ஆட்டினார். பூங்கோதை வேண்டா வெறுப்பாய் தலையாட்டிவிட்டு முகம் திருப்பிக் கொண்டார்.

அவருடைய கோபத்தில் நியாயம் இருந்ததால் சரோஜினி அவரது முகத்திருப்பலை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

அவர்கள் அனைவரும் பிரகாரத்தில் அமர்ந்து பேச ஆரம்பித்தனர்.

''மன்னிச்சிடுங்கன்னு சொல்லி நான் மன்னிப்புக் கேட்பதால உங்க கோபம் குறையாதுன்னு எனக்குத் தெரியும். ஆனா உங்ககிட்ட முறையா மன்னிப்பு கேட்காமல் பேச்சை ஆரம்பிக்கவும் எனக்கு சங்கடமா இருக்கு'' என்ற சரோஜினி,

தனது இரு கைகளையும் கூப்பி, ''உங்களால முடிஞ்சா என்னையும் என் வீட்டுக்காரரையும் மன்னிச்சிடுங்க'' என்றார்.

''பரவாயில்லை. அதை விடுங்க. என்ன விஷயமா எங்களைப் பார்க்கணும்னு சொன்னீங்க? அதைப் பத்திப் பேசுங்க'' என்று சேதுபதி கூறவும்,

''நம்ம பிள்ளைங்க கல்யாண விஷயமா பேசத் தான் வரச் சொன்னேன்'' என்று சரோஜினி கூறவும் பூங்கோதை திரும்பி உட்கார்ந்தார்.

''அவங்க கல்யாணத்துக்கு உங்க வீட்டுக்காரர் ஒத்துக்கிட்டாரா?'' என்று சேதுபதி ஆச்சரியமாய் வினவினார்.

''அண்ணே! முதல்ல நீங்க ஒரு விஷயத்தைப் புரிஞ்சுக்கணும். எங்க வீட்டுக்காரர் அடாவடிக்காரர். பிடிவாதக்காரர். தான் பிடிச்ச முயலுக்கு மூணே காலுன்னு நிக்கிறவர் தான். இத்தனை நாளும் என் பெண்ணிடம் உங்க பையன் கூடப் பேசக் கூடாதுன்னு தடை உத்தரவு போட்டாரே ஒழிய வேறு மாப்பிள்ளை பார்க்கவும் இல்லை'' என்று சரோஜினி கூறியதும்,

''அப்படின்னா அன்னைக்கு வந்தவன் தானா வந்தான்னா சொல்லுறீங்க?'' என்று ராகவ் குற்றம் சாட்டினான்.

கௌசிக் பற்றிய விஷயம் அறியாத சேதுபதியும் பூங்கோதையும் என்ன சொல்கிறாய் என்பது போல் ராகவைப் பார்த்தனர். அவன் அவர்கள் புறம் திரும்பாமல் சரோஜினியை பார்த்துக் கொண்டிருந்தான்.

''உண்மையிலே அன்னைக்கு அப்படி தான் மாப்பிள்ளை நடந்தது'' என்று சரோஜினி அன்று நடந்ததை விளக்க,

''முதல்லயே என் பொண்ணுக்குக் கல்யாணம் முடிவாகிடுச்சுன்னு நித்திலா அப்பா சொல்லி இருந்தா இந்தக் குழப்பமே வந்திருக்காதில்ல?'' என்று ராகவ் கேட்கவும் சரோஜினி பதில் சொல்ல முடியாமல் அமைதி காத்தார்.

''மாபிள்ளை! நான் எங்க வீட்டுக்காரர் கூட பல வருஷமா வாழ்ந்திருக்கேன். அவர் உங்களை வேண்டாம்னு நினைச்சிருந்தா என்னைக்கோ உங்களை டைவர்ஸ் பண்ணச் சொல்லி நித்திலா கிட்ட சொல்லி இருப்பார். அவருக்கு தான் சொன்னது நடக்கணும். அந்தப் பிடிவாதம் தானே ஒழிய உங்களை விட்டுட்டு வேற மாப்பிள்ளை பார்க்கிற ஐடியா இல்லை. இதை நீங்க நம்பி தான் ஆகணும்.''

''அப்போ உங்க வீட்டுக்காரர் எங்ககிட்ட வந்து கல்யாணத்தைப் பேச வேண்டியது தானே!'' என்று பூங்கோதை இடக்காக மொழிய,

''அவர் குணம் எனக்கு நல்லா தெரிஞ்சதால அப்படி ஒண்ணு நடக்கிறதுக்கு வாய்ப்பு கம்மின்னு எனக்குத் தெரியும்'' என்று உள்ளே போன குரலில் சரோஜினி கூறினார்.

''இப்ப நாங்க என்ன செய்யணும்னு நீங்க எதிர் பார்க்கிறீங்க?'' என்று சேதுபதி கேட்டதும்,

''குறிச்ச முஹூர்த்தத்திலே இவங்க கல்யாணத்தை நடத்திடலாம்'' என்று சரோஜினி யோசனை சொல்ல மற்ற மூவரும் திகைத்துப் போய் அமர்ந்திருந்தார்கள்.

சரோஜினி தனது திட்டத்தை விளக்கினார்.

''எங்க வீட்டுக்காரர் கல்யாணம் பேச வரமாட்டார். அவர் சொல்லாமல் என் பொண்ணும் வீட்டை விட்டுக் கிளம்பிப் போக மாட்டாள். பேசாமல் அவகிட்டயும் அவங்க அப்பாகிட்டயும் சம்மதம் கேட்காமல் கோவில்ல வச்சு தாலி கட்டிடுங்க. இந்தப் பிரச்சனைக்கு இதுதான் முடிவு'' என்று சரோஜினி கூறியதும்,

''நித்திலா தாலியைக் கழட்டி விசிறி அடிச்சிட்டா என்ன பண்ணுறது?'' என்று ராகவ் சந்தேகம் கேட்டான்.

''கண்டிப்பா அப்படிப் பண்ண மாட்டாள் மாப் பிள்ளை. நாங்க எங்க பொண்ணை அப்படி வளர்க்கலை. அன்னைக்கு கௌசிக் வந்தப்போ எதைப் பத்தியும் யோசிக்காமல் எல்லோருக்கும் முன்னாடி துணிச்சலா நீங்க தான் அவளோட புருஷன்னு சொன்னாள்ல, அவளை நம்புறதுக்கு அது ஒண்ணே போதும். அவ அப்படிச் செய்ய மாட்டாள்'' என்று உறுதியாகக் கூறினார்.

''அது மட்டுமில்ல. அன்னைக்கு வீட்டுக்குத் திரும்பி வந்தவள் அவளோட அப்பாகிட்ட உங்களைத் தவிர வேற யாரையும் கல்யாணம் பண்ண மாட் டேன்னு தெளிவாச் சொன்னாள்.''

''ஏற்கனவே குறிச்ச முஹூர்த்தத்திலே கல் யாணம் பண்ணனும்னு சொல்லுறீங்க. அதுக்கு இன்னும் ரெண்டு வாரம் கூட இல்லையே. இதுல கல்யாணப் பத்திரிகை அடிச்சு, சொந்தக்காரங்க எல்லோரையும் கூப்பிட்டு, இதெல்லாம் நடக்கிற காரியமா?'' என்று சேதுபதி மலைத்துப் போய் கேட்க,

''விஷயம் காதும் காதும் வச்ச மாதிரி நடக்கணும் சம்பந்தி. பத்திரிகை அடிச்சு நீங்க ஊர் பூராவும் குடுக்க ஆரம்பிச்சா இவருக்கு விஷயம் தெரிஞ் சிடும். அப்புறம் நாம போடுற திட்டமெல்லாம் பாழாப் போயிடும்'' என்று சரோஜினி கூறவும் பூங்கோதை பொரிய ஆரம்பித்தார்.

''எங்களுக்கு இருக்கிறது ஒரே பையன். அவன் கல்யாணத்தைப் பத்திரிகை கூட அடிக்காமல் ஏன் நாங்க பண்ணனும்? திருட்டுத்தனமா தாலி கட்டி உங்க பொண்ணுகிட்ட எதுக்குத் தொங்கிக் கிட்டு இருக்கணும்? அதை விடப் பேசாமல் ஒரு கையெழுத்தைப் போட்டு இந்தக் கல்யாணத்தைச் செல்லாததா மாத்திட்டு அவங்கவங்க வழியைப் பார்த்துக்கிட்டுப் போயிடலாமில்ல!'' என்றார்.

'எங்களிடையே இருக்கும் அன்பும் பாசமும் குறையாமல் இந்த ஜென்மம் மட்டும் இல்லாமல் அடுத்த ஜென்மமும் இந்த பந்தம் தொடர வேண் டும்!' என்று நித்திலா அன்று கூறிய வார்த்தைகள் ராகவின் காதில் ரீங்காரமிட்டன.

'அவளை எப்படி மறக்க முடியும்? ஒரு கையெழுத்தா எங்களை பிணைத்து வைத்துள்ளது? எங்க ரெண்டு பேருடைய மனசில இருக்கிற காதல் தானே என்னை இந்தியாவிற்கு இழுத்து வந்திருக்கு' என்று ராகவ் எண்ணமிட்டான்.

ராகவ் தனக்கு இல்லை என்றால் மகள் தாங்கு வாளா என்று சரோஜினி யோசித்துப் பார்த்தார்.

'அவள் நேத்து கொண்டு வந்த புடவையைக் கண்டிப்பா ராகவ் தான் பரிசளித்து இருக்கணும். அதை அவள் தடவிப் பார்த்த விதத்திலும், அவள் முகத்தில் தெரிந்த வெட்கத்தையும் ஆசையையும் வச்சு என்னால யூகிக்க முடிஞ்சது.

தாய் அறியா சூல் இல்லைன்னு சொல்லுவாங்க. கண்டிப்பா ராகவ் வேற யாரையாவது கல்யாணம் செய்துக்கிட்டா அவள் தாங்க மாட்டாள். ஒண்ணு தன் ஆயுசுக்கும் தனி மரமா நிற்பாள். இல்லைன்னா தன் ஆயுசை முடிச்சுக்குவாள்' என எண்ணிய சரோஜினி நடுங்கினார்.

''என் பிள்ளையை இந்தியா வரச் சொல்லி நான் எவ்வளவோ கெஞ்சி இருப்பேன். வர மாட்டேன்னு சொன்னவன் இன்னைக்கு வந்து நிக்குறான். யாரால? உங்க வீட்டுக்காரரால! கல்யாணம் ஆனதுக்குப் பின்னால உங்க மகள் பேச்சைக் கேட்டு அவன் இந்தியா வந்திருந்தால் கூட, அம்மா பேச்சைக் கேட்கலைன்னாலும் பொண்டாட்டி பேச்சைக் கேட்டானே என்று எனக்கு மனசு சமாதானம் ஆகி இருக்கும். ஆனா உங்க கூடப் போராடுறதுக்காகன்னு அவன் கிளம்பி வந்ததிலே எனக்கு துளி கூட இஷ்டமில்லை'' என்று வெறுப்பாகக் கூறிய பூங்கோதை,

''அவன் இந்தியா வந்ததே எனக்குப் பிடிக் கலைங்கிறப்போ அவனுக்கு இப்படி ஒரு கல்யாணம் பண்ண சம்மதிப்பேன்னா நினைக்கிறீங்க?'' என்று கேட்டார்.

அவரை நிராசையுடன் பார்த்துக் கொண்டிருந்த சரோஜினியிடம், ''நாம இத்தோட இந்த சம்பந்தத்தை

முடிச்சிக்கலாம். ஒரு கையெழுத்தைப் போட்டு முடிச்சுக்கலாம்'' என்றதும்,

ராகவ் வருத்தமான முகபாவனையுடன், ''அம்மா ப்ளீஸ். இன்னொரு தடவை இது மாதிரி சொல்லா தீங்க. எனக்கு நித்திலா தான் மனைவி. அதை மாத்தணும்னு நினைக்காதீங்க'' என்று கெஞ்சினான்.

சேதுபதி என்ன கூறுவதென்று தெரியாமல் விழித்தார்.

சரோஜினி நெடுஞ்சாண் கிடையாக பூங்கோதை யின் காலில் விழுந்தார். பூங்கோதையே பதறிப் போனார். பொது இடத்தில் அவர் அது போல் செய்வார் என்று எதிர்பார்க்காத பூங்கோதை ஆடிப் போனார்.

''ஐயோ! என்னதிது? எழுந்திருங்க!'' என்று சரோஜினியை எழுப்பி அமர வைத்தார்.

''நீங்க சொல்லுற எல்லாமே சரி தான் சம்பந்தி. ஆனா என் மகள் நிலைமையைக் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. எங்க வீட்டுக்காரர் மேல உள்ள கோபத்திலே அவளை தண்டிச்சிடாதீங்க!'' என்று சரோஜினி கெஞ்ச அங்கே ஐந்து நிமிடங்களுக்கு அமைதி நிலவியது.

''உங்க பேச்சைக் கேட்டு யாரையும் கூப்பிடாமல் என் பையனுக்கு நீங்க சொல்லுற மாதிரி திருட்டுத்தனமா கல்யாணம் பண்ணி வைக்கிறதாவே

வச்சுக்குவோம். அதுக்கு அப்புறமும் உங்க பொண்ணு அவ அப்பா பேச்சைக் கேட்டுக்கிட்டு என் பையன் கூட சேர்ந்து வாழாமல் உங்க வீட்டிலேயே இருந்துட்டா என்ன செய்யுறது? இதுக்கு பதிலைச் சொல்லுங்க'' என்று பூங்கோதை கேட்டார்.

''என்னை நம்புங்க சம்பந்தி. என் பொண்ணு வாழ்க்கை வீணாக நான் ஒரு போதும் சம்மதிக்க மாட்டேன். தாலி ஏறுற வரைக்கும் தான் எங்க வீட்டுக்காரர் முறைச்சுக்கிட்டு நிப்பார். அதுக்கு அப்புறமா அவர் இறங்கி வந்து தான் ஆகணும். என் மகளை உங்க வீட்டுக்கு அனுப்பி வைக்கிறது என் பொறுப்பு'' என்று சரோஜினி வாக்களித்தார்.

அரை மணி நேரம் அவர்கள் விவாதித்தார்கள். முடிவில் பூங்கோதை அரை மனதாய் ஒத்துக் கொண்டார். சரோஜினியின் கெஞ்சலுக்கென்று இல்லாமல் மகனது ஆசைக்காக இணங்கினார்.

சேதுபதிக்கு முதலில் இருந்தே மகனது ஆசை நிறைவேற வேண்டும் என்ற எண்ணம். மகன் தானாய் ஒரு பெண் மீது விருப்பம் கொள்ளவில்லை. நாங்கள் காட்டிய பெண் மீது தானே ஆசை வைத்தான். இப்போ வந்து அவளை மறந்துவிடு என்று சொல்வது எந்த வகையிலும் நியாயம் இல்லை என்று அவர் நினைத்தார்.

நித்திலாவை எப்படிக் கோவிலுக்கு வர வைப்பது என்று அவர்கள் யோசிக்கும் பொழுது தான் ராகவ்

செழியனின் தங்கை கல்யாணம் பற்றிக் கூறி அப்படி ஒரு திட்டம் தீட்டினான்.

* * *

சரோஜினி அன்று நடந்ததை விவரித்து முடித்தார்.

24



''நீங்களாம்மா அப்படி ஒரு காரியம் பண்ணினீங்க? ஆனா ஏன்?'' என்று நித்திலா நம்ப முடியாத ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''யாருகிட்டயும் எதுக்காகவும் நான் வளைஞ்சு கொடுக்க மாட்டேன்னு சொலிக்கிட்டு இருக்கிற மனுஷன் கூட வாழ்ந்து ஒரு பொண்ணை பெத்து வச்சிருக்கேனே. அதுக்கு தான்'' என்று சரோஜினி கூறவும் ராஜதுரை அமைதியாக மனைவியைப் பார்த்தார்.

''பொண்ணை பெத்தோமே.. அவளுக்கு வேண்டியதை எல்லாம் செஞ்சோமே.. அவளுக்கு பிடிச்ச மாப்பிள்ளையை எப்பாடு பட்டாவது கட்டி வைப்போம்னு உங்க அப்பா நினைச்சிருந்தா, நான் ஏன் அவங்ககிட்ட போய் கெஞ்சி உனக்கு இப்படி

ஒரு திருட்டுக் கல்யாணம் பண்ணி வைக்கப் போறேன்?''

''அதுக்காக அவங்க காலிலே எதுக்கும்மா விழுந்தீங்க?''

''என் காலிலே விழுந்தாத் தான் இந்தக் கல்யாணம் நடக்கும்னு அவங்க ஒண்ணும் உங்க அப்பா மாதிரி கண்டிஷன் போடலையே! அவங்க அப்படிச் சொல்லி இருந்தாங்கன்னா நானும் விழுந்திருக்க மாட்டேன். என் பொண்ணு வாழ்க்கையை விட எனக்கு கவுரவம் பெரிசு கிடையாது.''

இதற்கு என்ன சொல்வது என்று தெரியாமல் நித்திலா விழித்தாள்.

''கடும் தவத்திற்கு அப்புறமா விசுவாமித்திரருக்கு பிரம்ம ரிஷி பட்டம் கிடைச்சது. ஆனா வசிஷ்டர் மட்டும் அதை ஒத்துக்கலை. பணிவுங்கிற குணம் உன்கிட்ட இல்லை. அதனால நீ பிரம்மரிஷி கிடையாதுன்னு சொல்லிட்டார். யாருக்காகவும் எதுக்காகவும் நான் தலை வணங்க மாட்டேன்னு சொல்லிக்கிட்டு இருந்த விசுவாமித்திரரே தன் மகள் சகுந்தலையை வாழ வைக்க துஷ்யந்த மகாராஜா முன்னாடி நிறைஞ்ச சபையிலே தலை குனிஞ்சு நின்னாராம். அப்போ தான் அவரைப் பிரம்மரிஷின்னு வசிஷ்டர் ஒத்துக்கிட்டாராம்.

பெரிய ரிஷிக்கே பணிவு இருக்க வேண்டியது அவசியம்னா சாதாரண மனுஷங்களான நமக்

கெல்லாம் எவ்வளவு இருக்கணும்?'' என்று சரோஜினி கேட்டதும் நித்திலா தன் தந்தையைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

''தன் அண்ணன்கிட்ட வந்து மன்னிப்பு கேட்டால் தான் இந்தக் கல்யாணம் நடக்கும்னு உங்க அப்பா சொல்லிக்கிட்டு இருந்தாரே, பெத்த பெண்ணை விட அண்ணன் தான் பெருசுன்னு அவர் சொன்னபடி நடந்துக்கிட்டாரே, அவரோட அண்ணன், தம்பிக்கு ஆதரவா என்ன செஞ்சார்?

அச்சோ! நம்மால தானே நம்ம தம்பி பொண்ணு கல்யாணம் பாதியிலே தடைபட்டு நிக்குதுன்னு நினைச்சு தன் பொண்ணு கல்யாணத்தை நிறுத்தினாரா? இல்ல நடந்ததை மறந்துட்டு உன் பொண்ணு கல்யாணத்தை அமோகமா பண்ணிடுன்னு தம்பிக்கு அட்வைஸ் பண்ணினாரா? இல்லையே!'' என்று எகத்தாளமாய் கூறினார்.

சரோஜினியின் பேச்சில் இருந்த உண்மை சுட்டதால் ராஜதுரை தன் தலை குனிந்து அமர்ந்திருந்தார்.

''இதோ இன்னைக்குக் காலையில தான் உங்க பெரியப்பா பொண்ணு கல்யாணத்துக்கு போயிட்டு வந்து இருக்கோம். இன்னும் கொஞ்ச மாசம் கழிச்சு சீமந்தத்துக்குக் கூப்பிடுவார். எதைப் பத்தியும் கவலைப்படாமல் உங்க அப்பா அங்கேயும் போய் சாப்பிட்டுட்டு வருவார். என்னையும் அப்படியே

இருக்கச் சொல்லுறியா?'' என்று கேட்டதும் ராஜதுரை கண்ணீர் விட ஆரம்பித்தார்.

''அப்பா அழாதீங்கப்பா. அம்மா ஏதோ தெரியாமல் பேசுறாங்க'' என்று நித்திலா அவரது கண்ணீரைத் துடைத்து அவருக்கு ஆறுதல் அளிக்க சரோஜினி ஒன்றும் செய்யாது கோபமாக அமர்ந்து இருந்தார்.

''அவ பேசட்டும் நித்தி. அவ பேசறதிலே எந்தத் தப்பும் இல்லை. அவ சொல்லுறதெல்லாம் நியாயம் தான். எங்க அண்ணனுக்காக நான் என்ன வேணா பண்ணலாம். ஆனா நீ பண்ணனும்னு நான் எதிர் பார்த்து இருக்கக் கூடாது நித்தி. உன் வாழ்க்கையை பணயம் வச்சிருக்கக் கூடாது.

பதிவுத் திருமணம் ஆகிட்டதால இந்த சம்பந்தம் நம்ம கையை விட்டுப் போகாது. அதனால எங்க அண்ணன் சொல்லுறபடி அவங்க மன்னிப்பு கேட்கட்டுமேன்னு நினைச்சேன்.

ஒரு வேளை எங்க அண்ணன் சம்பந்தியை அவர்கிட்ட மன்னிப்புக் கேட்கச் சொல்லி இருந்தா, நான் எங்க அண்ணன் பேச்சைக் கேட்டிருக்க மாட்டேன். ஆனா அவர் சேகர் அண்ணனை தானே மன்னிப்பு கேட்கச் சொன்னார். பங்காளிக்குள்ள மன்னிப்பு கேட்கிறதுல என்ன தப்புன்னு நினைச்சுட் டேன்.

கௌசிக் வந்த அன்னைக்கு நீ உன் ஆபிஸ் பிரண்ட்ஸ் முன்னாடி ராகவ் தான் உன்னோட ஹஸ் பண்ட்ன்னு சொன்னே. உன் ஆபிஸ் பிரண்ட்ஸ்க்கு எல்லாம் உன் கல்யாண விஷயம் பரவிடுச்சுங் கிறதால உன் கல்யாணத்தை நடத்தி வைக்கிறதுக் காக நான் சம்பந்திகிட்ட போய் பேசி இருக்கணும்.

இது வரைக்கும் யார்கிட்டவும் பணிஞ்சு போய் பழக்கம் இல்லையா. வீறாப்பாவே வாழ்ந்து பழகிட் டேனா. சட்டுன்னு என்னை மன்னிச்சிடுங்கன்னு சொல்லி அவர்கிட்ட சம்பந்தம் பேச என்னால முடியலை.

மாப்பிள்ளை வீட்டிலே இருந்து அடுத்து யாராச்சும் வந்தால் உன் கல்யாணத்தை முடிச்சு வச்சிடலாம்னு நினைச்சேன்'' என்றவரை சரோஜினி தன்னால் முடிந்த மட்டும் முறைத்தார்.

''அப்படி முறைக்காதே சரோ! வீம்பு பிடிக்கிறது என்னோட பிறவி குணமா போயிடுச்சு. என்னால அதை சட்டுன்னு மாத்திக்க முடியலை'' என்று மனைவியிடம் கூறியவர் தன் மகளிடம் திரும்பி,

''எங்க அண்ணன் பேச்சைக் கேட்டு வீறாப்பா இருந்ததால தான் நான் இன்னைக்கு இந்த நிலை மையில நிக்குறேன். என் காதுபடவே எங்க அண் ணன் இன்னைக்கு என் தம்பி மாதிரி பொழைக்கத் தெரியாத ஆளா இருக்க முடியுமான்னு கேட்கிறார்''

என்று கூறவும் நித்திலாவிற்கு தன் பெரியப்பாவின் மீது கோபம் வந்தது.

''பெரியப்பா எதுக்கு அப்படிச் சொன்னார்?'' என்று கோபமாகக் கேட்ட நித்திலாவிற்கு சரோஜினி விவரம் தெரிவித்தார்.

இது உங்களுக்குத் தேவையாப்பா என்பது போல் நித்திலா தன் தந்தையைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

''உன் கல்யாணம் முடிஞ்சு நீ வீட்டுக்கு வந்தபோது நான் உன்னை நம்பாமல் கோபப்பட்டு வீட்டை விட்டு வெளியேத்தலை நித்தி. நான் சம்பந்தி வீட்டு மனுஷங்க முன்னாடி பணிஞ்சு போகாமல் எப்படியோ உன் கல்யாணம் முடிஞ்சிடுச் சேன்னு சந்தோஷம் தான் பட்டேன். நீ அங்க போய் வாழணும்னு நினைச்சு தான் கோபமா இருக்கிற மாதிரி நடிச்சு உன்னை வெளியேத்தினேன். நீ வெளியே போய் வரக் கஷ்டப்படக் கூடாதுன்னு தான் ஸ்கூட்டி சாவியைக் கூட குடுத்து அனுப்பி னேன். இல்லைன்னா அவ்வளவு கோபமா இருக்கிற வனுக்கு அதைப் பத்தின ஞாபகம் வருமா சொல்லு?'' என்றதும் சரோஜினி கடுப்பானார்.

''நீங்க சொல்லுறதைக் கேட்கிறப்போ அப்படியே என் காதிலே தேன் பாயுதுங்க. எந்த அப்பாவும் செய்யாத காரியமெல்லாம் நீங்க செய்ய நினைச்சு இருக்கீங்க என்பதை கேட்கிறப்போ எனக்கு ரொம்பப்

பெருமையா இருக்கு'' என்று எகத்தாளமாகக் கூறவும்,

''அம்மா! இப்ப எதுக்கு அப்பாவை நக்கல் பண்ணு றீங்க?'' என்று நித்திலா இடைபுகுந்து சரோஜினியை அதட்டினாள்.

''அவர் செஞ்ச காரியத்துக்குப் பாராட்டவா முடியும்? ஒரு பெண்ணை பெத்த அப்பாவா அவர் என்னைக்காச்சும் நடந்திருக்காரா? உனக்குத் தெரியாது நித்திலா. உன் கல்யாண விஷயமா எத்தனை தடவை இவர்கிட்ட மன்றாடி இருப் பேன்னு.

என் பேச்சைக் காதிலே வாங்கலைன்னாலும் பரவாயில்லை. இப்படியே பேசிக்கிட்டு இருந்தா என்னை வீட்டை விட்டு அனுப்பிடுவேன்னு மிரட்டி னார். நான் வெளியே போகத் தயாரா தான் இருந்தேன். ஆனா என் பொண்ணுக்கு அவ விரும்பின வாழ்க் கையை அமைச்சுக் கொடுக்காமல் வெளியேறக் கூடாதுன்னு தான் அந்த வீட்டிலே இருந்தேன்'' என்று சரோஜினி கூறியதை நித்திலா வேதனை யோடு கேட்டுக் கொண்டிருந்தாள்.

தனது திருமணம் எத்தனை பேரை எப்படி யெல்லாம் சங்கடப்படுத்தி இருக்கிறது என நினைத்து மனம் வெறுத்தாள்.

''இவர் உன் கல்யாணத்தை நடத்தி வைக்க மாட் டாருன்னு தெரிஞ்சதால தான் நான் உன் கல்யாண

விஷயத்திலே முடிவெடுத்தேன். உனக்குக் கல்யாணம் முடிஞ்சதும் இவர் உன்னை அனுப்பி வைக்கலைன்னா இவர் கூட சண்டை போட்டுட்டு உன்னையும் இழுத்துக்கிட்டு வீட்டை விட்டு வெளியே வரதா தான் இருந்தேன்'' என்று சரோஜினி ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

நித்திலாவும் ராஜதுரையும் அமைதியாக வீற்றிருந்தார்கள்.

''நீங்க தான் ராகவை இப்படி ஒரு கல்யாணம் பண்ணச் சொன்னதா ஏன்மா அன்னைக்கே என்கிட்ட சொல்லாமல் விட்டீங்க?''

''சொல்லி இருந்தா என்ன பண்ணி இருப்ப? உடனே உங்கப்பாகிட்ட ஓடிப் போய் அப்பா அப்பா இந்த அம்மா தான் எல்லாத்துக்கும் காரணமாம். நான் இல்லப்பா. என்னை நம்புங்கப்பான்னு சொல்லி இருப்ப. உடனே இவரும் என்னைக் கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளி இருப்பார். அப்புறம் அப்பாவையும் பொண்ணையும் யாரு வழிக்குக் கொண்டு வரது? அதான் சொல்லாமல் மறைச்சேன். மாப்பிள்ளையையும் உன்கிட்ட எதுவும் சொல்ல வேண்டாம்னு சொன்னேன்'' என்றார்.

தான் இவ்வளவு தூரம் பாடுபட்டும் மகளது வாழ்வும் இன்னும் மலரவில்லை என்று நினைத்துப் பார்த்த சரோஜினிக்கு வருத்தம் வந்தது. மகள் மீது கோபமும் வந்தது. அதனால் அவர் தன் மகளைத் திட்ட ஆரம்பித்தார்.

''உன் மாமியார் உங்க பொண்ணு என் பையன் கூட வாழாமல் உங்க வீட்டிலேயே இருந்துட்டா என்ன பண்ணுறதுன்னு என்கிட்ட கேட்டாங்க. அவளை உங்க வீட்டுக்கு அனுப்பி வைக்கிறது என் னோட பொறுப்புன்னு நான் அவங்ககிட்ட வாக்குக் கொடுத்தேன். ஆனா அவங்க பையன் கூட சேர்ந்து வாழ வைக்க என்னால முடியாதுன்னு எனக்கு அப்ப தோணாமல் போச்சு.

இல்லைன்னா அவங்க சொன்ன மாதிரி இன் னொரு வாட்டி ஒரு கையெழுத்தைப் போட்டு இந்தக் கல்யாணத்தை ரத்து பண்ணிட்டு அவங்கவங்க வழியிலே போகலாம்னு அவங்க சொன்னை யோசனைக்கு ஒத்துக்கிட்டு இருந்திருப்பேன். அந்தப் பையனோட வாழ்க்கையாவது நல்லபடியா அமைஞ்சிருக்கும்'' என்று சரோஜினி புலம்ப நித்திலா இடிந்து போய் அமர்ந்து விட்டாள்.

'எனக்கும் ராகவுக்கும் டைவர்ஸா?' என்ற எண்ணம் எழுந்ததும் ஆடிப் போனாள்.

தாலியை இறுகப் பற்றிக் கொண்டு வெறித்த வாறு அமர்ந்திருக்கும் மகளைக் கண்ட ராஜதுரை யின் அங்கமெல்லாம் பதறியது.

''நித்திம்மா! இங்க பாருடா! கவலைப் படாதேடா நித்தி. உன் ராகவ் உனக்கு தான். அதான் அம்மா உன் ராகவை உன்கிட்ட ஒப்படைச்சிட்டாளே. இனி நீ அவரை நல்லபடியா பார்த்துக்கோ.

எல்லா பிரச்சனைக்கும் நான் தான் காரணம். நாளைக்கே நான் கிளம்பிப் போய் உங்க மாமனாரைப் பார்க்கிறேன். அவர் காலிலே விழுந்து இது வரைக்கும் நடந்த தப்பையெல்லாம் சரி பண்ணுறேன். என் பொண்ணு வாழ்க்கையை விட எனக்கு வேற எதுவும் பெரிசில்லைன்னு அப்பா உணர்ந்திட்டேன்டா'' என்று கூறி ராஜதுரை மகளைத் தேற்றினார்.

தந்தையின் பேச்சைக் கேட்ட நித்திலாவிற்கு சந்தோஷமாக இருந்தது. அதே சமயம் இது நிஜமா என்ற சந்தேகமும் வந்தது.

''நிஜமா தான் சொல்லுறீங்களா?'' என்று நித்திலா அவரை ஆச்சரியமாகப் பார்க்க,

''உண்மை தான் நித்தி. நான் பொய் சொல்லலை.. காலையில விடிஞ்சதும் நான் செங்கல்பட்டுக்குப் போகத் தான் போறேன்'' என்று ராஜதுரை வாக்களித்தார்.

''அப்படின்னா இப்போ எங்க வீட்டுக்கு வாங்கப்பா. முதல்ல ராகவ்கிட்ட பேசுங்கப்பா.''

''இல்லம்மா. அது தப்பு. நான் முதல்ல அவங்க அப்பாகிட்ட மன்னிப்பைக் கேட்கிறேன். அதுக்கு அப்புறமா மாப்பிள்ளையைப் பார்த்து மன்னிப்பு கேட்கிறேன். அது தான் முறை.''

அதுவரை அமைதியாக இருந்த சரோஜினி, ''நிஜமா சொல்லுறீங்களா? அப்படின்னா நான்

சொல்லுறதைக் கேளுங்க. இன்னும் ரெண்டு நாளில இவங்களோட ரிசப்ஷனை செங்கல்பட்டிலே வச்சு நடத்தறதுக்கு மாப்பிள்ளை வீட்டிலே ஏற்பாடு பண்ணி பத்திரிகை அடிச்சுக் குடுத்துகிட்டு இருக்காங்க.

அந்தப் பத்திரிகை என்கிட்ட கொஞ்சம் இருக்கு. இப்பவே நாம உங்க அண்ணன் வீட்டுக்குப் போய் அங்க இருக்கிற சொந்தக்காரங்களுக்கு பத்திரிகை வைக்கலாம். வாங்க கிளம்பலாம்!'' என்றார்.

'எங்களோட ரிசப்ஷன் செங்கல்பட்டிலே நடக்கப் போகுதா? எனக்கே தெரியாது. ஆனா எங்க அம்மாவுக்கு தெரிஞ்சிருக்கு. மாமியாரும் மருமகனும் ஓவரா கொஞ்சிக்கிறாங்க போலிருக்கே! நித்தி இதெல்லாம் நல்லதுக்கில்லை!' என்று நித்திலா மனதிற்குள் பொறாமைப்பட்டாள்.

''நான் உன்கூட வரத் தயாரா இருக்கேன் சரோ. ஆனா முதல்ல சம்பந்தியைப் பார்த்து மன்னிப்பைக் கேட்டுட்டு தான் மீதி வேலையைப் பார்க்கணும்'' என்று ராஜதுரை பிடிவாதமாகக் கூறியதும்,

''அதுக்கு இப்போ நேரம் இல்லைங்க. உங்க சொந்தக்காரங்க பாதி பேர் உங்க அண்ணன் வீட்டிலே குழுமி இருக்காங்க. அவங்க எல்லோரையும் அவங்கவங்க வீட்டிலே வச்சு பார்க்கிற அளவுக்கு நமக்கு நேரம் இல்லைங்க.''

''ஆனா சரோ சம்பந்தி...'' என்று அவர் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்ல,

''சம்பந்தியும் சம்பந்தி அம்மாவும் இன்னைக்கு சென்னை வரப் போறதா மாப்பிள்ளை சொன்னார்'' என்று கூறிய சரோஜினி சேதுபதியின் கைப்பேசிக்கு அழைப்பு விடுத்தார்.

'அச்சோ! அத்தையும் மாமாவும் வராங்களா? இதையும் ராகவ் என்கிட்ட சொல்லவே இல்லையே! நாங்க ரெண்டு பேரும் தனி ரூமிலே இருக்கிறதைப் பார்த்திட்டால் அத்தை கடுப்பாகிடுவாங்களே! அவங்க எங்க வீட்டுக்கு வரதுக்கு முன்னாடி நான் என் திங்க்ஸை பக்கத்து ரூமிலே இருந்து ஷிப்ட் பண்ணியே ஆகணும். ஆண்டவா! என்னைக் காப் பாத்து!' என்று நித்திலா கடவுளை வேண்ட ஆரம் பித்தாள்.

சேதுபதி அழைப்பை எடுத்ததும், ''அண்ணே! நான் சரோஜினி பேசுறேன். நான் பேசலாமா? ப்ரீயா இருக்கீங்களா?'' என்று கேட்டார்.

''சொல்லுங்க. என்ன விஷயம்?''

''நீங்க இன்னைக்கு சென்னைக்கு வருவதா மாப்பிள்ளை சொன்னார்.''

''ஆமாம்மா. சென்னையில சில பேருக்கு பத்திரிகை கொடுக்கிறதுக்காக வந்தோம்.''

''எங்க வீட்டுக்காரர் உங்களைப் பார்க்க வரணும்னு ஆசைப்படுறார். அதான் நீங்க எங்க இருக்கீங்கன்னு கேட்கலாம்னு போன் பண்ணினேன்.''

''அப்படியாம்மா?'' என்று ஆச்சரியமாகக் கேட்ட சேதுபதி, ''பத்திரிகை கொடுத்து முடிச்சிட்டோம். ராகவை பார்த்திட்டு ஊருக்குப் போகலாம்னு நினைச் சோம். அவன் இன்னும் ஆபிஸில் இருந்து வரலை. அதான் கோவிலுக்கு வந்து இருக்கோம். இன்னும் சன்னதி திறக்கலை. அதான் கோவில் பிரகாரத்திலே வெயிட் பண்ணுறோம்.''

''எந்தக் கோவிலில் இருக்கீங்க?''

அவர் கோவிலின் பெயரைச் சொன்னதும் இருவரும் ஒரே கோவிலில் தான் இருக்கிறார்கள் என்பதைக் கண்டு கொண்ட சரோஜினி கணவரை யும் மகளையும் அழைத்துக் கொண்டு அவர்களை நாடிச் சென்றார்.

ராஜதுரை விரைந்து சென்று சேதுபதியின் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

''என்னால... என் பிடிவாதத்தால நீங்க நிறைய சங்கடப்படுற மாதிரி ஆகிடுச்சு. உங்க மக்னோட கல்யாணத்தை ஊர் அறிய நடத்த முடியாமல் போச்சு. பல பேருக்கு பதில் சொல்லுற மாதிரி யான நிலை உண்டாகிடுச்சு. இது எல்லாத்துக்கும்

காரணம் நானும் என்னோட வறட்டுப் பிடிவாதமும் தான்!

என்னை மன்னிச்சிடுங்கன்னு ரெண்டு வார்த்தையில அடக்கக் கூடிய சின்ன தப்பை நான் செய்யலை. நான் மன்னிப்புக் கேட்கிறதால நடந்த எதுவும் மாறப் போறதுமில்லை. ஆனாலும் நீங்க பெரிய மனசு பண்ணி நான் பண்ணின தவறுகளுக்கு என்னை மன்னிச்சிடுங்க.

இனி ஒரு தரம் என்னாலயோ என் பெண்ணாலயோ நீங்க வருத்தப்படும்படியான நிலை வராதுன்னு நான் உங்களுக்கு வாக்குக் குடுக்கிறேன். இந்த முறை மட்டும் என்னை மன்னிச்சிடுங்க'' என்று கவலை தோய்ந்த முகத்துடனும், கண்களில் நிறைந்த நீருடனும், நாத்தழுதழுக்க அவர் தன் மன்னிப்பை வேண்டினார்.

மனம் திருந்தி மன்னிப்பை வேண்டுபவரிடம் தன் வீறாப்பைக் காட்ட சேதுபதி என்ன (பழைய) ராஜதுரையா? சுபாவத்திலேயே அமைதியான மனிதரான சேதுபதி தன் சம்பந்தியை மன்னிக்கத் தயாரானார்.

''நீங்க மன்னிப்புக் கேட்கணும்னு அவசியமில்லை சம்பந்தி. நம்ம பிள்ளைங்களை முழு மனசோட ஆசிர்வாதம் பண்ணினால் அதுவே போதும்!'' என்று பெரிய மனதுடன் சேதுபதி கூறினாலும்,

ராஜதுரை பூங்கோதையிடமும் தனது கைகளைக் கூப்பி, ''நீங்களும் என்னை மன்னிச்சிடுங்க சம்பந்தியம்மா'' என்று தன் மன்னிப்பை வேண்டினார்.

சேதுபதி அளவிற்கு பூங்கோதை அமைதியானவர் இல்லை. மேலும் அவர்தான் ராஜதுரை மேல் கடும் கோபத்தில் இருந்தார். இருந்தாலும் அவரும் ராஜதுரையை மன்னிக்கத் தயாராக இருந்தார். அதற்குக் காரணம் அவரது ஒரே மகன் ராகவ்!

ராஜதுரையிடம் சமரசமாகப் போனால் தான் நடக்கவிருக்கும் மகனது வரவேற்பு நிகழ்ச்சி இரு வீட்டாரின் சம்மதத்தோடு சிறப்பான முறையில் நடைபெறும். அப்படி நடந்தால் தான் ராகவ் மற்றும் நித்திலாவின் இடையே இருக்கும் மனஸ்தாபம் மறைந்து அவர்களுக்குள் ஒரு சுமுக உறவு ஏற்படும் என்று அவர் உறுதியாக நம்பினார்.

அதனால் பூங்கோதை, ''பரவாயில்லை விடுங்க சம்பந்தி, நாம கஷ்டப்படணும் என்று விதி இருந்திருக்கு. அதான் அப்படி ஆகிடுச்சு. நடக்கிறதாச்சும் நல்லதா நடக்கட்டும்!'' என்று முடித்து விட்டார்.

''திடீர்ன்னு உங்க மனசு எப்படி மாறுச்சு?'' என்று சேதுபதி கேட்டார்.

நித்திலா ராகவுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறாள் என்ற ஒன்றைத் தவிர சரோஜினி நடந்ததை விரிவாக எடுத்துரைத்தார்.

''வஜ்ரவேலு பையன் கல்யாணத்தைப் பத்தி உங்களுக்கு இன்னைக்கு தான் தெரியுமா? போன வாரமே என் சம்பந்தி சொன்னார். நான் கூட உங்க தங்கச்சிக்கிட்ட வஜ்ரவேலுவை பத்தி நீங்க சொல்லி வைக்கலையான்னு உங்க சேகர் அண்ணன்கிட்ட கேட்டேன். அதுக்கு அவர் வஜ்ரவேலு வில்லங்க மான ஆளுன்னா என் தங்கச்சி வீட்டுக்காரர் அதை விட பத்து மடங்கு வில்லங்கமானவர். அதனால அவங்க ரெண்டு பேருக்கும் சரியா வரும்னு சொல் லிட்டார்'' என்று சேதுபதி கூறினார்.

''அது உண்மைதான்'' என்று ராஜதுரை தலையாட் டினார்.

சரோஜினி சேதுபதியைப் பார்த்து, ''இவங்க அவங்க அண்ணன் பையன் கல்யாண விஷயம் கேட்டதும் இப்படி மனசு மாறுவாருன்னு தெரிஞ் சிருந்தால் நம்ம பிள்ளைங்க கல்யாணத்தைச் சிறப்பா செஞ்சிருக்கலாம். நான் அவசரப்பட்டுட்டேனா? உங்களுக்கு சங்கடத்தை உண்டாக்கிட்டேனா?'' என்று ஒருவித குற்ற உணர்வுடன் கேட்க,

''இப்படி நடந்திருக்கலாம். அப்படி நடந்திருக் கலாம்னு நாம மனசுக்குள்ள ஆயிரம் கற்பனை பண்ணலாம்மா. ஆனா எது நடக்கணும்னு இறைவன் தீர்மானிக்கிறானோ அதுப்படி தான் நடக்கும். தேவையில்லாமல் மனசைப் போட்டு சங்கடப்படுத்திக்

காதீங்க. கல்யாணம் தானே சிம்பிளா நடந்துச்சு. நாம ரிசப்ஷனை பெருசா நடத்திடலாம்'' என்று சேதுபதி உற்சாகப்படுத்தினார்.

''அவங்க முகத்திலே கரி பூசுற மாதிரி பத்திரிகை குடுக்கக் கூப்பிட்டால் இவர் உங்களை பார்த்துட்டு தான் வருவேன்னு அடம் பிடிச்சுக்கிட்டு இருந்தார். நல்லவேளை. தெய்வம் துணை புரிஞ்சிடுச்சு'' என்று சரோஜினி உற்சாகமாய்ச் சொல்ல,

''நானும் உங்க கூட வரேன் சம்பந்தி. நாம நாலு பேரும் சேர்ந்தே பத்திரிக்கை வைக்கலாம்'' என்று சேதுபதி கூறவும் அனைவரும் அவரது கருத்தை உற்சாகமாக ஆதரித்தார்கள்.

இத்தனை நாளும் அடித்துக் கொண்டிருந்த சம்பந்திகள் அனைவரும் ஒன்று கூடியதைக் கண்ட நித்திலா, 'ஆகா! அப்படியே விக்ரமன் படம் பார்க்கிற மாதிரியே இருக்கே!' என நினைத்தாள்.

'நல்லா உத்துக் கேளு நித்திலா! பேக்ரவுண்டில் எஸ்.ஏ.ராஜ்குமார் லா லான்னு பாட்டுப் போடுற சத்தம் கூடக் கேட்கும்' என்று உள்ளுக்குள் கிண்டல் பண்ணிச் சிரித்துக் கொண்டாள்.

'ஒரு வழியா உன் பிரச்சனை எல்லாம் முடிஞ் சிருச்சேன்னு சந்தோஷப்படாம கிண்டலா பண்ணிக் கிட்டு இருக்க!' என்று மனசாட்சி அவளைக் கேள்வி கேட்டதும் கிண்டலை கைவிட்டவள்,

''என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க!'' என்று அவர்கள் நால்வரின் முன்னால் விழுந்தாள். அவர்கள் அவளை ஆனந்தத்துடன் மனமார ஆசிர்வதித் தார்கள்.

அவர்கள் கிளம்பத் தயாரானதும், ''சாமி கும் பிடாமலே போறீங்களா?'' என்று நித்திலா ஆட்சேபம் தெரிவிக்க,

''சாமியை மனசிலே கும்பிட்டுக்கிறோம்மா. இன்னும் ரெண்டு நாள் கழிச்சு வந்து சன்னதிக்குள்ள போய் கும்பிடுறோம். இப்ப உங்க பெரியப்பா வீட்டிலே பத்திரிகை குடுக்கிறது தான் முதல் வேலை. நீ வீட்டுக்குப் போ. நாங்க நைட் வறோம்'' என்று கூறி விடைபெற்றனர்.

25



அவர்கள் நால்வரும் வஜ்ரவேலின் வீட்டிற்கு சென்று பத்திரிக்கை வைக்க அவர் வாயடைத்துப் போனார். அவர்கள் அங்கிருந்த உறவினர்களுக்கும் பத்திரிக்கையை கொடுத்தார்கள்.

''என்னப்பா உன் பொண்ணு கல்யாணம் உனக்கே தெரியாமல் நடந்திடுச்சுன்னு கேள்விப்பட்டோம்.''

''ஓடிப் போய் கல்யாணம் பண்ணிக்கிட்டதா சொல்லிக்கிட்டாங்க.''

''அந்தப் பையன் திருட்டுத்தனமா தாலி கட்டினதா பேச்சு அடிப்பட்டது!'' என்று ஆளுக்கொன்றாய் கேள்வி கேட்டனர்.

காலையில் திருமண மண்டபத்தில் வைத்து ராஜதுரையிடம் நேரிலும் முதுகிற்கு பின்னாலும் இதே மாதிரி கேள்விகள் கேட்கப்பட்டன. வஜ்ர வேலுவை ஆதரிக்க விரும்பியவர்கள் இப்போதும் விடாமல் அதே கேள்விகளை கேட்டதும் சேதுபதி கடுப்பானார்.

''எவன் சொன்னது என் பையன் திருட்டுத் தாலி கட்டினதா?'' என்று எகிறிய சேதுபதி தனது பையில் இருந்த மகனின் திருமணப் புகைப்படங்களை எடுத்துக் காண்பித்தார்.

தன் மகனிடம் கொடுப்பதற்காக அவனது திரு மணப் புகைப்படத்தை கொண்டு வந்தது நல்ல தாயிற்று என்று சேதுபதி நினைத்துக் கொண்டார்.

முதல் புகைப்படத்தில் ராகவின் அருகே மேகலா வின் கணவனும் நித்திலாவின் அருகே மேகலாவும் நின்று கொண்டிருந்தார்கள். அடுத்ததில் கண்மூடி நின்றிருக்கும் நித்திலாவின் கழுத்தில் தாலி கட்டும் ராகவ். அடுத்ததில் மூன்றாவது முடிச்சு போடும் மேகலா இருந்தாள். நான்காவதில் சேதுபதியிடமும்

பூங்கோதையிடமும் ஆசிர்வாதம் வாங்கும் மண மக்கள்.

"இப்ப சொல்லுங்க இதுவா திருட்டுக் கல்யாணம்?" என்று நிமிர்வுடன் ராஜதுரை கேட்க,

"நீயில்லையே துரை. அதான் நாங்க அப்படி நினைச்சிட்டோம்" என்று ஒருவர் கூற,

"என்னங்க பண்ணுறது. என் வீட்டுக்காரர் வெளுத்ததெல்லாம் பாலுன்னு நினைச்சிட்டார். ஆனா அவர் ஒண்ணும் பிழைக்கத் தெரியாத ஆள் இல்லை. அதான் அவர் பொண்ணுக்கு வரவேற்பு நிகழ்ச்சியை முறையா செய்யலாம்னு நினைச்சு உங்களை கூப்பிட வந்து இருக்கார்" என்று சரோஜினி இடைபுகுந்தார்.

இது தனக்கான குத்து என்று வஜ்ரவேலுவிற்கு நன்கு புரிந்தது.

"நாளை மறுநாள் நடக்கிற நிகழ்ச்சிக்கு இப்ப வாம்மா கூப்பிட வருவீங்க?" என்று ஒருவர் அதை யும் கிண்டல் பண்ணி சிரிக்க,

"இல்லைங்க. இது மாப்பிள்ளை வீட்டிலே ஏற்பாடு பண்ணியிருக்கிற வரவேற்பு. நாங்க சென்னையிலே அடுத்த பத்து நாள் கழிச்சு ஏற்பாடு பண்ணி இருக் கோம். அதுக்கான பத்திரிக்கையை உங்க வீடு தேடி வந்து கொடுப்போம். உங்களை ரெண்டு இடத் துக்கும் அலைக்கழிக்கணுமான்னு நாங்க யோசிச்

சோம். ஆனா எங்க சம்பந்தி தான் பொண்ணுக்கு நெருங்கின சொந்தக்காரங்களையும் கூப்பிடணும்னு சொன்னார். அதான் கூட்டிட்டு வந்தோம்" என்று சரோஜினி நெத்தி அடி அடிக்க, அனைவரும் வாய டைத்துப் போயினர்.

"நாங்க காலையில உங்க ரெண்டு பேர்கிட்டவும் கேட்டப்போ இந்தப் பத்திரிக்கையை நீட்டி இருக் கலாமே?!" என்று அப்போதும் ஒருவர் விடாமல் கேட்க,

சரோஜினி வஜ்ரவேலுவை ஓரப்பார்வை பார்த்துக் கொண்டே, "எங்க வீட்டுக்காரருக்கு எங்க நித்தி லாவும் அவரோட அண்ணன் பொண்ணும் வேற வேற இல்லைங்க. ரெண்டு பேரும் ஒண்ணு தான். ஒரு சிலரை மாதிரி பிரிச்சுப் பார்க்க மாட்டார்.

காலையில நடந்தது அவரோட அண்ணன் பொண்ணு கல்யாணம். அங்க நானும் என் வீட்டுக் காரரும் எங்களால முடிஞ்ச வேலையை பார்க்கணு மில்ல? அதை விட்டுட்டு என் பொண்ணு வரவேற்பு பத்திரிக்கையை ஒவ்வொருத்தருக்கும் வச்சுக்கிட்டு இருந்தால் நல்லாவா இருக்கும்?" என்று கேட்டார்.

அவர்களின் அத்தனை கேள்விகளையும் சரோ ஜினி தனது பதில்களால் தகர்த்து எறியவும் ராஜ துரை தலை நிமிர்ந்தார். அவர்கள் அனைவருக்கும் பத்திரிக்கையை கொடுத்துவிட்டு அங்கிருந்து கிளம்பினர்.

அவர்கள் காரில் ஏறியதும் ராஜதுரை சரோஜினியிடம், ''இன்னும் பத்து நாளிலே சென்னையிலே வரவேற்பு இருக்குன்னு நீ பாட்டுக்கு சொல்லிட்டே! மண்டபம் கிடைக்க வேண்டாமா சரோ?'' என்று கேட்டார்.

''இன்னும் ரெண்டு நாளிலே மார்கழி மாசம் பிறந்திடும். சென்னையில மண்டபம் மொத்தமும் காலிய தான் இருக்கும். மாப்பிள்ளை தன்னோட ஆபீஸ் பிரண்ட்ஸ்களுக்காக ரிசப்ஷன் வைக்கணும்னு சொல்லிக்கிட்டு இருந்தார். அதான் நான் அப்படி அடிச்சு சொன்னேன்'' என்று சரோஜினி விளக்கியதும்,

ராஜதுரை நிம்மதியாக உணர்ந்தார். தன் மனைவியைப் பெருமையுடனும் நன்றியுடனும் பார்த்தார்.

அங்கே வீட்டிற்கு விரைந்த நித்திலா முதலில் செய்த காரியம் தனது பொருட்களையெல்லாம் பக்கத்து அறையில் இருந்து கணவனின் அறைக்கு இடமாற்றியது தான்.

அலமாரியில் அடுக்கி இருந்த துணிகளை அப்படியே கொண்டு போய் கணவனின் அலமாரியில் அடுக்கினாள். பிரிக்கப்படாமல் இருந்த ஒரு பெட்டியை அப்படியே கொண்டு போய் கணவனின் அறையில் வைத்தாள்.

'அத்தையும் மாமாவும் இந்த ரூமிலே தான் தங்குவாங்க. அவங்க வந்து பார்க்கிறப்போ எங்களுக்குள்ள நடந்த எதுவும் அவங்களுக்கு தெரிஞ்சிடக் கூடாது' என்று முனைப்பாகச் செயல்பட்டாள். சமையலறைக்கு சென்று இரண்டாவது அடுப்பை மறைத்து வைத்தாள்.

தனது வேலையை முடித்துக் கொண்டு சோர்வாக வீடு திரும்பிய ராகவை மிகவும் உற்சாகத்தோடு வரவேற்றாள். அவன் உள்ளே நுழைந்ததும் கதவை அடைத்துவிட்டு வந்தவள் ஓடிச் சென்று கணவனை அணைத்துக் கொண்டு அவன் மார்பில் தலை சாய்ந்து கொண்டாள்.

கண்மூடி சுகமாய் சாய்ந்திருந்தவள் ஒரு நிமிடத்திற்கு பின்பே கணவன் அசையாது நின்று கொண்டு இருக்கிறான் எனப் புரிந்தவளாய் தலையை நிமிர்த்தி அவன் முகம் பார்த்தாள்.

''போனிலே கோபமாப் பேசினதுக்கு சாரிங்க'' என்றாள்.

நீ என்னைக்கு என்கிட்ட சந்தோஷமாப் பேசினே என்பது போல் அவன் ஒரு பார்வை பார்த்தான்.

''உங்களுக்கு விஷயம் தெரியாதில்ல. இன்னைக்கு என்ன நடந்துச்சு தெரியுமா?'' என்றவள் மாலையில் நடந்ததை விளக்கினாள்.

''நான் எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா?'' என்று கேட்டுக் கொண்டே எம்பி அவனது கன்னத்தில் முத்தம் பதித்தாள்.

அவன் அப்போதும் எந்த பிரதிபலிப்பும் காட்டாமல் அமைதியாக நிற்கவும் அவனிடம் இருந்து மெல்ல விலகி, ''உங்களுக்கு சந்தோஷமா இல்லையா?'' என்று கேட்டாள்.

''சந்தோஷம் தான். எல்லோரும் ஒண்ணு சேர்ந்துட்டாங்கன்னா சந்தோஷப்பட வேண்டியது தானே நித்திலா?'' என்றான்.

நிது என்று அழைக்காமல் நித்திலா என்று அவன் அழைத்த விதமும், சந்தோஷமே இல்லாமல் கல் மாதிரி இறுகி இருந்த அவனது முகத் தோற்றமுமே அவன் எவ்வளவு சந்தோஷமாக(?) இருக்கிறான் என்பதை அவளுக்கு விளக்கியது.

''எங்க அம்மாவும் அப்பாவும் அப்பவே போன் பண்ணி விஷயத்தை சொன்னாங்க'' என்றவன் தனது படுக்கை அறைக்குள் நுழைய அவன் பின்னோடு நித்திலாவும் சென்றாள்.

அவள் தனது அறைக்குள் வருவதை பார்த்தவனின் புருவம் உயர்ந்தது. அறையின் உள்ளே நுழைந்தவன் அவளது பொருட்கள் எல்லாம் அந்த அறைக்கு மாற்றப்பட்டு இருப்பதைக் கண்டான்.

'அப்பவே விஷயம் தெரிந்துவிட்டது என்றால் இவர் சந்தோஷமாக அல்லவா வீட்டிற்குள் நுழைந்து இருக்க வேண்டும்? ஏன் ஒரு வித அலுப்போடு

நுழைந்தார்?' என்று நித்திலா எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஏங்க ஒரு மாதிரி இருக்கீங்க?'' என்று அவள் தயக்கத்துடன் வினவ,

''அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை. நான் நல்லா தான் இருக்கேன்.''

''உங்களை எனக்கு தெரியாதா?''

''என்னை பத்தி நல்லாத் தெரிஞ்சா நான் ஏன் இப்படி இருக்கேன்னு நீயே சொல்லு'' என்று அவன் கூறவும்,

''எங்க அப்பா உங்க கிட்ட வந்து மன்னிப்பு கேட்கலைன்னு கோபமா இருக்கீங்களா? அப்பா முதல்ல மாமாகிட்ட மன்னிப்பு கேட்டுட்டு அதுக்கு அப்புறமா உங்களை வந்து பார்க்கிறேன்னு சொன்னார். ஆனா அதுக்கு முன்னாடி பத்திரிக்கை குடுக்கிறது தான் முக்கியம்னு எங்கம்மா தான் அவரை இழுத்துட்டுப் போயிட்டாங்க'' என்று தன் தந்தையின் சார்பாகப் பேசினாள்.

''என்கிட்ட வந்து உங்க அப்பா மன்னிப்பு கேட்கணும்னு நான் கண்டிப்பா எதிர்பார்க்கலை நித்திலா.''

''அப்புறம் ஏன் சோகமா இருக்கீங்க?'' என்றவள் மீண்டும் அவன் மீது சாய்ந்து கொள்ள அவன் அப்போதும் அமைதியாக இருந்தான்.

அவளை அணைத்துக் கொள்ள அவனது கைகள் பரபரத்த போதும் அவன் தன்னைத் தானே கட்டுப் படுத்திக் கொண்டு அமைதியாக நின்றான்.

''நானா வந்து உங்களை ஹக் பண்ணுறேன். நீங்க இப்படி விலகி நின்னீங்கன்னா என்ன அர்த்தம்?'' என்று அவள் வருத்தமாய் மொழிய,

''நான் எப்படி ரியாக்ட் பண்ணனும்னு நீ எதிர்பார்க்கிறே நித்திலா?'' என்று கேட்டான்.

அவளைத் தன்னிடம் இருந்து விலக்கியவன் தனது படுக்கையில் அமர்ந்து கொண்டு அவளையும் உட்காருமாறு கூறினான்.

''சொல்லு நித்திலா. நான் இப்ப என்ன செய்யணும்? நமக்கு கல்யாணமாகி ரெண்டு வாரம் ஆச்சு. நீயா என் பக்கத்திலே... ஏன் இந்த ரூமுக்குள்ள கூட வரலை. ஒதுங்கிப் போனதோடு இல்லாம என்னை ஒதுக்கியும் வச்சே. இப்ப திடீர்ன்னு வந்து உங்க அப்பா சம்மதிச்சிட்டதால நாம சேர்ந்து வாழலாம்னு சொல்ல வரியா?''

''இல்லைங்க. அப்பா...'' என்று தொடங்கியவளை இடைமறித்தான்.

''போதும் நித்திலா. உங்க அப்பா சம்மதிக்காததால தான் என்னை தள்ளி வச்சேன்னு தானே சொல்லப் போறே? நம்ம ரிஜிஸ்டர் மேரேஜ் நடந்த அன்னைக்கு

நீ என்ன சொன்னேன்னு உனக்கு ஞாபகம் இருக்கா? நம்மளோட பந்தம் ஜென்ம ஜென்மமாய் தொடரணும்னு சொன்ன இல்ல. அதை நீ உணர்ந்து சொன்னியா? இல்ல ஜஸ்ட் லைக் தட் சொன்னியா?''

''என்னங்க இப்படி கேட்கிறீங்க! நான் மனசால அப்படி உணர்ந்ததால தான் சொன்னேன்.''

''அப்படிச் சொன்னவள் உங்க அப்பா பேச்சை கேட்டு என்கிட்ட போனிலே பேச மறுத்தே! நான் உன்னை கான்டாக்ட் பண்ணிடக் கூடாதுன்னு பேஸ் புக்கை டீஆக்டிவேட் பண்ணினே! நான் நேரிலே வந்த போது என் முகம் பார்த்துப் பேச மறுத்தே! அப்பறம் எப்படி நம்மோட பந்தம் ஜென்ம ஜென்மாய் தொடரும்?'' என்று கேட்டவனுக்கு பதில் கூற முடியாமல் அவள் திணறினாள்.

''உன் அப்பாவுக்கு பொண்ணா நீ உங்க அப்பா பேச்சை கேட்டு அதுபடி நடந்துக்கிட்டதுக்கு உங்க அப்பா பெருமைப்படலாம். சந்தோஷப்படலாம். ஆனா உன் கணவனா நான் சந்தோஷப்படுற மாதிரி நீ என்ன செஞ்சே?'' என்று கேட்டதும் அவள் விழித்தாள்.

''நான் ஜெர்மனியிலே பார்த்துக்கிட்டு இருந்த வேலையை விட்டுட்டு வந்து இவ ஆபிஸிலேயே வேலை பார்ப்பேனாம். இவ என்னை யாருன்னே

தெரியாத மாதிரி நடந்துக்குவாளாம். நான் அதையும் தாங்கிக்கிட்டு இவளும் இவ அப்பாவும் மனசு மாறுவாங்கன்னு வெயிட் பண்ணுவேனாம்.

அப்புறமா இவ அம்மா பேச்சைக் கேட்டு ஊரிலே யாருமே பண்ணாத வகையிலே, கல்யாணப் பொண்ணை கிட்டத்தட்ட கடத்திக்கிட்டு போய் தாலி கட்டுவேனாம். அப்பவும் இவ அப்பாவுக்கு இறங்கி வர மனசு வராதாம். கோபமா அவர் மகளை வீட்டை விட்டு அனுப்பி வைப்பாராம்.

நான் வாசல்ல தேவுடு காத்து என் வீட்டுக்கு கூட்டிட்டு வருவேனாம். இந்த அம்மா என் வீட்டிலேயே இருந்துக்கிட்டு எனக்கே வாடகை கொடுப்பாங்களாம்! அப்புறம் என்னமோ சொன்னியே?'' என சில நொடிகள் யோசித்தவன்,

''ஹான், கரண்ட் பில்லுக்கு கூடப் பாதி பணம் குடுப்பாங்களாம். இவ சொல்லுற எல்லாத்தையும் கேட்டுட்டு நான் பொறுமையா இருக்கணுமாம். எது வரைக்கும்? இவ அப்பா தன் தப்பை உணரும் வரைக்கும். இவ அப்பா பச்சைக் கொடி காட்டின உடனே இவ பச்சக்குன்னு வந்து ஒட்டிக்குவாளாம். நானும் ஈன்னு இளிச்சுக்கிட்டு இவ பின்னாடியே போகணுமாம்'' என்று நக்கல் குரலில் கூறிக் கொண்டு வந்தவன்,

''நீயும் உன் அப்பாவும் என்னை நிறைய நோகடிச்சிட்டீங்க. போதும் நித்திலா!'' என்று வருத்தமான

குரலில் கூறிவிட்டு தனது படுக்கையில் சாய்வாக அமர்ந்து தனது கண்களை மூடிக் கொண்டான்.

அவன் கேட்பதெல்லாம் நியாயமே! அதற்காக அப்படியே விட்டுவிட முடியுமா? என்ன சொல்லி எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் நித்திலா திண்டாடினாள்.

அவன் அருகே அமர்ந்தவள் அவனது கன்னத்தில் கை வைத்து, ''சாரிங்க. எனக்கு நீங்க சொல்லுறது புரியுது. ஆனா என் நிலையில இருந்து நீங்க ஏன் யோசிக்க மாட்டேங்கிறீங்க?'' என்று அவள் தழுதழுப்புடன் கேட்க,

அவன் கண் திறந்து அவளைப் பார்த்து கேலியாகச் சிரித்தான்.

''நானா உன் நிலையில் இருந்து யோசிச்சுப் பார்க்கலைன்னு நினைக்கிறே? நான் அப்படி யோசிச்சுப் பார்த்தால தான் எனக்கு ரொம்பப் பிடிச்ச வேலையை விட்டுட்டு இங்க வந்தேன். எங்க அம்மா சொன்ன மாதிரி திரும்பவும் ஒரு கையெழுத்தை போட்டு நம்மோட உறவை முடிச்சுக்காமல் உங்க எல்லோர் கூடவும் போராடினேன். ஆனா எனக்காக நீ என்ன செஞ்சே? அதான் என் கேள்வி.''

''அப்படின்னா என்னை எங்க வீட்டுக்கு போகச் சொல்லிடுவீங்களா?'' என்று அவள் கவலையாய்

கேட்கும் பொழுதே அவளது கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது.

'நீ என்னைப் புரிந்து கொண்டது இவ்வளவு தானா?!' என்பது போல் அவளைப் பார்த்தவன் நிமிர்ந்து அமர்ந்தான்.

அவளது கண்ணீரைத் துடைத்தவன், ''நீ என் கூட சண்டை போட்ட போதே உன்னை வெளியே அனுப்பாத நானா இப்போ அனுப்பிடுவேனான்னு கேட்கிறே? அப்படியெல்லாம் ஒண்ணும் நடக்காது. ஆனா மனசு வலிக்குது நிது. ரொம்ப ஏமாத்தமா இருக்கு. என் மனசிலே இருக்கிறதை நான் உன் கிட்ட சொல்லாமல் வேற யார்கிட்ட சொல்லுவேன்?'' என்று கேட்டவன் தனது கண்களை மூடிக் கொண்டு மீண்டும் படுக்கையில் சாய்ந்து கொண்டான்.

கணவனின் பேச்சில் நித்திலாவிற்கு சந்தோஷமும் துக்கமும் ஒருங்கே வந்தன. அவள் படுக்கையில் நன்றாக தள்ளி அமர்ந்து கொண்டு அவனை தன் மடி மீது சாய்த்துக் கொண்டாள்.

மனைவியின் மடியில் படுத்தவன் ஒன்றும் கூறாது அமைதியாக இருந்தான். அவனது தலை முடியை அவள் கோதிக் கொடுக்க அந்த இதம் அவனுடைய மனக்கொதிப்பை குறைக்கவில்லை.

குனிந்து அவனது கன்னத்தில் முத்தமிட்டாள். அவளது கண்ணீர் அவனது கன்னத்தில் பட்டு உருண்டோடியது.

கண்களைத் திறந்து பார்த்தவன் அவளது கலங்கிய முகத்தை கண்டு மனம் வருந்தினான். தன் மனக்குறையை அவளிடம் சொல்ல வேண்டும் என நினைத்தான். அவளிடம் சொல்லியும் விட்டான். ஆனால் அதே சமயம் அவள் வருந்துவதைப் பார்க்கும் போது அவனது மனவருத்தம் அதிகரிக்கவே செய்தது.

கோவிலுக்குச் சென்றால் மனம் அமைதி அடையலாம் என எண்ணினான். மேலும் தன்னுடைய வாழ்வு சீரானதிற்கு கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும் போல் தோன்றியது.

''கோவிலுக்கு போவோமா?'' என்று கேட்டான்.

''போகலாங்க. ஆனா அத்தையும் மாமாவும் எத்தனை மணிக்கு வருவாங்கன்னு தெரியலையே! அவங்க வரும் போது வீடு பூட்டி இருந்தால் அவங்க வெளியே நிக்க வேண்டி இருக்குமே!''

''அவங்ககிட்டே பேசுறேன்'' என்றவன் தனது தந்தையை அழைத்து, ''அப்பா வேலை முடிஞ்சிடுச்சா? எத்தனை மணிக்கு வீட்டுக்கு வருவீங்க? சாப்பிட வந்துடுவீங்களா?'' என்று கேட்க,

''இல்லப்பா. நாங்க இங்கே இருந்து அப்படியே ஊருக்கு போகலாம்னு பார்க்கிறோம். நீங்க நாளைக்கு வந்துடுங்க. நாங்க உங்க அத்தையையும் மாமா

வையும் கூட்டிட்டு ஊருக்கு போறோம். காலையிலே மேகலா வீட்டுக்கு போகணும்'' என்று கூறினார்.

சேதுபதியிடம் இருந்து போனை வாங்கிய ராஜதுரை, ''மாப்பிள்ளை...'' என்று தழுதழுப்புடன் கூற,

''சொல்லுங்க மாமா'' என்று அவன் தன்மையாகக் கேட்க,

''என்னை மன்னிச்சிடுங்க மாப்பிள்ளை. நேரிலே வரணும்னு நினைச்சேன். ஆனா ஊரிலே உள்ள சில பேரைக் கூப்பிட உங்க அப்பாவோட சேர்ந்து போக வேண்டி இருக்கிறதால என்னால இப்போ உங்க வீட்டுக்கு வர முடியலை'' என்றார்.

''நான் வயசிலே சின்னவன். அதனால நீங்க என்கிட்ட மன்னிப்பு கேட்கணும்னு அவசியமில்லை மாமா. எங்களை புரிஞ்சுக்கிட்டால் அதுவே போதும்'' என்றவன் அதற்கு மேல் அவரிடம் என்ன பேசுவ தென்று தெரியாமல் மௌனம் காத்தான்.

கைப்பேசியை தன் சம்பந்தியிடம் இருந்து வாங்கிய சேதுபதி, ''சரிப்பா. நீங்க நாளைக்கு வந்துடுங்க. நாம அங்க பார்க்கலாம்'' என்றவுடன் சரியெனக் கூறி ராகவ் அழைப்பைத் துண்டித்தான்.

''என்னங்க சொன்னாங்க?'' என்று கேட்ட நித்திலாவிடம்,

''அவங்க நாலு பேரும் நைட்டே செங்கல் பட்டுக்கு போறாங்களாம்'' என்று விஷயத்தை விளக்கினான்.

''அப்படின்னா இப்ப வர மாட்டாங்களா? அவங்க வரப் போறாங்கன்னு தான் அவசர அவசரமா என் திங்க்ஸை இந்த ரூமுக்கு மாத்தினேன்.''

''அவங்க வரலைன்னா இன்னைக்கு கூட இந்த ரூமை எட்டிப் பார்த்து இருக்க மாட்டியா?''

''அந்த மாதிரி எப்படி சொல்ல முடியும்? இந்த ரூமுக்கு வர சான்ஸ் தேடி அலைஞ்சவ தானே நான்! பிரச்சனையே இல்லைன்னு ஆனதுக்கு அப்புறம் இங்க வர எனக்கு என்ன தயக்கம்?'' என்று கேட்டாள்.

அந்தப் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைப்பவனாக, ''கோவிலுக்கு போக ரெடியாகு!'' என்றவன் குளியலறைக்கு சென்று முகம் கழுவ ஆரம்பித்தான்.

அவளும் தயாராகி வரவும் இருவரும் அவனது இரு சக்கர வாகனத்தில் கோவிலுக்கு கிளம்பினர்.

26



தங்களது பிரச்சனைகள் ஒரு முடிவிற்கு வந்ததற்கு கடவுளுக்கு நன்றி தெரிவித்த இருவரும்,

'இனியாவது எங்கள் வாழ்வில் எந்த வித சிக்கலும் ஏற்படக் கூடாது' என்று கடவுளை வேண்டிக் கொண்டனர்.

சிறிது நேரம் கண் மூடி பிரகாரத்தில் அமர்ந் திருந்தனர். அப்பொழுது நித்திலாவின் மனதில் ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வந்தது. அவளது முகம் பிரகாசமாகியது.

அவளது திடீர் முகமாற்றத்தைக் கண்டு வியந் தவன், ''என்னாச்சு? இவ்வளவு நேரம் சாதாரண உளுந்து வடையா இருந்த உன் முகம் திடீர்னு சாம்பாரிலே ஊறப் போட்ட வடையா உப்பிடுச்சு!'' என்று கிண்டல் பண்ண,

''நான் அன்னைக்கு சந்தேப்பட்டது சரிதான் போல! நீங்க ஜெர்மனியில செஃபா தானே இருந் தீங்க?'' என்று நித்திலா பதிலுக்கு கிண்டலாகக் கேட்டாள்.

''ஆமா நான் செஃப் தான். இஞ்சினியர்ன்னு பொய் சொல்லி உன்னை ஏமாத்தி கல்யாணம் பண்ணிக்கிட்டேன். நம்ம ஆபிஸிலே கூட நான் சாஃப்ட்வேர் இஞ்சினியரா வேலை பார்க்கலை. நம்ம ஆபிஸ் கேன்டீனிலே சமையல்காரனா தான் வேலை பார்க்கிறேன்.''

''இது விஷயமா நாம இன்னொரு நாள் கிண்டல் பண்ணிக்கலாம். இப்போ நாம உடனே வீட்டுக்கு போகணும். வாங்க'' என்று எழுந்து நின்றாள்.

அவனும் மௌனமாக எழுந்து அவளைப் பின் தொடர்ந்தான். வீட்டிற்கு வரும் வழியில் அவன் ஒரு உணவகத்தில் பைக்கை நிறுத்த.

''இங்க ஏன் நிறுத்தினீங்க? சாப்பிடப் போறீங் களா? பசிக்குதா?'' என்று கேட்டாள்.

''சாப்பிடப் போறீங்களான்னா என்ன அர்த்தம்? இன்னைக்கும் என் கூட சாப்பிட வர மாட்டியா?'' என்று அவன் சற்றே கோபம் ஏறின குரலில் கேட்க,

''நான் அப்படி சொல்லலைங்க. உங்களுக்கு பசிக்கலைன்னா நாம பார்சல் வாங்கிட்டுப் போயிடுவோமான்னு கேட்க வந்தேன். இனிமேல் நான் சம்பாதிக்கிறதை செலவு பண்ணுறதுக்கு எனக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? இனிமேல் என் ஸ்கூட்டிக்கு பெட்ரோல் போடுறதுன்னா கூட உங்ககிட்ட தான் பணம் வாங்குவேன்'' என்று அவள் கூறவும்,

அவளை ஏற இறங்கப் பார்த்தவன், ''அப்ப மேடம் உங்க சம்பளத்தை வச்சு என்ன பண்ணுவீங்க?'' என்று கேட்டான்.

''ம்ம்ம்... என் ஹஸ்பண்டுக்கு ஏதாச்சும் கிஃப்ட் வாங்கித் தருவேன்.''

''சம்பளப் பணம் மொத்தத்தையுமா கிஃப்ட்டுக்கு செலவு பண்ணுவ?''

''அஸ்கு புஸ்கு. அதுக்கு வேற ஆளைப் பாருங்க'' என்றவள் சற்றுத் தீவிரமான முகபாவத்துடன்,

''நீங்க சொல்லுற மாதிரி முழு சம்பளத்தையும் நான் அவருக்காக செலவு பண்ணத் தயாரா இருக்கேன். ஆனா அதிலே அவருக்கு சம்மதமான்னு தெரியலையே! ஏன்னா நான் அவருக்காக நூறு ரூபாய்க்கு கிஃப்ட் வாங்கினால் அவர் எனக்கு பதிலுக்கு இருநூறு ரூபாய்க்கு கிஃப்ட் வாங்கித் தரணும்'' என்றாள்.

''நீ எனக்கு எந்த கிஃப்ட்டும் வாங்கித் தரவும் வேண்டாம். உன் செலவுக்காக நான் எந்தப் பேங்கையும் கொள்ளை அடிக்கவும் வேண்டாம். என்னை ஆளை விடு'' என்றவன்,

அந்த உணவகத்தின் உள்ளே சென்றான். அவள் சொல்லைத் தட்டாது இருவருக்கும் உணவினை வாங்கிக் கொண்டு திரும்பினான்.

அவர்கள் இருவரும் தங்களது வீட்டிற்கு திரும்பும் போது மழை பொழிய ஆரம்பித்தது. ராகவ் வண்டியை ஓரங்கட்டிவிட்டு ஒதுங்க நினைத்தான். ஆனால் அவனது மனைவியோ,

''வீட்டுக்கு போயிடலாங்க. இங்க நிக்க வேண்டாம். பக்கத்திலே தானே நம்ம வீடு. மழையும் பெருசா பெய்யலை. அப்படியே நாம நனைஞ்சாலும்

வீட்டுக்கு போய் டிரஸ் மாத்திக்கலாம்'' என்று கூறினாள்.

'இவளுக்கு திடீர்ன்னு என்னமோ ஆச்சு. ஆனா என்னன்னு தான் தெரியலை!' என்று ராகவ் மனதிற்குள் புலம்பிக் கொண்டே வீட்டை நோக்கி தனது இரு சக்கர வாகனத்தை செலுத்தினான்.

வீட்டிற்குள் நுழைவதற்குள் இருவருமே நனைந்து விட்டனர். கதவை திறந்து உள்ளே நுழைந்தனர்.

''உனக்கு அப்படியென்ன பிடிவாதம்? கொஞ்ச நேரம் எங்கேயாச்சும் ஒதுங்கி இருந்திருக்கலாமே! பாரு நல்லா நனைஞ்சிட்டோம். போய் நல்லா துவட்டு. உடம்பு சரியில்லாமல் போயிடப் போகுது'' என்று கூறியவன் அவள் பின்னோடு தங்களது படுக்கை அறைக்குள் நுழைந்தான்.

''நீங்களும் நல்லா துவட்டுங்க. இப்ப தான் ஜுரம் சரியாகி இருக்கு.''

'இந்த அக்கறை நான் ஒதுங்கலாம்னு சொன்ன போது எங்க போச்சு?' என்று கேட்க ஆசைப்பட்டான். ஆனால் இன்றைக்கு அவளை இதற்கு மேல் வருத்த வேண்டாம் என்று தீர்மானித்தவனாய் அந்தக் கேள்வியை கேட்காது விட்டான்.

''ஹீட்டர் போட்டு சூடு தண்ணியில முகம் கழுவு'' என்று கூறியவன் தனது பெர்முடாஸ் ஒன்

றையும் துண்டு ஒன்றையும் எடுத்துக் கொண்டு பக்கத்து அறை நோக்கிச் சென்றான்.

பக்கத்து அறையில் உள்ள குளியலறையில் தனது ஈர உடையை மாற்றியவன் அந்த பெர்முடாஸை அணிந்து கொண்டு வெளியே வந்தான்.

''டி-ஷர்ட் எடுக்காமல் வந்துட்டேன். இவ டிரஸ் மாத்திட்டாளான்னு தெரியலை'' என்று கூறிக் கொண்டே அறை வாயிலிலே காத்திருந்தான்.

அவள் ஒரு நைட் பேன்டும் சட்டையையும் போட்டுக் கொண்ட பின் அறைக் கதவைத் திறந்தாள்.

''என்ன இங்க நின்னுக்கிட்டு இருக்கீங்க?''

''என்னோட டி-ஷர்ட் வேணும்'' என்று கூறிக் கொண்டே அவன் அறைக்குள் நுழைய,

''டி-ஷர்ட் வேணும்னா ரூமுக்குள்ளே வந்து எடுத்துக்க வேண்டியது தானே? அதுக்கு எதுக்கு செக்யூரிட்டி மாதிரி வாசல்லயே நிக்கிறீங்க?'' என்று இடக்காகக் கேட்டாள்.

''இப்போ உன் டைம் நல்லா இருக்கு. அதனால உன் வாய்க்கு வந்ததை எல்லாம் நீ பேசு. ரூமை பூட்டி வச்சிட்டு உள்ளே வர வேண்டியது தானேன்னு கேள்வியா கேட்கிறே?'' என்று அவன் நக்கல் பண்ண,

அவளோ அவனது நக்கலை கண்டு கொள்ளவில்லை. அவனது தலையில் இருந்து சொட்டிக் கொண்டு இருந்த நீரைக் கண்டவள் அவனை படுக்கையில் உட்கார வைத்து தன் கையில் வைத்திருந்த துண்டால் அவனது தலையைத் துடைத்து விட ஆரம்பித்தாள்.

''நீங்க என்ன குழந்தை பிள்ளையா? உங்க தலையைக் கூட உங்களால சரியாத் துடைச்சிக்க முடியாதா?'' என்று கடிந்து கொண்டாள்.

''அவசரத்திலே சின்னத் துண்டை எடுத்துட்டுப் போயிட்டேன். அது ஈரத்தை நல்லா உறிஞ்சலை'' என்று அவன் முணுமுணுத்தான்.

அவள் கடமையாய் அவன் தலையை துவட்டினாள். அவள் தன் இரு கைகளையும் தூக்கிக் கொண்டு அவன் தலையை துவட்டியதால் அவளது டி-ஷர்ட் சற்றே மேலேறி அவளது இடுப்புப் பிரதேசம் வெளியே தெரிந்தது.

''நீ குஷி படம் பார்த்து இருக்கியா நிது?''

''விஜய் ஜோதிகா நடிச்ச படம் தானே? பார்த்து இருக்கேன். இப்ப எதுக்கு இந்தக் கேள்வி?''

''இல்ல உன் இடுப்பும் எனக்கு கொஞ்சமாத் தெரியுது. அதான்...''

''தெரிஞ்சா பார்த்துட்டு கம்முன்னு போக வேண்டியது தானே! இதையெல்லாமா வெளியே

சொல்லுவாங்க?'' என்று அவள் முணுமுணுத்தது அவனது காதில் தெளிவாக விழுந்தது.

''கம்முன்னு ஏன் போகணும்?'' என்று முணுமுணுத்தவன் தனது விரலால் அவளது இடுப்பில் கோடு இழுக்க அனிச்சை செயலாய் அவள் அவனது கையை தட்டிவிட்டாள்.

''தட்டியா விடுறே?'' என்றவன் தனது ஐந்து விரல்களையும் அவளது இடுப்பில் பதித்து ஊர்வலம் நடத்த அவளது உடல் கூசிச் சிலிர்த்ததை அவனால் உணர முடிந்தது.

''என்ன பண்ணுறீங்க ராகவ்?''

''என் இடம். நான் என்ன வேணா பண்ணுவேன்.''

''கூசுது ராகவ். கையை எடுங்க'' என்று நித்திலா கூறவும் அவன் தனது கையை எடுத்தான்.

'அவ்வளவு நல்லவனாடா நீ!' என்று அவள் மனதுக்குள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே அவன் அவளது இடுப்பில் முத்தமிட அவள் கூச்சத்தால் நிலை குலைந்து அவன் மேல் சரிந்தாள்.

அவன் அப்படியே படுக்கையில் பின்னால் சாய அவளும் அவன் மீது விழுந்தாள். கணவனின் வெற்று மார்பில் படுத்திருந்தவளுக்கு உடலுக்குள் மின்சாரம் பாய்ந்தது. அவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான். இருவரும் அந்த மோன நிலையில் அப்படியே அமிழ்ந்திருந்தனர்.

''கோவிலுக்கு போகும் முன்னாடி யாரோ என் மேல ரொம்ப வருத்தமா இருக்கிறதா சொன்னாங்க'' என்று அவள் கிசுகிசுப்பாகக் கூற,

''இது நல்ல கதையா இருக்கே. வருத்தமா இருந்தா உனக்கு தண்டனை கொடுக்கலாம். ஆனா உன் கூட வாழாமல் என்னை நானே ஏன் தண்டிச்சிக்கணும்? அஸ்கு புஸ்கு. அதுக்கு வேற ஆளைப் பாரு!'' என்று அவள் போலவே அவன் சொல்லிக் காட்ட,

அவள் தன் முகத்தை கணவனின் மார்பிலேயே புதைத்துக் கொண்டாள். ''நிது!'' என்று அவன் கிறங்க வாசல் மணி கிணுகிணுத்தது.

''பெல் அடிக்கிறதுக்கு நல்ல நேரம் பார்த்தாங்க'' என்றவன்,

அவளை இறுக அணைத்துவிட்டு அவளைப் படுக்கையில் உருட்டிவிட்டு எழுந்தான். கைக்கு கிடைத்த டி-ஷர்ட் ஒன்றை மாட்டியவாறே கதவை திறக்கச் சென்றான்.

நித்திலா தனது பெட்டியை திறந்து ஒரு சான்றிதழை தேட ஆரம்பித்தாள்.

''அன்னைக்கு அம்மா என் துணிகளை மொத்தமா அப்படியே எடுத்துத் தானே பெட்டியிலே திணிச்சாங்க. அப்படின்னா துணிக்கு இடையிலே நான் மறைச்சு வச்சு அந்த சர்டிபிகேட்டும் இங்க தானே

இருக்கணும். ஒரு வேளை எங்க வீட்டிலேயே இருக்கோ?'' என்று புலம்பிக் கொண்டே தேடினாள்.

அவன் அதற்குள் கை நிறைய அழைப்பிதழ்களோடு உள்ளே வந்தான். தனது கைபேசியில் இருந்து சரோஜினியை அழைத்தவன்,

''இன்விடேஷன் அடிச்சு வந்துடுச்சு அத்தை. நான் நாளைக்கு செங்கல்பட்டுக்கு வரும் போது கொண்டு வரேன்'' என்றான்.

அவன் பேசி முடித்து வைத்ததும், ''எங்கம்மா கிட்டவா பேசினீங்க? என்ன இன்விடேஷன்?'' என்றாள்.

''நம்மளோட சென்னை ரிசப்ஷன் இன்விடேஷன்.''

''நான் கூடக் கேள்விப்பட்டேன். உங்களுக்கு ரெண்டு ரிசப்ஷன் நடக்கப் போகுதாமே?''

''ஏன் சொல்லலைன்னு நீ சண்டை போடுற மூடிலே இருக்கேன்னு எனக்குப் புரியுது. ஆனா நான் இப்போ உன் கூட சண்டை போடத் தயாரில்லை.''

''மண்டபம் அரேஞ்ச் பண்ணின மாதிரி உங்க கூட நிக்குறதுக்கு ஆளை, ஐ மீன் ஒரு பொண்ணை ரெடி பண்ணிட்டீங்களா?'' என்று அவள் முறைத்துக் கொண்டே கேட்க,

''ரெடி பண்ணிட்டா போச்சு. அது ஒண்ணும் கஷ்டமான வேலை கிடையாது'' என்று அவன்

அலட்டாமல் கூறவும் செய்து கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு அவனை அடிக்கும் வேலையை பார்க்க ஆரம்பித்தாள்.

''வேற பொண்ணை ரெடி பண்ணிடுவீங்களா? அதுக்கு நான் விட்டுவிடுவேன்னு நினைச்சியாடா?'' என்று கேட்டுக் கொண்டே அவள் சராமரியாக அவனைப் போட்டுத் தாக்க ஆரம்பிக்க,

''டான்னா சொல்லுறே? மரியாதை நிது. மரியாதை!'' என்று கூறிக் கொண்டே அவளது அடிகளில் இருந்து லாவகமாகத் தப்பித்தான்.

அவளது இரு கைகளையும் தனது கைகளுக்குள் சிறைப் பிடித்தவன், ''பெட்டிக்குள்ளே எதைத் தேடிக்கிட்டு இருக்கே?'' என்று கேட்டான்.

''முக்கியமான ஒண்ணு. அதை எடுக்கிறதுக்காக தான் கோவில்ல இருந்து வீட்டுக்குச் சீக்கிரமா வர நினைச்சேன்'' என்றவள் தனது கைகளை உருவிக் கொண்டு மீண்டும் தனது தேடுதல் வேட்டையை தொடர்ந்தாள்.

ஒருத்தி மேல மீண்டும் மையலானேன்

தோழியேநீ தூது போடி!

அவளை அவளை ரசித்துக் கிடந்த விழிகள்

வேறாரையும் பார்க்காதே...

அவளை அவளை பழகித் தொலைத்த இதயம்

வேறாரையும் ஏற்காதே...

என்று அவன் பாடிக் கொண்டிருந்தான்.

அவனது பாடலின் வரிகளை கேட்டவள் சிறு புன்னகையுடனே தன்னுடைய சான்றிதழை தேடினாள். தேடியது தனது கைகளில் கிடைத்த வுடன் அதை எடுத்துக் கொண்டு கணவன் முன் வந்து,

''ராகவ்! நான் இப்போ உங்ககிட்டே காட்டப் போறது உங்களுக்கு சந்தோஷம் தருமா இல்லை யான்னு எனக்கு சரியாத் தெரியலை. ஆனா எனக்காக நீ ஒண்ணுமே பண்ணலையான்னு கேட்டீங்க இல்ல. அதுக்கான விடையா இதை உங்ககிட்ட காட்ட விரும்புறேன்'' என்றவள்,

அந்தச் சான்றிதழை அவன் முன் நீட்டிக் கொண்டே, ''எங்க அப்பா உங்க கூடப் பேசக் கூடாதுன்னு தடை போட்டார். நான் அதை அப்படியே கேட்டு நடந் தேன். ஜெர்மன் கோர்ஸ் சேரக் கூடாதுன்னு சொன் னார். ஆனா அதை மட்டும் நான் காதிலே வாங் கிக்கலை'' என்று அவள் கூறிக் கொண்டு இருக்கும் போதே அவன் அந்த பைலை திறந்து அந்தச் சான்றிதழை பார்வையிட்டான்.

''Goethe Institut'ல சேர்ந்து சனி ஞாயிறு க்ளாஸ் அட்டெண்ட் பண்ணி எக்ஸாமும் எழுதி

பாஸ் ஆகிட்டேன். இந்த சர்டிபிகேட் என் கையிலே இருந்தால் தான் என்னால உங்ககிட்ட வர முடியும்னு தோணினதால வேலைக்கு போறதா பொய் சொல் லிட்டு அந்த க்ளாஸுக்கு போனேன்.''

'ஜெர்மன் படிக்க வேண்டி இருக்கிறதே என்று வாய் ஓயாமல் புலம்பிக் கொண்டிருந்தவள்... தன் தந்தையை எதிர்த்து... ஐந்து நாட்கள் அலுவலகம் செல்வதால் உண்டான களைப்பை புறந்தள்ளிவிட்டு படித்து முடித்திருக்கிறாள் என்றால்... அது எனக்காக இல்லாமல் வேறு யாருக்காக?' என்ற நினைப்பு தோன்றவும்,

அவன் தன் கையில் இருந்த பைலை அவளது பெட்டியிலே போட்டுவிட்டு அவளை அப்படியே அலாக்காக தூக்கிச் சுற்றினான்.

''ஹேய்!'' என்று அவள் ஆனந்தக் கூச்சலிட அவளோடு அப்படியே படுக்கையில் விழுந்தவன் அவளை இறுக அணைத்துக் கொண்டு அவளது கழுத்து வளையில் முகம் பதித்தான்.

''ஆர் யூ ஹேப்பி? உங்க வருத்தம் கொஞ்சமாவது குறைஞ்சதா?'' என்று அவள் கேட்க,

''பேசாதே நிது! பேசிப் பேசி டைம் வேஸ்ட் பண்ணியதெல்லாம் போதும்'' என்றவன் அவளது இதழ்களை தன் இதழ்களால் சிறை செய்து அவளைப் பேச்சிழக்க வைத்தான்.

அவள் அவன்து இறுகிய அணைப்பிலும் நீண்ட முத்தத்திலும் தன்னை மறந்தாள். அவர்களது இல்லறம் இரு வீட்டுப் பெரியவர்களின் ஆசியோடு தொடங்கியது.

27



மறுநாள் காலை ஆறு மணிக்கு ராகவ் அவளை எழுப்பினான்.

''எழுந்திருடா நிது. நேரமாச்சு.''

''நைட் தான் தூங்கவிடலை. இப்பவும் ஏன் சீக்கிரமா எழுப்புறீங்க?''

''செங்கல்பட்டுக்கு போகணும்டா.''

''நாளைக்கு தானே ரிசப்ஷன். பொறுமையா போகலாம். எனக்கு தூக்கம் வருது ராகவ்'' என்று சிணுங்கியவள் தலையணையில் முகம் புதைத்துக் கொண்டாள்.

''இல்ல நிது. மேகலா அக்கா வீட்டுக்கு போக ணும்னு அப்பா சொல்லிக்கிட்டு இருந்தார். நீ காரிலே தூங்கிக்கிட்டே வா. வீட்டுக்கு போனதும் படுத்துத்

தூங்கு. உன்னை யாரும் தொந்தரவு பண்ணாமல் நான் பார்த்துக்கிறேன்'' என்று உறுதி அளித்தான்.

மேகலாவின் பெயரைக் கேட்டவள் மனமே இல்லாமல் ம்ம்ம் என்று சிணுங்கிக் கொண்டே எழுந்து குளித்துக் கிளம்பித் தயாரானாள்.

ராகவ் தன் தந்தைக்கு அழைத்துப் பேசினான்.

''சேகர் மாமாவை போய் பார்க்கணும்னு சொல் லிக்கிட்டு இருந்தீங்களே? நானும் நித்திலாவும் வரணுமாப்பா? எத்தனை மணிக்கு வரணும்?''

''நானும் நித்திலா அப்பாவும் போய் அவரை நேரிலே பார்த்துக்குவோம்டா. நீங்க ரெண்டு பேரும் வரவேண்டாம்.''

''அப்ப நீங்க மட்டும் காஞ்சிபுரம் கிளம்புறீங் களா?''

''காஞ்சிபுரத்துக்கு எதுக்குடா? அவங்க நேத்தே செங்கல்பட்டுக்கு வந்துட்டாங்க. அவங்களோட பூர்வீக வீட்டிலே இருக்காங்க. இன்னைக்கு சனிக் கிழமையா இருப்பதால நீ நம்ம வீட்டுக்கு வர முடியாதாம். அவங்க கூட தான் தங்கணுமாம். நாளைக்கு தான் நல்ல நேரம் பார்த்து நம்ம வீட்டுக்கு வரணும்னு அம்மா சொல்லிட்டாள்.''

''சரிப்பா அப்படின்னா நான் மதிய சாப்பாட்டுக்கு பிறகு கிளம்பி வரட்டுமா? அவங்க வீட்டிலே நாள்

பூராவும் இருக்கணும்னா எனக்கு கொஞ்சம் அன் ஈஸியா இருக்கும்.''

''ஒண்ணும் பிரச்சனை இல்லைடா. நீ இருட்டுற துக்கு முன்னாடி ஊருக்கு வந்துடு. நான் அம்மாகிட்ட சொல்லிக்கிறேன்.''

''நேத்து யார் யாருக்கு பத்திரிக்கை கொடுத் தீங்கப்பா? நித்திலோவோட பெரியப்பாவோட ரியாக்ஷன் எப்படி இருந்துச்சு?'' என்று கேட்டதும் சேதுபதி முன் தினம் நடந்ததை அவனிடம் விவர மாக எடுத்துரைத்தார்.

அவரிடம் பேசி முடித்து அழைப்பைத் துண்டித் தவன் அந்தத் தகவலை மனைவியிடம் தெரிவிக்க எண்ணினான்.

படுக்கை அறைக்குள் நுழைந்தவன் மனைவி யிடம், ''நிது! நாம இன்னைக்கு அக்கா வீட்டிலே தான் தங்கணுமாம். அதனால அப்பா நம்மை சாயங் காலம் வந்தால் போதும்னு சொல்லிட்டார். பொறுமை யாவே போகலாம். நீ படுத்துத் தூங்கு'' என்றதும் அவள் காளி அவதாரம் எடுத்தாள்.

''இதை முதல்லயே கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டு என்னை எழுப்ப மாட்டீங்களா?''

''ஹி ஹி!'' என்று அசடு வழிந்தவன், ''குளிச்சுட்டு தூங்கினால் நல்லா ஃப்ரஷா தூக்கம் வரும் நிது'' என்றான்.

அவள் அவனை முறைத்துக் கொண்டே படுக் கையில் படுத்தாள். அவனும் அவளை ஒட்டிப் படுத்துக் கொண்டு அவள் மேல் கை போட.

''என்னது இது?'' என்று அவள் நக்கல் குரலில் கேட்டாள்.

''ஹஸ்பண்ட் பக்கத்திலே இந்த மாதிரி படுத்திருந் தால் ரொம்ப நல்லா தூக்கம் வரும் நிது'' என்று அவன் அப்பாவியாய் கூறினான்.

''உனக்கு என் பேச்சிலே நம்பிக்கை இல்லை. அப்படி தானே? நான் புரூவ் பண்ணிக் காட்டுறேன்'' என்றவன் அவளை இறுக அணைத்துக் கொண்டு அவளது கழுத்து வளையில் முகம் புதைத்தான்.

கணவனின் இறுகிய அணைப்பிலும் அவன் தனது கழுத்து வளைவில் புதையுண்டு இருந்ததால் ஏற்பட்ட சிலிர்ப்பிலும் அவள் அமைதியானாள்.

''பார்த்தியா அடுத்த செகன்டே அமைதியா தூங் கிட்டே!'' என்று கூறி அவளிடம் சில செல்ல அடிகளை வாங்கிக் கொண்டான்.

மனைவியிடம் இருந்து விலகி எழுந்து அமர்ந் தான். அவனது முகத்தில் தெரிந்த தீவிரத்தை கண்டவள் எழுந்து அவனது பக்கத்தில் அமர்ந் தாள்.

''என்ன தான் உங்க அம்மா வற்புறுத்தினாலும் நான் உன்கிட்டே சம்மதம் கேட்காமல் தாலி கட்டி

இருக்கக் கூடாது நிது. ஐயம் ரியலி சாரி!'' என்று அவன் உணர்ந்து மன்னிப்புக் கேட்க,

''என்கிட்ட சம்மதம் கேட்காதது பிரச்சனை இல்லைங்க. என்னைக்கு இருந்தாலும் நீங்க தானே என் கழுத்திலே தாலி கட்டப் போறீங்க! ஆனா எங்க அம்மாவும் அப்பாவும் அந்த இடத்திலே இல்லாதது தான் பிரச்சனை'' என்று அவள் விளக்கினாள்.

''உங்க அப்பா அம்மா வராததால நானும் என் வீட்டிலே இருந்து யாரும் இல்லாமல், ஃபிரண்ட்ஸ் முன்னாடி தாலி கட்ட ரெடியா தான் இருந்தேன். ஆனா உங்க அம்மா தான் பிடிவாதமா அப்படி செய்யக் கூடாதுன்னு சொல்லிட்டாங்க. அப்படி நடந்தா அது திருட்டுக் கல்யாணம் ஆகிடும் மாப்பிள்ளைன்னு சொல்லிட்டாங்க. அவங்க சொன்ன மாதிரி தான் ஆச்சு'' என்றவன் சற்று முன் தன் தந்தை அவளது பெரியப்பா வீட்டில் நடந்ததைப் பற்றிக் கூறியதை அவளிடம் பகிர்ந்தான்.

''எங்க மாமியார் ஒரு தீர்க்கதரிசி! சூப்பர் கேரக்டர் இல்ல? அவங்க உனக்கு அம்மாவா கிடைக்க நீ குடுத்து வச்சிருக்கணும் நிது!'' என்று அவன் சரோஜினியைப் பற்றிப் பெருமையாகக் கூறவும்,

''எங்க அப்பாவும் ரொம்ப நல்லவர் தாங்க. என்ன கொஞ்சம் பிடிவாதக்காரர். நான் பொய் சொல்லிட்டு

ஜெர்மன் க்ளாஸ் போனதை கண்டுபிடிக்காமலா இருந்திருப்பார்! ஆனாலும் என்னை தடுத்ததில்லை தெரியுமா!'' என்று கூறினாள்.

தன் தந்தையைப் பற்றியும் ராகவ் பெருமையாக எண்ண வேண்டும். அவரிடமும் நன்றாகப் பழக வேண்டும் என்று நித்திலா ஆசைப்படுவது அவனுக்கு நன்றாகப் புரிந்தது.

''உன்னோட ஆசையை என்னால புரிஞ்சுக்க முடியுது நிது. ஆனா நான் உங்க அப்பாகிட்ட சரளமா பேசணும்னா கொஞ்ச நாளாகும். எனக்கு கொஞ்சம் டைம் குடு நிது'' என்று கேட்டான்.

அவனது பதிலில் மனம் வாடினாலும் அவன் சொல்வதில் உள்ள நியாயம் புரிந்ததால் அவள் அமைதியானாள்.

''லீகலா இவ தான் என் வைஃப். இவங்க அப்பா எங்களை பிரிச்சு வச்சிருக்காருன்னு நீங்க போலீஸோட வந்து நின்னுடுவீங்களோன்னு நான் நிறைய நாள் பயந்திருக்கேன் தெரியுமா? நீங்க ஏன் அப்படிச் செய்யலை?'' என்று நித்திலா சந்தேகம் கேட்டாள்.

''தாலி கட்டினதுக்கு அப்புறமும் தனி ரூமிலே இருந்து புரட்சி பண்ணினவள் நீ! நான் போலீஸோடு வந்திருந்தால் நீ வீட்டை விட்டு வந்துடுவியா என்ன? இதான் சாக்குன்னு என் மாமனார் டைவர்ஸ்

நோட்டீஸை நீட்டிட்டால், எவனாவது சொந்த செலவிலே சூனியம் வச்சுக்குவானா?'' என்று அவன் கேட்டதும் இருவருமே சில நொடிகள் அமைதியா னார்கள்.

''நான் நேத்தே உன்கிட்ட ஒரு விஷயம் கேட் கணும்னு நினைச்சேன் நிது. ஜெர்மன் மொழியை படிக்கிறதுக்கு அப்படி பயந்துக்கிட்டு இருந்தியே! எப்படி யாரோட உதவியும் இல்லாமல் படிச்சு முடிச்சே? என்னை கூட சொல்லித் தரச் சொன்னே தானே?''

''நான் படிச்ச லட்சணத்தை வெளியே சொல்ல முடியாது'' என்று அலுத்துக் கொண்டவள்,

''அது உங்களையும் என்னையும் இணைக்கும் பாலம் என்பதால எப்படியோ படிச்சு எக்ஸாம் எழுதினேன். ஒண்ணு கூட மனசிலே பதியலை'' என்றவள் களுக்கென்று சிரித்தாள்.

''நீங்க சென்னைக்கு வந்த பிறகு எனக்கு முதன் முதலா குட் நைட் மெசேஜ் அனுப்பினீங்க தானே. அதுக்கு கூட அர்த்தம் தெரியாமல் நான் கூகுளில் தேடி தான் கண்டுபிடிச்சேன்னா பார்த்துக்கோங்க, நான் என்ன அழகா ஜெர்மன் படிச்சிருப்பேன்னு'' என்றவளின் முகம் சட்டென்று மாறியது.

''நான் உங்களுக்கு ஒரு நாள் கூட பதில் மெசேஜ் அனுப்பலைன்னு உங்களுக்கு வருத்தமா

இருந்ததா?'' என்று கேட்டதும் அவன் அமைதியாக அவளையேப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

அவள் அவனது நன்னத்தை மென்மையாக வருடி, ''சாரி ராகவ். நான் உங்களுக்கு பதில் அனுப்பலை தான். ஆனா தினமும் உங்களுக்கு குட் நைட் சொல்லிட்டு உங்களுக்கு கிஸ் கொடுத்துட்டுத் தான் தூங்குவேன் தெரியுமா?''என்று கேட்டாள்.

''கிஸ் கொடுத்தது எனக்கா இல்ல என் போட் டோவுக்கா?''

''ம்ம்ம்... போட்டோவுக்கு தான். ரெண்டும் ஒண்ணு தானே?''

''அப்படியா சொல்லுறே?!''

''இல்லையில்ல'' என்று வேகமாக மறுத்தவள், ''அப்புறம் இதை என்னைக்காவது ஞாபகம் வச்சு என்னை பழி வாங்கிடப் போறீங்க'' என்றாள்.

''எப்படிப் பழி வாங்குவேன்?''

''ம்ம்ம் எங்கேயாவது என்னை தனியா விட்டுட்டுப் போகிறதா இருந்தால் நானும் என் போட்டோவும் ஒண்ணு தானே. அது கூட ஒரு மாசம் குடும்பம் நடத்துன்னு சொல்லிட்டீங்கன்னா...'' என்று அவள் போலியாய் பயப்பட,

''அது! அந்த பயம் இருக்கணும் நிது!'' என்றான்.

''இவர் பெரிய 'துப்பாக்கி' விஜய். டயலாக் சொல்லுறார்!'' என்று அவள் கிண்டல் பண்ணினாள்.

''பேச்சை மாத்தாதே. போட்டோவுக்கு கொடுத்த தெல்லாம் இப்ப எனக்கு கொடு. அதுக்கு முன்னாடி நான் சொன்ன ஐ லவ் யூக்கு நீ பல மாசமா பதில் சொல்லாமல் இருக்க. அதை முதல்ல சொல்லு!'' என்றான்.

''உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா ராகவ், எனக்கு அதுக்கு மட்டும் தான் ஜெர்மன் வார்த்தை தெரியும்'' என்றாள்.

''மறுபடியும் டிராக் மாறுது. ஐ லவ் யூ சொல்லு!'' என்று அவன் வற்புறுத்தவும்,

அவனது கண்களை நேராகப் பார்த்துக் கொண்டே, ''ஐ லவ் யூ'' என்று கூறி அவனது கன்னத்தில் முத்தமிட்டதும் அவன் அவளைப் பார்த்துப் புன் னகைத்தான்.

''ஹே! எனக்கே எனக்கான ஸ்மைல். சோ ஸ்வீட்!'' என்று அவனது கன்னத்தைக் கிள்ளி கொஞ்சிக் கொண்டாள்.

அதில் அவனது புன்னகை மேலும் விரிந்தது.

''உங்களுக்கு ஒரு ரகசியம் சொல்லட்டுமா ராகவ், நான் எவ்வளவு கோபமா இருந்தாலும் நீங்க என்னைப் பார்த்து இப்படி ஸ்மைல் பண்ணுனீங் கன்னா நான் என் கோபத்தை மறந்து அப்படியே உங்ககிட்ட கவிழ்ந்திடுவேன்.''

''அடடா! இது தெரியாமல் நான் ரெண்டு வாரத்தை வேஸ்ட் பண்ணிட்டேனே!'' என்று அங்கலாய்த்தவன்,

''போனதைப் பேசி ஒண்ணும் ஆகப் போறதில்லை. இப்போ எனக்கு மதியம் வரைக்கும் சான்ஸ் கிடைச்சிருக்கு. நோ டைம் வேஸ்டிங்'' என்றவன் மனைவியைக் கிறங்கடிக்கும் வேலையை செவ்வனே செய்தான்.

பெரியவர்களின் ஏற்பாட்டின்படி ஞாயிறன்று செங்கல்பட்டிலும் அதற்கு அடுத்த வாரம் சென்னை யிலும் அவர்களது திருமண வரவேற்பு நிகழ்ச்சி அமோகமாக நடைபெற்றது.

அவர்களது இல்லறம் நல்லறமாக அமைய வாழ்த்தி விடைபெறுவோம்!

மையல் கொண்டேனடி!

ரமணிசந்திரன்